TAMIL NADU LEGISLATIVE LIBRARY
20 AUG 1980
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1980, பிப்ரவரி, 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் குறிப்பு

பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. கே. ஆர் கரந்த் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. ஆர். கரந்த் அவர்கள் 1 பிப்ரவரி 1980 ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். கரந்த் அவர்கள், 1926 ஆம் ஆண்டில் இருந்து 1929 ஆம் ஆண்டு வரை அன்றைய சென்னை சட்ட மன்ற மேலவையில் சுயராஜ்ய கட்சி உறுப்பினராகவும், சிறிது காலம் பேரவைச் செயலராகவும் இருந்தார். 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939ஆம் ஆண்டு வரை புத்தூர் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்தும், பின்னர் 1946 ஆம் ஆண்டி லிருந்து 1952 ஆம் ஆண்டு வரை காஸர்கோடு தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பெற்று அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகவும், 1946-47 ஆம் ஆண்டு திரு. பிரகாசம் அவர்களின் அமைச்சர் அவையில் வருவாய்த் துறை அமைச்சராகவும் இருந்து சிறந்த முறையில் நமது நாட்டுக்குச் சேவை செய்துள்ளார்கள்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக நின்றனர்.)

[1980 பிப்ரவரி 2

2. வினாக்கள்-விடைகள்.

அ. உடுக்குறியிட்ட வினாக்கள்.

கடல் அரிப்புத் தடுப்புத் திட்டம்.

*வினா எண் 1—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பூம்புகார் நகரில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்)

(அ) ஆம்.

(ஆ) வேதாரண்யத்திலிருந்து கொள்ளிடம் சங்கமமாகும் இடத்திற்கு இடையே உள்ள கிழக்குக் கடற்கரைப் பகுதியில், இப்பொழுது கடலரிப்பு அபாயம் ஒன்றும் இல்லை. இருப்பினும், புயல் காலத்தில் பூம்புகாரில் கட்டப்பட்டுள்ள இலஞ்சி மண்டபம் அபாயத்துக்கு உட்படலாம். அம் மண்டபத்தின் கிழக்கேயுள்ள மண் கரை கடந்தகால புயலைச் சமாளித்து நின்றது. ஆகையால், அம்மண் கரையை இப்பொழுது சிமென்ட் கான்கிரீட்டால் பலப்படுத்தினால் போதும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இதே பிரச்சினை குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அதற்காக ரூ. 7 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதாக அறிவித்தார்கள். அப்படி குறிப்பிட்ட அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறதா? இது வரையில் வேலை துவக்கப்படவில்லையே, எப்போது வேலை துவங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் செயலர் அவர்கள் அறிவிப்பார்களா?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய குறிப்பு என்னிடத்தில் இல்லை. கடந்த 10 ஆண்டுகளாகப் புயல் காலத்தில் ஏற்படும் அலைகளால் நிலப் பகுதியை நோக்கி கடலரிப்பு ஒன்றும் இல்லை என்று தெரிகிறது. இப்போது கடலரிப்பு அபாயம் ஒன்றும் இல்லை என்று தான் குறிப்பேட்டில் இருக்கிறது.

1980 பிப்ரவரி 2]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் தற்போது கடலரிப்பு ஏற்படும் அபாயம் ஒன்றும் இல்லை என்று தெரிவித்தார்கள். கடல் அரித்துக் கொண்டு இருக்கிறது. அதைக் கண்கூடாகக் காண அவர் முயற்சி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வதோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கவும், அந்தப் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் உடனடியாக அவர் கொண்டு வந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்போது அறிவிக்கப் பட்ட திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா? அப்படி செயல்படுத்தாவிட்டால் அந்தப் பகுதியில் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டு, அங்கே எதற்காக பூம்புகார் என்கிற புதிய நகரம் உருவாக்கப்பட்டதோ அதுவே அழிந்துவிடும் என்ற நிலைமை உருவாக்கப்பட்டு இருக்கிறது என்பதை உணர்ந்து, உடனடியாக அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, நிலப் பகுதியை நோக்கி கடலரிப்பு ஒன்றும் இல்லை என்று தெரிகிறது. ஆனால், இலஞ்சி மண்டபம் அலைகளால் பாதிக்கப்படும் இடத்தின் அருகாமையில் இருக்கிறது. கடந்த புயலின்போது, இலஞ்சி மண்டபத்திற்குக் கிழக்கே அமைந்துள்ள மண் வளைவு, கடல் நீர் உள்ளே புகாமல் தக்கபடி தடுத்தது. இது இப்பொழுது வலுவாக்கப்படுவதுடன், கான்கிரிட் பலகைகளால் பாதுகாக்கப் பட வேண்டும் என்பதற்காக புதிய மதிப்பீடு ஒன்றை அரசு தயாரிக்கும்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் நகரில் உள்ள கண்ணகி சிலை கடல் அரிப்பால் சேதம் ஆவதற்கான அபாயம் இருக்கிறது. எனவே, அந்தக் கண்ணகி சிலையைப் பாதுகாப்பதற்கு அரசு தக்க கவனம் செலுத்துமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணகி சிலையைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. கண்ணகி சிலையைக் கடலுக்கு அருகாமையில் இருந்து தள்ளி வைக்க வேண்டும் என்பதற்கும் அரசு மதிப்பீடு தயாரித்து வருகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட பெரும் மழையின் காரணமாகவும், புயலின் காரணமாகவும் கடல் அரிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் வெள்ள நிவாரண வேலையாக செய்வதற்கு மத்திய அரசிடமிருந்து கடல் அரிப்பு பாதுகாப்புக்குத் தேவையான பண உதவி கோரப்பட்டதா? எவ்வளவு நிதி தமிழக அரசுக்கு வழங்கப்பட்டது?

[1980 பிப்ரவரி 2

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே. பூம்புகார் நகரில் ஆண்டுதோறும் இந்திர விழா கொண்டாட இந்த அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): அத்தகைய திட்டம் இப்போது இல்லை.

திரு. எஸ். கணேசன்: தலைவரவர்களே, நிதி அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் பூம்புகார் நகரத்திற்கு வந்து தங்கியிருக்கிறார்கள். அவர்கள் அப்போது பூம்புகார் நகரை சுற்றிப் பார்த்திருப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் கேட்டுக் கொண்டதுபோல, அங்கே இருக்கிற மீனவர் பகுதியில் கட்டப்பட்டிருக்கிற வீடுகள் கடலரிப்பால் விரைவில் பாதிக்கப்பட இருப்பதால், உடனடியாக அதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, நான் பூம்புகாருக்குச் சென்றது கடல் அரிப்பைப் பார்வையிட அல்ல; பூம்புகார் கல்லூரி விழாவில் கலந்துகொள்ள.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, நிதியமைச்சர் அவர்களின் பேரவைச் செயலர் அவர்கள் பூம்புகாரை காணத் தான் சென்றேன். கடல் அரிப்பை காணச் செல்லவில்லை என்று சொன்னார்கள். கடலோரப் பகுதியில்தான் புதிய பூம்புகார் நகரம் இருக்கிறது. எனவே, நிச்சயமாக கடல் அரிப்புப் பகுதியைப் பார்த்திருப்பார்கள். இல்லை என்றால் இனியாவது அதைக் காண்பதற்காகச் சென்று, ஆவன செய்ய முன்வருவாரா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, பூம்புகார் கடற்கரை ஓரத்தில் தென்றல் காற்றின் சுகத்தை அனுபவிக்க நான் செல்லவில்லை; வருங்கால இளைஞர் சமுதாயத்தை வாழ வைக்கும் பணியில், அந்த மாணவர் சமுதாயத்திற்கு என்னென்ன பணியாற்ற வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக கல்லூரி விழாவில் கலந்து கொள்ளத்தான் சென்றேன்.

[1980 பிப்ரவரி 2]

வினா எண் 2—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அண்மைக்காலத்தில் சென்னையில் வட கோடியிலும் அதனை ஒட்டியுள்ள செங்கை மாவட்ட கடலோரப் பகுதிகளிலும், கடலரிப்பின் காரணமாகப் பெரும் இழப்பு ஏற்பட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுவரை பாதிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அதுகுறித்து அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) & (ஆ) வட சென்னை, இராயபுரம் மீன்பிடி துறை முகத்தை ஒட்டிய பகுதிகளிலும் அதனை ஒட்டிய செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த நல்ல தண்ணீர் ஓடை, லட்சுமிபுரம், திருச்சின்னன் குப்பம் ஆகிய மூன்று கிராமப் பகுதிகளும் கடந்த பருவ காலத்தில் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டன. இதனால் கடற்கரையை ஒட்டிய சுமார் 350 மீனவ குடியிருப்புகள் பாதிக்கப்பட்டன. மேலும், எண்ணூர் அருகே நெடுஞ்சாலையில் சுமார் 800 மீட்டர் தூரம் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது.

(இ) கடல் அரிப்பைத் தடுக்க தற்காலிக பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பதற்கு ரூ. 30.80 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு கட்டிடத்துறை தலைமைப் பொறியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இச் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, இந்தக் கடல் அரிப்பு வடசென்னையிலும், வடசென்னையை ஒட்டியுள்ள செங்கை மாவட்டக் கடற்கரையிலும் அடிக்கடி எற்படுகிறது. இதற்கு முன்புகூட பல்வேறு சந்தர்ப்பங்களில் நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே முறையில்தான் அமைச்சரின் செயலரும் இப்போது சொல்கிறார் ஏதோ 36 லட்சம் ரூபாயில் எஸ்டிமேட் தந்திருப்பதாகச் சொல்கிறார். இதை நடைமுறைப்படுத்த துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா அல்லது முன்புபோலவே இதுவும் தூங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, இந்த அரசில் எதுவுமே தூங்காது. இந்தப் பிரச்சனையில் இதுவரை தாமதம் ஆனதற்குக் காரணம், மத்திய அரசிடம் ஒப்புதல் கேட்கப்பட்டது. ஏனென்றால் மத்திய

அரசின் வெளியுறவு அமைச்சகத்தின் ஒப்புதலைப் பெற 1979 ஏப்ரல் மாதத்தில் எழுதப்பட்டது. ஆனால் ஜூன் 1979-ல் வெளியுறவு அமைச்சகம் அப்போதுள்ள பிரதம அமைச்சரின் ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு, இந்தக் குழுவின் பயணத்தைத் தள்ளிவைக்க ஆலோசனை கூறியது.

இந்த அரசு தன்னுடைய முந்தைய செயற்குறிப்புகளையும் அமைச்சகத்தின் ஒப்புதலையும் மீண்டும் வலியுறுத்தி மத்திய அரசின் வெளியுறவு அமைச்சகத்தை செப்டம்பர் 1979-ல் கேட்டுக் கொண்டுள்ளது. இந்திய அரசின் வெளி விவகார அமைச்சகம் இவ்வரசின் செயற்குறிப்பை மறுபரிசீலனை செய்திருப்பதாகவும் தொழில் நுட்பக் குழு ஹாங்காங் மற்றும் சிங்கப்பூருக்குச் சென்று வருவது கைவிடப்படலாம் என்றும் கருத்துரை வழங்கியுள்ளது. அதனால்தான் தாமதம் ஏற்பட்டுள்ளது.

[முற்பகல் 9.10]

திரு. டி. கே. கபாலி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மயிலைத் தொகுதியில், சாந்தோம் பகுதியில் இப்படி பலமுறை கடலரிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதனால் இரண்டாண்டுகளாக அங்கே போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது. இதுகுறித்து நான் பலமுறை சொல்லியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இனியாகிலும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்); பேரவைத் தலைவரவர்களே, அரசு அதை நல்ல முறையில் பரிசீலிக்கும்.

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் கூறியிருப்பது போல் திட்டங்கள் இருப்பது என்பதை நன்றியுணர்வோடு நான் ஒப்புக் கொண்டாலும், இத்தகைய திட்டங்களுக்கு அதிக அளவிலே நிதியினை ஒதுக்கி நிறைவேற்றினாலொழிய அந்தப் பகுதிகள் சீர் அடையாது என்பது என்னுடைய கருத்து. ஆகவே அதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்); பேரவைத் தலைவரவர்களே, நிரந்தரமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள பூண்டியிலுள்ள நில மற்றும் நீரியல் ஆராய்ச்சி நிலையம் ''மாதிரி ஆய்வுகளை'' மேற்கொண்டு வருகிறது. அதற்கு அரசு பணம் ஒதுக்கியுள்ளது. அதனுடைய ரிசல்ட் வந்தவுடன் எந்த முறையில் தேவையான நடைமுறைகளைக் கையாள வேண்டுமோ அதனை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1980 பிப்ரவரி 2]

சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் மின் சக்தி.

வினா எண் 3 —திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் யூனிட்டுக்கு 12 பைசா கட்டணம் செலுத்தும் சிறு விவசாயிகள் எத்தனை பேர்?

(ஆ) அதனால் ஆண்டுக்கு எவ்வளவு தொகை வாரியத்திற்கு இழப்பு ஏற்படுகிறது?

(இ) மற்றவர்களுக்கும் கட்டணம் குறைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 1,85,820 பேர்.

(ஆ) சிறு விவசாயிகளுக்கு 2 காசு மின் கட்டணம் குறைத்துள்ளதால் ஆண்டு ஒன்றுக்கு இழப்பு சுமார் ரூ. 80 லட்சம் ஏற்படுகிறது.

(இ) இல்லை.

வினா எண் 4— திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மின் கட்டணச் சலுகை பெறும் விவசாயிகள் தமிழ்நாட்டில் எத்தனை பேர்கள் ?

(ஆ) அதில் திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை பேர்கள்?

(இ) மொத்தத்தில் எத்தனை சதவீதம்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 1,85,820.

(ஆ) 16,728.

(இ) 9 சதவீதம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இவ்வாறு கட்டணச் சலுகை தருவதைப் பொறுத்தவரையில் விவசாயிகளைப் பிரிக்காமல் எல்லா விவசாயிகளுக்குமே இந்தக் கட்டணச் சலுகை வேண்டுமென்று கோருகிறார்கள். ஆகவே இச் சலுகையினால் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் கூட விவசாயிகளின் நலன் கருதி எல்லா விவசாயிகளுக்கும் இதை அமல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சலுகை அளிக்க வேண்டும் என்று கருதுகிற போது நலிவுற்ற பிரிவினருக்குச் சலுகை அளிப்பதுதான் பொருத்தம். ஆகவே எல்லோருக்கும் எல்லாச் சலுகைகளும் அளிக்கப்படு மானால் அரசாங்கத்தினுடைய கொள்கைக்கும் அது பாதகமாக இருக்கும். நிதிநிலை நெருக்கடியையும் ஏற்படுத்தும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை ஏற்கத்தக்கதல்ல.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த மின் கட்டணச் சலுகையைப் பொறுத்தவரையில் $2\frac{1}{2}$ ஏக்கருக்குக் குறைவாக நிலம் உடையவர்களுக்கு மட்டும்தான் இந்தச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். இதற்கு முன்பு மின்சார பம்புசெட் அமைக்க வேண்டும் என்றால் குறைந்த பட்சம் 3 ஏக்கராவது இருக்க வேண்டும் என்றும் அதற்குக் குறைவாக இருந்ததால் பல இடங்களில் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை என்றும் அறிகிறேன். ஆகவே இப்படிப் பட்ட சூழ்நிலையில் குறைந்தபட்சம் 5 ஏக்கர் நிலம் இருக்கக் கூடியவர்களுக்காவது இந்த மின்சாரக் கட்டணச் சலுகை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சிறு விவசாயிகள் என்றால் யார் என்பதைப் பற்றி ஒரு தெளிவான வரையறை வகுத்துக் கொண்டு அதாவது 5 ஏக்கர் புஞ்சை நிலம் அல்லது $2\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சை நிலம் உடையவர்கள் சிறு விவசாயிகள் என்ற வரையறைக்கு உட்படுத்தி பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகிறோம். அந்த அடிப்படையிலே தான் இரண்டரை ஏக்கர் நஞ்சை நிலம் உள்ளவர்களைச் சிறு விவசாயிகளாகக் கருதி அவர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப் படுகிறது. ஆகவே அந்த நில அளவை அதிகப்படுத்த உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, பெரிய விவசாயிகளுக்கு வேண்டுமானால் இந்தக் கட்டணச் சலுகை இல்லை என்று விட்டுவிடலாம். ஆனால் சிறிய விவசாயிகளுக்கு மேல் இருக்கக்கூடிய நடுத்தர விவசாயிகளுக்காவது இந்தச் சலுகை அளிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னது போல; விவசாயிகளின் பிரிவிலே இரண்டு வகைதான் வைத்திருக்கிறோம். மூன்றாவதாக ஒரு வகையை சேர்க்கிற பிரச்னை எழவில்லை.

1980 பிப்ரவரி 2]

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, தமிழக அரசு ஏழை விவசாயிகளின் நலன் கருதி பல லட்சம் ரூபாய் இழப்பை ஏற்றுக் கொண்டு 12 பைசாவாகக் குறைந்த பிறகும், அந்த ஏழை விவசாயிகள் இந்த மின் கட்டணத்தைக்கூட செலுத்த விடாதபடி சிலர் தடையாக இருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே அப்படி மின் கட்டணத்தைச் செலுத்த விடாமல் தடையாக இருக்கிறவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தக்க நேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சிறு விவசாயிகள் என்றால் யார் என்பதைப்பற்றி அது ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டிய பிரச்னை என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த முடிவைத் துரிதமாக எடுக்க அரசு முன் வந்து தீர்மானிக்குமா? அதேபோல ''கூட்டுப்பட்டா'' என்ற நிலை ஒன்று இருக்கிறது. அதிலே 5 ஏக்கர் அல்லது 6 ஏக்கர் நிலம் வைத்திருப்பார்கள். அது இரண்டு பேர்களின் கூட்டுப் பட்டாவாக இருக்கும். ஆனால் அவர்கள் தனித்தனியாக விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதையும் ஆலோசனைக்கு எடுத்து ஏதாவது ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, முடிவு ஏற்கெனவே எடுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகிறது. அதிலே 5 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருப்பவர்களும் $2\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சை நிலம் வைத்திருப்பவர்களும் சிறு விவசாயிகள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதையே 'கூட்டுப் பட்டா' வைத்திருப்பவர்களுக்கும் பொருந்தும் என்றாலும், கூட்டுப்பட்டா வைத்திருப்பவர்களுக்குச் சலுகை தரவேண்டும் என்று மாண்புமிகு வருவாய் துறை அமைச்சரும் முயற்சி செய்து வருகிறார்கள். அதைப்பற்றி தனியாகக் கவனிக்க வேண்டும். கூட்டுப்பட்டா வைத்திருப்பவர்களுக்குத் தனியாக பிரச்னை ஏதும் இருந்தால் அவைகளைத் தனியாகத்தான் கவனிக்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, பெரிய நிலச்சுவான்தார்கள் சிலர் மின் கட்டணம் சரியாக செலுத்தவில்லை என்று தெரிய வருகிறது. ஆனால் அதே நேரத்தில் சிறு விவசாயிகள் கட்டாயப்படுத்தப்பட்டு வசூல் செய்யப்படுகிறார்கள். இந்த சிறு விவசாயிகள் சமீப காலத்தில் பல்வேறு இயற்கை உற்பாதங்களால், மழை இல்லாமல், அல்லது அதிகப்படி மழை பெய்து வெள்ளம் ஏற்பட்டு அதனால் பாதிக்கப்பட்டு

தொல்லைக்குள்ளாகியிருக்கும்போது, அவர்களுக்கு மின் கட்டணத்தை ரத்து செய்வதற்கு, குறைந்த பட்சம் மத்திய அரசிடமிருந்து உதவியாவது பெற்று ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கட்டணத்தை ரத்து செய்வது என்கிற பிரச்னை எழாது. தரவேண்டிய பாக்கியை வேண்டுமானால் ரத்து செய்ய வேண்டும் என்ற கருத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். மின் கட்டணம் என்பது போடுகின்ற வரியல்ல. கொடுக்கின்ற பொருளுக்கு விலையாகத்தான் பெறுகிறோம். ஆகவே இந்தக் கட்டணத்தை ரத்து செய்ய முடியாது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு யூனிட்டுக்கு 12 பைசா சிறு விவசாயிகளுக் கென்றும், 14 பைசா பெரிய விவசாயிகளுக்கென்றும் கட்டணம் வைத்திருக்கிறார்கள். அதிலே 2 ஏக்கர், 10 ஏக்கர் என்று தனித்தனியாக உள்ளவர்கள், கூட்டாக விவசாயம் செய்பவர்கள், ஒரே கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்சக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படி இருக்கும்போது அவர்களுக்கு 2 ஏக்கருக்கும் 10 ஏக்கருக்கும் தனித்தனியாக பம்பு செட்டுக்கான கட்டணத்தைப் பிரித்து வசூல் செய்ய முடியாது. அதனால் ஒரேயடியாக 12 பைசாவாக வைத்து விட்டால் விவசாயிகளுக்கு அதிகமான உற்பத்தி செயய ஒரு ஊக்கம் அளிப்பதாக இருக்கும். அந்த ஏற்பாட்டுக்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசு சலுகைகளை அளிக்கிற போது எத்தகையோருக்கு எந்த வகையில் அளிக்க வேண்டும் என்ற பிரச்னையை வைத்துத்தான் அளிக்கிறது. எப்படி அளிக்க வேண்டும் என்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எத்தகையோருக்குத் தரவேண்டும் என்று எண்ணிப் பார்க்கிறபோது யாருக்கு உதவித் தேவையோ அவர்களுக்கு அளிக்க வேண்டுமே தவிர எல்லோருக்கும் ஒன்றாக அளிக்க முடியாது. 10 பம்பு செட்டு வைத்திருப்பவர்களுக்கும் அதே கட்டணம் ஒரு பம்பு செட்டு வைத்துக் கொண்டு கடன் பட்டுக் கொண்டிருக்கிற விவசாயிக்கும் அதே கட்டணம்தான் என்கிற நிலையை நிச்சயமாக நாம் உருவாக்கக் கூடாது.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கு 12 பைசா என்றும் பெரிய விவசாயிகளுக்கு 14 பைசா என்று கட்டணம் வைத்திருப்பதை நலிந்தோருக்குச் சலுகை அளிக்கப்படும் விதத்தில் அமைத்திருப்ப

தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நலிந்த விவசாயிகளுக்கு 12 பைசா என்று வைத்திருப்பதை இன்னும் குறைத்துக் கொடுக்க அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உத்தேசம் இல்லை.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் என்று வரும்போது குறைந்த நிலம் வைத்திருப்பவர்கள் என்ற அடிப்படையில்தான் சலுகைகள் கிடைப்பதாக இருக்கிறது. ஆனால் நடுத்தர விவசாயிகள் சிறு விவசாயிகளை விட மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்று அறிய வருகிறது. நடுத்தர விவசாயிகள் என்று குறிப்பிடும் போது 10 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருப்பவர்கள் அல்லது 5 ஏக்கர் நஞ்சை நிலம் வைத்திருப்பவர்கள் என்ற அளவில் ஒரு ''மெஷரிங் ராடாக' அதாவது ஒரு அளவுகோலாக வைத்து இந்த நடுத்தர விவசாயிகளுக்கும் இந்தச் சலுகை கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

அதோடு மீட்டர் கட்டணத்தை மட்டும் வசூல் செய்து விட்டு, மிச்சத்தை மாதாமாதம் 5 ரூபாய் என்ற அளவில் வசூல் செய்யலாம் என்ற கோரிக்கையை முதல்வர் அவர்களிடத்திலும் சர்வ கட்சி மாநாட்டில் வேளாண்மை அமைச்சரிடத்திலும் சொல்லியிருக்கிறேன். ஆகவே அதனைப் பரிசீலனை செய்து முடிவு உடனடியாக அறிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நடுத்தர வர்க்கத்தினர் என்ற ஒரு வகையை நாம் இன்னும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அதை ஏற்படுத்த வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி நாம் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனென்றால் இது அரசினுடைய நிதி நிலையைப் பொறுத்த ஒரு விஷயமாகும். சிறு விவசாயிகள் நிறையப் பேர்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களுக்கே போதுமான அளவிற்கு நன்மை செய்வதற்கு வாய்ப்புகள் நம்மிடத்திலே இல்லை. அப்படியிருக்கிறபோது நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த விவசாயிகள் என்ற ஒரு வகையை ஏற்படுத்திக் கொண்டு அதற்கும் உதவி செய்ய வேண்டுமா என்பதுபற்றி நிச்சயமாக பரிசீலித்துத்தான் முடிவெடுக்க வேண்டும். மீட்டர் வாடகையைக் குறைக்க வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். இது போன்று பல கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன.

திரு. என். கிட்டப்பா : நலிவுற்றோர்க்கு உதவி செய்ய வேண்டும் என்பது அரசாங்கத்தின் எண்ணம், அதனால் ஆண்டு ஒன்றுக்கு எண்பது லட்சம் ரூபாய் இழப்பீடு ஏற்படுகிறது என்பது பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பொதுவாக பொதுப் படிப்பகங்களுக்கு மின் கட்டணச் சலுகை வழங்க அரசு ஆவன செய்ய முன்வருமா? அதோடு அந்தப் பொதுப் படிப்பகங்கள் இன்டஸ்ட்ரியல் ஏரியாவில் உள்ள பகுதிகளில் அமைந்துவிடுமானால் அந்த இன்டஸ்ட்ரியல் ஏரியாவில் அதே விகிதாச்சாரத்தில் உள்ள மின் கட்டணத்தைப் பொதுப் படிப்பகங்கள் கட்ட வேண்டும் என்ற நிலை இருப்பதால் அதையாவது ஒழுங்குபடுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன் : பொது நூலகங்கள், பொதுப் படிப்பகங்கள் பற்றித் தனியாகக் கட்டணங்கள் இது வரை வரையறுக்கப்படவில்லை. அதுபற்றி அரசு ஆராயும்.

தஞ்சை மாவட்டத்தில் ''மோகினி அலவன்ஸ்'' திட்டம்

*வினா எண் 5—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டத்தில் ''மோகினி அலவன்ஸ்' என்ற திட்டம் ஏதேனும் செயல் முறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இந்த அலவன்ஸ் எதற்காக யார் யாருக்கு எந்த அடிப்படையில் தரப்படுகின்றது?

(இ) 1974 முதல் ஒவ்வொரு ஆண்டும் மேற்படி அலவன்ஸ் பெற்றவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) ஆம்

(ஆ) மற்றும் (இ) : * விவர அறிக்கையொன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. யா. சை. மு. யூசுப் : இந்த மோகினி தஞ்சை மாவட்டத்தில் மட்டுமா அல்லது தமிழ்நாட்டில் உள்ள எல்லாயிடங்களிலும் உலாவி வந்திருக்கிறாளா? தஞ்சை மாவட்டத்தில் இருந்து மட்டும் அந்த மோகினியை விரட்ட ஏற்பாடு செய்திருக்கும் இந்த அரசாங்கம் மற்ற இடங்களில் ஏன் அப்படிச் செய்யவில்லை? இப்படிப்பட்ட மூட நம்பிக்கைகளை இனிமேலாவது ஒழிக்க இந்த அரசு முன்வருமா?

[* 273-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது].

1980 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இது தமிழக அரசு செய்வதல்ல, இந்த நாடு ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்ட போது, அதற்கு முன்னால் இருந்த அரசாங்கங்கள் கோவில்களுக்கும் மடங்களுக்கும் மானியம் கொடுத்து வந்தார்கள். ஆங்கிலேய ஆட்சி வந்த பிறகு நேரடியாக இதிலே தலையிடக் கூடாது என்பதற்காக இதை அங்கிருக்கிற கிராம அதிகாரிகள் கொடுத்து வந்தார்கள். அதற்குப் பிறகு அரசாங்கம் கொடுத்து வருகிறது. மோகினி இனாம் என்பது தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தான் இருக்கிறது. வேறு ஊரில் இல்லை. வேறு ஊரில் இருந்தால் இதைக் கவனிக்க வேண்டும். ஆனால் அப்படி இல்லை. இது இன்று ஏற்பட்டதல்ல. 1863-ம் ஆண்டு ஏற்பட்டது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: இந்த மோகினி அலவன்ஸ் என்பது எங்களுக்கெல்லாம் புதிதாக இருக்கிறது. அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பரீட்சையில் கேள்வி கேட்பது போல் இருக்கிறது. மோகினி என்பதைத் தவறாக எண்ணிக் கொள்ளக் கூடாது. மோகினி இனாம் என்பது உருது வார்த்தை. உருது படித்தவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

திரு. என். கிட்டப்பா: அதைத்தான் என்னவென்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மோகினி என்றால் தமிழ் வார்த்தையில் உள்ள பெண்ணின் பெயர் அல்ல. அது உருது வார்த்தை என்று சொன்னார்கள். அதுதான் விளக்கம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நில ஒப்படை

வினா எண் 6—திரு. துரை கோவிந்தராசன் மற்றும் திரு. கே. சௌந்தரராசன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1979-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இறுதியில் புதுக்கோட்டையில் நடந்த கால்நடைக் கண்காட்சி மற்றும் பட்டா வழங்கு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் எத்தனை நபர்களுக்கு நிலப்பட்டா, மனைப்பட்டா வழங்கப் பெற்றது?

(ஆ) அதில் ஆதி திராவிடர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) அவ்வாறு கொடுக்கப்பட்ட நிலங்களில் மொத்தப் பரப்பளவும் அவைகளின் அங்காடி மதிப்பும் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) 1979-ம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் இறுதியில் புதுக்கோட்டையில் நடந்த கால்நடைக் கண்காட்சி மற்றும் பட்டா வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 4,053 நிலப் பட்டாக் களும், 8,024 மனைப் பட்டாக்களும் வழங்கப்பட்டது.

	நிலப்பட்டாக்கள்.	மனைப்பட்டாகள்.
(ஆ) ஆதி திராவிடர்கள்.	1,477	2,926
பிற்படுத்தப்பட்டவர்கள்.	2,563	5,004

(இ) அவ்வாறு கொடுக்கப்பட்ட நிலங்களின் பரப்பு ஏக்கர் 3,957‘44. அங்காடி மதிப்பு ரூ. 34,46,524·00

திரு. துரை கோவிந்தராசன்: இங்கு கொடுக்கப்பட்டிருக்கிற மொத்தப் பட்டாக்களில் ஆதி திராவிடர்களுக்கு மட்டும் எவ்வளவு பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு மட்டும் 1,200 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மன்னிக்கவும் நிலப்பட்டாவும், மனைப் பட்டாவும் சேர்ந்து 4,400 பேர்களுக்கு புதுக்கோட்டையில் மட்டும் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களால் பட்டா வழங்கப் பட்ட விழாவில், தஞ்சை மாவட்டத்தில் எத்தனை பேர் களுக்குப் பட்டா வழங்கப்பட்டது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கொடுக்கப்பட்ட விவரம் இங்கே என்னிடம் இல்லை.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்பு மிகு தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் பட்டா கொடுத் ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் எத்தனை ஏக்கர்கள் கொடுக்க முடியும்? எவ்வளவு ஏக்கர் நிலங்கள் புதுக்கோட்டையிலே புறம்போக்காக இருக் கின்றது? இன்னும் எத்தனை பேர்களுக்குக் கொடுக்க முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் அரசு தரிசு நிலங்கள் எவ்வளவு இருக்கும் என்ற கணக்கு கைவசம் இல்லை.

1980 பிப்ரவரி 2]

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற போது, அரிசனங்களுக்கு மனைப் பட்டா அதிகமாக வழங்கப்பட்டதாகவும், நிலப் பட்டா குறைவாகக் கொடுக்கப்பட்டதாகவும் புள்ளிவிவரங்கள் சொன்னார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரிசனங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு அந்த நிலங்களை அளிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மனைப் பட்டா, நிலப் பட்டா எந்த முறையில் கொடுப்பது என்பதை இதற்கு முன்னால் இருந்த அரசு வரிசைப்படுத்தி இருக்கிறது. அந்த வரிசைப்படித்தான், முதலில் ஆதி திராவிடர்களுக்குத் தந்து, அதற்குப் பின்னாலே தான் பின்தங்கியவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஏற்பட்டதற்குப் பின்னர், ஆதி திராவிடர்களுக்கு எவ்வளவு பட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1-7-77 முதல் 31-8-79 வரையிலும் நிலப் பட்டா பெற்றவர்கள் 85,301 பேர்கள். கொடுக்கப்பட்ட நிலத்தின் பரப்பு 92,476 ஏக்கர்கள். அதில் ஆதி திராவிட மக்கள் 16,059 பேர்கள் பெற்றிருக்கிறார்கள். அதேபோல், மனைப் பட்டா 1-4-77 முதல் 31-12-79 வரையிலும் பட்டா பெற்றவர்கள் 1,46,892 பேர்கள். இதிலே ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த மக்கள் 43,805 பேர்கள்.

திரு. இரா. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டாக்களைக் கொடுத்துவிட்டு, அமைச்சர்கள் வந்து விடுவார்கள். அதன்பின் அங்கிருக்கக்கூடிய கணக்குப் பிள்ளை, மணியக்காரார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் 10 ஏ (1) புத்தகத்தில் பதிவதில்லை. அதனால், முதலில் கொடுத்த பட்டாதாரரை அந்த இடத்திலிருந்து காலி செய்யாமல், அதையே 3, 4 பேர்களுக்குக் கொடுத்து விடுவார்கள். அதை அரசு பரிசிலனை செய்து உடனடியாக 10 ஏ (1) அடங்களில் பதிவு செய்ய அரசு உத்தரவு போடுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா கொடுப்பதில் இந்த அரசு வந்தவுடன் ஒரு புதிய மாற்றத்தை செய்திருக்கிறது. பட்டா கொடுப்ப தென்றால் ஏதோ பட்டா கொடுத்து விட்டு வந்து விடுவதில்லை, பட்டா கொடுப்பதற்கு முன்னாலேயே வரைபடம் போட்டு, இந்த வரை படத்திலே யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்பதை குறித்து விட்டு, மேலும் கிராமக் கணக்குப் புத்தகத்திலும் எழுதி விட்டுத் தான் கொடுக்கப் படுகின்றது. இந்த அரசு வந்த பிறகு, யார் கொடுத்திருந்தாலும் சரி, வருவாய்த் துறை அதிகாரியாக இருந்தாலும், மற்றும் அமைச்சர் கொடுத்திருந்தாலும், பட்டா கொடுத்த 24 மணி நேரத்திற்குள் அந்தப் பட்டா பெற்றவர்களிடத்தில் நிலம் ஒப்படைக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன். இதிலே எங்கேயாவது தவறு எற்பட்டிருந்தால், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், பிறகு அதே 24 மணி நேரத்திற்குள் அதற்கு ஆவன செய்கிறேன் என்று உறுதி அளிக்கிறேன்.

[முற்பகல் 9-30]

திரு. பொ. உத்திராபதி: வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மனைப் பட்டா வழங்குவதைப் பற்றிய புள்ளி விவரங்கள் சொன்னார்கள். 1976 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் அரிசனங்களுக்குக் கொடுத்த பட்டாவில் சர்வே நம்பர் இல்லாமல் இருந்ததாக புகார் வந்துள்ளதா? அமைச்சர் அவர்கள் நான்கு எல்லை போட்டு பட்டா கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். அரிசனங்களுக்கு 1,43,000 பட்டாக்கள் கொடுத்திருக்கிறார்கள் என்றால் இதைக் கொடுக்க எவ்வளவு கால அவகாசம் தேவைப் பட்டது. அரிசனங்கள், பின்தங்கியவர்கள் குடியிருக்கக்கூடிய அந்தந்த இடத்தில் அரசாங்க சர்வே படி 5 அல்லது 7 சென்ட் நிலம் போக மீதி இடம் இருந்தால் அதையும் அவர்களுக்கே கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நீண்ட கேள்விகளாக மூன்று கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். 1976—ல் நடந்த தவறுகள் மீண்டும் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் இப்போது அந்த சர்வே நம்பர் எல்லாம் பார்த்து அதற்குப் பிறகு வரைப்படம் போட்டுக் கொடுக்கிறோம் என்பது முதல் கேள்விக்குப் பதில். இரண்டாவது எங்காவது இப்படித் தவறுகள் ஏற்பட்டிருந்தால் அதைச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன், ஆதித் திராவிடர்கள் மற்றுமுள்ளவர்கள் குடியிருக்கும் இடத்தில் குறிப்பிட்ட அளவு போக பாக்கியிருக்கும் நிலத்தையும் கொடுக்க முடியுமா என்று கேட்கிறார்கள். அதையும் இந்த அரசு யோசிக்கும். ஏதாவது கேள்விக்குப் பதில் இல்லை என்றால் மீண்டும் கேளுங்கள்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1980 பிப்ரவரி 2]

இராமேசுவரம் நகரத்தைச் சுற்றுலா மையமாக்கல்.

வினா எண் 7—திரு. கா. செங்கோடன் மற்றும் திரு. த. இராமசாமி : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) இராமேசுவரம் நகரத்தை சுற்றுலா மையமாக்க அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு முதல் எடுத்துக் கொள்ளப் படும்?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) மற்றும் (ஆ) : தற்போது இல்லை.

திரு, த. இராமசாமி : இராமேசுவரம் நகரத்தைச் சுற்றுலா மையமாக்க அரசிடம் திட்டம் இல்லையென்று சொல்கிறார்கள். அங்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து போகிற நிலை இருக்கும் காரணத்தால் அந்தப் பயணிகள் வசதிகள் இல்லாது அவதிப்படும் நிலையை அரசு கவனத்தில் கொண்டு மேற்கொண்டு அதைப் பற்றிப் பரிசீலிக்க முன்வருமா?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ; இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம் தீவுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் மற்றவர்களுக்கும் வசதியாக தீவின் முக்கிய இடங்களில் சுமார் 3 லட்சம் ரூபாய் செலவில் ஓய்வுக் குடில்களும், உடை மாற்று சிறைகளும், இதர பயணச் சாதனங்களும் ஏற்படுத்தித் தரலாமெனக் கருதி, இப் பணியினை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வாயிலாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

•திரு. கே. எம். அப்துல் ரசாக் : வேறு எந்தெந்த இடங்களில் சுற்றுலா மையம், வரும் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது? ஏழை மக்களுடைய சுற்றுலா மையமான குற்றாலம் எடுக்கப்பட இருக்கிறதா? அதற்கான வேலை துவங்கப்பட்டிருக்கிறதா?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : இராமேஸ்வரத்திற்கு வருகிற யாத்திரிகர்களை கவருகிற அளவுக்கு ஏற்பாடுகளை அரசு செய்துள்ளதா? ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள்?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): உள்நாட்டில் இருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வருகின்ற சுற்றுலாப் பயணிகளை மட்டுமல்லாது இந்த நாட்டின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த சமயச் செல்வர்களையும் மிகுந்த அளவில் தன்பால் கவர்ந்த வண்ணமாய் இத் தீவு விளங்கி வருகிறது. ஆண்டுக்கு 7,000–க்கும் மேற்பட்ட அந்நியப் பயணிகளும், 8 இலட்சத்திற்கும் மேற்பட்ட உள்நாட்டுப் பயணிகளும் இவ்விடத்திற்கு வந்து போவதாக மதிப்பிடப்படுகிறது.

ஒலி-ஒளிக்காட்சியில் தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு

வினா எண் 8 —டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு பற்றிய ஒலி-ஒளிக்காட்சி சென்னையில் நடத்தப் பெற்றதா?

(ஆ) ஆம் எனில், அதனை மாவட்டம் தோறும் தொடர்ந்து நடத்தும் உத்தேசம் உண்டா?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) சில மாவட்டங்களிலும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் நடைபெற்ற தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றினைப் பற்றிய ஒலி-ஒளிக்காட்சிக்கு எவ்வளவு செலவானது? அதற்கு வசூலான தொகை எவ்வளவு? அந்த வசூல் குறைவாக இருக்குமானால் அதைக் கூடுதலாக்க மாற்று வழிகளை உருவாக்க அரசு முயற்சிக்குமா? அதைப் போலவே பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றியும் ஒலி-ஒளிக் காட்சியை நடத்த அரசு முன் வருமா?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஒட்டி அவர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றி ஒலி–ஒளிக்காட்சியாக சென்னை ராஜாஜி மண்டப முகப்பில் 26-9-1979 முதல் 28-10-1979 வரையில் நடத்தப்பட்டது. இந்த ஒலி–ஒளிக் காட்சிக்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகை சுமார் ரூ. 5,78,000. சென்னை மாநகரத்தில் ராஜாஜி மண்டபத்தில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியின் மூலம் ரூ. 15,541.75 வசூலானது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

1980 பிப்ரவரி 2]

கேட்ட கேள்வியிலே, தந்தை பெரியார் அவர்கள் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் ஒலி–ஒளிக் காட்சியைப் போல் பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றியும் ஒலி–ஒளிக் காட்சியை நடத்த இந்த அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். இந்த அரசு, பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளையும் தத்துவங்களையும் உதட்டளவிலே உச்சரிக்கிற அரசல்ல, உள்ளத்திலே அவைகளை உணர்ச்சிபூர்வமாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்ற அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே. தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளை ஒலி–ஒளிக் காட்சியாக காட்டியதுபோல் தேசப் பிதா காந்தியடிகள் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளையும், தமிழ் நாட்டிலே சிறந்த தலைவராக விளங்கிய பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றியும் ஒலி–ஒளிக் காட்சிகளை அமைத்து அதை மக்களுக்குக் காட்டுவதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளை ஒலி–ஒளிக் காட்சியின் மூலமாக மக்களுக்குக் காட்டுவதற்கு நிகழ்ச்சியை அமைத்திருப்பதைப் போலவே தமிழகத்திலே வாழ்ந்து நமக்காகப் பாடுபட்டிருக்கிற தலைவர்கள், இந்தியத் துணைக் கண்டத்திலே வாழ்ந்திருக்கின்ற மிகப் பெருந் தலைவர்களுடைய வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றியும் ஒலி–ஒளிக் காட்சி அமைக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் அந்த அமைப்பு உருவாக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரின் பேரவைச் செயலர் தெரிவித்ததைப் போலவே 5 லட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட தொகை அதற்காகத்தான் முதலீடாக இன்றைக்கு ஒதுக்கப் பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இது போன்ற தலைவர்களின் வாழ்க்கை சரித்திரம், கொள்கைகள் இவைகளை விளக்குவதற்காகத் தான் இந்த ஒலி–ஒளிக் காட்சிகள் நடத்தப்படுகின்றன. இதுபோன்ற நிகழ்ச்சிகளை ராஜாஜி மண்டபத்தில் நடத்தாமல் பொது மக்கள் எல்லோரும் பார்க்கிற இடத்தில் ஏற்பாடு செய்யலாம். ஏனென்றால் இப்போது 15 ஆயிரம் ரூபாய் தான் வசூலாகியிருக்கிறது என்று சொன்னார்கள். பெரிய தொகை வசூலாகவில்லை. அரசாங்கம்

தலைவர்களுக்கு மரியாதை காட்டுகின்ற முறையிலே அந்தக் காட்சிக்குக் கட்டணத்தை வசூலிக்காமல் பொதுமக்கள் பார்க்கிற இடங்களிலே ஜனநெருக்கமுள்ள இடங்களிலே அதை ஏற்பாடு செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் அந்த ஒலி–ஒளிக் காட்சியைப் பார்க்கவில்லை என்று கருதுகிறேன். அவர்கள் அதைப் பார்த்திருப்பார்களானால் அந்த நிகழ்ச்சி எப்படி நடைபெறுகிறது; அதற்கான இடம் எத்தகைய சூழ்நிலையிலே அமைக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டிருக்க முடியும். அந்த நிகழ்ச்சியை ராஜாஜி ஹாலுக்குள்ளே நடத்த வில்லை. ராஜாஜி ஹாலுக்கு முன்னாலேயே இருக்கிற திறந்த வெளியிலே தான் நடத்தப்பட்டது. அந்தச் சூழ்நிலையில் 6, 7 மேடைகள் அமைக்கப்பட்டு ஒரே நேரத்திலே பல்வேறு காட்சிகள் காட்டுகின்ற முறையிலே அமைக்கப்பட்டிருக்கிறது.

மேலும் திறந்த வெளியிலே கண்ட இடங்களில் எல்லாம் அதை நடத்த முடியாது. அதற்கான ஒலிக்காட்சிகள் தருவது, ஒளிக் காட்சிகள் அமைப்பது இவைகளையெல்லாம் ஒரு நாடக மேடைக்குள்ளே அமைப்பதைப்போல் ஒரு மிகப் பெரிய திறந்த வெளியில் அமைக்கப்படுகிறது. கட்டணம் இல்லாமல் காட்டலாம் என்றால் பல்லாயிரக்கணக்கான பேர்கள் உட்கார்ந்து அதைப் பார்க்க முடியாது. அதற்கான காலரிகள் எல்லாம் அமைக்கப் படுகின்றன. ஆகவே அந்த வசதிகளையெல்லாம் வைத்துத்தான் திறந்த வெளியைத் தேர்ந்தெடுக்கிறோம். கட்டணம் மிகக் குறைந்த அளவில், கட்டுப்பாடு வேண்டும் என்பதற்காகவும் அனுமதியிலே சில ஒழுங்கு முறைகள் வேண்டும் என்பதற்காகவும் நிர்ணயிக்கப்படுகிறது.

ALONE TRIUMPHS

[முற்பகல் 9-40]

திரு. பொ. முனுசாமி : பேரவைத் தலைவரவர்களே. தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு பற்றிய ஒலி–ஒளிக் காட்சியைப் பல்வேறு மாவட்டங்களில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்வியே அதுதான். இப்பொழுது சென்னைக்கு அடுத்தபடியாகத் திருச்சியிலே நடத்திக் கொண்டிருக் கிறோம். மேலும் பல மாவட்டத் தலைநகரங்களிலே அதை நடத்துவதற்கு அரசு பரிசீலிக்கும்.

1980 பிப்ரவரி 2]

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய சீர்திருத்தக் கருத்துக்களும், தியாகமும் எதிர்காலச் சந்ததியினருக்குப் பயன்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்து வருவது மிகவும் பாராட்டுக்குரியது. இப்படிப் பாராட்டுகின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டது போல், தேசீயத் தலைவர்களின் தியாகங்கள், தேச விடுதலைக்காகச் செய்த தியாகங்கள், டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சாதி வேறுபாடு கூடாது என்று உழைத்தார். அதுபோல் தென்னாட்டில் தேவர் பெருமான் அவர்கள் 1937 ஆம் ஆண்டில் ஆலயப் பிரவேசம் யாரும் செய்ய முடியாது என்று இருந்த நேரத்தில் தானே மார்தாங்கி அரிசனங்கள் ஆலயப் பிரவேசம் செய்யப் பாடுபட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சீரிய கருத்துக்களும், தியாகங்களும், ஒலி—ஒளிக் காட்சி மூலம் எல்லாத் தலைவர்களுடைய தியாக வரலாறுகளையும் பரப்புவதோடு..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் துணைக் கேள்வி கேட்டால் மூன்று நிமிடங்கள் ஆகி விடும் என்று ஏற்கனவே நான் ஜாடை காட்டினேன். சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. கே. கந்தசாமி : மூன்று நிமிடங்கள் என்று தலைவரவர்கள் மிகைப்படுத்திக் கூறுகிறார்கள். மூன்று நிமிடங்கள் இல்லை. என்றாலும் அவர்கள் சொல்வதை ஒத்துக் கொள்கிறேன். ஆகவே, அப்படிப்பட்ட நல்ல தலைவர்களுடைய சீரிய வாழ்க்கை வரலாற்றை இளஞ் சந்ததியினருக்குப் பரப்புவதின் வாயிலாக நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தவும், சாதி வேறுபாட்டை மறைக்கவும் முடியும் என்பதை அரசு உணருமா? உணருமானால் உடனடியாக அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தந்தை பெரியார் அவர்களுடைய வரலாற்றைச் சொல்லும் பொழுது மதச் சார்பற்ற நாடு என்று வைத்துக் கொண்டு மதவாதிகளைப் புண்படுத்த.. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் கேட்பது ஒலி—ஒளிக் காட்சி எங்கெங்கு தேவை என்ற கேள்வியாக இருக்க வேண்டுமே தவிர, ஒலி-ஒளிக் காட்சி எப்படி அமைய வேண்டுமென்ற விளக்கம் தேவையில்லை. தயவுசெய்து சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கே. கந்தசாமி : உள் கருத்தைச் சொல்லி விடுகிறேன். மக்களுக்கு ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த அவர்களுடைய வாழ்க்கை வரலாறு பயன்படுவதாக அமையும் விதத்தில்.. ..

[1980 பிப்ரவரி 2

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினரவர்கள் தந்தை பெரியார் ஒலி-ஒளி காட்சி சம்பந்தமாக கேள்வி கேட்க வந்து, பிறர் மனம் புண்படும்படி எதுவும் சொல்லக் கூடாது. சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்; விளக்கம் தேவையில்லை.

திரு. கே. கந்தசாமி : ஆகவே, மதவாதிகளைப் புண்படுத்தும் கருத்துக்கள் எதுவும் அதில் வராமல் அதனை அமைக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்களுடைய கேள்வியின் முற்பகுதிக்கு நான் முன்பே பதில் சொல்லி விட்டேன். பிற்பகுதிக்கு, தயவுசெய்து அந்த ஒலி-ஒளிக் காட்சியை அவர்கள் பார்த்த பிறகு, அப்படி ஏதாவது அவர்கள் கருத்துக்கு மாறாகவோ, விருப்பத்திற்கு மாறாகவோ இருக்கிறதா என்பதை அவைக்குத் தெரிவித்தால் நான் பதில் அளிக்க முடியும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய ஒலி-ஒளிக்காட்சி சென்னையில் நடத்தப்படுவதைப் போல, பேரறிஞர் அண்ணா அவர்கள், பெருந்தலைவர்காமராஜர் போன்ற பெருந்தலைவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய ஒலி-ஒளிக்காட்சியையும் சென்னையிலேயே தொடர்ந்து நிரந்தரமாக நடத்துவதற்கு, அரசு ஆவன செய்ய முன்வருமாஎன்பதை அறிந்துகொள்ள முற்படுவதோடு, மாண்புமிகுஅமைச்சரின் பேரவைச்செயலர் அவர்கள் குறிப்பிட்டார்கள் சென்னையிலே நடைபெற்றதைப்போல இன்னும் சில மாவட்டங்களில் நடத்துவதற்கு முயற்சியெடுத்துக் கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்கள். எல்லாமாவட்டங்களிலேயும் அதை நடத்த, ஏனென்றால் தஞ்சை மாவட்டத்தை விட்டு விடுவார்களோ என்ற ஐயப்பாட்டோடு இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். (குறுக்கீடு.) மாயவரத்தில் அல்ல, தஞ்சை மாவட்டத்திலும், மற்றும் எல்லா மாவட்டங்களிலேயும் நடத்தவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் நடைபெற வேண்டுமென்பதுதான் அரசினுடைய எண்ணம். கொஞ்சம் பொருளாதார நிலையைப் பார்க்கிற பொழுது, செலவு அதிகம் ஆகிறது. வரவு குறைவாக இருக்கிறது. இது போன்ற நிகழ்ச்சி

களில் மக்களுக்கு ஆர்வம் ஏற்படச் செய்து, அதை வந்து பார்ப்பதற்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பாவைப் போன்றவர்கள் முயற்சி எடுத்து, தங்களுடைய கருத்தை மக்கள் மத்தியிலே பரப்பினால், அது உதவியாக இருக்கும். என்றாலும், கண்டிப்பாக தஞ்சை மாவட்டத்திலே அது நடத்தப்படும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு முன்னாலே அவரது பேரவைச் செயலர் அவர்களும், முதலீடு மிக அதிகமாகச் செய்திருந்தும் கூட அதிலிருந்து மிகவும் குறைவாக வருமானம் கிடைத்தது என்பதை இங்கே குறிப்பிட்டார்கள். அதற்கு முக்கியமானகாரணம் என்னைப் போன்றவர்கள் எண்ணுவது, அதிகமான விளம்பரம்-மிக அதிகமாக இல்லாவிட்டாலும்—தேவையான விளம்பரம் இந்த ஒலி-ஒளிக் காட்சிக்கு இல்லாதது என்பதுதான். இதை நாங்கள் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அதை ஆராய்ந்து, அரசு செயல்பட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விளம்பரம்தேவையான அளவிற்குச் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களே, அதைப் பார்த்தார்களா என்பது எனக்குச் சந்தேகம். அவர்கள் அதைத் தெரிவித்தால், எப்படி பக்கத்திலே இருப்பவர்கள் பார்க்கவில்லையென்பதும், வெளியிலே இருக்கிற பொது மக்கள் எப்படி அதைத் தேடிவந்து பார்ப்பார்கள் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள முடியும். என்றாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து அரசின் பரிசீலனையில் நிச்சயமாக எடுத்துக் கொள்ளப்படும். தேவையான அளவு விளம்பரங்களில் கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

•

விருதுநகரில் உள்ள A.F.C.M. நீதிமன்றம்

* வினா எண் 9— திரு. மு. சுந்தரராஜன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விருதுநகரில் உள்ள A.F.C.M. கோர்ட்டை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் மாற்ற எண்ணியுள்ளது?

திரு. எம். ஏ. ஜெயவேலு ; (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) தற்பொழுது அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Buildings of Metropolitan Magistrates Courts at Madras.

* Q. No. 10—Thiru R. E. CHANDRAN JEYAPAL: Will the Hon. the Minister for Law, be pleased to state whether the Government have any proposal for providing more spacious court halls for the sitting and holding of court by the Metropolitan Magistrates at Egmore, George Town and Saidapet?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தற்பொழுது எழும்பூரிலுள்ள பெருநகர் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவது குறித்த செயற் குறிப்பு ஒன்றிறு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் ஜார்ஜ் டவுன் மற்றும் சைதாப்பேட்டை பெருநகர் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கான எந்தச் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ரொ. எ. சந்திரன் ஜெயபால்: பேரவைத் . தலைவர் அவர்களே, எழும்பூரிலே உள்ள மாநகர நடுவர் நீதி மன்றத்திலே கூடுதலான கட்டிடங்கள் கட்டப்படும் என்று அமைச்சரின் செயலர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி அமைக்கின்றபொழுது அங்கே வழக்கறிஞர்களுக்கு நல்ல அறைகள் அமைக்கப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. எம்.ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): வழக்கறிஞர் அங்கே தங்குவதற்கும், இடம்கொடுப்ப தற்காக, அந்தத் திட்டத்திலே இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால், அங்கே கட்டிடம் கட்டும்போது, வழக்கறிஞர்களுக்கும் இடம் ஒதுக்கப்படும்.

திரு. அ. செல்வராசன்: ஜார்ஜ் டவுன் கோர்ட் எனது தொகுதியைச் சேர்ந்ததாகும். எந்தக் காலத்தில் அந்தக் கோர்ட்டைக் கட்டினார்களோ தெரியாது, இப்பொழுது பல்லாயிரக்கணக்கான வழக்குகள் அங்கே செல்கின்றன. அதுவும் மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகள் அங்கே அதிகம் இருக் கின்றன. அங்கே பெண்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். ஆகவே, பெரிய இடமாக, வேறு இடத்திலாவது கட்டிடம் கட்ட அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

1980 பிப்ரவரி 2]

திரு. எம்.ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): அதுவும் பரிசீலிக்கப்பட்டது. ஆனால், இட நெருக்கடியைவிட நிதி நெருக்கடி அதிகமாக இருந்த காரணத்தாலே, தற்பொழுது அது ஒத்தி வைக்கப்பட்டது.

திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போல், மற்ற இடங்களிலும் கட்டிடங்கள் கட்ட அரசுக்கு உத்தேசம் உண்டா? அவற்றைக் கட்டுகின்ற பொழுது, வழக்கறிஞர்களுக்கும் அறை கட்டுகின்ற உத்தேசம் உண்டா? அதைப்போல் எத்தனை கோர்ட்டுகளுக்குக் கட்ட உத்தேசம் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தனியாகக் கேள்வி போடவும். தற்பொழுது என்னிடம் புள்ளி விவரம் இல்லை.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, சென்னை நகரிலே அதிக வழக்குகள் சைதாப்பேட்டை கோர்ட்டிலே தான் வருகின்றன. அங்கு அதிக இட நெருக்கடி, ஆகவே, அதை விரிவுபடுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): நிதிநிலை நெருக்கடி காரணமாக அத்தகைய திட்டம் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையினாலே, கூடிய விரைவிலே அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எழும்பூர் கோர்ட் விஸ்தரிப்புத் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் அதன் மதிப்பீடு எவ்வளவு? மற்றொன்று-நம்முடைய மாண்புமிகு அமைச்சரின் செயலருக்கே தெரியும் ஓடாத கடிகாரம், கால் ஒடிந்துபோன நாற்காலிகள்தான் அங்கே இருக்கின்றன. எனவே, சென்னை உயர்நீதி மன்றம் மூலமாக, முதலிலே தேவையான ஃபர்னிச்சர்ஸுக்கு, உட்கார நாற்காலி போன்றவற்றிற்கு, கடிகாரங்கள் சரியான வகையில் நேரத்தைக் காட்ட நடவடிக்கைகள் எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அங்கே வருகின்ற குற்றவாளிகளுக்கு-அக்யூஸ்ட்-தங்குவதற்கு ஷெட்டுகள் அமைக்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 9-50]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவரவர்களே, உறுப்பினர் கோரிக்கை நிச்சயமாகப் பரிசிலிக்கப்படும்.

[1980 பிப்ரவரி 2

தர்மபுரியில் வரலாற்றுப் பொருட்காட்சியகம்.

வினா எண் 11—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், தர்மபுரியில் வரலாற்றுப் பொருட்காட்சி உருவாக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தர்மபுரி மாவட்டம் தருமபுரியில் வரலாற்றுப் பொருட்காட்சி உருவாக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை. ஆனால், அப்பகுதியில் உள்ள தொல் பொருள்களைக் கொண்டு மாநில தொல்பொருள் துறையினரால் இவ்வாண்டில் ரூ. 58,000 செலவில் ஒரு தொல்பொருள் அருங் காட்சியகம் (Site Museum) அமைக்க அரசு அனுமதித்துள்ளது.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகையில் தொல்பொருள் காட்சியகம் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உருவாக்கும் ஒரு திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அது எந்த ஆண்டில் இருந்து அமுல் படுத்தப்படும் என்பதோடு தர்மபுரியில் தொல்பொருள் காட்சியகம் அமைக்க மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் மூலம் சர்க்காருக்கு பரிந்துறை செய்யப்பட்டுள்ளது. இது பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலேயும், மாவட்ட அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என்ற உத்தேசம் இருந்தாலும்' இப்போது தர்மபுரி மாவட்டத்தில் உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய நிலையில் இல்லை. மற்ற மாவட்டங்களைப் பற்றி யோசிக்கிற போது இந்தப் பகுதியிலும் எடுத்துக் கொள்ளப்படும்.

சென்னை மாநிலக் கல்லூரி.

வினா எண் 12—திரு. பொ. விஜயராகவன். மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) சென்னை மாநிலக் கல்லூரியில் உள்ள தொழிற் பட்டறையில் என்னென்ன இயந்திர உபகரணங்கள் இருக்கின்றன?

(ஆ) அவை ஒழுங்காகச் செயல்படுகின்றனவா?

(இ) அந்தத் தொழிற் பட்டறையை மாணவர்கள் சிறந்த முறையில் பயன்படுத்த என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1980 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) சென்னை மாநிலக் கல்லூரியில் கீழ்க்கண்ட உபகரணங்கள் உள்ளன.—

(1) கடைசல் இயந்திரம் (Lathe Machines) 3

(2) சிறிய மேசை கடைசல் இயந்திரம் (Small Table Lathe). 1

(3) உலோகத் தகட்டில் துளைகள் இடுவதற்கான இயந்திரம் (Milling Machine). 1

(4) உலோகத்தில் (பெரிய அளவு) துளையிடும் இயந்திரம் (Drill Large size). 2

(5) உலோகத்தில் (சிறிய அளவு) துளையிடும் இயந்திரம் (Drill Small size). 1

(6) மின் உலோக ரம்பம் (Power Hacksaw). 1

(7) மரம் அறுக்கும் இயந்திரம் (Wood Cutting Machine). 1

(8) மரம் அளவு கணக்கிடும் இயந்திரம் (Wood Planning Machine). 1

(9) அறவைக் கல் (Grinding Stone) 1

(ஆ) மேற்குறிப்பிட்டுள்ள உபகரணங்கள் அனைத்தும் ஒழுங்காகச் செயல்படுகின்றன.

(இ) தொழிற் பட்டறையை மாணவர்கள் பயன்படுத்துவது இல்லை.

திருவில்லிபுத்தூர் நகரில் அரசு அலுவலர்களுக்கு வீடுகள்.

வினா எண் 13—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவில்லிபுத்தூர் நகரில் அரசு அலுவலர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தில் இருந்து வீடுகட்டிக்கொடுக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருவில்லிப்புத்தூரில் 75% அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. அங்கே பணிபுரிகின்ற அரசு அலுவலர்கள் காலையில் 9 மணிக்கே அட்வான்சாக வந்து இரவு 9.00 மணி வரையிலும் பணி புரிகின்றார்கள். அப்படிப் பட்ட அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்காமல், வேலையில்லாமல் பொழுது போக்கிக் கொண்டு இருக்கின்ற சென்னை மாநகரத்தில் இருக்கின்ற அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள். எனவே, திருவில்லிபுத்தூர் தாலூக்காவில் உள்ள அரசு அலுவலர்களுக்கு எப்போது வீடு கட்டிக்கொடுக்கப் போகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற அரசின் கொள்கைப் படி, தமிழ்நாடு அரசு வாடகை-வீட்டு வசதித் திட்டத்தை மாவட்ட கோட்டத் தலைநகரங்களில்தான் தற்போது செயல்படுத்தி வருகிறது. திருவில்லிபுத்தூர் வட்ட தலைமை நகரம் என்பதால் இத் திட்டத்தை மேற்கொள்ளவில்லை.

காஞ்சிபுரத்தில் பாதாளச் சாக்கடை அமைப்புத் திட்டம்.

வினா எண் 14—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) காஞ்சிபுரத்தில் பாதாளச் சாக்கடை அமைக்கத் திட்டம் எந்த ஆண்டு போடப்பட்டது?

(ஆ) அதற்கு மதிப்பீடு எவ்வளவு?

(இ) திட்டமிட்டவாறு முடிவு பெறாததன் காரணம் என்ன?

(ஈ) எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்;

(அ) காஞ்சீபுரம் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு 1970-ம் ஆண்டு அரசு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(ஆ) ரூ. 105.44 இலட்சங்களாகும்.

(இ) கழிவுநீரேற்று நிலையம் மற்றும் சுத்திகரிப்புக்கான இடங்கள் கிடைக்காத காரணத்தாலும், நில ஆர்ஜிதப் பணிகள் தாமதமான காரணத்தாலும், மேலும் இத்திட்டத்திற்கு தேவையான பெரிய விட்டமுள்ள பீங்கான் குழாய்கள் பெறுவதில் தாமதமான காரணத்தாலும் இத்திட்டம் தாமதமாக செயல்பட ஏதுவாகியது.

(ஈ) மார்ச்சு 1980-ம் ஆண்டுக்குள் முடிவுறும்.

1980 பிப்ரவரி 2]

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பேரறிஞர் அண்ணா காலத்தில் போடப்பட்டதாகும். தற்போது அதில் சுணக்கம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த வேலை நடைபெறவில்லை. அந்த வேலையை விரைவில் பூர்த்தி செய்ய அரசு கவனம் செலுத்துமா? ஏதோ ஒரு பீங்கான் குழாய் வரவில்லை என்பதால் தாமதம் என்று சொல்கிறார்கள். அதைப் பெறுவதில் ஏன் காலதாமதம் ஏற்படுகிறது? வேறு இடத்தில் அதை வாங்க முடியாதா? ஒப்பந்தம் செய்து கொண்ட கான்டிராக்டர் காலதாமதம் செய்கிறார் என்றால், அவரை மாற்றுவதற்கான வாய்ப்பு இல்லையா? அமைச்சர் அதற்கான விளக்கம் அளிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் அனைத்துப் பணிகளும் மார்ச்சு 1980 ஆம் ஆண்டுக்குள் முடியும் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வலங்கைமான் ஒன்றியப் பகுதியில் வடிகால் வசதிகள்

வினா எண் 15—திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டம், வலங்கைமான் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆலங்குடி, புலவர்நத்தம், பூந்தோட்டம், சேத்தனூர் சாத்தனூர், குவளவல்லி போன்ற கிராமங்களில் மழை காலத்தில் வடிகால் வசதி இல்லாத காரணத்தால் மூழ்கிவிடுகிறது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்கும் வண்ணம் கும்பகோணம்—நீடாமங்கலம் சாலையில் ஆலங்குடியில் புலவனாற்றில் இரண்டு வடிகுழாய் அமைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) புலவர்நத்தம், சேத்தனூர், பூந்தோட்டம், சாத்தனூர், குவளவல்லி கிராமங்கள் மழைக்காலங்களில் நீரில் மூழ்குவதில்லை. ஆனால், ராஜேந்திரநல்லூர், ஆலங்குடி ஆகிய கிராமங்களில் பெரு மழைக் காலங்களில் ஒரிரு நாட்கள் வயல்களில் தண்ணீர் தேங்குவது உண்டு.

(ஆ) ஏற்கெனவே கும்பகோணம்—நீடாமங்கலம் சாலையைக் கடக்கும் புலவனாற்றின் பிரிவு வாய்க்கால்களுக்காக கட்டப்பட்டுள்ள பாலங்கள், தண்ணீர் தேங்காமல் வடியும் அளவுக்கு போதுமானதாக உள்ளது.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மழை காலங்களில் வயல்களில் நீர் நிறைந்து விடுவதால், விவசாயம், பாதிக்கப்படுகிறது. ஆகவே, தஞ்சை மாவட்டத்தில் வடிகால் வசதிக்கு முன்னுரிமை கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

திருச்செந்தூர் ஆவுடையார்குளம் ஆக்கிரமிப்பு

* வினா எண். 16 —திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் ஆவுடையார்குளத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது?

(இ) ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேற்றப்படுவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு.—

(அ) ஆம்.

(ஆ) 3·68 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

(இ) ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற மாவட்ட ஆட்சியர் சட்டப்படியான நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆவுடையார்குளத்தில் மட்டும் ஆக்கிரமிப்பு இல்லை, தமிழகத்தில் எல்லா இடங்களிலும் இந்த ஆக்கிரமிப்பு இருக்கிறது. நீர்த் தேக்கக் குளங்களில் ஆக்கிரமிப்பு இருப்பதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. அதனால் விவசாயிகளும் நஷ்டத்திற்குள்ளாக்கப்படுகிறார்கள். ஆகவே, நீர்த்தேக்கக் குளங்களில் இருந்து ஆக்கிரமிப்புகளை அகற்றப் பொதுப் பணித் துறை மூலம் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, பாசனக் குளங்களில் நிலம் இல்லாத விவசாயிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால், பாசனம் ஒழுங்காகச் செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இதைத் தடுக்க ஏற்கனவே பல அரசுகள் இருந்த நேரத்திலும், அரசின் மூலமாக பல நடவடிக்கைகள் எடுத்தும்கூட, ஆக்கிரமிப்புகள் அப்படியே இருக்கின்றன. நிலச்சட்டம் 6–ஏ பிரிவின்படி சட்டப்படியான

[1980 பிப்ரவரி 2]

நடவடிக்கையை அரசு எடுத்துக்கொண்டு இருக்கிறது. முடிந்த அளவிற்கு காரியங்கள் முடிந்து கொண்டு இருக்கின்றன. அதே நேரத்தில், இந்த அவையின் மூலமாக உங்களின் மூலமாக நான் வேண்டுகோள் விடுப்பது, விவசாயிகள் எந்தெந்தப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்களோ, அவர்கள் அந்த ஆக்கிரமிப்புகளில் இருந்து அகற்றப்பட்டால் தான் பாசன வசதியை ஒழுங்காகச் செய்ய முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மானாமதுரை கூட்டுறவுப் பால் உற்பத்திச் சங்கம்.

*வினா எண் 17 திரு. வ.மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மானாமதுரையிலுள்ள கூட்டுறவு பால் உற்பத்திச் சங்கம் நிர்வாகச் சீர்கேடு அடைந்திருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) மானாமதுரையிலுள்ள கூட்டுறவு பால் உற்பத்திச் சங்கத்தில் நிர்வாகச் சீர்கேடு ஏற்பட்டிருப்பதாக பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையினரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) சங்க நிர்வாகச் சீர்கேடுகளுக்குக் காரணமாக சங்க இயக்குநர்கள் மிது தமிழ்நாடு கூட்டுறவுச்சங்க 1961, சட்டப்பிரிவு 72–ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சங்க நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு ஒரு தனி அலுவலர் நியமிக்கப் பட்டுள்ளார்.

திரு. வ. மு. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகச் சீர்கேடு இருந்ததால் கலைக்கப்பட்டது என்று சொன்னார்கள். அவர்கள் செய்த தவறுகளை விரிவாக அறிய நான் விரும்புகிறேன். அவர்கள் செய்த தவறுகளுக்கு எந்தவகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது? சிவில், கிரிமினல் நடவடிக்கைகள் ஏதாவது எடுக்கப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க 1961–சட்டப்பிரிவு 72–ன் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்று பதில் சொல்லி இருக்கிறேன். இங்கே மிக முக்கியமாக சங்கத்தின்

பணம் சங்க அங்கத்தினர்களால் முறைகேடாகக் கையாளப்பட்டு இருக்கிறது. எனவே கிரிமினல் வழக்கும் தொடருவதற்காக அரசு யோசித்து வருகிறது.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியோடு வினா–விடை நேரத்தைச் சிறிது நீட்டிக்கிறேன்.

திருப்பத்தூரில் சந்தனத் தொழிற்சாலை.

*வினா எண் 18—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :—

வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் சந்தனத் தொழிற் சாலை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அருகில் சந்தனக் கட்டைகளில் இருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான கருத்து அரசால் ஏற்கப்பட்டு இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, திருப்பத்தூர் பகுதி தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதாலும், அந்தப்பகுதி மக்களின் நீண்டகாலக்கோரிக்கையாக இது இருப்பதாலும் இது எவ்வளவு விரைவில் ஆரம்பிக்கப்படும் ? இதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, திருப்பத்தூர் பகுதி பின்தங்கிய பகுதி என்ற காரணத்தால்தான் முதல் கட்டமாக ரூ. 23 இலட்சம் செலவில் சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்கூடத்தை இப்போது ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். மிக விரைவிலே இந்தத் திட்டத்தை நிறை வேற்ற அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

Practice in Homeopathy by Govenment Employees

*Q.No. 19 : Thiru N, KITTAPPA : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the Government employees with Homeopathy qualifications have been permitted by the Government to have practice out of office hours ; and

(*b*) if so, the details thereof ?

1980 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) ஹோமியோபதி மன்றத்தில் பதிவு செய்து இருக்கும் அரசு ஊழியர்கள் ஹோமியோபதி மருத்துவத்தை தன்னுடைய அலுவல் கடமைகளுக்குக் குந்தகமில்லாமல் பகுதி நேர பயிற்சி செய்யலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் ஹோமியோபதி மருத்துவத்தில் தகுதிபெற்ற அரசுப் பணியாளர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதையும் அவர்களுக்கு இந்தத் துறையிலே பயிற்சி அளித்திட தமிழக அரசு எத்தனை பயிற்சி நிலையங்களை அமைத்துள்ளது என்பதையும், அத்தகைய பயிற்சி நிலையங்கள் இருந்தால் அவை எங்கெங்கே அமைக்கப்பட்டுள்ளன என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, 24-8-1979 வரை 'ஏ' பிரிவில் 109 பேர்களும், 'பி' பிரிவில் 12,865 பேர்களும் மற்றும் 'சி' பிரிவில் 2,215 பேர்களும் பதிவு பெற்றிருக்கிறார்கள். தற்போது சென்னையில் அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி அரசு மருத்துவமனையோடு இணைந்து இயங்கி வருகிறது ; நான்கரை ஆண்டு ஹோமியோபதி பட்டப்படிப்பு கற்பிக்கப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ். : தலைவரவர்களே, மருத்துவக் கல்லூரி, மருத்துவ மனைகளை நிர்வகிப்பதற்காக 'மருத்துவ கவுன்சில்' ஒன்று செயல்பட்டுக் கொண்டு இருந்ததே ; அது இப்போது கலைக்கப்பட்டிருக்கிறது. ஏன் அந்த மருத்துவ கவுன்சில் 'ரீ கான்ஸ்டிடியூட்' செய்யப்படவில்லை ? அதுமட்டுமல்ல. இன்னும் பல்வேறு மாவட்டங்களில் மருத்துவமனைகளையும், மருத்துவக் கல்லூரிகளையும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, இது ஹோமியோபதி மருத்துவத்தைப் பற்றிய கேள்வியாகும். தனியாகக் கேள்வி போட்டால் மருத்துவ மனைகள், மருத்துவ கல்லூரிகள் பற்றிச் சொல்ல முடியும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கேள்வியே ஹோமியோபதி மருத்துவத்தைப் பற்றியது. அதனால் ஹோமியோபதி என்ற வார்த்தையைப் போடாமல் கேட்டேன். ஹோமியோபதி மருத்துவ மனைகளையும், ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிகளையும் நிர்ணயிப்பதற்காக ஹோமியோபதி கவுன்சில் என்று ஒன்று இருந்தது. அது கலைக்கப்பட்டது. அது ஏன் 'ரீ கான்ஸ்டிடியூட்' பண்ணப்படவில்லை என்பது கேள்வி. எப்போது 'ரீ கான்ஸ்டிடியூட்' பண்ணப்படும் ?

[1980 பிப்ரவரி 2

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, ஹோமியோபதி மருத்துவக் கவுன்சில் மீண்டும் அமைக்கப்பட்டு வருகிறது ; விரைவில் செயல்படத் தொடங்கும். தற்சமயம் திண்டுக்கல்லிலும், சேலத்திலும் இருக்கின்ற மாவட்ட மருத்துவ மனைகளுடன் ஹோமியோபதி மருத்துவ மனையும் செயல்பட்டு வருகிறது. அதைப்போன்று எல்லா மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும், விரைவிலே ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளிலும் இந்த ஹோமியோபதி மருத்துவ மனை தொடங்கப்படும்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, இந்த ஹோமியோபதி கவுன்சிலுக்கு எல்லாப் பகுதிகளிலிருந்தும் தேர்தல் நடத்தப்பட்டு, உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்கள் சிறிது காலத்திற்கு முன்னால். இவ்வளவு நடைபெற்றும் ஏன் இந்த ஹோமியோபதி கவுன்சில் செயல்படவில்லை என்பதற்கான காரணத்தை விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, அந்த மருத்துவமனை கவுன்சில் அமைப்பதில் ஒரு சட்ட சிக்கல் இருந்ததனால் சட்டத் துறையிடமிருந்து ஆலோசனையைப் பெற வேண்டி இருந்தது. ஆகவேதான் தாமதம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே இருக்கின்ற யூனிட்டுகளிலே ஹோமியோபதி மருத்துவப் பயிற்சி பெற்ற டாக்டர்கள் அங்கங்கே வேலை செய்து வந்தார்கள். ஆனால் சமீப காலமாக அவர்களுக்குப் பதிலாக எம்.பி.,பி.எஸ் படித்தவர்களை அங்கே நியமித்துவிட்டு ஹோமியோபதி படித்தவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். ஆகவே அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பல மனுக்கள் வந்திருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு மீண்டும் அந்த வேலையைக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ? அவர்களை மீண்டும் வேலையிலே சேர்த்துக்கொள்ள ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, அதைத்தான் நான் முந்தைய கேள்விக்கே விளக்கமாகச் சொல்லி இருக்கிறேன். அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஹோமியோபதி மருத்துவமனையை உருவாக்குவதற்கு வழிவகைகளை அரசு செய்துகொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, சட்டத்தின் அடிப்படையிலேதான் ஏற்கனவே ஹோமியோபதி கவுன்சில் செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஆகவே இடையிலே என்ன சட்ட சிக்கல் ஏற்பட்டது என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1980 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, இதற்கு தனிக்கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் தருகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவரவர்களே, மருத்துவமனைகளிலே சித்த வைத்தியத்திற்கென்று தனிப் பிரிவு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப்போல ஹோமியோபதி மருத்துவத்திற்கும் தனிப் பிரிவுகளை ஏற்படுத்த உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, அதைத் தனிப்பிரிவாக ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையிலேதான் திண்டுக்கல்லிலும், சேலத்திலும் இந்த மருத்துவமனைகள் துவங்கப்பட்டிருக்கிறது. அதைப்போல தொடர்ந்து பல இடங்களிலும் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமேஸ்வரம் மருத்துவமனை

*வினா எண் 20— திரு. கா. செங்கோடன்; திரு. க. இராமசாமி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமேஸ்வரம் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

தற்போது அறுவை சிகிச்சை செய்ய ஒரு சிறிய அறை உள்ளது. அதை விரிவு படுத்தும் செயற்குறிப்பு இப்போது இல்லை.

திரு. கா. செங்கோடன் : தலைவரவர்களே, இராமேஸ்வரம் ஒரு தீவு. இரயில் போக்குவரத்து அங்கே குறிப்பிட்ட காலத்திலே தான் போய் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே அறுவை சிகிச்சை செய்யவேண்டுமென்றால் அங்கிருந்து ஏனைய பகுதிகளுக்குத்தான் வரவேண்டி இருக்கிறது. அவ்வாறு வருவது சிரமம். ஆகவே அரசு அதைக் கருத்திலே கொண்டு உடனடியாக அறுவை சிகிச்சைப் பிரிவை அங்கே ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, தற்போது இராமேஸ்வரத்தில் இருக்கும் மருத்துவமனையில் ஒரு சிறிய அறுவை சிகிச்சை அரங்கம் இருக்கிறது. அங்கே அத்தியாவசிய அவசரமான அறுவை சிகிச்சைகள் செய்யப்

[1980 பிப்ரவரி 2

படுகின்றன. ஆனால் மிகப்பெரிய அறுவை சிகிச்சைகள் அங்கே செய்ய இயலாது. ஆகவே அங்கே ஒரு பெரிய அறுவை சிகிச்சைக் கூடத்தை நிறுவ வேண்டுமென்ற செயற்குறிப்பை 1980-81-ம் ஆண்டுக்கான இரண்டாம் பகுதி திட்டமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலையில் அங்கே இருக்கின்ற மாவட்ட மருத்துவ மனை அதிகாரிகள் அனுப்பி இருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. இராமசாமி : தலைவரவர்களே, இராமேஸ்வரத்தில் ஒரு மேஜர் ஆப்பரேஷன் செய்ய வேண்டுமென்றால் இராமநாத புரத்திற்குத்தான் எடுத்துச் செல்லவேண்டி இருக்கிறது. இராமேஸ்வரத்திலிருந்து இராமநாதபுரத்திற்குச் செல்வ தென்றால் சுமார் 38 மைல்கள் இருக்கின்றன. ஆனால் அங்கே இருக்கின்ற மைனர் ஆப்பரேஷன் செய்யும் சிறு பிரிவை அமைச்சர வர்கள் குறிப்பிட்டார்கள். இது ஒரு அவசரமும் முக்கியத்துவமும் கொண்ட பிரச்சினையாக இருப்பதால் உடனடியாக அங்கே ஒரு மேஜர் ஆப்பரேஷன் தியேட்டர் உருவாக்கித்தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வதோடு, அதிகமான டாக்டர்களையும் ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு அமைச்சரவர் களுடைய பதிலையும் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவர வர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, இராமேஸ்வரம் சுற்றுப்புறம் எல்லாம் சேர்ந்து கிட்டதட்ட ஒரு இலட்சம் மக்கள் இருக்கக்கூடிய ஒரு பெரிய தீவு ஆகும். அந்தத் தீவிலே இருந்து அறுவை சிகிச்சைக்காக 40 மைல் தூரத்தில் இருக்கின்ற இராமநாதபுரத்திற்கு வரவேண்டி இருக்கிறது. ஆகவே ஏற்கனவே அங்கே ஒரு பெரிய ஆஸ்பத்திரி அமைக்கும் செயற்குறிப்பு இருந்தும் கூட அது இன்து வரைக்கும் அமல் நடத்தப்படவில்லை. ஆகவே அங்கே தேவையான ஒரு அறுவை சிசிச்சை நிலையத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10.10]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

[1980 பிப்ரவரி 2]

ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்.

கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு தங்கப் பதக்கம்.

வினா 1—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலப்பு மணம் செய்துகொண்டவர்கள் தங்கப் பதக்கம் கோரி அரசிற்கு விண்ணப்பித்தும், வழங்கப்படாமல் உள்ளவர்கள் உண்டா ?

விடை— கலப்பு மணம் செய்து கொண்டவர்கள் தங்கப் பதக்கம் கோரி அரசிற்கு விண்ணப்பித்தும் தகுதியற்ற காரணத்தால் வழங்கப்படாதவர்கள் உண்டு.

வினா 2—திரு. சு. பாலன் : மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977–78-ம் ஆண்டு சென்னையில் கலப்புத் திருமணம் செய்துகொண்ட எத்தனை பேருக்கு தங்கப்பதக்கம் வழங்கப் பட்டது ?

விடை—1977–78-ம் ஆண்டு சென்னையில் கலப்புத்திருமணம் செய்துகொண்ட 18 பேருக்கு தங்கப்பதக்கங்கள் வழங்கப் பட்டன.

வினா 3—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் பரிசு கோரி இதுவரை விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) பரிசு பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை—(அ) தஞ்சை மாவட்டத்தில் 1968–69 முதல் 23—10—1979 வரை கலப்புத் திருமணம் செய்துகொண்டதற்காக பரிசு கோரி விண்ணப்பித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 97.

(ஆ) பரிசு பெற்றவர்களின் எண்ணிக்கை	71
இன்னும் பரிசீலனையில் உள்ளவை	23
அரசு விதிப்படி தகுதியற்றதால் தள்ளுபடி செய்யப் பட்டவை.	3

அரிசனங்களுக்கு வழங்கப்பெற்ற வீட்டுமனைப் பட்டாக்கள்.

வினா 4—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976 பிப்ரவரி முதல் 1977 சூன் முடிய தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக எத்தனை அரிசனக் குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன?

விடை—1976 பிப்ரவரி முதல் 1977 சூன் முடிய தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக அரிசனக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளன:—

மாவட்டத்தின் பெயர்.	வழங்கப் பட்ட பட்டாக்கள்.
செங்கல்பட்டு	5,458
தென் ஆற்காடு	12,688
வட ஆற்காடு	8,961
சேலம்	4,954
தர்மபுரி	5,466
தஞ்சாவூர்	9,576
திருச்சிராப்பள்ளி	5,385
புதுக்கோட்டை	27,010
கோயம்புத்தூர்	5,900
நீலகிரி	6,080
மதுரை	6,799
ராமநாதபுரம்	8,646
திருநெல்வேலி	1,430
கன்னியாகுமரி	908
சென்னை	..
மொத்தம்	1,09,255

சென்னை மாநகருக்கு தனி புலனாய்வுப் பிரிவு.

வினா 5—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் குற்றங்களைக் கட்டுப்படுத்த ஒரு தனி புலனாய்வுப் பிரிவினை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1980 பிப்ரவரி 2]

விடை— (அ) இல்லை.

ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சிறுமுகையில் பவானி ஆற்றின் குறுக்கே கட்டப் பெறும் பாலம்.

வினா 6—திரு. எஸ். பழனிசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறுமுகை பஞ்சாயத்தில் பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் பால வேலை எப்போது முடியும்?

விடை—இப்பால வேலை 1978-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இறுதிக்குள் முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பால வேலை நடக்கும் இடத்தில் பவானி சாகர் அணை நீர் சுமார் 30 அடி ஆழத்திற்குத் தேங்கியிருப்பதால் வேலை முற்றுப்பெறவில்லை. நீர் வடிந்தவுடன் வேலை தொடரப்படும்.

திருவாடுதுறை ஊராட்சி அரிசன காலனி.

வினா 7—திரு. இரா. இராசமாணிக்கம்; மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயவரம் வட்டம், திருவாடுதுறை ஊராட்சியின் அரிசன காலனி ஏற்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

விடை—(அ) மாயவரம் வட்டம், திருவாடுதுறை ஊராட்சியில் அரிசனங்களுக்காக 1973-ல் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 2.97 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, 144 அரிசனங்களுக்கு வீட்டுமனைகளாக வழங்கப்பட்டு அம்மனைகளில் வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. ஆகவே மேற்படி கிராமத்தில் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சி கழகம் மூலம் வீட்டுவசதி அளிக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1980 பிப்ரவரி 2

காவேரிப்பட்டினம் அரசு மருத்துவ மனை.

வினா 8—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினத்திலுள்ள அரசு மருத்துவ மனையை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

விடை—கூடுதல் கட்டிடங்கள் கட்ட தேவையான நிலத்தை அரசு கையகப்படுத்திய பின்னரே விரிவாக்கும் திட்டம் ஆய்வு செய்யப்படும்.

சொந்த மனையில் குடியிருக்கும் அரிசன குடும்பங்கள்.

வினா 9—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை அரிசனக் குடும்பங்கள் சொந்த (கையகப்படுத்தப்பட்ட) மனையில் வாழ்கிறார்கள்?

(ஆ) இன்னும் எத்தனை குடும்பங்களுக்கு மனைகள் தேவைப்படுகிறது ?

விடை—(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 4,48,306 அரிசனக் குடும்பங்கள் சொந்த (கையகப்படுத்தப்பட்ட) மனையில் வாழ்கிறார்கள்.

(ஆ) இன்னும் 2,42,703 குடும்பங்களுக்கு மனைகள் தேவைப்படுகிறது.

திருவாஞ்சியம் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள்.

வினா 10—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நன்னிலம் ஒன்றியம் திருவாஞ்சியம் உதவி பெறும் நடுநிலைப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு கூடுதல் பஞ்சப்படியின் பிடித்தத்தில் பாதி வெள்ளப் புயல் பாதிப்பின் போது வழங்கப்பட்டுள்ளதா ?

(ஆ) அப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வெள்ளம், புயற் பாதிப்பிற்காக முன்பணம் அரசால் வழங்கப்பட்டதா?

1980 பிப்ரவரி 2]

விடை—(அ) கூடுதல்பஞ்சப்படி பிடித்தத்தில் இரண்டு தவணைகளில் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகை ஆசிரியர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டது. மூன்றாவது தவணைக்கான தொகையைத் திருப்பிக் கொடுக்க பள்ளி நிர்வாகி சென்னை பிராந்திய நிர்வாகி சேமநலநிதி ஆணையருக்கு விண்ணப்பித்துள்ளார்.

(ஆ) ஆசிரியர் சேமநல நிதியிலிருந்து முன்பணம் கேட்டு விண்ணப்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் முன்பணம் வழங்கப்பட்டுள்ளது.

மாயவரம் வட்டத்தில் அரிசனங்களுக்கு குடியிருப்புகள்.

வினா 11—திரு. ரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயவரம், வட்டம் எடக்குடி, பாலையூர், மாந்தை, பெரம்பூர் ஆகிய கிராமங்களில் அரிசனங்களுக்கு குடியிருப்புகள் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—மாயவரம் வட்டம், எடக்குடி, பாலையூர், மாந்தை, பெரம்பூர் ஆகிய கிராமங்களில் அரிசனங்களுக்கு குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

ராதாபுரம் தொகுதி அரிசனங்களுக்கு வீடுகள்

வினா 12—திரு. யா. சை. மு. யூசப்: மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்கு வீடுகட்டித்தரும் திட்டத்தின்கீழ், நெல்லை மாவட்டம், ராதாபுரம் தொகுதி, அடங்காரகுளம், மாரன்குளம், குமனம்பாடு, செட்டிகுளம், புதுமனை ஆகிய ஊர்களில் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில். இதற்கான ஒதுக்கீடு செய்யப்படும் தொகை என்ன?

(இ) எப்போது இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்?

விடை—(அ) அரிசனங்களுக்கு வீடு கட்டிக்தரும் திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டம், ராதாபுரம் தொகுதி, அடங்காரகுளம், மாரன்குளம், குமனம்பாடு, செட்டிகுளம், புதுமனை ஆகிய கிராமங்களில் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினா எழவில்லை.

[1980 பிப்ரவரி 2

திருச்சி மாவட்டத்தில் மதுவிலக்கு சோதனைகள்

வினா 13—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கதர் கைத்தறித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டத்தில் 1978ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் இரண்டு வாரங்களில் மதுவிலக்கு சோதனைகளில் கைப்பற்றப்பட்ட மதுவகைகளின் மதிப்பு எவ்வளவு ?

(ஆ) அதன்பொருட்டு எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கைகள் யாவை ?

விடை—(அ) & (ஆ) திருச்சிராப்பள்ளிமாவட்டத்தில் 1978ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் இரண்டு வாரத்தில் மதுவிலக்கு சோதனைகள்பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது:—

1	1978ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் இரண்டு வாரங்களில் நடத்தப்பட்ட மதுவிலக்கு சோதனைகள்.	502
2.	மொத்தம் கைப்பற்றப்பட்ட மதுவகைகள்—	
	பிராந்தி	3·40 மிலி.
	சாராயம்	4,940 லிட்.
3	கைப்பற்றப்பட்ட மதுவகைகளின் மொத்த மதிப்பு	ரூ.32,143.
4	கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை .	1,727
5	பதிவான வழக்குகள் எண்ணிக்கை	1,696
6	தண்டனை அடைந்த வழக்குகளின் எண்ணிக்கை	749
7	தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	60
8	கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை.	1,702
	(ஆண்கள்	1,502
	பெண்கள்	200)

அரிசன நலத்துறையில் தேர்வு நிலை ஆசிரியர்கள் பதவிகள்

வினா 14—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரிசன நலத்துறையில், பணியாற்றும் ஆசிரியர்களில், பத்தாண்டிற்கு மேல் பணியாற்றியும், தேர்வு நிலை பெறாத ஆசிரியர்கள் எத்தனை பேர்?

1980, பிப்ரவரி 2]

விடை— அரிசன நலத்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களில் பத்தாண்டிற்கு மேல் பணியாற்றியும் தேர்வு நிலை பெறாத, ஆசிரியர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

1	சென்னை	44
2	வட ஆற்காடு	46
3	சேலம்	16
4	தர்மபுரி	12
5	கோயம்புத்தூர் (இதில் பெரியார் மாவட்டமும் அடக்கம்)	36
6	நீலகிரி	10
7	தஞ்சாவூர்	93
8	மதுரை	72
9	ராமநாதபுரம்	20
	மொத்தம் ..	349

சேந்தமங்கலம் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

வினா 15— திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் காளப்பநாயக்கன் பட்டி பகுதிகளில் குடியிருக்க வீடில்லாதவர்கள் வீடு கட்டிக் கொள்ள நிலம் கேட்டு சுமார் 5 ஆண்டுகட்குமுன் விண்ணப்பித்தும் இதுவரை அவர்களுக்கு நிலம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இவர்களுக்கு வீடுகட்டிக் கொள்ள இந்த அரசு ஆவன செய்துள்ளதா ?

விடை—(அ) இந்தக் கூற்று உண்மையல்ல.

(ஆ) ஆனால், சேந்தமங்கலம் கிராமத்தில் காந்திபுரத்தில் உள்ள வீடற்ற அரிசனங்களுக்கு மனை நிலம் வழங்கும் பொருட்டு மேற்படி கிராமத்தில் 3·92 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்காக அரசாணைகள் 1976—78ன் அரசிதழில் பிரசுரிக்கப் பட்டு 28—3—1978ன் அவார்டு விசாரணை முடிவு செய்யப் பட்டு, பின்னர் லே அவுட் அங்கீகாரம் பெற்று 55 அரிசன குடும்

பங்கட்கு மனை, நிலப்பட்டாவும் வழங்கப் பட்டுவிட்டது. சேந்தமங்கலம் கிராமத்தில் வேறு நில ஆர்சித நடவடிக்கைகள் எதுவும் நிலுவையில் இல்லை. காளப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள வீடற்ற அரிசனங்களுக்கு மனை நிலம் வழங்கும் பொருட்டு மேற்படி கிராமத்தில் 2·90 ஏக்கர் நிலத்தை கையகப் படுத்துவதற்கான பிரிவு 4(1) அறிக்கை ஏற்கப்பட்டு 18—7—1979 அரசிதழுல் வெளியிடப்பட்டுவிட்டது. விரைவில் நில ஆர்சித நடவடிக்கைகளை முடித்து மனைப் பட்டா வழங்கப்படும் என்று மாவட்ட ஆட்சியாளர் கூறியுள்ளார்.

சேந்தமங்கலம் தொகுதியில் குடியிருக்கும் அருந்ததியர்.

வினா 16—திரு. வ. சின்னசாமி: மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதியிலுள்ள நடுக்கோம்பை பஞ்சாயத்திலுள்ள அரங்கசிவன்குன்றில் பஞ்சாயத்து புறம்போக்காக ஒன்று தற்போது குடியிருந்து வரும் அருந்ததியருக்கு குடியிருப்பு, பாதை வசதிகள் செய்து தருவதுடன், மிகுதியுள்ள நிலங்களிலும் குடியிருப்புகள் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், சேந்தமங்கலத் தொகுதி, நடுக்கோம்பை ஊராட்சியில் உள்ள அரங்கசிவன்குன்று நடுக்கோம்பை ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு ஆகும். இதில் அருந்ததியர்கள் குடிசைகள் மூன்றும், போயர்கள் குடிசைகள் இரண்டும் குன்றின் அடிவாரத்திலும் சரிவுகளிலும் கட்டப்பட்டுள்ளன. இக்குன்றைச் சுற்றிலும் பட்டா நிலங்கள் உள்ளன. குன்றிற்குச் செல்ல வேண்டுமானால் பட்டாதாரர்களின் ஒற்றையடிப்பாதையில்தான் செல்லவேண்டும். இதற்கு சாலை வசதி ஏற்படுத்த எவ்வித வாய்ப்பும் இல்லையென சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும் இந்தக்குன்றில் குடியிருப்புகள் ஏற்படுத்த இயலாது என்றும் தெரிவித்துள்ளார். குன்றின் சரிவுகளில் குடியிருப்புகள் ஏற்படுத்தினாலும் மழைக்காலங்களில் மண் சரிவு, பாதைகள் சரிவு ஆகியவைகளினால் சேதம் ஏற்படும் என்று தெரிவித்துள்ளார். மேற்படி காரணங்களால் மேற்படி இடத்தில் குடியிருப்பு பாதை வசதிகள் செயது தருவதும் மிகுதியுள்ள நிலங்களிலும் குடியிருப்புகள் அமைக்கும் உத்தேசம் ஏதுமில்லையென மாவட்ட ஆட்சியாளர் கூறியுள்ளார்.

1980 பிப்ரவரி 2]

Theft of drugs from Hospitals in Madras City

Q.17—THIRU K. ABDUL LATHEEF: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether the Drugs administration in Madras City has detected the theft of large quantities of drugs from Hospitals about the 25th April 1978 at Madras City; and

(*b*) if so, the details thereof?

விடை— (அ) ஆம்.

(ஆ) 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி அன்று திரு. ஜெ. சுரேஷ்குமார் என்பவரின் வீடு சென்னையிலுள்ள மருந்து ஆய்வாளர்களால் சோதனையிடப்பட்டது. போதை மருந்துகளும், மற்றும் அரசு மருத்துவமனை முத்திரைகளிடப் பட்ட மருந்து வகைகளும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இதைப்போல திரு. சீனிவாசன் என்பவரின் வீட்டிலிருந்தும் ஏராளமான மருந்து வகைகள் சோதனையின் மூலம் பிடிபட்டது. அவ்விருவரும் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

Auction of sand from river bunds at Palar

Q. 18—*THIRU S. M. VASAN; Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether lorry loads of sand from the river bunds at Palar is being auctioned every year; and

(*b*) if so, the details thereof?

விடை—(அ) வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் பாலாற்றங்கரையில் ஒவ்வொரு பசலி ஆண்டுக்கும் குறிப்பிட்ட இடங்களில் மணல் ஏலம் விடப்படுகிறது.

(ஆ) செங்கல்பட்டு மாவட்டத்தில் 1387 ஆம் பசலிக்கு 5 கிராமங்களிலும், 1388 ஆம் பசலிக்கு 6 கிராமங்களிலும், வட ஆற்காடு மாவட்டத்தில் 1387 ஆம் பசலிக்கு 26 கிராமங் களிலும், 1388 ஆம் பசலிக்கு 29 கிராமங்களிலும் பாலாற்று மணல் ஏலம் விடப்பட்டுள்ளது. இதற்கான விபர அறிக்கை ஒன்று தனியே பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

*274–277ம் பக்கங்களில் இணைப்பு IVஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1980 பிப்ரவரி 2

கைத்தறி துணியின் ஏற்றுமதி அளவு

வினா 19—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கதர், கைத்தறித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1977–78 ஆம் ஆண்டில் கைத்தறித்துணி ஏற்றுமதியின் அளவு குறைந்துள்ளதா ?

(ஆ) அதனை விட 1978–79 ஆம் ஆண்டில் கைத்தறித் துணி ஏற்றுமதியின் அளவு குறைந்துள்ளதா

விடை—(அ) 1977–78 ஆம் ஆண்டில் ரூபாய் 5,341.60 இலட்சம்மதிப்புள்ள கைத்தறித்துணிகள் தனியார் மூலமாகவும், ரூபாய் 46.40 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித்துணிகள் கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் மூலமாகவும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

(ஆ) இல்லை. 1978–79 ஆம் ஆண்டில் சற்று அதிகமாகவே, அதாவது ரூபாய் 5,438·50 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தனியார் மூலமாகவும் ரூ. 97·50 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் மூலமாகவும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்ட கோர்ட்டுகளில் தேங்கியுள்ள வழக்குகள்.

வினா 20—திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு சட்டத் துறை அமைசசர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவிலுள்ள ஜில்லா தாலுகா கீழ் கோர்ட்டுகளில் பைசல் ஆகாமல் தேங்கியுள்ள சிவில் கிரிமினல் வழக்குகள் எத்தனை ?

(ஆ) அவ்வாறு தேங்கியுள்ளதற்கான காரணங்கள் யாவை ?

(இ) அதை துரிதமாக பைசல் செய்வதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை— (அ) 1978 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள் அன்று (மேற்கு) தஞ்சாவூரில் 8,818 சிவில் வழக்குகளும், (கிழக்கு) தஞ்சாவூரில் 5,269 சிவில் வழக்குகளும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 4,637 குற்றவியல் வழக்குகளும் தீர்ப்பு வழங்கப் படாமல் இருந்தன.

(ஆ) கடன் தவணை ஒத்தி வைப்பு திட்டத்தின்கீழ் தடை ஆணை பிறப்பிக்கப்பட்டதும், மேல் முறையீட்டு நீதிமன்றங் களில் மேற்சொன்ன வழக்குகள் சம்பந்தப்பட்ட சட்ட நட வடிக்கைகள் முடிவுறா நிலையில் இருந்ததும் எழுத்து மூலமான வாக்குமூலங்கள் தாக்கல் செய்யப்படாததும், கமிஷனரின் அறிக்கைகள் காலதாமதமாக வரப் பெற்றதும், வாதி, பிரதி வாதிகள் வராததும், சட்டப்படிக்கான பிரதிநிதிகளைச் சேர்ந் ததும், பிராசிகியூஷன் சாட்சிகள் வராததும், அழைப்பாணைகள், பிடி ஆணைகளை காவல்துறையினர் நிறைவேற்றாததும் மேற்சொன்ன வழக்குகள் குறித்துத் தீர்ப்பு வழங்கப்படாமல் இருந்ததற்கு காரணமாகும்.

(இ) ஆம்.

(ஈ) பட்டுக்கோட்டையில் துணை நீதிமன்றம் ஒன்று அமைக்க வேண்டும் என்று நீதிமன்றங்களின் அதிகார வரம்புக் குறித்த குழுவின் பரிவுரையை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு அங்கு துணை நீதிமன்றம் அமைப்பதற்கான ஆணை 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 ஆம் நாளிட்ட அரசு ஆணை (உள் துறை) நிலை எண். 2136-ல் பிறப்பிக்கப்பட் டுள்ளது. இத்துணை நீதிமன்றம் ஒரு நிரந்தர நீதிமன்றமாக இருக்கும். இவை துவங்கப்பட்டபின் அங்கு தேங்கியுள்ள வழக் குகள் துரிதமாக பைசல் ஆக ஏதுவாகும்.

திருநெல்வேலி மாவட்ட மாஞ்சோலை, நாலுமுக்கு, மேல்கோதையாறு பகுதி அரசு ஊழியர்களுக்கு மலை ஈட்டுப்படி.

வினா 21— திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், மாஞ்சோலை, நாலுமுக்கு, மேல் கோதையாறு பகுதிகளில் பணி புரியும் அரசு சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு மலை ஈட்டுப்படி வழங்கப்படுகிறதா?

விடை— மாஞ்சோலை, நாலுமுக்கு, மேல்கோதையாறு ஆகிய இடங்களில் எந்தவொரு அரசு அலுவலகமும் இயங்கவில்லை. இருந்தபோதிலும் மேற்கண்ட இடங்களில் பணியாற்றும் ஆசிரியப் பணியாளர்கள் "மலை ஈட்டுப்படியாக" மாதம் ரூபாய் 15 பெறுகின்றனர்.

நெற்குணம் கிராமம் அருகே தரைப்பாலம் அமைத்தல்.

வினா 22 — திரு. ப. சந்திரன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

வட ஆற்காடு தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், நெற்குணம் கிராமம் அருகில் உள்ள மடுவில் தரைப்பாலம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை — இல்லை.

கோவைப்புதூரில் வாங்கப் பெற்ற நிலத்தின் மதிப்பு.

வினா 23— திரு. ஆர். நடராசன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31 ஆம் நாள் வினா எண் 7-க்கு பேரவையில் அளித்த விடையையொட்டி தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கோவைப்புதூரில் வாங்கப்பட்ட நிலத்தின் ஏக்கர் மதிப்பு என்ன ?

(ஆ) என்ன விலைக்கு ஒவ்வொரு 'சை'ட்டும் விற்கப்பட்டது?

(இ) அந்த இடங்களை எவ்வளவு பேருக்கு பெயர் மாற்றம் செய்து கொடுத்துள்ளது ?

விடை— (அ) ஒரு ஏக்கர் நிலத்தின் மதிப்பு ரூ. 3,708.

(ஆ) ஒரு மனை ரூ. 2,700-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் விவரங்கள் வருமாறு :—

	ரூ.
(1) ஒரு மனையின் வாங்கிய விலை	206
(2) முதலீட்டிற்கான வட்டி	34
(3) ஒரு மனையின் அபிவிருத்திச் செலவு.	2,460
மொத்தம் ..	2,700

(இ) விற்பனைப் பத்திரம் இதுவரை வழங்கப் படவில்லை.

1980 பிப்ரவரி 2]

வடக்குப்பாளையம் கிராமத்தில் உள்ள குடிநீர்க் குழாய்க் கிணறு.

வினா 24—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரம் வட்டம், !வடக்குப்பாளையம் குடிநீர்க் குழாய்க் கிணறு சரிவர இயங்கவில்லை என்பது அரசு அறியுமா?

(ஆ) எவ்வளவு காலமாக குடிதண்ணீர் தட்டுப்பாடு உள்ளது?

விடை—(அ) & (ஆ) வடக்குப் பாளையம் கிராமம் ஹரிஜன காலனி, அக்ரகாரம் என்னும் இரண்டு சிற்றூர்களைச் கொண்டது. இக்கிராமத்தில் 1973 ஆம் ஆண்டுமுதல் குடிநீர்பற்றாக்குறை இருந்தது. தற்பொழுது அரிஜன காலனியில் ஓர் ஆழ்துளைக் கிணறு கை இறைப்பானுடன் நல்ல முறையில் இயங்கி வருகிறது. அக்ரகாரத்தில் உள்ள நான்கு ஆழ்துளைக் கிணறுகளில் உள்ள பழுதுபட்ட கை இறைப்பான்களில் இரண்டு செப்பனிடப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன. ஏனைய இரண்டு கை இறைப்பான்கள் பழுதுபார்க்கப்படுகின்றன. தவிர திறந்தவெளி கிணறு வாயிலாகக் கிடைக்கும் நீர் போதுமானதாக இல்லாததால் பொது நீரேற்றுகளுக்கு நீர் வழங்க இயலவில்லை. ஆகவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒரு ஆழ்துளைக் கிணறு ஒன்று வடக்கு பாளையம் அக்ரஹாரத்தில் தோண்டப்பட்டு பொதுமக்களுக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோக குழாய்களில் உள்ள பழுதுகள் நிவர்த்தி செய்யப்பட்டு பொதுக் குழாய் மூலமாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

Maintenance of Rest Houses of Highways Department.

Q. 25—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Social welfare be pleased to state the cost of maintenance of the Rest House by the Highways department during the calendar years 1975–76–77 rest house-wise ?

Ans.—Details are furnished in the statement placed on the Table of the House.

ஒரு விவர *அறிக்கை சட்ட பேரவை முன் வைக்கட் பட்டுள்ளது.

[*278-288ம் பக்கங்களில் இணைப்பு Vஆக அச்சிடப்பெற்றுள்ளது.

தனியார்களுக்கு வழங்கப்பெற்ற பேருந்து வழித்தடங்கள்.

வினா 26— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976–77, 1977–78 ஆம் ஆண்டுகளில் தனியார்களுக்கு உரிமம் வழங்கப்பட்ட பேருந்துகளின் வழித்தடங்கள் எத்தனை மாவட்ட வாரியாக ?

அவை முன் விவர *அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Government Hospita lat Kulasekaram.

Q. 27 –THIRU J. JAMES : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) Whether there is any proposal with the Government for the expansion of the Government Hospital at Kulasekaram in Kanya-kumari District and

(b) If so, the details there of ?

(அ) மற்றும் (ஆ) தற்போது குலசேகரத்திலுள்ள அரசு மருந்தகத்தை 50 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றும் செயற் குறிப்பு பரிசீலிக்கப்பட்டது. இதற்குப் பெருமளவில் செலவினமாகுமென்பதாலும், அரசின் நிதிப் பற்றாக்குறையாலும் உடனடியாக ஒப்புதல் வழங்க இயலவில்லை. மேலும், இம் மருத்துவமனையில் மகப்பேறு பிரிவு, அறுவை அரங்கம், மருந்து கிடங்கு, பிணப் பரிசோதனைக் கூடம் முதலிய வசதிகள் உள்ளன.

கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை.

வினா—28—திரு. கே. ஆர். சின்னராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மருத்துவமனையில் பொதுப் பிரிவும் குழந்தைகள் பிரிவும் அறுவை சிகிச்சை அறை ஒன்றும் கட்டுவதற்கான திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

[*289 ம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

விடை—(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி அரசு மருத்துவ மனையில் பொதுப்பிரிவும், அறுவை சிகிச்சை அறையும் கட்டு வதற்கான திட்டம் ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை. ஆனால் இம் மருத்துவமனையில் யூனிசெப் (UNICEF) நிதியுதவி யுடன் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் உள்ள கழிவிடங்கள்.

வினா 29— திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயன்படுத்தப் படும் கழிவிடங்கள் மிகவும் சுகாதார மற்ற நிலையில் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அக்குறைகளைக் களைய அரசு எடுக்க விருக்கும் நடவடிக்கை யாது ?

விடை— (அ) மற்றும் (ஆ) இவைகள் தினமும் காலையிலும், மாலையிலும் அந்தக் கோட்டத்தைச் சேர்ந்த துப்புரவுப் பணியாளர்களால் சுத்தம் செய்யப்படுகின்றன.

தங்காடு கிராமத்தில் காவல் நிலையம்.

வினா 30— திரு. போ. கோபாலன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா —

ஊட்டி தாலுக்காவில் தங்காடு கிராமத்தில் காவல் நிலையம் அமைப்பது அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை— இல்லை.

கோட்டையூர்—தைலாபுரம் சாலையில் உள்ள பாலம்.

வினா 31 :— திரு. இரா தாமரைக்கனி: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி, வத்ராயிருப்பு-அழகாபுரி நெடுஞ் சாலையில் கோட்டையூருக்கும் தைலாபுரத்திற்கும் இடையில் உள்ள ஓடையின் குறுக்கே உள்ள சிறிய பாலத்தை பெரிய பாலமாகக் கட்டும் உத்தேசம் உண்டா ?

விடை — இல்லை.

[1980 பிப்ரவரி 2

திருவில்லிபுத்தூர் தொகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

வினா 32;— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி மம்சாபுரம், சுந்தர பாண்டியம், கூமாபட்டி ஆகிய பேரூராட்சியை சேர்ந்த ஊர்களில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை —(அ) அரசின் தற்போதைய கொள்கை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவுவதாகும். மம்சாபுரம் திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. சுந்தரபாண்டியம், கூமாபட்டி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆர். ரெட்டியப்பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் குன்னூரில் ஒரு ஆரப்ப சுகாதார நிலையமும் ஏற்கெனவே செயல்படுவதால் மேலும் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவுவதற்கில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

வெள்ளங்குடி ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 33— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்ராயிருப்பு ஒன்றியம், நெடுங்குளம் கிராமத்திற்கும் கூமாபட்டிக்கும் இடையில் வெள்ளங்குடி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் உண்டா ?

விடை —இல்லை.

வட ஆற்காடு மாவட்ட மருத்துவ மனைகளில் மருத்துவர் பதவிகள்.

வினா 34 —திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், மாவட்ட மருத்துவ அதிகாரியின் கீழ் உள்ள மருத்துவ மனைகளில் தற்சமயம் எவ்வளவு மருத்துவர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்?

(ஆ) அதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

1980 பிப்ரவரி 2]

விடை —(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள மருத்துவ மனைகளில் தற்சமயம் மருத்துவர் பதவிகள் எதுவும் காலியாக இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

பத்திரம் எழுதும் வெளி எழுத்தாளர்களுக்கான தேர்வு.

வினா 35—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பத்திரப் பதிவாளர் அலுவலகங்களில் பத்திரம் எழுதும் வெளி எழுத்தாளர்களுக்கு அரசு தேர்வு நடத்தி அனுமதி வழங்குகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) கடைசியாக எந்த ஆண்டு தேர்வு நடத்தப்பட்டது ?

விடை —(அ) மற்றும் (ஆ) கோப்பு விதிகளின்படி ஒவ்வொரு ஆவணத்துடனும், பத்திர நகல், கட்சிக்காரர்களால் தாக்கல்செய்யப்பட வேண்டும். இந்த நகல் தயார் செய்வோருக்கு ஒரு தேர்வு நடத்தி அதில் தேர்வு பெற்றவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(இ) நகல் எழுதுவோர் உரிமம் வழங்க தேர்வு முதலாவதாக 1974-ல் நடத்தப்பட்டது. மீண்டும் 1979-லும் நடந்துள்ளது.

தஞ்சை மாவட்ட மருத்துவ மனைகளில் மருத்துவர் பதவிகள்

வினா 36 —திரு. மா. மணிமாறன். —மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசினர் மருத்துவ மனைகளில், மருத்துவர்கள் நியமிக்கப்படாமல் உள்ள காலி இடங்கள் எத்தனை ?

விடை : தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் தற்சமயம் எந்த மருத்துவர் இடமும் காலியாக இல்லை.

Reduction sale of Handloom goods at Co-optex Centres.

Q. 37: THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Khadi and Handlooms be pleased to state—

(*a*) the details of the steps taken to secure the reduction of prices of Handloom goods sold at Co-optex Centres to the actual consumers; and

(*b*) the steps taken to prevent malpractice in this ?

[1980 பிப்ரவரி 2

விடை—பொதுமக்களுக்கு குறைந்த விலையில் கைத்தறித் துணி கிடைக்கச் செய்யும்பொருட்டு அரசு கோ ஆப் டெக்ஸ் மூலமாக கீழ்க்கண்டுள்ள பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது :

கைத்தறித் துணிகளின் விற்பனை மீது சிறப்புத் தள்ளுபடி, கைத்தறித் துணிகளை ஒரு குறிப்பிட்ட தள்ளுபடியில் விற்பனை செய்வதற்கு அரசு, ப்ரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் (கோ-ஆப்டெக்ஸ்) நிதி உதவி அளித்து வருகிறது. கடந்த இரண்டாண்டு காலமாக 20 சதவீதம் தள்ளுபடியை அரசு தீபாவளி, பொங்கல் போன்ற முக்கியமான பண்டிகை காலங்களில் வழங்கி வருகிறது.

நெசவாளர்களுக்கு குறைந்த விலையில் நூல் கிடைக்கச் செய்யும் பொருட்டு மத்திய அரசு அறிவித்துள்ள திட்டத்தின்படி செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் இருந்த நூல் விலையிலிருந்து 10 சதவீதம் குறைவாக 60-ம் நெம்பர் மற்றும் அதற்குக் குறைந்த நெம்பர் நூலுக்கு விலையும், 15 சதவீதம் குறைவாக 60 நம்பர் மற்றும் அதற்கு அதிகமான நெம்பர் நூலுக்கு விலையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதி வரை அமுலில் இருக்கும்.

தமிழ்நாட்டில் இயங்கி வரும் 12 கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்கின்ற 7,000 பேல்கள் நூலை கோ ஆப்டெக்ஸ் தனது 19 விற்பனை நிலையங்கள் மூலமாக கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு பகிர்ந்தளித்து வருகிறது.

கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகள் சாயம் தோய்ப்பதற்கும், பதனிடுவதற்கும் வேண்டிய வசதிகளை ஈரோட்டிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவுத் துணி செய்முறைப் படுத்தும் ஆலை அளித்து வருகிறது. மேலும் மாநிலத்தில் வெவ்வேறு இடங்களில் 8 நவீன சாயச் சாலைகளும் நிறுவப்பட உள்ளன.

அரசு உதவியுடன் கோஆப்டெக்ஸ் மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் வடிவமைப்பு நிலையங்களை நிறுவியுள்ளது. இதனால் நெசவாளர்கள் பல புதிய டிசைன்களை உருவாக்கவும், அதனால் தங்களால் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை விரைவாக விற்பனை செய்யவும் இயலும்.

பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் தரமான பொன் இழையை உற்பத்திசெய்து, விநியோகிக்கும்பொருட்டு அரசு தமிழ்நாடு பொன்இழை ஆலை என்ற அரசுத்துறை நிறுவனம் ஒன்றினை காஞ்சிபுரத்தில் அமைத்துள்ளது. மேலும், காஞ்சிபுரத்திலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ''கச்சாப்பட்டு மற்றும் பொன் இழை கொள்முதல் குழு'' ஒன்றினை எற்படுத்தியுள்ளது. இக்குழு நல்ல, தரமான கச்சாப்பட்டு மற்றும் பொன்இழையை

1980 பிப்ரவரி 2]

நியாயமான விலைக்கு வாங்கி பட்டு கூட்டுறவு சங்கங்களுக்கு பகிர்ந்தளித்து வருகிறது. சூரத் உற்பத்தியாளர்களின் உள்ளூர் ஏஜெண்ட்டுகளை சார்ந்திருப்பதற்குப் பதிலாக, இக்குழுவே சூரத்தில் நேரடியாக வாங்கி விநியோகிக்கின்றது.

(ஆ) தள்ளுபடி வழங்குவதில் ஏதேனும் முறைகேடுகள் இருக்குமா என்பது பற்றி கேள்வி அமைந்திருக்கும் என்று கருதப்படுகின்றது. கைத்தறித்துணிகளின் விற்பனை மீது பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், கோ-ஆப்டெக்சும் தள்ளுபடி வழங்குகின்றன. இதில் முறைகேடுகள் ஏற்பட வழியில்லை. அப்படி யாராவது முறைகேடுகளில் ஈடுபட்டதாக போதிய சாட்சியங்கள் கிடைத்தால் சம்பந்தப்பட்டவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அரியலூரில் தீயணைப்பு நிலையம்

வினா 38—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரியலூரில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துவது தொடர்பான செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது?

விடை—தீயணைப்பு நிலையங்கள் நிறுவுதலுக்கான முன்னுரிமைப்பட்டியலில் அரியலூர் இடம் வகிக்கின்றது. அதன் முறைப்படி அங்கு ஒரு தீயணைப்பு நிலையம் நிறுவப்படும்.

செல்லம்மாள் பச்சையப்பன் மகளிர் கல்லூரிப் பகுதியில் குடிநீர் வசதி.

வினா 39—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை அண்ணாசாலையில் உள்ள பச்சையப்பன் மகளிர் கல்லூரி மற்றும் அதனை ஒட்டிய குடியிருப்புகளுக்கு நகர குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளதா?

விடை—அண்ணா சாலையில் உள்ள செல்லம்மாள் பச்சையப்பன் மகளிர் கல்லூரிக்கு குடிநீர்குழாய் இணைப்பு உள்ளது. இதில் கைபம்பு பொருத்தப்பட்டு தேவையான அளவு குடிநீர் கிடைக்கிறது.

கல்லூரிக்கு வடக்கு திசையில் உள்ள குடியிருப்புகளுக்கு அண்ணா சாலையிலிருந்து குழாய் இணைப்பு போடப்பட்டு அதன் மூலமாக நீர் வழங்கப்படுகிறது. தெற்கு திசையிலுள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு இல்லை. செல்லம்மாள் மகளிர் கல்லூரியின் மற்ற இரு பக்கங்களிலுள்ள சில குடியிருப்பு

[1980 பிப்ரவரி 2

களுக்கு அண்ணா சாலையிலிருந்து குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. வேறு வீடுகளிலிருந்து இதுவரை குடிநீர் இணைப்புக்கான விண்ணப்பம் வாரியத்திற்கு அனுப்பப்படவில்லை. பொதுவாக இப்பகுதியில் குடிநீர் வசதி திருப்திகரமாக உள்ளது.

கீற்றுமானாறு, நாட்டார் ஆறுகளின் குறுக்கே பாலங்கள்.

வினா 40—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முறுக்கங்குடி-திருவிடைமருதூர் சாலையில் இடைப்படுகின்ற கீற்றுமானாறு, நாட்டார் ஆறுகளின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

விடை—கீர்த்திமானாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டி முடிக்கப் பெற்றுள்ளது. நாட்டாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டப்பட்டு வருகிறது.

உளுந்தூர் பேட்டை தொகுதியில் சிறிய பேருந்துகள்.

வினா 41—திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை யூனியன் பகுதி, தியாகதுருகம் யூனியன் பகுதி, நல்லூர் யூனியன் பகுதி ஆகியவைகளில் கிராம பகுதிகளில் சிறு பஸ்கள் விட கோரிக்கைகள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், பஸ்கள் விட அரசு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

விடை—(அ) அண்ட் (ஆ) * விவர அறிக்கை ஒன்று தனியே அவை முன் வைக்கப்பெற்றுள்ளது.

உளுந்தூர்பேட்டைத் தொகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

வினா 42—திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி தியாகதுருகம் யூனியன் பகுதி 'அசகொளத்தூர்' என்ற கிராமத்திலும், உளுந்தூர்பேட்டை யூனியன் பகுதி 'கிளியூர்' என்ற கிராமத்திலும் ஆரம்ப சுகாதார நிலையம் திறக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

*290-291ம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பெற்றுள்ளது

1980 பிப்ரவரி 2]

(ஆ) ஆம் எனில், அங்கு சுகாதார நிலையம் திறக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை— (அ) தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்தில் தியாகதுருகத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், உளுந்தூர் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் இலவனசூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும் தற்போது இயங்கி வருவதால் இவ்விரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள அசகொளத்தூரிலும், கிளியூரிலும் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேலாண்டி பாளையம் ஜவஹர் நகரில் புதிய ஆரம்பப்பள்ளி

வினா 43—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை நகராட்சி, வேலாண்டி பாளையம் "ஜவஹர் நகரில்" ஆரம்பப்பள்ளி துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

விடை.—கோயம்புத்தூர் நகராட்சி, வேலாண்டிப்பாளையம் ஜவஹர் நகரில் ஆரம்பப்பள்ளி துவங்க, பிரேரணை ஏதும் பெறப்படவில்லை.

பழனி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்கள்

வினா 44—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்கள் எத்தனை ஏக்கர்கள்?

(ஆ) எந்தெந்த ரெவின்யூ கிராமங்களில் உள்ளன?

விடை—(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் பின்வருமாறு—

	ஏ. செ.
நஞ்சை	323·52 1/2
புஞ்சை	289·94
மானாவாரி	219·85
	833·31 1/2

(ஆ) எந்தெந்த ரெவின்யூ கிராமங்களில் இந்த நிலங்கள் உள்ளன என்ற விவரங்கள்@ தனி இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளன.

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் மழை, காட்டாற்று வெள்ளத் தால் மணல் மூடப்பெற்ற விவசாய நிலங்கள்.

வினா 45— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் 26-12-1978-ம் தேதி பெய்த மழையாலும் காட்டாற்று வெள்ளத்தாலும் எத் தனை ஏக்கர் விவசாய நிலங்களை மணல் மூடியது ?

(ஆ) மணலை அப்புறப்படுத்த அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது ?

விடை—(அ) 50.42 ஹெக்டேர் நிலம் மணல் மூடியது.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 301 கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. திருவில்லிப் புத்தூர் தொகுதியில் பாதிக்கப்பட்ட 12 கிராமங்களில் இதுவரை மொத்தம் 50.42 ஹெக்டேர் நிலங்கள் மணலால் மூடப்பட்டன. அவைகளில் 31 ஹெக்டேர் நிலங்கள் வேளாண்மைத் துறையின் புல்டோசர்களின் மூலம் சீர்திருத்தம் செய்யப்பட்டன. இதற்காக ரூ. 63,437.00 செலவு செய்யப்பட்டது. எஞ்சியுள்ள 19.42 ஹெக்டேர் நிலங்கள் சிறிதளவே மண் மேடிட்டு விளங்கியதாலும், புல்டோசர்களைப் பயன்படுத்துவது சாத்தியமற்றதாகக் காணப்பட்டமையாலும், அவைகளைச் சீர்திருத்தம் செய்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட விவசாயிகளை அரசு கேட்டுக்

(@292-294-ம் பக்கங்களில்ல் இணைப்பு VIII ஆக அச்சிடப் பெற்றுள்ளது.)

கொண்டது. மண் மேடிட்ட நிலங்களைச் சீர்திருத்தம் செய்த பணி பற்றிய கிராம வாரியான தகவல்கள் (இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன). கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

இராமநாதபுரம் மாவட்டம்.

வரிசை எண்ணும் பாதிக்கப்பட்ட கிராமத்தின் பெயரும்.	கிராமத்தில் பாதிக்கப்பட்ட நிலப்பரப்பு. (ஹெக்டேரில்).	சீர்திருத்தம் செய்யப்பட்ட நிலப்பரப்பு. (ஹெக்டேரில்).	31—3—1979 வரை செய்யப்பட்ட வேலையின் மதிப்பு.
(1)	(2)	(3)	(4)
			ரூ. பை.
1 வத்திராப்பு	0.52	0.52	435.00
2 மகாராஜபுரம் ..	11.66	4.27	9,605.00
3 கோவிந்தநல்லூர் ..	6.82	6.82	14,195.00
4 கரிசல்குளம்	2.00	1.40	2,125.00
5 இலந்தைக்குளம் ..	11.00	3.29	6,535.00
6 கோட்டையூர்	3.86	3.86	9,078.00
7 அய்யர் தருமம் ..	2.63	1.40	3,060.00
8 வெள்ளப்பொட்டல் ..	8.56	8.05	15,344.00
9 களத்தூர்	1.66	..	..
10 கரிகாலம்காத்தான் ..	0.32	..	..
11 ருத்திரப்பநாயக்கன்பட்டி	1.21	1.21	2,550.00
12 வடுகப்பட்டி	0.18	0.18	510.00
	50.42	31.00	63,437.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அரசு ஓவியக்கலைப் பள்ளிகள், கல்லூரிகள்

வினா 46—திரு. சொ. ந. பழனிச்சாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழக அரசு நடத்தும் ஓவியப் பள்ளிகள் மாநிலத்தில் எத்தனை உள்ளன?

(ஆ) சென்னையில் உள்ள ஓவியக் கல்லூரியின் அபிவிருத்திக்கு அரசு இதுவரை எடுத்த நடவடிக்கை யாது?

விடை—(அ) ஓவியக் கலைக் கல்லூரி சென்னையில் ஒன்றும் கும்பகோணத்தில் ஒன்றும் உள்ளன.

(ஆ) விவர @அறிக்கை ஒன்று பேரவையில் வைக்கப்படுகிறது.

உதகை நீரோடை சீரமைப்பு

வினா 47—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உதகை தொகுதி, உதகையில் உள்ள கிரீன்பீல்டு என்னுமிடத்தின் வழியாகச் செல்லும் ஆற்றை வெள்ளச் சேதம் ஏற்படாத வகையில் மாற்றுகின்ற செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

விடை—உதகை நீரோடையை ரூபாய் 30 இலட்சம் செலவில மேம்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேம்படுததும் பணியில் 50 சதவீதம் முடிக்கப்பட்டுவிட்டது. எஞ்சிய பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டுவிடும்.

தஞ்சைக்கும்—மாரியம்மன் கோவிலுக்கும் இடையே உள்ள சமுத்திரம் ஏரி பராமரிப்பு.

வினா 48—திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சைக்கும், மாரியம்மன் கோவிலுக்கும் இடையே உள்ள சமுத்திரம் என்ற ஏரி தற்சமயம் எந்தத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது?

(ஆ) அதை சுற்றுலாத் துறையின் கீழ் ஆழப்படுத்தி உல்லாசப் படகுகள் விட அரசு உத்தேசித்துள்ளதா?

(@295–296ம் பக்கங்களில் இணைப்பு IX ஆக அச்சிடப் பெற்றுள்ளது).

1980 பிப்ரவரி 2]

விடை —(அ) தஞ்சைக்கும், மாரியம்மன் கோவிலுக்கும் இடையே உள்ள சமுத்திரம் என்ற ஏரி தற்சமயம் பொதுப் பணித்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இல்லை.

கோவை மாவட்டத்தில் உள்ள அம்பர் சர்க்கா யூனிட்டுகள்

வினா 49 — திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கதர், கைத்தறித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பர் சர்க்கா யூனிட்டுகள் கோவை மாவட்டத்தில் எத்தனை இடங்களில் செயல்படுகிறது ?

(ஆ) 1978–79-ம் ஆண்டு புதிதாகத் துவங்கிய இடங்கள் எவை ?

விடை —(அ) தற்சமயம் கோவை மாவட்டத்தில் 139 அம்பர் சர்க்கா நிலையங்கள் (கிராமிய நூற்புக் கூடங்கள்) இயங்கி வருகின்றன.

(ஆ) 1978–79-ம் ஆண்டு கோவை மாவட்டத்தில் கோபி யில் இரண்டு கிராமிய நூற்புக் கூடங்கள் துவங்கப்பட்டன.

எலவானாசூர் கோட்டை பஞ்சாயத்தில் குடிநீர் வழங்கல்

வினா 50 — திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) உளுந்தூர்ப்பேட்டை வட்டம், எலவானாசூர் கோட்டை (படாகும்) பஞ்சாயத்தில் எத்தனை சிறு கிராமங்கள் உள்ளன?

(ஆ) அங்கு குடிநீர் பஞ்சம் அதிகமாக உள்ளது பற்றி அரசுக்கு அறிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அங்கு ஏற்பட்டுள்ள தண்ணீர் பஞ்சத்தைத் தீர்க்க பெரிய திட்டம் தீட்டப்பட உள்ளதா ?

விடை —(அ) 13 சிறு கிராமங்கள் உள்ளன.

(ஆ) அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

பரணி, அத்திகடவு பகுதியில் பலநோக்குக் கூட்டுறவு சங்கம் அமைத்தல்.

வினா 51— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோவை, மேட்டுப்பாளையம், பெரியநாயக்கன் பாளையம் வனச்சரகத்தில் வாழும் ஆதிமலை வாசிகள் உற்பத்தி செய்யும் விளை பொருள்களை சேகரம் செய்ய பரணி, அத்திகடவு பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுக் கடை ஏற்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை —கோவை, மேட்டுப்பாளையம், பெரியநாயக்கன் பாளையம் வனச் சரகப் பகுதிகளிலிருந்து சேகரிக்கப்படக்கூடிய வனப்பொருட்களின் அளவு பற்றியும், விவசாய உபதொழில் களை மேற்கொள்ள அங்குள்ள சாத்தியக் கூறுகளையும் பரிசீலித்து இப்பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நட-வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருவிடைமருதூர் அருகில் உள்ள சூரியனார் கோயில் பகுதியை சுற்றுலாத் தலமாக்குதல்

வினா 52 —திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூருக்கு அருகில் உள்ள சூரியனார் கோயில், சூரியனுக்கு தென் நாட்டில் உள்ள ஒரே கோயில் என்பதால் அதனை சுற்றுலாத் தலமாக்கும் ஆய்வு அரசுக் குறிப்பில் உள்ளதா ?

விடை— இல்லை.

கோவை மாவட்டத்தில் குட்டை அமைப்புத் திட்டங்கள்.

வினா 53 —திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் உள்ள ஆறுகளில் குட்டைகள் கட்ட அரசு நிதி ஒதுக்கியுள்ளதா ?

(ஆ) பொருளாதார திட்டமல்ல என (uneconomica Scheme) தள்ளப்பட்ட திட்டங்கள் எத்தனை ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1980 பிப்ரவரி 2]

விடை—(அ) மற்றும் (ஆ) மாவட்ட வாரியாக குட்டை திட்டங்களுக்கென்று தனியாக அரசு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. 1978–79ஆம் ஆண்டிலும் நடப்பு ஆண்டிலும் புதிய குட்டை கட்டும் திட்டங்கள் ஏதும் எடுத்துக் கொள்வதற்கு அரசு ஒப்புதல் அளிக்கவில்லை. குட்டை திட்டத்தை முன்னோடித் திட்டங்கள் மூலம் ஆய்வு செய்து அதன்பின் இத்திட்டங்களை எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கலாம் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஏர்வாடி பகுதிக்கு பாசன வசதி

வினா 54—திரு. மா. மணிமாறன் :— மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருமருகல் ஒன்றியம் ஏர்வாடி என்ற ஊருக்கு பாசனம் சீர்பெற அரசலாற்றின் குறுக்கே ஒரு ரெகுலேட்டர் அமைத்து புதிய வாய்க்கால் தலைப்புக்கோரி அரசிற்கு வேண்டுகோள் வரப்பட்டதா ?

(ஆ) நடவடிக்கை என்ன ?

விடை—(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. ஏர்வாடி கிராம ஆயக்கட்டில் உள்ள நிலங்கள் மேடான பகுதியில் அமைந்திருப்பதால் அரசலாற்றில் புதிய தலைப்பு (Head sluice) அமைத்து புதிய வாய்க்கால் வெட்டி, பாசனம் அளிப்பது சாத்தியமில்லை எனக் கருதப்படுகிறது.

தலைவர்கள் பிறந்த நாட்களின்போது கைத்தறித் துணி விற்பனை

வினா 55—திரு. பெ. சு. திருவேங்கடம்:—மாண்புமிகு கதர், கைத்தறித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–ஆம் ஆண்டில், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர் ஆகிய தலைவர்களின் பிறந்த நாளில் கைத்தறித் துணி வாங்குவோருக்கு இவ்வாண்டு தள்ளுபடி கொடுக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் இதனால் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு :

(இ) அதிகப்படியாக விற்பனையான துணி எவ்வளவு?

[1980 பிப்ரவரி 2

விடை—(அ) 1978 ஆம் ஆண்டில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்த நாட்களை முன்னிட்டு தமிழ்நாடு கூட்டுறவு நெசவாளர்சங்கம் (கோ ஆப்டெக்ஸ்) மட்டும் தள்ளுபடி வழங்கியது. ஆனால் காமராசர் பிறந்த நாளை முன்னிட்டு அதே ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு நெசவாளர் சங்கமும், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் தள்ளுபடி வழங்கின.

(ஆ) பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் வழங்கிய தள்ளுபடியால் இக்காலங்களில் ரூபாய் 140 இலட்சமும், தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்) வழங்கிய தள்ளுபடியால் இக்காலங்களில் ரூ. 19·07 இலட்சமும் அரசுக்கு செலவு ஆகியது. இதில் கோ-ஆப்டெக்ஸ் வழங்கிய தள்ளுபடியான ரூ. 19.07 இலட்சம் ஏற்கெனவே அச்சங்கத்திற்கு அரசு ஆண்டுதோறும் வழங்கும் மொத்தத் தள்ளுபடி மானியத் தொகையான ரூ. 75 இலட்சத்தில் அடங்கும்

(இ) அதிகப்படியாக விற்பனையான துணியின் விவரம் கீழே* இணைப்பில் தரப்பட்டுள்ளது·

பால்வளத் துறை ஊழியர்களது ஊதியம்.

வினா 56—திரு· ரா· கிருஷ்ணன்: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால்வளத் துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் நிர்ணயம் செய்ய அரசுக்கு அலோசனை உள்ளதா?

(ஆ) நடவடிக்கை என்ன?

விடை (அ) மற்றும் (ஆ)—அரசு பால் பண்ணையில் பணியாற்றி வரும் நிபந்தனைக்குட்பட்ட பணியாளர்களை நிரந்தர பணியமைப்பின் கீழ் கொண்டு வர அரசு ஆணை எண் 1399, பொது (பணி) துறை 1971 ஆம் ஆண்டு ஏப்ரல மாதம் 22ஆம் நாளில் அனுமதிக்கப்பட்டது. அவ்வாறே அரசு ஆணை எண்· 1731 பொது (பால் வளம்) துறை 1973 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 22ம் நாள் அன்று 184 நிபந்தனைக்குட்பட்ட பணியாளர்களை நிரந்தர பணியமைப்பின் கீழ் கொண்டுவர உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும் நான்கு ஆண்டுகளுக்குமேல் நிபந்தனைக்குட்பட்ட 85 பணியாளர்களை அவர்கள் 5 ஆண்டு முடியும்பொழுது நிரந்தர பணியமைப்பின்கீழ் கொண்டுவரவும் மேற்கூறிய அரசு ஆணையில் உத்தரவிடப்பட்டுள்ளது·

[*297—299 ஆம் பக்கங்களில் இணைப்பு X ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

1980 பிப்ரவரி 2]

பால்வளத்துறையில் 1977ஆம் ஆண்டு சனவரி மாதம் 1ஆம் நாள் அன்று ஐந்து வருட காலம் பணியாற்றிய 58 நிபந்தனைக்குட்பட்ட ஊழியர்களையும் (Contingent Mazdoors) 1978ஆம் ஆண்டு சனவரி மாதம் 1ஆம் நாள் அன்று ஐந்து வருட காலம் பணியாற்றிய 60 நிபந்தனைக்குட்பட்ட ஊழியர்களையும் நிரந்தர பணியமைப்பின்கீழ் கொண்டுவர அரசு ஆணை எண். 1001 (விவசாயம்) 1979ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் நாளில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 1979ஆம் ஆண்டு சனவரி மாதம் 1ஆம் நாள் அன்றுவரை ஐந்து வருட காலம் நிபந்தனைக்குட்பட்ட பணியாளர்களாக பணியாற்றிய 11 பணியாளர்களை நிரந்தர பணி அமைப்பின்கீழ் பால் உற்பத்தி மற்றும் பால் மேம்பாட்டுத் துறை ஆணையர் அவர்கள் அரசுக்குக் கருத்துரு அனுப்பியுள்ளார். இக்கருத்துருவின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருவில்லிப்புத்தூர் நாச்சியார் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்கள்.

வினா 57— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் நாச்சியார் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு?

(ஆ) அதன் மூலம் தேவஸ்தானத்திற்கு கிடைக்கும் ஆண்டு வருமானம் எவ்வளவு?

விடை— (அ) திருவில்லிப்புத்தூர் நாச்சியார் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்கள் விவரம் :—

	ஏ.	செ.
நஞ்சை	291	26
புஞ்சை	796	29
	1,087	55

(ஆ) அதன் மூலம் தேவஸ்தானத்திற்கு கிடைக்கும் ஆண்டு வருமானம்—

	ரூ. பை.
நஞ்சையின் மூலம் (வைக்கோல் கிரயம் ரூ. 365 உட்பட.)	89,826 00
புஞ்சையின் மூலம்	66,307 50
மொத்தம் ..	1,56,133 50

[1980 பிப்ரவரி 2

அனுப்பம்பாளையம் தண்ணீர் பந்தல், ஏ.வி.பி. ரோடு குழாய்க்கிணறுகளுக்கு மின் இணைப்பு.

வினா 58—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 15 வேலம்பாளையம் பேரூராட்சியில் அனுப்பம் பாளையம் தண்ணீர் பந்தல், ஏ.வி.பி. ரோடு ஆகிய இருகுழாய்க் கிணறுகளுக்கு மின் மோட்டார் பொருத்த கடந்த 1977ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதியன்று அனுமதி கோரப்பட்டதா ?

(ஆ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை— (அ) & (ஆ) : வேலம்பாளையம் பேரூராட்சியில் அனுப்பம்பாளையம் தண்ணீர் பந்தல், ஏ.வி.பி. ரோடு ஆகிய இரு இடங்களிலும் குழாய் கிணறுகளுக்கு மின் இணைப்புக்கோரி 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ஆம் தேதி அன்றுதான் விண்ணப்பம் கிடைத்தது. இதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து 1979ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி அன்று வேலம்பாளயைம் ஊராட்சி அதிகாரிக்கு தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது. ஊராட்சியானது மின் மோட்டார், பம்புசெட் முதலியன பொருத்தாமல் இருப்பதால் உடனடியாக மின் இணைப்பு கொடுக்க இயலவில்லை.

குறைந்த வருமானம் உள்ள நகராட்சிப் பணியாளர்களுக்குப் பண்டிகை முன்பணம்.

வினா 59—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அடிப்படை சம்பளம் மாதம் ரூ. 18 (பதினெட்டு) பெறும் நகராட்சி கீழ்நிலை ஊழியர்களுக்கு பண்டிகை முன் பணம் வழங்கப்பட்டு வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை ?

(இ) அதனை உயர்த்தித் தரும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை : (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 100க்கு குறையாமலும் ரூ. 175-க்கு அதிகப்படாமலும். நகராட்சிகளின் நிதி நிலைக்கு ஏற்றவாறு முன் பணம் அளிக்கப்பட்டு வருகிறது.

(இ) ஆய்வில் உள்ளது.

1980 பிப்ரவரி 2]

திரையரங்குகளில் கண்டு பிடிக்கப்பட்ட வரி ஏய்ப்புகள்.

வினா 60— திரு. பொ. சிகாமணி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1978–79-ல் தமிழகத்தில் தியேட்டர்களில் வரி ஏய்ப்பு எவ்வளவு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது ?

(ஆ) இதுவரை எத்தனை தியேட்டர்கள் ?

(இ) என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது ?

விடை—(அ) 1978–79ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள தியேட்டர்களில் ரூ. 4,28,000-க்கு வரி ஏய்ப்பு கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

(ஆ) இவ்வரி ஏய்ப்பு 240 தியேட்டர்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

(இ) ரூ. 23,190 இணக்கக் கட்டணமாகவும் ரூ. 1,31,655 அபராதத் தொகையாகவும் விதிக்கப்பட்டுள்ளது.

மாயூரம் பொது மருத்துவ மனையில் படுக்கைககளின் எண்ணிக்கை

வினா 61 :—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மாயூரம் அரசினர் பொது மருத்துவமனையில் உள்ள படுக்கைகள் எத்தனை?

(ஆ) அதில் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டவை எத்தனை?

விடை :—(அ) 104 படுக்கைகள்.

(ஆ) 24 படுக்கைகள் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன

திருக்கோட்டியூர்-மதுரை தனியார் பேருந்துப் பணி.

வினா 62—திரு. கூத்தகுடி ச. சண்முகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருக்கோட்டியூர் குண்டேந்தல்பட்டி வழியாக மதுரை சாலையை இணைக்கும் சாலையில் தனியார் பேருந்துக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தும் சாலை பழுது காரணமாக பஸ் ஓடவில்லை என்பதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில், பஸ்விட அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை :— (அ) ஆம்.

(ஆ) பெரும் மழை காரணமாக திருக்கோட்டியூர் குண்ட லேந்தல்பட்டி சாலை பழுதடைந்திருந்த காரணத்தினால் பஸ் ஓடாமல் இருந்தது. சாலை பழுது பார்க்கப்பட்டு பஸ் விடப் பட்டிருக்கிறது.

சைதாப்பேட்டை தொகுதியில் மின்சாரத்துறை மூலம் தெரு விளக்குகள் அமைத்தல்.

வினா 63—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சைதாப்பேட்டை தொகுதியில் பல பகுதிகளில் மின் சாரத்துறை (M.E.S.)யின் மூலம் தெருவிளக்குகள் அமைத்து மின் இணைப்பு தரப்பட்டுள்ளதா ?

(ஆ) அவைகளில் பெரும்பகுதி மின் இணைப்பு துண்டிக்க மின்சாரத்துறை முடிவு எடுத்துள்ளது என்பது உண்மையா?

(இ) சென்னை மாநகராட்சியே தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு அளிக்க முன்வருமா?

விடை—(அ) சைதாப்பேட்டை தொகுதியில், கீழ்க்கண்ட பகுதிகளில் தமிழ்நாடு மின்சாரவாரியத்தை சார்ந்த சென்னை மின் திட்டத்திலிருந்து சென்னை மாநகராட்சியுடைய தெரு விளக்கு களுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது.

1. அரசு பண்ணை.
2. ஈக்காட்டு தாங்கல்.
3. தனகோட்டி ராஜா தெரு.

(ஆ) இல்லை.

(இ) தெருவிளக்குகளை பொறுத்தவரையில் மேலே குறிப் பிட்ட பகுதிகளில் (அதாவது அரசு பண்ணை, ஈக்காட்டு தாங்கல், தனகோட்டி ராஜா தெரு) தெருவிளக்குகள் மிகவும் குறைவான எண்ணிக்கையில் இருப்பதால் தற்போதுள்ள தமிழ் நாடு மின்சார வாரியத்தின் மின் இணைப்பே சரி எனப்படுகிறது. தெரு விளக்குகளின் எண்ணிக்கை அதிகமாகும் காலத்தில் தனியாக துணை மின் நிலையம் சென்னை மாநகராட்சியே அமைக்க ஏற்பாடு செய்யும்.

தமிழ்நாட்டில் கூட்டுறவுப் பண்ணை சாகுபடி.

வினா 64—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சா தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுப் பண்ணை சாகுபடி எங் கெங்கு எத்தனை ஏக்கர் நிலங்களில் பயிர் செய் ப்படுகிறது ?

1980 பிப்ரவரி 2]

(ஆ) இந்தப் பண்ணைகள் (1) நஷ்டத்தில் இயங்குகிறதா (2) இலாபத்தில் இயங்குகிறதா?

(இ) அதற்கு ஆண்டிற்கு ஆகும் பாராமரிப்பு செலவு எவ்வளவு?

விடை— (அ) தமிழகத்தில் தற்போது 172 பண்ணை சாகுபடி சங்கங்கள் உள்ளன. அவைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

வரிசை எண்.	மாவட்டம்.	சங்கங்களின் மொத்தம்.
(1)	(2)	(3)
1	செங்கல்பட்டு	8
2	வட ஆற்காடு	6
3	தென் ஆற்காடு	15
4	திருச்சிராப்பள்ளி	3
5	தஞ்சாவூர்	50
6	கோயம்புத்தூர்	9
7	நீலகிரி	3
8	சேலம்	14
9	தருமபுரி	5
10	இராமநாதபுரம்	6
11	மதுரை	39
12	திருநெல்வேலி	14
	மொத்தம் ..	172

இச் சங்கங்கள் தற்போது 24,292 ஏக்கர் நிலங்களில் பயிர் செய்யப்படுகிறது.

(ஆ) 1977–78-ம் ஆண்டில் 15 சங்கங்கள் இலாபத்திலும் 141 சங்கங்கள் நட்டத்திலும், 15 சங்கங்கள் லாப நட்டமின்றியும் செயல்பட்டன. ஒரு சங்கம் 16—5—1979-ல் ஆரம்பிக்கப்பட்டது.

(இ) இச்சங்கங்களைப் பராமரிக்க ஆண்டுக்கு ரூ. 4,52,406 சங்கங்களுக்குச் செலவாகிறது.

[1980 பிப்ரவரி 2

ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றியப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்வழங்கு திட்டம்.

வினா 65— திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஆய்வு நடத்தப்பட்ட கிராமங்கள் எவை ?

(ஆ) அவைகளில் எத்தகைய கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது ?

விடை — (அ) (1) முத்துராமலிங்கபுரம்

(2) நொச்சிக்குளம்

(3) தண்ணீர்பந்தல்

(4) கைலாசபுரம்

(5) சேந்தமங்கலம் அரிசன காலனி

(6) காட்டாரி மங்கலம் பிள்ளைமார் குடியிருப்பு

(7) இல்லமாற்குளம்

(8) நாதன்குறிச்சி

(9) மூக்குப்பேரி மற்றும் ஓயான்குடி

(ஆ) மூக்குபேரி மற்றும் ஓயான்குடியைத் தவிர மற்ற 8 சிற்றூர்களுக்கும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மூக்குப்பேரி மற்றும் ஓயான்குடியைப் பொறுத்த வரை பணிகள் தொடங்க இருக்கின்றன.

செங்கம் ஒழுங்குமுறை விற்பனை கூடம் அலுவலகக் கட்டிடம்.

வினா 66— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வடாற்காடு விற்பனைக் குழுவின் செங்கம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அலுவலகம் ஆகியவற்றுக்குக் கட்டிடம் கட்டப்பட்டு தற்சமயம் நடைபெற்று வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு மதிப்பீடு ?

(இ) வேலை செய்து முடித்த ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டுவிட்டதா ?

விடை— (அ) ஆம்.

(ஆ) ரூ. 40,300.

(இ) ஒப்பந்தக்காரர்களுக்கு அவரவர் செய்த வேலைகளின் மொத்த மதிப்பீட்டில் 5 சதவீதம் காப்புத் தொகையாகப் பிடிக்கப்பட்டு, மிகுதியில் 75 சதவீதம் வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 3,511.61 செலவில் கிடங்குக் கட்டிய வேலைக்கும், ரூ. 2,300.81 செலவில் ஏலக் கொட்டகை கட்டிய வேலைக்குமான அளவுகள் சரிபார்க்கும் புத்தகம் காணாமல் போய் விட்டதால், ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் கொடுக்க இயலவில்லை. திருவண்ணாமலை செயற் பொறியாளர் இந்த வேலைகளுக்கான அளவினைச் சரிப்பார்த்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இது வந்தவுடன் பணம் உடனடியாக வழங்கப்படும். மேலும் அளவு சரிபார்க்கும் பதிவேடு காணாமல் போனதற்காகச் சம்பந்தப்பட்ட மேற்பார்வை அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் வாழை பயிரிடல்

வினா 67—திரு. கே. சௌந்தரராசன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் வாழை பயிரிடப்படும் பரப்பு எவ்வளவு ? —

(ஆ) அதற்கு கிஸ்தி, தண்ணீர்த் தீர்வை, வகையறாவும் விவசாய வருமான வரியும் எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகின்றன ?

விடை— (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1388 ஆம் பசலி ஆண்டில் 29,188 ஏக்கர் பரப்பில் வாழைப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) நிலவரி (கிஸ்தி).

ஒருபோக மற்றும் இருபோக நன்செய் நிலங்களில் அவற்றிற்கென்று ஏற்பட்ட செட்டில்மென்ட் நன்செய் தரத் தீர்வையிலிருந்து அதில் அடங்கிய அடிப்படை புன்செய் நிலவரி தள்ளுபடி செய்ததுபோக எஞ்சிய தொகை நிலவரியாக வசூலிக்கப்படுகிறது.

5 ஏக்கருக்கும் அதற்கு குறைவாகவும் நிலம் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே இவ்வாறு அடிப்படைப் புன்செய்த் தீர்வை தள்ளுபடி செய்யப்படும். புன்செய் நிலங்களைப் பொறுத்தவரை, அடிப்படைத் தரத் தீர்வை முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

தண்ணீர்த் தீர்வை :—

இரு போக நன்செய் நிலங்களில் வாழை சாகுபடிக்கு தண்ணீர்த் தீர்வை எதுவும் தனியே வசூலிக்கப்படுவதில்லை. ஆனால் ஒருபோக நன்செய் நிலத்திற்கு காவேரியின் கிளை வாய்க்காலிலிருந்து தண்ணீர் எடுத்து, வாழை சாகுபடி செய்தால் ஒரு ஏக்கருக்கு ரு. 5.00 வீதம் பசலி ஜாஸ்தி வசூலிக்கப்படுகிறது. இதர வாய்க்கால்களிலிருந்து தண்ணீர் பெறும் நிலங்களுக்கு செட்டில்மென்ட் தரத் தீர்வையில் பாதித் தொகை பசலி ஜாஸ்தியாக வசூலிக்கப்படுகிறது.

புன்செய் நிலங்களுக்கு அரசு பாசன ஆதாரங்களிலிருந்து தண்ணீர் எடுத்து வாழை, சாகுபடி செய்தால் பாசன ஆதாரங்களுக்குத் தக்கவாறு ஒரு ஏக்கருக்கு ரூபாய் 4.50 முதல் ரூபாய் 30 வரை தண்ணீர் மேல்வரி (Water cess) வசூலிக்கப்படுகிறது.

உள்ளாட்சி மேல்வரி, உள்ளாட்சி மேல்வரி மீதான மிகுவரி :

அடிப்படை புன்செய்த் தீர்வையுடன், தண்ணீர் மேல்வரித் தொகையைச் சேர்த்து அதில் 45 சதவீதம் உள்ளாட்சி மேல்வரியாக நிர்ணயிக்கப்படுகிறது. அடிப்படை புன்செய்த் தீர்வை, தண்ணீர் மேல்வரி ஆகிய கூட்டுத் தொகையில் ரூபாய் ஒன்றுக்கு, ரூபாய் 1 முதல் ரூபாய் 2.50 வரை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து ஒன்றியம் நிர்ணயித்துள்ளபடி உள்ளாட்சி மேல்வரி மீதான மிகுவரி நிர்ணயிக்கப்படுகிறது. நன்செய் நிலங்களில் நன்செய்த் தீர்வை, பசலி ஜாஸ்தி ஆகியவற்றின் மீது இவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது.

கூடுதல் தண்ணீர்த் தீர்வை மற்றும் கூடுதல் தண்ணீர் மேல்வரி

1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் நன்செய்த் தீர்வை மற்றும் கூடுதல் தண்ணீர் மேல்வரிச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் கூடுதல் நன்செய்த் தீர்வை மற்றும் கூடுதல் தண்ணீர் மேல்வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

1980 பிப்ரவரி 2]

தனி நன்செய்த் தீர்வை மற்றும் தனித் தண்ணீர் மேல்வரி

1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி தனி நன்செய்த் தீர்வை மற்றும் தண்ணீர் மேல்வரி (திருத்தம்) சட்டத்தில் (சட்டம் 8/78-ல்) நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் தனி நன்செய்த் தீர்வை மற்றும் தனித் தண்ணீர் மேல்வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

பணப்பயிர் —

1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணப்பயிர்கள் வரிச் சட்டத்தின் கீழ் ஒரு ஏக்கருக்கு ரூபாய் 15 பணப்பயிர் வரி விதிக்க வேண்டும். ஆனால், இவ்வரி இதுவரை வசூலிக்கப்படவில்லை.

வேளாண்மை வருமான வரி

1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமானவரிச் சட்டத்தின்படி வாழைக்கு என்று தனியே வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுவதில்லை, ஒரு விவசாயி சாகுபடி செய்யும் எல்லா பயிர் நிலங்களின் மீதான வேளாண்மை வருமானம் கணக்கிடப்பட்டு, அது வரிவிதிப்பு வரம்புகளுக்குள் வந்தால் வரி விதிக்கப்படும். இவ்வாறு வருமான அடிப்படையில் அதற்கான ரிடர்ன்கள் கொடுத்து வரி நிர்ணயம் செய்யப்படுவதற்குப் பதிலாக இணக்க முறையில் (Compounding) வரி செலுத்த விவசாயி முன் கூட்டியே விருப்பம் தெரிவித்தால் அவரது எல்லா நிலங்களின் பரப்பையும் பயிரடிப்படையில் ஸ்டாண்டர்டு ஏக்கராக மாற்றி வரி விதிக்கப்படுகிறது. இம்முறையில் வாழைக்கு சாதாரண ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கணக்கிடப்படுகிறது. திருத்தியமைக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின்படி ரூ. 10,000 வரை மொத்த வேளாண்மை வருமானம் உள்ளவர்களுக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. ரூ. 8,000—க்கு மேலுள்ள வேளாண்மை வருமானத்திற்கு, வரையறுக்கப்பட்ட வரி வீதத்தில், அதாவது ரூபாய்க்கு 25 காசு முதல் 65 காசு வரை படிப்படியாக வரி விதிக்கப்படுகிறது. இணக்க முறையில் வரி செலுத்துவோருக்கு முதல் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வரி விலக்களிக்கப்படுகிறது. அதற்கு மேலுள்ள நிலப்பரப்பிற்கு வரையறுக்கப்பட்ட வரி வீதத்தில் அதாவது ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ரூ. 15 முதல் ரூ. 100 வரை படிப்படியாக வரி விதிக்கப்படுகின்றது. 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்போரே வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் கீழ் வரி விதிப்புக்குட்படுகின்றனர்.

நன்னடத்தைப் பிரிவின் இலாப நஷ்டம்.

வினா 68—திரு. செ. ம. இராசு : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நன்னடத்தைப் பிரிவினரால் அரசுக்கு இலாபமா ? நட்டமா?

(ஆ) ஆமெனில் எவ்வளவு ?

விடை— (அ) & (ஆ) விபரங்கள் அடங்கிய அறிக்கை* ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

நாலாம்சேத்தி பஞ்சாயத்தில் அரிசன மக்களுக்கு நில ஆர்ஜிதம்.

வினா 69—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தாலுக்கா நாலாம்சேத்தி பஞ்சாயத்தில் அரிசன மக்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அவர்கட்கு நிலம் எப்போது வழங்கப்படும் ?

விடை— (அ) மன்னார்குடி வட்டம் நாலாம்சேத்தி பஞ்சாயத்தில் அரிசன மக்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டுள்ளது.

(ஆ) நாலாம்சேத்தி பஞ்சாயத்தில் மூணாம் சேத்தி கிராமம் மட்டும் அடங்கியுள்ளது. இக்கிராமத்திலுள்ள ஆறு அரிசன காலனிகளில் 190 குடும்பங்கள் 147 வீடுகளில் வசிக்கிறார்கள். மீதமுள்ள 43 உபரி குடும்பங்களுக்கும் வீட்டு மனைகள் வழங்க நில அளவை எண்கள் 187/6, 7, 8, 9, 10, 11, 12, 13, 15-ல் 2/48 ஏக்கர் நஞ்சை நிலம் நில உரிமை பெறல் சட்டப்படி 1979 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதியில் தீர்ப்பாணை வழங்கப்பட்டு, வீட்டுமனை அற்ற 43 குடும்பங்களுக்கும் மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

*[300–301ம் பக்கத்தில் இணைப்பு **XI** ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

1980 பிப்ரவரி 2]

வண்டியூர் குன்னத்தூர் கண்மாய்.

வினா 70—திரு. சீ. செல்வராசு : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வண்டியூர் குன்னத்தூர் கண்மாயை வலுவான அணையாக திருத்தியமைத்து, தூர் வாரும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை— இல்லை.

மணவாள நகரில் புறக்காவல் நிலையம்.

வினா 71— திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருத்தணி தொகுதிக்குட்பட்ட மணவாள நகரில் புறக்காவல் நிலையம் திறக்கும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆமெனில் அதன் விவரம் தேவை.

விடை— (அ) & (ஆ) திருவள்ளூர் நகரில் தற்பொழுது இயங்கிவரும் திருவள்ளூர் தாலூகா காவல் நிலையத்தை, மண வாளநகர் பகுதிக்கு மாற்றும் செயற்குறிப்பு ஒன்று செங்கல்பட்டு (மேற்கு) மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளரின் பரிசிலனையில் உள்ளது. ஆகையால், மணவாளநகருக்கு புதிதாக புறக்காவல் நிலையமேதும் தேவையில்லை.

பதிவு பெற்றுள்ள ஓமியோபதி மருத்துவர்கள்.

வினா 72— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஓமியோபதி மருத்துவம் பயின்று தற் போது பதிவு பெற்றவர்கள் எத்தனைப் பேர் ?

(ஆ) பதிவு வேண்டி இன்னும் எத்தனைக் கோரிக்கை வந்துள்ளது ?

விடை— (அ) ' ஏ ' பிரிவு : பதிவு பெற்றவர்கள் 106 பேர்.

' பி' பிரிவு— பதிவு பெற்றவர்கள் 12,854 பேர்.

' சி ' பிரிவு— பதிவு பெற்றவர்கள் 2,213.

(ஆ) 1,700 கோரிக்கைள்.

கிராமப்புறங்களில் ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா 73— திரு. சீ. செல்வராசு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசுக்கு உண்டா ?

விடை— கிராமப்புறங்களில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் தற்போது அரசிடம் ஏதும் இல்லை. இருப்பினும் நகர்ப்புறங்களில், வீடுகள் வாங்க பொது மக்களுக்கு கிடைக்கப்பெறும் வசதிகளனைத்தையும் ஆசிரியர்களும் பயன் படுத்திக்கொள்ளலாம்.

மிருகண்ட நதிக்கரையில் தடுப்புச் சுவர் கட்டுதல்.

வினா 74— திரு. பெ. சு. திருவேங்கடம்— மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் ஒன்றியம் செங்கலமகாதேவி ஊராட்சியைச் சேர்ந்த நல்லான்பிள்ளைபெற்றாள் அரிசன மக்களின் வீடுகள் மிருகண்ட நதிக்கரையில் அமைந்திருப்பதால் வெள்ள அபாயம் இருந்து வருவது அரசு அறியுமா ?

(ஆ) ஆமெனில் தடுப்புசுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—(அ) நல்லான்பிள்ளைபெற்றாள் அரிசன குடியிருப்பு மிருகண்டநதியின் தென்கரைப் பகுதியில் அமைந்துள்ளது. அக்குடியிருப்பு மக்கள் வெள்ளத்தால் அரிப்பு ஏற்படாமலிருக்க நதியின் தென்கரை பகுதியில் கருங்கல்லால் தடுப்புச்சுவர் கட்டித்தரும்படி கேட்டுள்ளனர்.

(ஆ) நடப்பு 1979-80 நிதியாண்டில் தடுப்புச்சுவர் கட்டும் பணிக்காக மதிப்பீடு பட்டியல் ரூ. 5,000 அரசு அங்கீகரிததுள்ளது: இப்பணி இன்னும் 3 மாதங்களில் முடிவடையலாம்.

1980 பிப்ரவரி 2]

பருத்திக்குடி அரிசன மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்கல்.

வினா 75 —திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழில் மற்றும்அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் தாலூகா 64 வட்டத்தைச் சேர்ந்த பருத்திக்குடி அரிசன மக்களுக்கு வீட்டு மனை வழங்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டம் பருத்திக்குடி கிராமத்தில் பு.எண் 187-1-ல் 2·52 ஏக்கரும், புல எண் 143-ல் 2·24 ஏக்கரும், 1955 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் நில உரிமை பெறப்பட்டு 82 நபர்களுக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதன்பிறகு கீழ்க்காணும் விவரப் படி, குடியிருப்பு சட்டத்தின்கீழ், அரிசனங்கள் அவர்கள் குடியிருந்து வரும் தலத்திற்கே வீட்டுமனை வழங்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	பு. எண்.	வீட்டுமனை வழங்கப்பட்ட எண்ணிக்கை.
1976	37-1	41
1976	71	19
1976	119-9	9
1976	125	2
1976	136	6
1976	138	6
	மொத்தம்	83

செங்கம் தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம்.

வினா 76 —திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

செங்கம் தாலூக்காவின் தலைமையிடத்தில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை ஏதும் மேற்கொண்டுள்ளதா ?

விடை—இல்லை.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[1980 பிப்ரவரி 2

செங்கம் உட்பட 23 தீயணைப்பு நிலையங்கள் கீற்றுக் கொட்டகையிலும் 16 தீயணைப்பு நிலையங்கள் வாடகை கட்டிடங்களிலும் உள்ளன. ஆக 39 ஊர்களில் தீயணைப்பு நிலையங்களிற்கான கட்டிடம் கட்ட தேவையுள்ளது. நிதி நிலைக்கு ஏற்ப நிர்ணயிக்கப்பட்ட திட்டப்படி தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட வகை செய்யப் படும். செங்கம் தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் காகிலரமத்தில் கட்டப்படும்.

தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் சலவைத் தொழிலாளர்களுக்கு வழங்கப் பெற்ற தொழிற் கருவிகள்.

வினா 77—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

1978–79-இல் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம், எத்தனை சலவைத் தொழிலாளர்களுக்கு இலவசமாக கருவிகள் வழங்கப்பட்டுள்ளன ?

விடை— 1978–79 ஆம் ஆண்டில், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட கிராமங்களில் கீழ்க்கண்ட 14 நபர்களுக்கும் பிற்பட்டோர் நலத்துறையால் வழங்கப்படும் இலவச சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டன :—

(1) திரு. சடைய மேஸ்திரி, த/பெ. தனகோட்டி, சாத்தனூர் கிராமம், செங்கம் வட்டம்.

(2) திரு. ஏ. சண்முக மேஸ்திரி, த/பெ. அண்ணாமலை, கீழ்சிறுபாக்கம் கிராமம், செங்கம் வட்டம்.

(3) திரு. பாவாடை மேஸ்திரி, த/பெ. மாணிக்கம், வானபுரம் கிராமம், வானபுரம் அஞ்சல், செங்கம் வட்டம்.

(4) திரு. கோடீஸ்வரன், வாழவச்சானூர் அஞ்சல், செங்கம் வட்டம்.

(5) திரு. கோவிந்தன், வாழவச்சானூர் அஞ்சல், பஸ் நிலையம் அருகில், செங்கம் வட்டம்.

(6) திரு. வெங்கடேசன், த/பெ. மண்ணாங்கட்டி மேஸ் திரி, பெருங்குளத்தூர் கிராமம், செங்கம் வட்டம்.

(7) திரு. முனுசாமி, த/பெ. குப்புசாமி மேஸ்திரி, பெருந் துரைப்பட்டு கிராமம், பெருந்துரைப்பட்டு அஞ்சல், செங்கம் வட்டம்.

(8) திரு. கே. பி. முத்து, த/பெ. குப்புசாமி மேஸ்திரி, பெருந்துரைபட்டு கிராமம், பெருந்துரைபட்டு அஞ்சல், செங்கம் வட்டம்.

(9) திரு. கே. கோதண்டபாணி, த/பெ. கேசவன் மேஸ்திரி, பெருந்துரைபட்டு கிராமம், பெருந்துரைபட்டு அஞ்சல், செங்கம் வட்டம்.

(10) திரு. ராமசாமி மேஸ்திரி, த/பெ. சின்ன மேஸ்திரி, கோட்டையூர் கிராமம், தென்கரிம்பலூர் அஞ்சல், செங்கம் வட்டம்.

(11) திரு. அண்ணாமலை, த/பெ. கும்பு மேஸ்திரி, அலப்பனூர் கிராமம், தென் முடியனூர் அஞ்சல், செங்கம் வட்டம்.

(12) திரு. எம். குப்புசாமி, த/பெ. முனிய மேஸ்திரி, தென்முடியனூர் கிராமம், தென்முடியனூர் அஞ்சல், செங்கம் வட்டம்.

(13) திரு. நடராஜ மேஸ்திரி, பீமரப்பட்டி கிராமம், மோதுகல் அஞ்சல், செங்கம் வட்டம்.

(14) திரு. நாகமணி மேஸ்திரி, த/பெ. கோவிந்தசாமி மேஸ்திரி, மேலாயனூர் செக்கடி, செங்கம் வட்டம்.

இது தவிர ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் இலவச கருவிகள் வழங்கப்படுவதில்லை.

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு வழங்கப் பெற்ற தொழிற்கருவிகள்.

வினா 78—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1978–79-ல் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் எத்தனை முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு இலவசமாக கருவிகள் வழங்கப்பட்டுள்ளன?

விடை—1978-79 ஆம் ஆண்டில் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட கிராமங்களில் கீழ்க்கண்ட 12 நபர்களுக்கு பிற்பட்டோர் நலத்துறையால் வழங்கப்படும் முடி திருத்தும் கருவிகள் வழங்கப்பட்டன :—

(1) திரு. அண்ணாமலை, த/பெ. குப்ப பண்டிதர், பள்ளிக்கொண்டபட்டு கிராமம், திருவண்ணாமலை வட்டம்.

(2) திரு. பாண்டு, த/பெ. கழுவ பண்டிதர், கீழ்ச் செட்டிப்பட்டு கிராமம், திருவண்ணாமலை.

(3) திரு. சீனிவாசன், வாழாவெட்டி கிராமம், வாழாவெட்டி அஞ்சல், திருவண்ணாமலை வட்டம்.

(4) திரு. எம். குப்புசாமி, த/பெ. முனுசாமி பண்டிதர், கீழ்னாத்தூர் கிராமம், கீழ்னாத்தூர் அஞ்சல், திருவண்ணாமலை வட்டம்.

(5) திரு. சி. அருணாசலம், த/பெ. சின்னக் குளந்தை, 69, சோமவரகுல தெரு, வன்னாத்திகுளம் அருகில், திருவண்ணாமலை.

(6) திரு. பாண்டுரங்கம், த/பெ. ராமசாமி பண்டிதர், ஆதி அண்ணாமலை, திருவண்ணாமலை.

(7) திரு. அண்ணாமலை பண்டிதர், த/பெ. பச்சைப் பண்டிதர், கீழ்மச்சிப்பட்டு கிராமம், திருவண்ணாமலை வட்டம்.

(8) திரு. எம். சுந்தரமூர்த்தி, த/பெ. மொட்டைப் பண்டிதர், பௌத்திரம் கிராமம், திருவண்ணாமலை வட்டம்.

(9) திரு. ஆறுமுகம், த/பெ. துரைசாமி பண்டிதர், 10, பெரிய கோபுர தெரு, திருவண்ணாமலை.

(10) திரு. நாராயணசாமி, த/பெ. அப்புசாமி பண்டிதர், நல்லவன் பாளையம் கிராமம், திருவண்ணாமலை வட்டம்.

(11) திரு. ராஜரெத்தினம், த/பெ. கோபால் பண்டிதர், கல்லணை குரிப்பூர் கிராமம், திருவண்ணாமலை வட்டம்.

(12) திரு. சுப்ரமணிய பண்டிதர், த/பெ. ச. கோபால் பண்டிதர், இராமவரம், மெய்யூர், கீழ்சிறுபாக்கம் அஞ்சல், திருவண்ணாமலை வட்டம்.

இது தவிர ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் இலவசக் கருவிகள் வழங்கப்படுவதில்லை.

1980 பிப்ரவரி 2]

திருவண்ணாமலை, செங்கம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்கள்.

வினா 79—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை, செங்கம் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களில் எத்தனை டிராக்டர்கள் உள்ளன ?

(ஆ) அவைகளில் நல்ல நிலையில் உள்ளவை எத்தனை ?

விடை—(அ) திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இரு ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு டிராக்டர் வீதம் உள்ளது.

(ஆ) இரண்டு டிராக்டர்களும் நல்ல நிலையில் உள்ளன.

தண்டாரம்பட்டு தொகுதியில் உள்ள அரிசன நலப் பள்ளிகள்.

வினா 80—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர், தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டாரம்பட்டு, சட்டப்பேரவை தொகுதியில் எத்தனை இடங்களில் அரிசன நலப் பள்ளிகள் இயங்கி வருகின்றன?

விடை—வட ஆற்காடு மாவட்டம், தண்டாரம்பட்டு சட்ட மன்றத் தொகுதியில் கீழ்க்காணும் ஐந்து கிராமங்களில் அரிசன நலப்பள்ளிகள் இயங்கி வருகின்றன.—

1. கீழ் வணக்கம்பாடி.
2. சு. வாழவெட்டி.
3. சு. பாப்பம்பாடி
4. பன்னியூர்.
5. பழையனூர்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1980 பிப்ரவரி 2

தர்மபுரி மாவட்டத்தில், மின் இணைப்புகள்.

வினா 81—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் ''நிலத்தடி நீர் சான்றிதழ்'' நீக்கப்பட்ட பிறகு எத்தனை மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளன?

(ஆ) இன்னும் எத்தனை மின் இணைப்புகள் பெற கோரிக்கை பெறப்பட்டுள்ளது?

விடை—(அ) 3,745

(ஆ) 13,995 மனுக்கள்.

மட்டறபள்ளியில் பாலம் அமைத்தல்.

வினா 82—திரு. பி. சுந்தரம்: மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியத்தி லுள்ள மட்டறபள்ளி என்னுமிடத்தில் ஓடும் ஆற்றுக்குக் குறுக்கே புதியதாக மேம்பாலம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள் ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது இந்த திட்டம் நிறைவேற்றப் படும்?

விடை —(அ) மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டத்தின் கீழ், மட்டறப்பள்ளியிலிருந்து புதூர் நாடு செல்லும் பாதையை ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய அரசு 1978–79-ம் ஆண்டு அங்கீகரித்துள்ளது. மேற்படி வேலையில் தண்ணீர் பந்தல்-மட்டறப்பள்ளி சாலை கி. மீட்டர் 1/8–ல் பம்பாற்றின் குறுக்கே ரூபாய் 4 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தாம்போகி (Cause way)கட்டவும் வகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) வேலை துவக்கப்பட்டு நடந்து வருகிறது.

1980 பிப்ரவரி 2]

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குப் புதிய ஜீப் வழங்கல்.

வினா 83—திரு. பி. சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குப் புதியதாக ஜீப் வாங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது வாங்கப்படும் ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இல்லை.

காட்டேரி கிராமத்தில் பால்வாடி பள்ளி அமைத்தல்.

வினா 84—திரு. மொ. பரமசிவம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி வட்டம், தெள்ளார் ஒன்றியத்தில் உள்ள காட்டேரி கிராமத்தில் பால்வாடி பள்ளி ஒன்று அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆமெனில் எப்போது?

விடை—(அ) வந்தவாசி வட்டம், தெள்ளார் ஒன்றியத்தில் உள்ள காட்டேரி கிராமத்தில் பால்வாடி பள்ளி ஒன்று அமைக்கும் உத்தேசம் தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மேட்டுக்காலனி கிராம வாசிகளுக்கு மனைப்பட்டா.

வினா 85—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி மாரங்கியூர் மேட்டுக் காலனி கிராம வாசிகள் மனைப்பட்டா கோரி விண்ணப்பித்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பட்டா வழங்கப்படும்?

விடை—(அ) முகையூர் தொகுதி மாரங்கியூர் மேட்டுக் காலனி கிராம வாசிகள் மனைப்பட்டா கோரி விண்ணப்பித்துள்ளனர்.

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு அரிசன நலத்திட்டங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/78) கீழ் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்துள்ளார். விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

[1980 பிப்ரவரி 2

வயக்கரை அரிசனக் குடியிருப்புகளுக்கு சாலை அமைத்தல்.

வினா 86—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நட்டாலம் கிராமத்தில் காப்பிக்காடு என்ற ஊரிலிருந்து முளங்குழி வழியாக வயக்கரை அரிசன காலனிக்குச் சாலை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆமெனில் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

விடை—(அ) குமரி மாவட்டம், கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட காப்பிக் காட்டிலிருந்து வயக்கரை அரிசனக் குடியிருப்புக்கு முளங்குழி வழியாக சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) மேற்கண்ட சாலையின் உத்தேச மதிப்பீடு ரூ 5,00,000 என்பதாலும் இச்சாலை அமைப்பதால் அரிசன மக்களுக்கு பயன் இல்லை என்பதாலும் அரிசன நலத்துறை மூலமாக, இத்திட்டம் தற்போது நிறைவேற்றப்படுவதற்கில்லை.

மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் ரிமாண்ட் செய்யப்பட்டவர்கள்.

வினா 87—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1–1–1979 முதல் 15–3–1979 வரை தமிழக சிறைச் சாலைகளில் மதுவிலக்குக் குற்றம் சம்பந்தமாக ரிமாண்ட் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) இவர்களில் தண்டனை அடைந்தவர்கள் எத்தனை பேர்?

விடை—(அ) 1—1—1979 முதல் 15—3—1979 வரை தமிழக சிறைச்சாலைகளில் மதுவிலக்கு குற்றம் சம்பந்தமாக ரிமாண்ட் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை **50,618** ஆகும்.

(ஆ) இவர்களில் 3,866 பேர் தண்டனை அடைந்தனர்.

1980 பிப்ரவரி 2]

பாம்பன் பகுதி மீனவர்களது கோரிக்கை.

வினா 88—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராமநாதபுரம், பாம்பன் பகுதி மீனவர்களின் 22-2-1979 தேதிய விண்ணப்பம் அரசுக்கு வந்ததா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை —(அ) இல்லை.

(ஆ) & (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

திருச்சி மாவட்டத்தில் கல்வெட்டும் சுரங்கத் தொழில்.

வினா 89—திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் கல்வெட்டும் சுரங்கத் தொழில் எந்த, எந்த இடத்தில் உள்ளது?

(ஆ) கல்வெட்டும் உரிமை எவ்வாறு வழங்கப்படுகிறது?

(இ) இதன் மூலம் அரசிற்கு கிடைக்கும் வருமானம் என்ன?

விடை— (அ) திருச்சி மாவட்டத்தில் கல்வெட்டும் சுரங்கத் தொழில் உள்ள இடங்கள் அடங்கிய * அறிக்கை † ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இம்மாவட்டத்தில் உள்ள கல் குவாரிகளில் கல் உடைக்கும் உரிமம், பகிரங்க ஏலத்தில் விடப்படுகின்றது. பகிரங்க ஏலம் விடுவது சம்பந்தமாக, மாவட்ட அரசிதழில் பிரசுரிக்கப்பட்டும், கிராமங்களில் தண்டோரா மூலம் அறிவிக்கப்பட்டும், பின் பொது ஏலம் விடப்படுகின்றது. ஏலத்தில் பங்கு கொண்டு அதிக தொகைக்கு ஏலம் கேட்ட நபருக்கு குறிப்பிட்ட காலத்திற்கு, சம்பந்தப்பட்ட குவாரிகளிலிருந்து கல் உடைக்கும் உரிமை வழங்கப்படுகிறது. மேலும் பதிவு செய்யப்பட்ட கல் உடைப்போர் கூட்டுறவு சங்கங்களுக்கும் சில குவாரிகள் குத்தகைக்கு வழங்கப்படுகின்றன.

[*302—304ம் பக்கங்களில் இணைப்பு XII ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

(இ) 1388-ம் பசலியில் திருச்சி மாவட்டத்தில் கல் குவாரிகளை ஏலம் விட்டதில் அரசுக்கு கிடைத்த வருமானம் ரூ. 1,30,849.67. தாலூகா வாரியாக விவரங்கள் பின்வருமாறு:

தாலூகாவின் பெயர்.	1388-ம் பசலி வருமானம்.
(1)	(2)
	ரூ.
1. திருச்சி	76,066·00
2. கரூர்	7,065·00
3. குளித்தலை	30,827·00
4. மணப்பாறை	8,830·00
5. முசிறி	268·67
6. துறையூர்	3,423·00
7. லால்குடி	220·00
8. அரியலூர்	..
9. செயங்கொண்டம்	500·00
10. பெரம்பலூர்	3,650·00
மொத்தம்	1,30,849·67

சுற்றுலாப் பொருட்காட்சி மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம்.

வினா 90—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் 11-3-1979 முடிய நடந்த சுற்றுலாப் பொருட்காட்சியில் அரசுக்கு கிடைத்த லாபம் எவ்வளவு?

(ஆ) பரிசு பெற்ற அரங்குகள் எவை?

விடை—(அ) சென்னையில் 11—3—1979 முடிய நடந்த சுற்றுலாப் பொருட்காட்சியை அரசு நடத்தவில்லை; தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தியது. இப்பொருட்காட்சியின் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு கிடைத்த நிகர வருமானம் ரூ. 9,41,000.

(ஆ) பரிசு பெற்ற அரங்குகள் விவரம் பின்வருமாறு:—

வரிசை என்	அரங்குகள் விவரம். (1)	பரிசு நிலை. (2)
	தமிழ்நாடு அரசுத் துறைகள்.	
1	இந்து சமய அறநிலையத் துறை ..	முதல் பரிசு.
2	மீன்வளத் துறை	இரண்டாம் பரிசு.
3	வனத் துறை	மூன்றாம் பரிசு.
	தமிழ்நாடு அரசு நிறுவனங்கள்.	
4	சென்னை மாநகராட்சி	முதல் பரிசு.
5	தமிழ்நாடு போக்குவரத்து கழகங்கள் ..	இரண்டாம் பரிசு.
6	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ..	மூன்றாம் பரிசு.
	மத்திய அரசுத் துறைகள்.	
7	மத்திய அரசு செய்தி, ஒலிபரப்பு அமைச்சகத்தின் விளம்பரம் மற்றும் பொருட்காட்சித் துறை (DAVP).	முதல் பரிசு.
8	இரயில்வே துறை	இரண்டாம் பரிசு.
9	உணவுத் துறை (சத்துணவு) (டிபார்ட் மெண்ட் ஆப் புட் அண்ட் நியூட்ரிஷன்).	மூன்றாம் பரிசு.
	மத்திய அரசுத் துறை நிறுவனங்கள்.	
10	இந்திய இரும்பு பொறுப்பகம் (ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா).	முதல் பரிசு.
11	பாரத அரசு வங்கி (ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா).	இரண்டாம் பரிசு.
12	சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா ..	மூன்றாம் பரிசு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) பரிசு பெற்ற அரங்குகள் விவரம் பின்வருமாறு :

வரிசை எண்.	அரங்குகள் விவரம்.	பரிசு நிலை.
	[1]	[2]
	இதர மாநில அரசுகள்.	
13	ஒரிஸ்ஸா அரசு (கவர்ன்மெண்ட் ஆப் ஒரிஸ்ஸா).	முதல் பரிசு.
14	மேகாலயா அரசு (கவர்ன்மெண்ட் ஆப் மேகாலயா).	இரண்டாம் பரிசு.
15	மேற்கு வங்க அரசு (செய்தித் துறை) (கவர்ன்மெண்ட் ஆப் வெஸ்ட் பெங்கால்) (இன்ஃபர்மேஷன்).	மூன்றாம் பரிசு.
	தனியார் நிறுவனங்கள்.	
16	முகமது இத்ரிஸ் சகோதரர்கள் (கிப்ஸ் மார்க் கைலிகள்).	முதல் பரிசு.
17	சிங்கர் தையல் நிறுவனம் ..	இரண்டாம் பரிசு.
18	ஹரின்	மூன்றாம் பரிசு.

மதுரைப் புறநகர்ப் பகுதியில் புறக்காவல் நிலையம்.

வினா 91—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரின் புறநகர் பகுதிகளில் பல திருட்டுகள் நடக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமென்றால் அப்பகுதியில் புறக்காவல் நிலையம் திறக்கும் உத்தேசம் உண்டா?

விடை— (அ) & (ஆ) மதுரை மாநகரின் புறநகர்ப் பகுதிகளில் நடக்கும் குற்றங்களை தடுக்கும் பொருட்டு, இரவு ரோந்து, சாலை கண்காணிப்பு ஆகிய பணிகளுக்கு காவலர்கள் ஒழுங்க அனுப்பப்படுகின்றனர். தீவிர குற்றவாளிகளைப் பிடித்து பாதுகாப்புச் சட்டப் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே மதுரை நகரின் புற நகர்ப்பகுதியில் புறக்காவல் நிலையம் புதிதாகத் திறக்க வேண்டிய அவசியமில்லை.

1980 பிப்ரவரி 2]

நாமக்கல் காவல் நிலையக் கட்டிடம்.

வினா 92—திரு. கா. செங்கோடன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

நாமக்கல்லில் அமைந்துள்ள காவல் நிலையக் கட்டிடத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை— இல்லை.

நாமக்கல் அறிஞர் அண்ணா ஆண்கள் கலைக் கல்லூரி மாணவர் விடுதி.

வினா 93—திரு. கா. செங்கோடன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லில் உள்ள அறிஞர் அண்ணா அரசு ஆண்கள் கலைக் கல்லூரிக்கு இதுநாள் வரை மாணவர் விடுதி ஏற்படுத்த வில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—(அ) ஆம்.

(ஆ) இக்கலைக் கல்லூரியில் மாணவர் விடுதி ஏற்படுத்துவதற்கென கருத்துரு பல்கலைக் கழக மானியக் குழு, கல்லூரி கல்வி இயக்குநர் ஆகியோர்களுடன் கலந்தாலோசிக்கப் பட்டு வருகிறது.

வெள்ளியக்குடி வாய்க்கால் புனரமைப்புத் திட்டம்.

வினா 94—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், வீராணம் ஏரியின் பாசனத்தை சேர்ந்த வெள்ளியக்குடி வாய்க்கால் புனரமைப்புத் திட்டத்தில் 1978–79-ல் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(ஆ) எவ்வளவு செலவு செய்யப்பட்டது?

[1980 பிப்ரவரி 2

விடை— [அ] வீராணம் ஏரியின் பாசன வாய்க்கல்களான வெள்ளியக்குடி, லால்பேட்டை ஆகிய இரு வாய்க்கால்களையும் புனரமைக்கும் திட்டம் ரூ. 10 லட்சம் மதிப்பீடு கொண்டது. இத் திட்டத்திற்காக 1978–79-ம் ஆண்டில் முதலில் ரூ. 5 லட்சமும், பிறகு இறுதி ஒதுக்கீடாக ரூ. 3 லட்சமும் ஒதுக்கீடு செய்யப் பட்டன. வெள்ளியக்குடி வாய்க்காலுக்கு என்று தனியே ஒதுக்கீடு இல்லை.

(ஆ) வெள்ளியக்குடி வாய்க்கால் புனரமைப்பிற்காக மட்டும் 1978–79-ல் ரூ. 60,250 செலவு செய்யப்பட்டது என்று தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

மானாமதுரைத் தொகுதியில் இறவைப் பாசனச் சங்கங்கள்.

வினா 95—திரு. வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் எத்தனை இறவைப் பாசன சங்கங்கள் நிறுவப்பட்டன?

(ஆ) தற்பொழுது இயங்கக்கூடிய சங்கங்கள் எத்தனை?

(இ) சங்கங்கள் வாங்கிய கடன் தொகை முழுவதும் முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா?

விடை—(அ) இருபத்தெட்டு.

(ஆ) மூன்று.

(இ) மேலமேல்குடி, கே. புதுக்குளம், பொட்டப்பாளையம் ஆகிய மூன்று இறவை நீர்ப்பாசன சங்கங்களுக்கு வழங்கப்பட்ட அரசுக் கடன் மற்றும் நிலவள வங்கிக் கடன்களும், பயன்படுத்திய விபரங்களும் பின்வருமாறு :—

1. மேலமேல்குடி இறவை நீர்ப்பாசனச் சங்கம்.

சங்கக் கிட்டங்கி கட்டுவதற்காக வழங்கப்பட்ட அரசுக் கடன் ரூ. 12,500 மற்றும் மானியம் ரூ. 12,500 முழுவதும் பயன் படுத்தப்பட்டுள்ளன.

சங்கக் கிணறு வெட்ட நிலவள வங்கியால் அனுமதிக்கப் பட்ட முதல் தவணை ரூ. 4,138ஐ- மானாமதுரை வேளாண்மை பொறியியல் சேவாக் கூட்டுறவு மையத்திற்கு பணி நிறைவேற்றும் பொருட்டு விடுவிக்கப்பட்டதில் மேற்படி சேவாச் சங்கம் ரூ. 3,580.20-ஐ கிணறு வெட்டும் ஒப்பந்தக்காரருக்கு முன் பணமாக வழங்கியுள்ளது. இதற்கிடையில் கிணற்று நீரில் உப்புச் சத்து மிகுதியாக உள்ளதென புவியியல் வல்லுநர் தெரிவித்ததின் பேரில் திட்டப்பணி கைவிடப்பட்டது. எனவே, வழங்கப்பட்ட தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2. கே. புதுக்குளம் இறவை நீர்ப்பாசனச் சங்கம்.

இச்சங்கத்திற்கு 12 கிணறுகள் வெட்டவும், பம்ப் செட்டுகள் அமைக்கவும் ரூ. 2,29,280 கடன் அனுமதிக்கப்பட்டு இது வரையில் ரூ, 41,000-ஐ சிவகெங்கை நிலவள வங்கி, பணி நிறைவேற்றும் பொருட்டு, மானாமதுரை வேளாண்மை பொறியியல் சேவாக் கூட்டுறவு மையத்திற்கு வழங்கியுள்ளது. மேற்படி தொகையில் ரூ. 30,273 மட்டும் இரு கிணறுகள் வெட்டவும், இதன் தொடர்பாக இதர பணிகளுக்கும் மேற்படி மையம் பயன்படுத்தியுள்ளது. பயன்படுத்தாத தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. பொட்டப்பாளையம் இறவை நீர்ப்பாசனச் சங்கம்.

கிட்டங்கி கட்டுவதற்காக வழங்கப்பட்ட அரசுக் கடன் ரூ. 12,500 மற்றும் மானியம் ரூ. 12,500 முழுவதும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

மாநில நிலவள வங்கி சங்கத்திற்கு 4 கிணறுகள் வெட்டவும், பம்ப் செட்டுகள் அமைக்கவும் ரூ. 73,780 அனுமதித்து இரு கிணறுகள் வெட்ட ரூ. 35,064-ஐ திருபுவனம் வட்டார வேளாண்மை பொறியியல் சேவா கூட்டுறவு மையத்திற்கு பணி நிறைவேற்றும் பொருட்டு விடுவிக்கப்பட்டதில் இரு கிணற்றுப் பணி மட்டும் ரூ. 31,149 செலவில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ. 3,915-ஐ வசூலிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

விளாத்திகுளம் அரசு மருத்துவமனை.

வினா 96—திரு. ஆர். கே. பெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில் நோயாளிகள் படுக்கை அறை வசதியும், எக்ஸ்ரே பிரிவும் கட்ட அரசிடம் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை— (அ) மற்றும் (ஆ) தற்பொழுது செயற்குறிப்பு ஏதும இல்லை. ஆனால் விளாத்திகுளம் அரசு மருந்தகத்தை மேம்படுத்தும் செயற் குறிப்புகள் 1980–81-ஆம் ஆண்டில் இரண்டாம் பணித் திட்டமாகக் கருத, தக்க தருணத்தில் செயற் குறிப்புகள் அனுப்பு மாறு மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குநர் பணிக்கப் பட்டுள்ளார்.

விளாத்திகுளம் தொகுதி அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்.

வினா 97—திரு. ஆர். கே. பெருமாள் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், விளாத்திகுளம் தொகுதியில் இலவச அரிசன குடியிருப்புகள் கட்ட அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த கிராமங்களில் கட்டப்படும்?

விடை—(அ) மற்றும் (ஆ) 1979–80 ஆம் ஆண்டு அரிசன வீட்டுவசதி திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளது.

சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் உள்ள அறைகள்.

வினா 98—திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் நோயாளிகள் தங்கி சிகிச்சைப்பெற ஏ. வகுப்பு பி. வகுப்பு என்ற பிரிவுகள் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஏ. பிரிவில் எத்தனை அறைகள்: பி. பிரிவில் எத்தனை அறைகள் உள்ளது?

(இ) அதற்கான கட்டணம் ஒரு நாளைக்கு எவ்வளவு வசூலிக்கப்படுகிறது?

விடை: (அ) ஆம்.

(ஆ) ஏ. வகுப்பு 18. குளிர்சாதன வசதியுடன் உள்ள ஏ வகுப்பு— 3.

பி. வகுப்பு—65.

(இ) ஏ. வகுப்பு பிரிவில் ஒற்றை படுக்கைக்கு ரூ. 30 மற்றும் ரூபாய் 10 குளிர்சாதன வசதிக்காக. ஏ. வகுப்பு பிரிவில் இரட்டைப் படுக்கைக்கொண்டதாக இருந்தால் படுக்கை ஒன்றுக்கு ரூ. 25. ஏ. வகுப்பு பிரிவில் மூன்று படுக்கை கொண்டதாக இருந்தால் படுக்கை ஒன்றுக்கு ரூ. 23. பி. வகுப்பு பிரிவில் ஒற்றைப் படுக்கைக்கு ரூ. 23. பி. வகுப்பு பிரிவில் இரண்டு படுக்கை கொண்டதாக இருந்தால் படுக்கை ஒன்றுக்கு ரூ. 19.

1980 பிப்ரவரி 2]

மந்தைப் புறம்போக்கில் குடியிருப்பு மனைப் பட்டாக்கள்.

வினா 99— திரு மு. ஜான் வின்செண்ட : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மந்தைப் புறம்போக்கு நிலங்களை நத்தம் புறம்போக்கு நிலங்களாக மாற்றி, குடியிருப்பு மனை பட்டா வழங்க அரசுக்கு உத்தசேம் உண்டா?

(ஆ) ஆம் எனில், நெல்லை மாவட்டத்தில் எவ்வளவு நிலம் இவ்வாறு உள்ளது?

விடை : (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் 1165.48 ஏக்கர் நிலம் 'மந்தை புறம்போக்கு' என்று பாகு படுத்தப்பட்டிருக்கிறது. இதில் 13.77 ஏக்கர் நிலத்தை 'நத்தம் புறம்போக்கு' நிலமாக மாற்றி குடியிருப்பு மனைப்பட்டா வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

கண்மா நகர் புதிய மீனவர் குடியிருப்பில் தெரு விளக்குகள்.

வினா 100— திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் பேரூராட்சி பகுதி கண்மா நகர் புதிய மீனவர் குடியிருப்புக்கு இன்றுவரை தெரு மின் விளக்கு செய்துதரப்படாதது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை : (அ) மற்றும் (ஆ) புதிதாக கட்டப்பட்டிருக்கும் கண்மா நகர் மீனவ குடியிருப்புக்கு 6 தெரு விளக்குகள் போட திருச்செந்தூர் பேரூராட்சி உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

திருத்தங்கல் நகரில் புதிய மருத்துவமனை.

வினா 101— திரு. கே. இராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு இராமநாதபுரம் மாவட்டம் திருத்தங்கல் நகரில் புதிதாக ஆஸ்பத்திரி கட்டிடம் கட்டும் திட்டம் சம்பந்தமாக அரசுக்கு கோரிக்கைகள் ஏதேனும் வந்துள்ளதா ?

[1980 பிப்ரவரி 2

(ஆ) ஆமெனில், அரசு இது சம்பந்தமாக ஏதேனும் முடிவு செய்துள்ளதா?

விடை : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

அருணாசலபுரத்தில் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம்.

வினா 102— திரு மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம் அரியநாயகிபுரம் ஊராட்சி மன்றம் அருணாசலபுரத்தில் ரூ 61,500 மதிப்பீட்டில் Over head tank கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆமெனில் எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

விடை : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கள்ளச்சந்தையில் மண்ணெண்ணெய் விற்பனை நேர்வுகள்.

வினா 103— திரு பெ. சு. திருவெங்கடம்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழ் நாட்டில் 1979-ல் பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் கெரசின் கள்ள மார்க்கெட்டில் விற்றதாக வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு பேர்?

(இ) அவர்கள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை : (அ) ஆம்.

(ஆ) 27 பேர்கள்.

(இ) 24 நபர்களைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் சென்னை நகர துணை ஆணையாளரிடமும் நடவடிக்கையில் உள்ளன. நபர்களைப் பொறுத்தவரையில் குற்றப்புலனாய்வில் உள்ளது.

1980 பிப்ரவரி 2]

கல்வராயன் மலைப்பகுதி பாலப்பட்டில் கால்நடை மருத்துவ மனை.

வினா 104— திரு. துரை முத்துசாமி;— மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம், கல்வராயன் மலைப் பகுதியைச் சேர்ந்த பாலப்பட்டில் கால்நடை மருத்துவமனை கட்டும் உத்தேசம் உண்டா.

(ஆ) ஆம் என்றால், விவரம் என்ன?

விடை : (அ) தென்னாற்காடு மாவட்டம், கல்வராயன் மலைப்பகுதியைச் சார்ந்த பாலப்பட்டில் கால்நடை மருத்துவமனை கட்டும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

பழனி நகராட்சியின் ஆண்டு வருமானம்.

வினா 105— திரு. என். பழனிவேல்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பழனி நகராட்சியின் 1977–78-ஆம் ஆண்டு வருமானம் எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த துறையின் மூலம் ?

விடை:(அ) மூலதன இனங்கள் நீங்கலாக ரூ. 35,40,076.49.

(ஆ) விபரங்கள் கீழ் வருமாறு:

துறைகள்.	வருமானத் தொகை.
	ரூ.
(1) நகராட்சியால் வசூலிக்கப்பட்ட வீட்டு வரி, தொழில் வரி, வண்டி வாகனாதி வரி முதலியன	7,87,235·73
(2) இதர இலாக்காக்கள் மூலம் வசூலிக்கப்பட்ட கேளிக்கை வரி, மோட்டார் வாகனவரி, முத்திரை வரி முதலியன	7,10,969.36
(3) மார்க்கெட் குத்தகை, பேருந்து நிலைய குத்தகை ஆட்டின் சாலை குத்தகை, அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில் உரிமையாணைக் கட்டணம் முதலியன ..	5,05,771.66

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1980 பிப்ரவரி 2

துறைகள்.	வருமானத் தொகை.
	ரூ.
(4) அரசினரால் வழங்கப்பட்ட மானியங்கள் உயர் நிலைப் பள்ளி மானியம், தொடக்கப் பள்ளி மானியம், தாய் சேய் நலவிடுதிகள் பராமரிப்பு மானியம், சாலை பராமரிப்பு பின் தங்கிய பகுதிகள் அபிவிருத்திக்காக கொடுக்கப்பட்ட மானியம், மற்றும் வெள்ள நிவாரணம் ஆரம்பப்பள்ளி கட்டிடமானியம் முதலியன	7,25,430.38
(5) நகராட்சி கட்டிடங்கள், நிலங்கள் ஆகியவற்றின் மூலம் வாடகை, கம்போஸ்ட் உர விற்பனை முதலியன	2,87,308.15
(6) குடிநீர் விநியோகம் செய்வதன் மூலம் கூடுதல் குடிநீர் கட்டணம் வசூல் மற்றும் மின் கட்டணம் பங்குத் தொகை	3,81,501.41
(7) முதலீடுகள் முதிர்ச்சி அடைந்த பின் வட்டியுடன் திரும்ப பெறப்பட்டது மற்றும் இதர வருமானம்	1,41,810.80
மொத்தம் ..	35,40,076'49

கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றிய ஊழியர் கூட்டுறவு சங்கம்.

வினா 106— திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றிய ஊழியர் கூட்டுறவு சங்கம் எந்த நிலையில் இயங்குகிறது?

(ஆ) நஷ்டம் எனில் காரணம் என்ன ?

விடை :— (அ) கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றிய ஊழியர் கூட்டுறவுச்சங்கத்தின் நடைமுறை குறித்து 1961-ம் வருடத்திய கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு 65-ம் கீழ் நடந்த விசாரணை அறிக்கையின்படி சங்கத்தின் செயலாளர், விற்பனையாளர், முன்னாள் கௌரவ செயலாளர், பொருளாளர் ஆகியோர் ரூ. 21,886.30 கையாடல் செய்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டு திருவள்ளூர் துணைப் பதிவாளர் குற்ற வழக்கு பதிவு செய்து விசாரணைக்காக காவல் துறையினரிடம் ஒப்படைத்துள்ளார். சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர்

கள் மொத்தம் எண்ணிக்கை ஏழு. இதில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பதவியால் தலைவராக உள்ளார். எஞ்சியுள்ள ஆறு இடங்களில்; இரண்டு இடங்கள் காலியாக உள்ளன. மீதமுள்ள நான்கு பேர்களும் 1961-ம் வருடத்திய கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு 28-ன் கீழ் தகுதியிழந்துள்ளார்கள். எனவே, 1963-ம் வருடத்திய கூட்டுறவு சங்க நிதி விதி 40 (1)ன் கீழ் இந்த நால்வரையும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பதவியிலிருந்து நீக்கி ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. நிர்வாகக் குழுவில் ஏற்பட்டுள்ள காலி யிடங்களை நிரப்பத் தேர்தல் நடத்த, திருவள்ளூர், துணைப் பதிவாளர் ஏற்பாடு செய்துள்ளார். 1979 ஆம் ஆண்டு மே திங்கள் 1 ஆம் தேதி முதல் சங்கத்திற்கு ஒரு செயலாளர் நியமிக்கப்பட்டு, அவர் சங்கத்தில் தவணை கடந்த கடன் தொகைகளை வசூலிப்பதில் ஈடுபட்டுள்ளார். 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18 ஆம் தேதி வரை அசல் ரூ. 16,317.40ம் வட்டி ரூ. 16,211.09-ம் வசூலிக்கப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18-ஆம் தேதியில் உத்தேச ஆஸ்தி பொறுப்பு பட்டியல்படி ரூ. 11,902.31 நஷ்டம் ஆகும்.

(ஆ) சங்கம் மே 78 முதல் ஏப்ரல் 79 வரை இயங்காமல் இருந்தாலும் சங்கத்தில் தவணை தவறிய கடன் தொகை அதிகரித்ததாலும், சங்கம் நட்டத்தில் இயங்கி வருகிறது.

முருக்கங்குடி ஆரம்ப சுகாதார நிலையம்.

வினா 107— திரு. செ. இராமலிங்கம்—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம் முருக்கங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் எத்தனை மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள்?

(ஆ) ஆண்டொன்றுக்கு இம்மருத்துவமனைக்கு எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள மருந்து வழங்கப்படுகிறது?

விடை — (அ) தஞ்சை மாவட்டம் முருக்கங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் இரு மருத்துவர்களில் ஒருவர் பொதுநலப்பிரிவிலும், மற்றொருவர் குடும்ப நலப்பிரிவிலும் செயலாற்றுகிறார்கள்.

(ஆ) 1978—79 ஆம் ஆண்டில் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ. 12,304.08 மதிப்புள்ள மருந்துகள் வழங்கப்பட்டது.

பழனி சப் மாஜிஸ்டிரேட் நீதி மன்றம்.

வினா 108— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1978-ல் பழனி சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் எத்தனை கிரிமினல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன?

(ஆ) அவற்றுள், இன்னும் தீர்ப்புகள் வழங்காமல் இருக்கும் வழக்குகள் எத்தனை?

(இ) வழக்குகளை முடிக்க கால வரம்பு ஏதேனும் உண்டா?

விடை— (அ) 9,036.

(ஆ) 217.

(இ) குற்ற வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் அவ்வழக்குகளை முடிவு செய்வதற்காக உயர்நீதி மன்றம் இம் மாநிலத்திலுள்ள மாஜிஸ்திரேட்டுகளுக்குத் துணை புரிய வெளியிட்ட கட்டளைக் குறிப்பேட்டின் 24 (16) ஆம் எண் கட்டளையைப் பின்பற்றுமாறு மாஜிஸ்திரேட்டுகள் கட்டளையிடப்பட்டுள்ளனர். 24 (16) ஆம் எண் கட்டளைக்கிணங்க, வழக்கை முடிவு செய்வதற்கு இரண்டு மாதங்களுக்கும் மேலாக காலம் எடுக்கும் எல்லா வழக்குகளிலும் குற்ற வழக்குப் பட்டியலுடன் நாட்குறிப்பேட்டிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி நகல், தீர்ப்பின் நகல் ஆகியவற்றை எப்போதும் சேர்த்து அனுப்ப வேண்டும். இந்தப் பகுதி நகல்களை மதிப்பாய்வு செய்யும் அதிகாரிகள் சரிபார்க்கின்றனர். அது குறித்து தகுந்த கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் முடிவு செய்யப்படாத ஒவ்வொரு வழக்கு குறித்து ஏற்பட்ட தாமதத்திற்கான விளக்கங்கள் உயர்நீதி மன்றத்திற்கு கொடுக்கப்பட வேண்டுமென 1952 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ஆம் நாளிட்ட பி.டி. எஸ் எண். 94/52 ஆம் எண் உயர்நீதிமன்ற சுற்றறிக்கையிலும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. குற்ற வழக்குகளை இரண்டு மாதத்திற்குள் விரைவாக முடிவு செய்வதை மேற்சொன்ன கட்டளைகள் உறுதிப்படுத்தும்.

1980 பிப்ரவரி 21

பழனி தேவஸ்தான கல்லூரி ஆசிரியர்கள்.

வினா 109—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி ஸ்ரீ அருள்மிகு தண்டாயுதபாணி தேவஸ்தானம் நடத்தும் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் பெண்கள் எத்தனை பேர்?

(இ) அவர்கள் பெரும் ஊதியம் முழுவதும் தேவஸ்தானமே வழங்குகிறதா?

விடை—

(அ) (ஆ) (இ) } ஓர் விவர அறிக்கை மஅவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

தஞ்சை காட்டுத்தோட்டத்தில் விவசாயத்துறையால் நடத்தப்பெற்ற விழா.

வினா 110—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தஞ்சை தாலுகா, காட்டுத் தோட்டத்தில் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாளன்று விவசாய இலாகா சம்பந்தப்பட்ட விழா நடந்ததா?

(ஆ) அந்த விழா நடத்தப்பட்டதன் நோக்கம் என்ன?

விடை— (அ) ஆம்.

(ஆ) இவ்விழா தீவிர சாகுபடித் திட்ட இயக்குநர் அலுவலகத்தின் புதிய கட்டிடத்தை திறந்து வைப்பதற்காக நடைபெற்றது.

[305@ம் பக்கத்தில் இணைப்பு XIII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

வடுவூர் ஏரி மேம்பாடு

வினா 111—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை - பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் உள்ள வடுவூர் ஏரியை மேம்பாடு செய்து நீரைத் தேக்கி விவசாயத்திற்கு பயன்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—இந்த ஏரி நல்ல நிலையில் உள்ளது. இதற்கு கடந்த சில ஆண்டுகளில் வெள்ளத்தால் ஏற்பட்ட பழுதுகளும் அநேகமாக செப்பனிடப்பட்டுவிட்டன. ஆகவே, இதனை மேம்பாடு செய்ய வேண்டியது இல்லை.

நியாய விலைக் கடைகள்

வினா 112— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் நாள் வரை திறக்கப்பட்ட நியாய விலைக் கடைகள் எத்தனை?

(ஆ) இதில் பணியாற்றும் ஊழியர்கள் எண்ணிக்கை என்ன?

(இ) இவர்களுக்கு மாத ஊதியம் எவ்வளவு வழங்கப்படுகிறது?

விடை — (அ) 8,231.

(ஆ) 7,159.

(இ) முழுநேரக் கடை ஊழியருக்கு ரூ. 100 மற்றும் பாதி நேரக் கடை ஊழியருக்கு ரூ. 50 மாத ஊதியமாக கொடுக்கப்படுகிறது.

நாட்டராம்பள்ளியில் புதிய தீயணைப்பு நிலையம்

வினா 113 — திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், நாட்டாரம்பள்ளியில் புதியதாக தீயணைக்கும் நிலையம் ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

விடை — இல்லை.

1980 பிப்ரவரி 2]

Harijan Colonies in Perambalur Constituency

Q. 114—THIRU S. V. RAMASAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) The number of Government Harijan Colonies in Perambalur Constituency, Tiruchirappalli district; and

(*b*) how many are proposed to be constructed under the present scheme?

விடை — (அ) பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில் 21 அரிசன காலனிகள் உள்ளன.

(ஆ) 1977-78 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் குரும்பலூர் அரிசன காலனியில் 30 வீடுகள் கட்ட உத்தரவிடப்பட்டது. அதில் 28 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. மீதமுள்ள இரு வீடுகள் தரை மட்டம் வரை கட்டப்பட்டுள்ளது.

அணைஞ்சியூரில் குடிநீர் வழங்கு திட்டம்

வினா 115—திரு. சீ. செல்வராசு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, அணைஞ்சியூரில் குடிநீர் வடிகால் வாரியத்தால் குடிநீர்த் திட்டம் ஒன்று நிறைவேற்றுவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எந்த நிலையில் உள்ளது.

விடை (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

நான்குநேரி வட்டத்தில் குளங்கள் சீரமைப்பு

வினா 116—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நான்குநேரி வட்டத்தில் எத்தனை மாற்றப்பட்ட, மாற்றப்படாத இனாம் தனியார் குளங்கள் உள்ளன?

(ஆ) இவைகளை எத்தனை ஆண்டுக்கொருமுறை மராமத்து பணி செய்யும் பணி எடுத்துக் கொள்ளப்படுகின்றது?

விடை—(அ) மாற்றப்பட்ட குளங்கள். 220 இவை ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் உள்ளவை.

மாற்றப்படாத குளங்கள். 124 ஷை

இனாம் குளங்கள் .. இல்லை.

தனியார் குளங்கள் .. 37 இவை வருவாய்த்துறையின் கீழ் உள்ளவை.

(ஆ) (ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் உள்ள) தன்னிலையற்ற (sub-standard) குளங்களை, பொதுப்பணித் துறை ஒரு முறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் (phased programme) சீர்படுத்துகின்றது. நான்குநேரி வட்டத்தில் இவ்வாறு சீர்படுத்தப்பட்ட குளங்கள் 105 ஆகும்.

தென்காசி வட்ட அரிசனப் பகுதிகளுக்கு சுடுகாடுவசதி

வினா 117— திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் மற்றும் அரசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தாலூகா, கீழப்பாவூர், மேலப்பாவூர், நாகல்குளம், குலசேகரப்பட்டி, குருங்காவனம், காடாங்கரை போன்ற கிராமங்களில் உள்ள அரிசன மக்கள் பயன்படுத்த சுடுகாடு இல்லையென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—(அ) இல்லை.

(ஆ) தென்காசி வட்டம், கீழப்பாவூர், மேலப்பாவூர், நாகல்குளம், குலசேகரப்பட்டி, குருங்காவனம், கடங்கானேரி ஆகிய கிராமங்களிலுள்ள அரிசனங்களுக்கு பயன்படுத்த சுடுகாடு இருக்கின்றது. எனினும் மேற்படி கிராமங்களில் அரிசனங்கள் குறிப்பிட்ட இடங்களை சுடுகாட்டு உபயோகத்திற்கு கேட்கிறார்கள். அத்தகைய இடங்கள் சுடுகாடு உபயோகத்திற்கு தேவையாகவும், அவசியமாகவும் இருந்தால் புதிய நில ஆர்ஜித சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

1980 பிப்ரவரி 2]

வினா 118—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி ஆஸாத் நகரில் அரிசன மக்களுக்கு சுடுகாடு வசதியில்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை — (அ) தென்காசி வட்டம், ஆஸாத் நகரில் உள்ள அரிசனங்கள் குணராமநல்லூர் கிராம புல எண்கள் 1/1,1/ 2ஏ, மற்றும் 1/3-யில் உள்ள 0·52 ஏக்கர் நிலப்பரப்பினை மயானமாக கடந்த 50 ஆண்டுகளாக உபயோகித்து வருகின்றனர். இந்நில உரிமையாளர்களும் இதற்கு ஆட்சேபிக்கவில்லை. எனவே, ஆஸாத் நகர அரிசனங்களுக்கு சுடுகாடு வசதியில்லை என்பதற்கு ஆதாரம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

உப்பாறு அணையின் கால்வாய்

வினா 119—திரு. இரா. அய்யாசாமி: மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாராபுரம் அருகில் உள்ள உப்பாறு அணையின் இடது புறம் கால்வாயை இன்னும் ஐந்து மைல் விரிவுபடுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

விடை — தற்சமயம் இல்லை.

தாராபுரம் வட்டத்தில் புதிய கல்லூரி

வினா 120—திரு. இரா. அய்யாசாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தாலூகாவில் கல்லூரியோ, தொழில் நுட்பக் கல்லூரியோ கிடையாதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், ஒரு கல்லூரியை தாராபுரத்தில் நிறுவ அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை — (அ) ஆம்.

(ஆ) தற்போது தாராபுரத்தில் ஒரு கல்லூரி நிறுவும் கருத்து அரசிடம் இல்லை.

[1980 பிப்ரவரி 2

கூடங்குளம் பகுதி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா 121 —திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராதாபுரம் தொகுதியில் உள்ள கூடங்குளம் அருகே உள்ள ஏ. பி. தாமஸ் மண்டபத்தினை ஒட்டி அமைக்கப்படும் குடிநீர் திட்டம் எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

(ஆ) இத்திட்டத்தில் கூடங்குளத்தை அடுத்து உள்ள விஜயாபதி கிராமத்திற்கு இத்திட்டம் நீடிக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

விடை — (அ) கீழ் விஜயாபதி, கொத்தன்குளம் மற்றும் காடுதுலா சிற்றூர்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுக்கப்பட்டு வேலை முன்னேற்றத்தில் உள்ளது.

(ஆ) விஜயாபதி கிராமத்தில் ஒரு பகுதியான கீழ் விஜயாபதி இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மறு பகுதியான மேல் விஜயாபதி இத்திட்டத்தால் எதிர்காலத்தில் பயன்பெறும் சிற்றூர்களில் ஒன்றாக எடுக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட அரிசன மக்களுக்கு புதிய வீடுகள்.

வினா 122 —திரு. கே. உச்சி: மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள அரிசன மக்களுக்கு, குடிசைகளை மாற்றி புதிய வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

விடை — (அ) மற்றும் (ஆ) மாநிலம் முழுவதும் அரிசனங்களுக்கு நிதி நிலைமைக் கேற்ப இலவசமாக வீடுகள் கட்டித் தரப்படும் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்திலும் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. 1977–78 ஆம் ஆண்டு சுப்ரமணியபுரம் கிராமத்தில் 30 வீடுகளும், கப்பாத்துறை கிராமத்தில் 30 வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன. 1978–79 ஆம் ஆண்டில் கப்பாத்துறை கிராமத்தில் மேலும் ஒரு வீடு கட்டப்படுகிறது.

1980 பிப்ரவரி 2]

அணைக்கரை துணைக் கோட்டத்தில் கரை அரிப்புத் தடுப்பு மற்றும் சாலைப் பணிகள்.

வினா 123 —திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொள்ளிடம் கோட்டம், அணைக்கரை துணைக் கோட்டத்தில் 1978–79 ஆம் ஆண்டிற்கு கரை அரிப்பைத் தடுக்க செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) கொள்ளிடக்கரை சாலையில் சிகப்பு கப்பி போட அணைக்கரை துணைக் கோட்டத்தில் 1978–79 ஆம் ஆண்டு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை —(அ) கொள்ளிடக் கரை அரிப்பைத் தடுக்க 1978–79 ஆம் ஆண்டில் ரூ. 5,94,539 செலவிடப்பட்டது.

(ஆ) கொள்ளிடக்கரை சாலையில் சிகப்பு கப்பி போட 1968–79 ஆம் ஆண்டில் ரூ. 9,22,245 செலவிடப்பட்டது.

திருபுவனம் திருவள்ளுவர் பட்டு கூட்டுறவுச் சங்கம்

வினா 124 — திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கதர், கைத்தறித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கியின் சார்பில் திருபுவனம் திருவள்ளுவர் பட்டு கூட்டுறவு சங்கத்திற்கு 1978–79-ம் ஆண்டு வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு ?

(ஆ) இச்சங்கத்தில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர் ?

விடை— (அ) கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கியினரால், திருபுவனம் திருவள்ளுவர் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு 1978–79 ஆம் ஆண்டிற்கு ரூ. 63,000 காசுக் கடன் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சங்கத்தில் 150 உறுப்பினர்கள் உள்ளனர் .

வினா 125— திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கதர், கைத்தறித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்கத்தின் 1978–79 ஆம் ஆண்டின் மொத்த விற்பனை எவ்வளவு ?

(ஆ) 1978–79 ஆம் ஆண்டு அரசு வழங்கிய மானியத் தொகை (Rebate) எவ்வளவு ?

(இ) திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்கத்தில் அரசு Design Centre ஏற்படுத்த உத்தேசித்துள்ளதா? எப்போது அமைக்கப் படும்?

விடை—(அ) திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்கத்தின் 1978-79-ம் ஆண்டின் விற்பனையின் மதிப்பு ரூ. 1,25,64,181.06 ஆகும்.

(ஆ) 1978-79-ம் ஆண்டில் இச்சங்கம் தனது ஜவுளி விற்பனையில் அளித்த ரிபேட் தொகையின் மதிப்பு ரூ. 3,07,901.46 ஆகும்.

(இ) இல்லை.

தேனார் விளாகம் வாய்க்கால் தலைப்பு

வினா 126 — திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், காவிரி கோட்டம், நாட்டார் ரெகுலேட்டர் சீனுவாசநல்லூர் அருகில் திருநாகேசுவரம் தேவனார் விளாகம் வாய்க்கால் தலைப்பு அமைக்க அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

விடை—(அ) தஞ்சை மாவட்டம், காவிரிக் கோட்டம், நாட்டார் ரெகுலேட்டர் சீனிவாசநல்லூர் அருகில் திருநாகேசுவரம் தேனார் விளாகம் வாய்க்காலின் தலைப்பை நாட்டாற்றின் இடக்கரையில் தற்போது உள்ள இடத்திலிருந்து (61-3-200) மாற்றி மேல் பக்கத்தில் (60-5-420) அமைப்பதற்கான திட்டம் 'விரைந்து சீர்படுத்தும் திட்டங்களின்' பட்டியலில் (Accelarated Repairs and Improvement Programmes) சேர்க்கப்பட்டுள்ளது. அரசு ஆணை எண் 2120, பொதுப்பணித் துறை, நாள் 16-11-1979-ல் இத்திட்டங்களுக்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்படி வேலையை வரும் பாசன அடைப்புக் காலத்தில் (1980-81-ல்) நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

1980 பிப்ரவரி 2]

திருவிடைமருதூர் கால்நடை கிளை மருத்துவமனைக்கு மருந்துகள் வழங்கள்.

வினா 127 — திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் வட்டம், திருவிடைமருதூர், கால்நடை கிளை மருத்துவமனைக்கு 1978–79 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மருந்து எவ்வளவு?

(ஆ) ஆடுதுறை கால்நடைப் பராமரிப்பு நிலையம் மூலம் அனுமதிக்கப்பட்ட மருந்து முழுவதும் மேற்படி கிளை நிலையத்திற்கு வழங்கப்படுகிறதா?

விடை—(அ) ஆடுதுறை கால்நடை மருந்தகத்திலிருந்து திருவிடைமருதூர் கிளை நிலையத்திற்கு மருந்துகள் வழங்கப்படுகிறது. 1978–79-ல் திருவிடைமருதூர் கிளை நிலையத்திற்கு ஆடுதுறை கால்நடை மருந்தகத்திலிருந்து வழங்கப்பட்டுள்ள மருந்துகளின் விபரங்கள் @இணைப்பில் தரப்பட்டுள்ளன.

(ஆ) கால்நடை கிளை நிலையங்கள் முதலுதவி மட்டும் செய்ய இயங்கிவருகின்றது. ஆகவே முதலுதவிக்கு வேண்டிய மருந்துகள் மட்டும் வழங்கப்படுகின்றன. கால்நடை ஆய்வாளர்கள் கிளை நிலைய பணிகளை கவனிக்கின்றனர். ஆடுதுறை கால்நடை மருந்தகத்தில் தேர்வு நிலை கால்நடை உதவி மருத்துவர் பணிபுரிந்து வருகிறார். கிளை நிலையங்கள் சொற்ப பயிற்சி பெற்ற, அதாவது 11 மாதங்களே பயிற்சி பெற்ற கால்நடை ஆய்வாளர்கள் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. இந்த கால்நடை ஆய்வாளர்களுக்கு முதலுதவி சிகிச்சை செய்வதில் மட்டும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஆகவேதான் முதலுதவிக்கு தேவையான மருந்துகள் மட்டும் கிளை நிலையங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. கால்நடைகளுக்கு தீவிர சிகிச்சை தேவையாக இருந்தால் அண்மையிலுள்ள கால்நடை மருந்தகங்களுக்கு கால்நடை உதவியாளர்கள் அனுப்புவார்கள். திருவிடைமருதூர் கால்நடை கிளை மருத்துவமனைக்கு வேண்டிய மருந்துகள் மேற்குறிப்பிட்டப்படி ஆடுதுறை கால்நடைப் பராமரிப்பு நிலையம் மூலம் வழங்கப்படுகிறது.

திருப்பத்தூர் ஒன்றியத்தில் போடப்பெற்ற கைப்பம்புகள்

வினா 128 — திரு. பி. சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீருக்காக எத்தனை இடங்களில் கைப்பம்புகள் போடப்பட்டது?

@306–307ம் பக்கங்ளிகல் இணைப்பு XVI ஆக அச்சிட பெற்றுள்ளது

(ஆ) இன்னும் போட வேண்டிய இடங்கள் எத்தனை?

விடை—(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் இதுவரை 116 சிற்றூர்களில் (பிரிவு 1 மற்றும் 2 வகையைச் சார்ந்தவை) குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிதண்ணீருக்காக ஆழ்துளைக் குழாய் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டு கைப்பம்புகள் பொருத்தப்பட்டுள்ளன.

(ஆ) பிரிவு 1 மற்றும் 2 ஐச் சேர்ந்த மீதி 4 சிற்றூர்களுக்கு கைப் பம்பு திட்டங்கள், 1979–80-ல் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

பருப்பு வகைகளின் தேவை மற்றும் உற்பத்தி அளவு.

வினா 129 :— திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) தமிழ்நாட்டிற்கு ஆண்டு ஒன்றுக்கு தேவைப்படும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவற்றின் அளவு எவ்வளவு?

(ஆ) தமிழகத்தில் இப்பொருட்கள் எந்த அளவு கிடைக்கிறது?

விடை— (அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிற்கு ஆண்டு ஒன்றுக்கு தேவைப்படும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவற்றின் அளவு பற்றியும் இப்பொருட்கள் தமிழகத்தில் உற்பத்தியாகும் அளவு பற்றியும் விபரம் கீழே தரப்பட்டுள்ளது—

பருப்பு வகைகள்.			தேவைப்படும் அளவு.
துவரம் பருப்பு	..	..	2.00 இலட்சம் டன்கள்.
உளுத்தம் பருப்பு	..	..	1.50 இலட்சம் டன்கள்.
			உற்பத்தி அளவு.
துவரம் பருப்பு	..	..	0.796 இலட்சம் டன்கள்.
உளுத்தம் பருப்பு	..	..	1.201 இலட்சம் டன்கள்.

விருத்தாசலம் தொகுதி அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

வினா 130 — திரு. சி. இராமநாதன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விருத்தாசலம் தொகுதியில் உள்ள அரிசன மக்கள் தங்களுக்கு குடியிருக்க மனை வேண்டி 1974-ம் ஆண்டு முதல் கொடுக்கப்பட்ட மனுக்கள் எத்தனை ?

1980 பிப்ரவரி 2]

(ஆ) அதில் மனைக் கிடைக்கப் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) மனை கொடுக்கப்படாமல் உள்ளவர்கள் எத்தனை பேர்?

விடை—(அ) விருத்தாசலம் தொகுதியில் உள்ள அரிசன மக்கள் 1974-ம் ஆண்டு முதல் வீட்டுமனை வேண்டி கொடுத்த மனுக்கள் மொத்தம் 992.

(ஆ) இவர்களுள் இதுவரையிலும் மனை கிடைக்க பெற்றவர்கள் எண்ணிக்கை 412.

(இ) வீட்டு மனைக் கொடுக்கப்படாமல் உள்ள நபர்கள் 580. இதில் 406 பேருக்கு பட்டா வழங்க தயாராக உள்ளது.

குடிசை மாற்று வாரியக் கட்டிடங்கள் பராமரிப்பு.

வினா 131 :— திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

குடிசை மாற்று வாரியத்தின் கட்டிட பராமரிப்புக்காக 1978—79 ஆம் ஆண்டு செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை— குடிசைமாற்று வாரியம் 1978—79-ம் ஆண்டின் குடியிருப்புகள் பராமரிப்பதற்காக ரூ. 43,98,276.13-ம், வெள்ள சேத பணிகளுக்காக ரூ. 17,97,082.48-ம், அலுவலகக் கட்டிடங்கள் பராமரிப்புக்காக ரூ. 15,369.65-ம் செலவழித்துள்ளது.

பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில்
மாணவர்களுக்கு சலுகைக் கட்டண அட்டைகள்.

வினா 132 :— திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்களுக்கு சலுகை கட்டண பாஸ்களை பாண்டியன் சாலை போக்குவரத்து கார்ப்பரேஷன் (P.R.C.) வழங்குகிறதா ?

(ஆ) ஆம் என்றால், விபரம் என்ன ?

விடை—(அ) மற்றும் (ஆ) ஆம். பாண்டியன் போக்குவரத்துக் கழக 33 1/3 சதவீத சலுகைக் கட்டணத்துடன் கூடிய பயண அட்டைகளை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு நகர் இயக்கப் பேருந்துகளிலும், புறநகர் பேருந்துகளிலும் அளித்து வருகிறது.

[1980 பிப்ரவரி

சென்னை, அண்ணா நகரில் புறக்காவல் நிலையம்.

வினா 133 :— திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அண்ணா நகரில் போலீஸ் அவுட் போஸ்ட் அமைக்கும் உத்தேசமுண்டா ?

(ஆ) ஆம் என்றால், விபரம் என்ன ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மதுரை மாவட்டத்தில் உள்ள வனத்துறை நிலங்கள்.

வினா 134 :— திரு என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கொடைக்கானல் தாலூகாவில் அரசு வனத் துறைக்குச் சொந்தமான காட்டு நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(ஆ) அந்நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை நபர்களுக்கு எத்தனை ஏக்கர் வீதம் விடப்பட்டுள்ளது ?

விடை—

	ஏக்கர்.
(அ) காப்புக் காடுகள்	1,63,496·71
காப்பு நிலங்கள்	65,946·03
மொத்தம் ..	2,29,442·74

(ஆ) சில பகுதிகள் மட்டும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

	நபர்கள்.	பரப்பு. ஏக்கர்.
(இ) (1) ஏலக் குத்தகைகள் ..	85	837·57
(2) கும்ரி குத்தகைகள்	204	3,223·86
(3) நிலக் குத்தகைகள்	3	185·25
	292	4,246·6[illegible]

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

980 பிப்ரவரி 2]

வினா 135 — திரு என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் வனத் துறையின்கீழ் இருந்து வரும் மொத்த நிலப் பரப்பளவு எத்தனை ஏக்கர் ?

(ஆ) அந்நிலங்கள் தனியார்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—(அ) மதுரை மாவட்டத்தில் வனத்துறையின் கீழ் இருந்து வரும் மொத்த நிலப்பரப்பு வருமாறு —

	ஏக்கர்.
காப்புக் காடுகள்	4,79,706·66
காப்பு நிலங்கள்	2,92,129·97
மொத்தப் பரப்பு ..	7,71,836·63

(ஆ) மற்றும் (இ) சில பகுதிகள் மட்டும் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ் வருமாறு :

	நபர்கள்.	பரப்பு. ஏக்கர்.
(1) ஏலக் குத்தகைகள்	240	2,120·88
(2) 'கும்ரி' குத்தகைகள்	129	2,475·45
(3) நிலக் குத்தகைகள்	12	211·32
	381	4,807·65

வட ஆற்காடு மாவட்டத்தில் பருத்தி விற்பனைக் குழு.

வினா 136 — திரு. ப. சந்திரன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் பருத்தி மார்க்கெட்டிங் கமிட்டி அமைக்க அரசு செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—வட ஆற்காடு மாவட்டத்தில் ஏற்கெனவே வட ஆற்காடு விற்பனைக் குழு இயங்கி வருகிறது. இது தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள் விற்பனைச் சட்டத்தின்படி வேளாண்மை விளைபொருள்களின் விற்பனையை இம்மாவட்டத்தில் ஒழுங்குபடுத்திவருகிறது. இந்த விற்பனைக் குழுவின் கீழ் 23 ஒழுங்கு முறைவிற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

வட ஆற்காடு மாவட்டத்தில் சுமார் 2,103 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப் படுகிறது. திருப்பத்தூர், செங்கம், திருவண்ணாமலை மற்றும் போளூர் வட்டங்களில் பருத்தி அதிகமாக பயிரிடப்படுகிறது. எனவே இந்த வட்டாரங்களில் பருத்தி விற்பனையை ஒழுங்குபடுத்த தமிழ் நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டப் பிரிவு 3-ன் கீழ் அறிக்கை ஒன்று கடந்த 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4 ஆம் தேதி அன்று வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ச்சியாகக் கொண்டு வெளியிடப்படும் அறிவிக்கைகள் மூலம் திருப்பத்தூர், செங்கம், திருவண்ணாமலை மற்றும் போளூர் வட்டங்களில் பருத்தி விற்பனை ஒழுங்குபடுத்தப்படும்.

நெக்குந்தி கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

வினா 137— திரு. பி. சுந்தரம் : மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நெக்குந்தி என்னுமிடத்தில் அரிசனங்களுக்கு பட்டா கொடுக்க செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா கொடுக்கப்படும்.

விடை (அ) ஆம்.

(ஆ) வாணியம்பாடி வட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நெக்குந்தியில் உள்ள 27 வீடற்ற அரிசனங்களுக்கு வீட்டு மனை வழங்க 1·763 ஏக்கர் புன்செய் நிலத்தைக் கையகப்படுத்த குடியாத்தம் அரிசன நல தனி வட்டாட்சியர் உத்தேசித்துள்ளார். வட ஆற்காடு மாவட்டம் அரிசன நல அலுவலர் இதற்கான நடவடிக்கையும் எடுத்து வருகிறார்.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டங்கள்

வினா 138—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1975 முதல் 1978-79 வரையில் கீழ்க்கண்ட திட்டங்களுக்காக மத்திய அரசு எவ்வளவு தொகை ஒதுக்கித் தந்தது ?

(அ) சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒருங்கிணைப்பு மேம்பாட்டுத் திட்டம்.

(ஆ) அதில் எவ்வளவு செலவு செய்யப்பட்டது ?

(இ) மாவட்ட வாரியாக.

விடை— அவையின் முன் *அறிக்கை ஒன்று வைக்கப் பெற்றுள்ளது.

சென்னை மத்திய சிறைச் சாலையிலுள்ள திரைப்படக் கருவிகள்.

வினா 139—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மத்திய சிறைச்சாலையில் 35 மி. மீட்டர் திரைப் பட கருவிகள் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது அரசுக்கு சொந்தமானதா? தனியாருக்கு சொந்தமானதா?

விடை—(அ) சென்னை மத்திய சிறைச்சாலையில் 35 மி. மீட்டர் திரைப்பட கருவிகள் இல்லை. ஆனால், ஒரு 16 மி. மீட்டர் திரைப்பட கருவி அங்கு உள்ளது.

(ஆ) அக்கருவி அரசுக்கு சொந்தமானது.

இளங் குற்றவாளிகளுக்கான வழிகாட்டி நிலையங்கள்.

வினா 140/79—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இளங் குற்றவாளிகளுக்கான வழிகாட்டி நிலையங்களில் இளங் குற்றவாளிகள் 1978-79-ம் ஆண்டில் எவ்வளவு பேர் இருந்தனர்?

விடை— இளங் குற்றவாளிகளுக்கான வழிகாட்டி நிலையங்கள் மறுவாழ்வு இல்லங்களிலுள்ள இளங்குற்றவாளிக் குழந்தைகளின் வழக்குகள் முடிவடையும் வரை அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் இடங்களாகப் பணிபுரிகின்றனவேயன்றி உறைவிடங்களாக செயற்படவில்லை. எனவே 1978-79-ம் ஆண்டில் இளங் குற்றவாளிகளுக்கான வழிகாட்டி நிலையங்களில் தங்கி இருந்தவர்கள் எவ்வளவுபேர் என்ற வினாவுக்கு இடமில்லை. எனினும் இளங்குற்றவாளிகளுக்கான சென்னை மற்றும் மதுரையிலுள்ள வழிகாட்டி நிலையங்களில் 1978-79 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்டோரின் எண்ணிக்கை கீழ்வருமாறு:—

இளங்குற்றவாளிகளுக்கான வழிகாட்டி நிலையம், சென்னை—260

இளங்குற்றவாளிகளுக்கான வழிகாட்டி நிலையம், மதுரை—6.

* 308-315 ம் பக்கங்களில் இணைப்பு XV ஆக அச்சிடப்பெற்றுள்ளது

தமிழ்நாட்டில் உள்ள சேவை இல்லங்கள்

வினா 141— திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்போது எத்தனை சேவை இல்லங்கள் உள்ளன ?

(ஆ) அதில் எத்தனை பேர்களுக்கு ஆதரவு அளிக்கப்படுகின்றது?

விடை—(அ) தற்போது கீழ்க்கண்ட இடங்களில் 5 சேவை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

1. தாம்பரம்
2. கடலூர்
3. தஞ்சாவூர்
4. திருநெல்வேலி
5. சேலம்

(ஆ) இச் சேவையில்லங்களில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ள நபர்கள் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	பெரியவர்கள்.	குழந்தைகள்.
1. தாம்பரம்	355	120
2. கடலூர்	85	25
3 தஞ்சாவூர்	85	25
4. திருநெல்வேலி	55	15
5. சேலம்	55	15
மொத்தம் ..	635	200

விளம்பரபோர்டுகள் மூலம் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு கிடைத்த வருமானம்.

வினா 142— திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளில் விளம்பர போர்டுகளின் மூலம் கழகத்திற்கு 1978-79-ம் ஆண்டில் எவ்வளவு வருமானம் கிடைத்தது?

விடை—ரூ. 5.2 இலட்சங்கள் (பெருநகர் பிரிவு).

1980 பிப்ரவரி 2]

தியாகதுருகத்தில் காவலர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்

வினா 143 —திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன் மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்ஆற்காடு மாவட்டம், தியாக துருகத்தில் காவலர் களுக்கு வீடுகள் (Police Quarters) கட்டும் திட்டம் அரசுக்கு உண்டா?

விடை— தென்னாற்காடு மாவட்டம், தியாகதுருகத்தில், ஒரு உதவி ஆய்வாளருக்கும், ஒரு தலைமைக் காவலருக்கும் மற்றும் ஒன்பது காவலர்களுக்கும் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஒன்று, வீடுகள் கட்டுவதற்கான காத்திருக்கும் பட்டியடில் சேர்க்கப்பட்டு உள்ளது. காவலர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் இதற்கான நிதி ஒதுக்கும்பொழுது, தியாகதுருகத்தில் குடியிருப்புகள் கட்டும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

தியாகதுருகத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தால் வாங்கப்பெற்ற நிலங்கள்.

வினா எண் 144 —திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், தியகாதுருகத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக நிலங்கள் ஏதாவது வாங்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில்,எவ்வளவுக்கு, எத்தனை ஏக்கர் வாங்கப் பட்டுள்ளது?

விடை —(அ) மற்றும் (ஆ): தியாகதுருகத்தில் திருமதி பரிபூர்ண அம்மாளுக்கு சொந்தமான சர்க்கார் புன்செய் 1.09 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நில ஆர்ஜித சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, 5-ஏ விசாரணை முடிந்து, அறிவிப்பு வரைவு (Draft Declaration) அனுப்பும் தருவாயில் உள்ளது. நிலத்தீர்ப்பு (Award) விசாரணையின்போது நிலக்கிரயம் நிர்ணயிக்கப்படும்.

நூலக ஆணைக்குழுக்களுக்கான மானியம் மற்றும் நூலகவரி

வினா எண் 145 —திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்சயமம் ‘‘லைப்ரரி செஸ்’’ எத்தனை சதவிகிதம் வசூலிக்கப்படுகிறது? அதன் மூலம் ஆண்டு ஒன்றிற்கு கிடைக்கும் வருமானம் என்ன?

(ஆ) அரசு மானியமாக எவ்வளவு கொடுக்கிறது ?

விடை—(அ) சொத்து மற்றும் வீட்டு வரியின் மீது ஒவ்வொரு ரூபாய்க்கும் ஐந்து பைசா என்று நூலக வரி வசூலிக்கப்படுகிறது. அதன் மூலம் 1978–79 ஆம் ஆண்டில் பல்வேறு மாவட்ட நூலக ஆணைக்குழுக்களுக்கு கிடைத்த மொத்த வருமானம் ரூபாய் 97.11 இலட்சமாகும்.

(ஆ) ஒவ்வொரு மாவட்டக் குழுவும் உள்ளாட்சி நிறுவனங்களிலிருந்தும் பெறும் வருமானத்திற்கு 100 விழுக்காடு நிகராக இணைமானியம் (Matching grant), 75 சதவிகிதம் பண மானியம், 25 சதவிகிதம் நூல்களாகவும் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு நீங்கலாக மற்ற மாவட்ட நூலக ஆணைக் குழுக்களுக்கு அரசு அளிக்கிறது.

கள்ளக்குறிச்சியில் தீயணைப்பு நிலையம்.

வினா எண் 146—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன். மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் நவீன வசதியுடன் கொண்ட தீயணைப்பு நிலையம் (அந்த துறைக்கே சொந்தமாக இருக்கும் வகையில்) அமைத்துத்தர அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—(அ) இல்லை. பல ஊர்களில் தீயணைப்பு நிலையங்களுக்கான நிரந்தர கட்டிடம் கட்ட தேவையுள்ளது. நிதி நிலைக்கேற்ப நிர்ணயிக்கப்பட்ட முறைப்படி தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தர கட்டிடம் கட்ட வகை செய்யப்படும். கள்ளக்குறிச்சி தீயணைப்புநிலையத்திற்கும் நவீன வசதிகளடங்கிய நிரந்தர கட்டிடம் காலக்கிரமத்தில் கட்டப்படும்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

குமிழியம் கிராமத்திற்குக் குடிநீர் வழங்குதல்.

வினா எண் 147— திரு. டி. சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள குமிழியம் கிராமத்திற்கு குடிநீர் வழங்குதல் குறித்து அரசுக்கு மக்களிடமிருந்து மனுக்கள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—(அ) மனுக்கள் ஏதும் வரப்பெறவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1980 பிப்ரவரி 2]

ஆண்டிமடம் தொகுதி அரிசன மக்களுக்கு வீட்டுவசதி

வினா எண் 148—திரு. டி. சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதியில் 1979-ம் ஆண்டில் அரிசன மக்களுக்கு வீடு கட்டி கொடுக்கும் திட்டத்தின்கீழ் எத்தனை கிராமங்கள் எடுக்கப்பட்டுள்ளன?

(ஆ) ஆம் எனில். எடுக்கப்பட்ட கிராமங்கள் யாவை?

விடை—(அ) மற்றும் (ஆ):— 1979-80ஆம் ஆண்டு அரிசன வீட்டு வசதி திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

மதுரை மாவட்டத்தில் காகிதகூழ் தயாரிப்பு மரங்கள் உற்பத்தி

வினா எண் 149—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு செய்தி- அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் காகித கூழ் தயாரிப்பு மரங்களை உற்பத்தி செய்ய அரசு திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் என்றால், எங்கே, எவ்வளவு விஸ்தீரணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது?

விடை—(அ) ஆம்.

(ஆ) மேற்குத் தொடர்ச்சி மலை விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ், மேல் பழனி மலையில் நூறு சத வீதம் (100 சத வீதம்) மத்திய அரசு உதவிகொண்டு காகிதகூழ் தயாரிப்பு மரத்தோட்டங்கள் 1976-77-லிருந்து எழுப்பப் பட்டுள்ளது. இத்தோட்டங்களில் கற்பூரத் தைல மர வகைகளும் (Eucalyptus Globulus, Eucalyptus citro dora, Eucalyptus Grandis) ஊசி இலை மர வகைகளும் (Pinus Patula) வளர்க்கப்படு கின்றன. உற்பத்தி செய்யப்பட்ட பரப்புகளின் அளவும், அதனால் ஆன செலவும் பின்வருமாறு :—

	1976-77 ஹெக்.	1977-78 ஹெக்.	1978-79 ஹெக்.	1979-80 ஹெக்.
பரப்பு ..	240	600	558	1,000
	(ரூபாய் இலட்சத்தில்.)			
செலவு ..	4.70	7.93	5.57	9.97 (உத்தேச செலவு)

[1980 பிப்ரவரி 2

சென்னையில் காமராஜ் வாழ்ந்த இல்லம்.

வினா எண் 150—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு செய்தி – அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் திருமலைப்பிள்ளை சாலையில் காமராஜ் வாழ்ந்த இல்லத்தை அரசு என்ன விலைக்கு வாங்கியது?

விடை—சென்னையில் திருமலைப்பிள்ளை சாலையில் உள்ள காமராஜ் வாழ்ந்த இல்லத்தை அரசு ரூ. 3,08,000–க்கு வாங்கியது.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை செலுத்தியுள்ள கரும்புக்கான 'செஸ்'.

வினா எண் 151—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 முதல் 1978 வரை கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு செஸ் நிதியாக ஆண்டுதோறும் எவ்வளவு ரூபாய் கொடுத்துள்ளது?

(ஆ) அதைக்கொண்டு வட ஆற்காடு மாவட்டத்தில் என்ன அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டன?

விடை—(அ) மற்றும் (ஆ): அவையின் முன் ஓர் அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

தண்டராம்பட்டு தொகுதியில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா 152—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–79–ல் தண்டராம்பட்டு தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு 90 நாளைக்குள் பம்புசெட் மோட்டார் வாங்கி வைத்தால்தான் மின் இணைப்பு தர முடியும் என்று மின் வாரியத்தின் மூலம் நோட்டீஸ் கொடுக்கப்பட்ட நபர்கள் எத்தனை?

(ஆ) 90 நாள் கெடுவுக்குள் தயாரான விவசாயிகளுக்கு மின் இணைப்பு எத்தனை நபர்களுக்கு கொடுக்கப்பட்டது?

* 316–ம் பக்கத்தில் இணைப்பு XVI ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1980 பிப்ரவரி 2]

விடை—(அ) 2,397 பேர்கள்.

(ஆ) 1,460 விவசாயிகள் தயாராக இருப்பதாக அறிவித்தார்கள். இவர்களில் 246 பேர்களுக்கு 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31 ஆம் நாளன்று முடிய மின் இணைப்புக் கொடுக்கப்பெற்றது.

நெடுஞ்சாலைத் துறையின் திருவண்ணாமலைக் கோட்டத்தில் தினக்கூலி பெறும் பணியிடங்கள்.

வினா 153—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலைக் கோட்டம், நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையில் ஓராண்டுக்கு மேலாக தினக் கூலியாக வேலை செய்து வருபவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களை நிரந்தர ஊழியராக ஆக்குவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—(அ) ஒருவரும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

புத்தூர் செக்கடி அரிசன மக்களுக்கு வீட்டுமனைகள்.

வினா 154—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் புத்தூர் செக்கடி அரிசன காலனியில் உள்ளவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) எப்பொழுது வழங்கப்படும்?

விடை—(அ) தண்டராம்பட்டு தொகுதியில் புத்தூர் செக்கடி அரிசன காலனியில் உள்ளவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளது.

(ஆ) புத்தூர் செக்கடி அரிசன காலனி மக்கள் எல்லோரும் புதிய இடத்தில் குடிபுக இடமாற்றம் கேட்டுள்ளனர் என்று வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார். இதற்காக நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை போளூர் (அரிசன நலம்) தனி வட்டாட்சியரால் எடுக்கப்பட்டு வருகிறது.

தென்கரை கிராமத்திற்கு பாசனவசதி.

வினா 155— : திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகா தென்கரை கிராமத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஏரியின் கீழ் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தண்ணீர் சப்ளை சரியாகக் கிடைப்பதில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை— (அ) மற்றும் (ஆ) : தென்கரை கணமாய்க்கு 4 மடைகள் மூலம் 353 ஏக்கருக்கு பாசன வசதி உண்டு. முதல் மடையின்கீழ் ஆயக்கட்டு விஸ்தீரணம் 204.49 ஏக்கர். இந்த மடைக்கு பொதுப்பணித் துறையினரால் பாசன வாய்க்கால் வெட்டி கொடுக்கப்பட்டு பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மடையின் கீழ் உள்ள ஆயக்கட்டுகள் 100 ஏக்கருக்கும் குறைவானதாகும். சிவகாசி கோட்டாட்சியாளர், ஆயக்கட்டுதாரர்களை கலந்து ஆலோசித்து பாசன வாய்க்கால்கள் வெட்டுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

Storm Water drainage in T. Nagar Constituency.

Q. 156— THIRU R. E. CHANDRAN JAYAPAL ; Will the Hon. Minister for Local Administration be pleased to state—

Whether the Government have any proposal to improve the storm water drainage, raise up the low lying areas and to provide other emergent flood relief measures in the slum areas in Corporation Divisions Nos. 102, 105, 106, 113, 114, 115 and 116 in T. Nagar Constituency.

விடை—ஆம்.

திருவண்ணாமலைக் கோட்ட கிராமக் கூட்டுறவு சங்கம்.

வினா 157—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-79 ஆம் ஆண்டில் செங்கம் திருவண்ணாமலை வட்டம் கிராமிய வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் எத்தனை நபருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) நபர் ஒருவருக்கு எவ்வளவு ரூபாய் கடன் வழங்கப்பட்டது?

விடை—(அ) 1978–79 ஆம் ஆண்டில் திருவண்ணாமலை கோட்டகிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலம் 466 அங்கத்தினர்களிடமிருந்து கடன் மனுக்கள் பெறப்பட்டு, எல்லோருக்கும் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேற்படி மனுக்களில், 268 நபர்களுக்கு ரூ. 13,14,320 தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திடமிருந்து கடன்தொகை பெறப்பட்டது. மேற்படி தொகையில், 267 நபர்களுக்கு கட்டிட வேலையில் முன்னேற்றத்தைப் பொறுத்து ரூ. 7,25,530 பட்டுவாடா செய்யப்பட்டது.

(ஆ) நபர் ஒருவருக்கு ரூ. 5,000 வீதம் கடன் தொகை ஒப்புதல் அளிக்கப்பட்டது.

வடமலைக்குறிச்சி கிராமத்தில் உள்ள கண்மாய்.

வினா 158— திரு. ரர. கு. பெருமாள் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகர் வட்டம், வடமலைக்குறிச்சி கிராமத்தில் உள்ள கண்மாயை ஆழப்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது தொடங்கும் ?

விடை : (அ) இதுபற்றிய செயற் குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மதுரை நகரில் அரசினர் கலைக் கல்லூரி.

வினா 159— திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை நகரில் அரசினர் கலைக் கல்லூரி (ஆண்கள்) தொடங்கும் எண்ணம் உண்டா ?

(ஆ) உண்டெனில், எப்போது தொடங்கவிருக்கிறது ?

விடை : (அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

பழனி நகரில் அரிசன, பிற்படுத்தப்பட்ட மாணவர் இல்லத்திற்குப் புதிய கட்டிடம்.

வினா 160 — திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி நகரில் இருக்கும் அரிசன மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர் இல்லத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது ?

விடை — பழனியில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக ஓர் விடுதி கட்டும் திட்டம் 1974—75-ல் துவக்கப்பட்டது. ஆனால் நிதி பற்றாக்குறையால் கைவிடப்பட்டது. பழனியில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிக்கு கட்டிடம் கட்டும் திட்டம் இதுவரையில் பரிசீலனையில் இல்லை. தாழ்த்தப்பட்ட மாணவியர் விடுதிக்கு கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

பழனி தொகுதியில் கிராம குடிநீர்த் திட்டங்கள்.

வினா 161 — திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம், பழனி தொகுதியில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 1978—79 ஆம் ஆண்டில் எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டது ?

(ஆ) இன்னும் எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வில் உள்ளது ?

விடை —(அ) கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 1978—79 ஆம் வருடத்தில் பிரிவு 1 மற்றும் 2-வது வகையைச சார்ந்த 22 சிற்றூர்களுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பிரிவு 3-வது வகையைச் சேர்ந்த 14 சிற்றூர்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

சிறு தொழில்களுக்கு வழங்கப்பெற்ற கடன்.

வினா 162 — திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1978—79 ஆம் ஆண்டில் சிறுதொழில் தொடங்க எத்தனை நபர்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டது ?

(ஆ) வழங்கிய தொகை எவ்வளவு ?

1980 பிப்ரவரி 2]

விடை —(அ) மற்றும் (ஆ), 1978–79 ஆம் ஆண்டில சிறு தொழில் தொடங்க 1,086 நபர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டது. வழங்கிய தொகை ரூ. 664·63 இலட்சமாகும்.

விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

கடன் வழங்கிய நிறுவனம்.	நபர்கள்.	கடன் வழங்கப்பட்ட தொகை.
(1)	(2)	(3)
திட்டத்தின் பெயர்.		
I. டி.ஐ.ஐ.ஸி. நிறுவனம் வழங்கிய கடன் தொகை—		
1. டி.ஐ.ஐ.ஸி. கடன் வழங்கும் திட்டம்	782	580·40
2. டி.ஐ.ஐ.ஸி.-சிட்கோ கூட்டுத் திட்டம்	24	27·69
II. சிட்கோ நிறுவனம் மூலம் வழங்கிய தொகை—		
முதலீட்டு முன் தொகை திட்டம்.	23	3·64
சிட்கோவின் தொழிற்கூடம் தவணைமுறையில் வழங்கும் திட்டம்	42	37·00
அகதிகள் பேங்க்-சிட்கோ கடன் திட்டம்	6	3·70
III. தொழில் வணிக இயக்குநர் மூலம் வழங்கப்பட்ட தொகை விபரம் :		
1. மேலாளர், தொழில்மையம், சேலம்	45	2·37
2. மேலாளர், தொழில்மையம், தர்மபுரி	44	2·42
3. மேலாளர், தொழில்மையம், இராமநாதபுரம் ..	46	2·47
4. மேலாளர், தொழில்மையம், திருநெல்வேலி	35	2·50
5. மேலாளர், தொழில்மையம், காஞ்சீபுரம்	39	2·44
மொத்தம் ..	1,086	664·63

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சின்னக்கரை அணைத் திட்டம்.

வினா 163 — திரு. இரா. அய்யாச்சாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், தாராபுரம் அருகில் சின்னக்கரை அணைத் திட்டம் நீண்டகாலமாக ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை —(அ) மற்றும் (ஆ) : இத் திட்டம் பொதுப்பணித் துறையின் ஆய்வில் உள்ளது. ஆய்வின் முடிவை பொறுத்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

பரப்பலாறிலிருந்து புதிய வாய்க்கால் அமைத்தல்.

வினா 164 — திரு. சீ. மு. வாசன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பழனி வட்டம் ஒட்டன்சத்திரத்திலுள்ள பரப்பலாறில் வாய்க்கால் அமைத்து விவசாயத்திற்கு தண்ணீரைவிட அரசின் பரிசீலனையில் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

விடை — இல்லை.

வடமதுரை பெண்கள் விடுதி கட்டிடம.

வினா 165— திரு. சீ. மு. வாசன் : மாண்புமிகு தொழில் மற்றும் அரிசனநலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், வடமதுரையில் பெண்கள் விடுதி வசதியற்ற வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் புதியகட்டிடம் எப்பொழுது கட்டப்படும் ?

விடை—(அ) வேடசந்தூர் வட்டம் வடமதுரையில் பெண்கள் விடுதி வசதியான வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

[1980 பிப்ரவரி 2]

தாராபுரம்-நாளக்கரை சாலையினைச் செப்பனிடல்.

வினா 166— திரு. ரா. அய்யாச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரத்திலிருந்து பழைய சங்கம் வழியாக நாளகரைக்கு போகும் சாலை பல ஆண்டுகளாக செப்பனிடப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இந்த சாலையை புதுப்பிக்க அரசிடம் ஏதேனும் உத்தேசம் உள்ளதா?

விடை— (அ) ஆம், இச்சாலையில் சரியான போக்குவரத்து இன்மையால் செப்பனிடப்படவில்லை,

(ஆ) ஆம், தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தினால் இச்சாலையைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள வகுப்பினர்.

வினா 167— திரு. தா. சாமிக்கண்ணு: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–79-ல் புதிதாக சாதிகள் பிற்பட்ட வகுப்பினர் பட்டியல்களில் சேர்க்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரங்கள் யாவை?

விடை: (அ) 1978–79 ஆம் ஆண்டில் புதிதாக சாதிகள் பிற்பட்ட வகுப்பினர் பட்டியல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

(ஆ) "பரவர், முக்குவர், பர்வதராசகுலம், பட்டணவர், செம்படவர், மீனவர்" ஆகிய ஆறு கிருத்துவ மீனவ வகுப்பினர்கள் கோயம்பத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள "தாசபளஞ்சிதா" வகுப்பினர் மற்றும் "ரெட்டி (கஞ்சம்)" வகுப்பினர் ஆகியோர் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். ...

[1980 பிப்ரவரி 2

மதுவிலக்கு இரசாயன பரிசோதனைக் கூடங்கள்.

வினா 168—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு கதர், கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவு செய்து விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எங்கெல்லாம் மதுவிலக்கு இரசாயன பரிசோதனைக் கூடங்கள் உள்ளன?

(ஆ) மேலும் கூடங்கள் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) போதிய பரிசோதனைக் கூடங்கள் இல்லாததால் சுமார் 15 ஆயிரம் வழக்குகள் தேங்கியுள்ளனவா?

விடை— (அ) தமிழகத்தில் மதுவிலக்குச் சம்பந்தப்பட்ட தடயப் பொருள்களை ஆராய்வதற்கென்று ஒரு மதுவிலக்கு இராசயனப் பரிசோதனைக் கூடம் சென்னையில் உள்ளது. இது வருவாய் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையில் இந்த ஆய்வகத்தை தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த ஆய்வகத்துடன் இணைக்க வேண்டும் (Tamil Nadu Forensic Science Laboratory) என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையை நடைமுறையில் செயல்படுத்த வேண்டியதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த இணைப்பு முழுவதும் செயலாக்கப்பட்டு விட்டால், தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த ஆய்வகத்தின்கீழ் செயல்படும் நான்கு வட்டார ஆய்வகங்களிலும், மதுவிலக்கு சம்பந்தப்பட்ட தடயப் பொருள்கள் ஆராயப்படும். தற்போது குற்றஞ்சார்ந்த ஆய்வகத்தின் வட்டார ஆய்வகங்கள் திருநெல்வேலி, தஞ்சை, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் உள்ளன.

(ஆ) சேலத்தில் ஒரு வட்டார மதுவிலக்கு ஆய்வகம் திறப்பதற்காக, 4-5-79 அன்று அரசினால் ஆணையிடப்பட்டு இருக்கிறது. சேலத்தில் இதற்கான வாடகைக் கட்டிடம் ஒன்றைக் தேர்ந்தெடுப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் கூடங்கள் திறக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

(இ) தற்போது சென்னை ஆய்வகத்தில் மதுவிலக்கு சம்பந்தமான பல்வேறு வழக்குகளைச் சார்ந்த சுமார் 35,358 தடயப் பொருள்கள், ஆராயப்பட உள்ளன. இவைகளை சீக்கிரமாக ஆராய்ந்து முடிவுகளை நீதிமன்றங்களுக்கு அறிவிக்க வேண்டியதின் நிமித்தம் 20 விஞ்ஞானிகளையும் அவர்களுக்கு தொடர்பாக 10 சார்பு நிலை தொடர்பாளர்களையும், தற்காலிகமாகப் பதவியில் அமர்த்த அரசு ஆணை எண். 1,800, உள்துறை, தேதி 18-7-1979 உத்தரவு பிறக்கப்பட்டு, இந்த அலுவலர்கள் ஜூலை மாதம் முதல் பதவியில் அமர்த்தப்பட்டு

உள்ளனர். சென்னையில் உள்ள மதுவிலக்கு பரிசோதனைக் கூடத்தில் வலை நேரம் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. சில மாதங்களில் நிலுவை பெருமளவில் குறையும்.

விக்கிரமசிங்கபுரம் மருந்தக நடமாடும் மருத்துவ ஊர்தி.

வினா 169 — திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரமசிங்கபுரம், ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரியில் முன்பு செயல்பட்டு வந்த ஆம்புலன்ஸ் தற்பொழுது அங்கு செயல் படாமல் உள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதற்கான காரணம் யாது?

(இ) ஆம்புலன்ஸ் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—(அ) ஆம்.

(ஆ) விக்கிரமசிங்கபுரத்திலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தைச் சேர்ந்த ஊர்தி மதுரை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்கு நடமாடும் மருத்துவ ஊர்தியாக உபயோகிக்கப்படுகிறது. ஏனெனில் மதுரை நடமாடும் ஊர்தி கண்டனம் செய்யப்பட்டு புதிய ஊர்தி வாங்க அரசு ஆணை பிறப் பித்துள்ளது. நடமாடும் மருத்துவ ஊர்தி பழுதடைந்தால், வேறொரு இடத்திலுள்ள ஊர்தியை நடமாடும் ஊர்தியாக உப யோகிக்கலாம் என்ற பொது அரசு ஆணைக்கிணங்க மேற்கூறிய ஊர்தி மதுரையிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத் தில் தற்காலிகமாக உபயோகிக்கப்படுகிறது. புதிய ஊர்தியை விரைவில் அளிக்கும்படி போக்குவரத்து ஆணையர் கேட்கப்பட் டுள்ளார்.

(இ) மதுரை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத் திற்கு புதிய ஊர்தி பெறப்பட்டதும், விக்கிரமசிங்கபுரத்திலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தின் ஊர்தியை விக்கிரம சிங்கபுரத்திற்கு விரைவில் திருப்பி அனுப்பப்படும். அதுவரை தற்பொழுது விக்கிரமசிங்கபுரம் ஈட்டுறுதி நபர்களுக்கு விதிகளின் படி வழிச்செலவுப்படி வழங்கப்பட்டு வருகிறது.

நடுவட்டம் பகுதி சின்கோனாத் தொழிலாளர்களுக்குப் புதிய வீடுகள் கட்டுதல்.

வினா 170— திரு. கு. ரமணி: மாண்புமிகு செய்தி, அற நிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், நடுவட்டம் பகுதியில் சின்கோனா தோட்டமுள்ள மொய்யார் பிரதேசத்தில் தொழிலாளர்களுக்கு புதியவீடுகள் கட்ட 1977ல், காண்டிராக்ட் கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு வீடுகள் கட்டி முடிக்கப் பட்டது?

விடை — (அ) மற்றும் (ஆ) ஆம், இருபது வீடுகள் கட்டுவதற்கு காண்டிராக்ட் விடப்பட்டது. அதில், கட்டிட வேலைகள் 10 வீடுகளில் அனேகமாக முற்றுப் பெற்று விட்டது. (தரை போடுதல், கதவுகள் பொருத்துதல், பூசுதல் பாக்கியுள்ளது.) வீடு கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் கொத்தடிமை முறை.

வினா 171—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கொத்தடிமைகள் எவ்வளவு பேர்கள் இருப்பதாக கணக்கு எடுக்கப்பட்டன? மாவட்ட வாரியாக?

(ஆ) அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? அதன் விவரம் என்ன?

விடை—(அ) 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் வரையில் தமிழ்நாட்டில் 2,883 கொத்தடிமைகள் (2,271 குடும்பங்கள்) இருப்பதாக கணக்கெடுக்கப்பட்டு அவர்கள் அனைவரும் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட வாரியாக அதன் விவரம் பின்வருமாறு:—

வரிசை எண்ணும் மாவட்டமும்.		கண்டுபிடிக்கப்பட்ட கொத்தடிமைகளின் எண்ணிக்கை.	விடுவிக்கப்பட்டவர்கள்.	மறுவாழ்வு அளிக்கப்பட்டவர்கள்.
	(1)	(2)	(3)	(4)
1	கோயம்புத்தூர் ..	563	563	345
2	புதுக்கோட்டை ..	192	192	184
3	திருநெல்வேலி ..	26	26	26
4	தருமபுரி	33	33	20
5	சேலம் ..	118	118	97
6	திருச்சிராப்பள்ளி ..	542	542	542
7	நீலகிரி	481	481	224
8	மதுரை	335	335	335
[illegible]	தென்னாற்காடு ..	593	593	593
	மொத்தம் ..	2,883	2,883	2,[illegible]

1980 பிப்ரவரி 2]

(ஆ) அதைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கையின் விவரம் பின்வருமாறு :

விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளின் விவசாயத் தொழில் செய்வதற்கு கீழ்க்கண்ட முறைகளில் நிதியுதவி அளிக்கப்பட்டது :

1. வேளாண்மைக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்ட கொத்தடிமைகள் சிறு விவசாயிகளாக மாவட்டங்களில் ஏற்கெனவே இயங்கிவரும் சிறு விவசாயிகளின் திட்டம் (Small Farmer Development Agency, மற்றும் வேளாண்மைத் தொழிலாளர் (Marginal Farmers and Agricultural Labourers Agency) திட்டங்கள் மூலம் பயனடைகிறார்கள். இத்திட்டத்தின் மூலம் இவர்களுக்கு வங்கிகள் கடன் வசதி அளித்து வருகின்றன.

2. (1) இத்திட்டங்கள் செயல் முறையில் இல்லாத மாவட்டங்களில் அரசு வங்கிகள் வழங்கும் கடனில் மூன்றில் ஒரு பங்கு மானியத் தொகையளித்து இத்திட்டத்தின்கீழ் பயன்களை இவர்களுக்கு கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் இத்திட்டத்தின்கீழ் பெரும் பங்கேற்று அரசு மானியத் தொகையுடன் கூடிய விவசாயக் கடன் (4 விழுக்காடு வட்டி விகிதம்) உதவி அளித்து வருகிறது.

(2) மாற்று வீட்டு வசதிக்காக உதவித் தொகை அதிக பட்சமாக ரூ. 1,000 குடும்பத்தில் உள்ள தலைவருக்கே வழங்கப்படுகிறது. 1,000 ரூபாய்க்கு சம அளவில் வீடு கட்டுவதற்குத் தேவையான பொருட்களாகவோ, கூரைபோடுவதற்குரிய சாதனங்களாகவோ, சிமெண்ட் தூண்களாகவோ கொடுக்கப்படுகிறது. இதற்காக 1976-77-ம் ஆண்டில் ரூ. 4.91 இலட்சம் வழங்கப்பட்டது.

(3) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு இடைக்கால உதவியாக குடும்பம் ஒன்றுக்கு மாதம் ரூ. 100 வீதம் 5 மாதங்களுக்கு அளிக்கப்பட்டது. இதில் மூன்றில் ஒரு பகுதி அரசு மானியமாகவும் மீதி வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டது.

(4) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் மறுவாழ்வுக்காகப் பல திட்டங்களை மாவட்ட ஆட்சியாளர்கள் அமுல்படுத்தி வருகின்றனர். மத்திய அரசும் மாநில அரசும் இம் மறுவாழ்வுத் திட்டத்திற்கு இன்னும் சில ஆண்டுகளுக்கு சிறப்பாக தனியாக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று முடிவு செய்துள்ளன. இத்திட்டம் பழங்குடியினரின் ஒருங்கிணைந்த துணைத் திட்டம் மற்றும் மிகப் பணடைய பழங்குடியினரின் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும்போது விடுவிக்கப்பட்ட கொத்தடிமை மக்கள் விரைவில் சமூக பொருளாதார முன்னேற்றம் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை. 1976-ம் ஆண்டின் கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டம் அமுலுக்கு

வந்ததிலிருந்து தமிழக அரசு கொத்தடிமைகள் மறுவாழ்வுக்காக மேற்கொண்ட திட்டங்களுக்கு ஆண்டுவாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை கீழே தரப்படுகின்றது:—

	1976–77.	1977–78.	1978–79.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
செல்மானக் கடன் வசதி. (Consumption Loan)	0.60	0.30	
வீட்டு வசதி	2.91	1.00	0.90
விவசாயக் கடன் ..	6.00	3.50	
பணியாட்கள் நிலக் குடியேற்றத் திட்டம் (Paniya Rehabilitation)	2.59	1.00	
மொத்தம் ..	12.10	5.80	0.90

மேலும் மத்திய அரசு திட்டத்தின்கீழ் ரூ. 7.31 இலட்சங்கள் மதிப்பீட்டில் கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய இரு மாவட்டங்களில் உள்ள 268 விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் மறுவாழ்வுக்காக நடப்பு ஆண்டில் திட்டங்கள் செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

மிட்டப்பள்ளி, கிட்டம்பட்டி ஏரிகளை பழுதுபார்க்கும் திட்டம்.

வினா 172—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

ஊத்தங்கரை வட்டத்திலுள்ள மிட்டப்பள்ளி ஏரி, கிட்டம்பட்டி ஏரி ஆகியவைகள் பழுதுபார்க்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—ஆம். கிட்டம்பட்டி ஏரியைப் பழுதுபார்க்கும் பணி இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மிட்டப்பள்ளி ஏரியைப் பழுதுபார்க்கும் பணி 1980–81-ல் துரித நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெற்று மேற்கொள்ளப்படும்.

தவலை பெரிய ஏரியின் கொள்ளளவை அதிகப்படுத்துதல்:

வினா 173—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டம், தவலை பெரிய ஏரியின் கொள்ளளவை அதிகப்படுத்தி நீர்வள ஆதாரத்தை உருவாக்கும் உத்தேசம் உள்ளதா?

1980 பிப்ரவரி 2]

விடை—இல்லை, ஆனால், இதன் அவசியத்தை ஆய்வு செய்து, ஆய்வின் முடிவு தெரிந்த பின் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

பொன்னேரி ஊராட்சியில் சமுதாய கிணறு மூலம் சாகுபடி.

வினா 174—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டம், பொன்னேரி ஊராட்சியில் வெட்டப்பட்ட சமுதாய கிணற்றின் மூலம் சாகுபடி செய்யும் விவசாயிகள் எத்தனை பேர்?

(ஆ) அரூர், ஊத்தங்கரை வட்டத்தில் வெட்டப்பட்ட சமுதாய கிணறுகள் எத்தனை?

விடை—(அ) 8 விவசாயிகள்.

(ஆ) அரூர் வட்டத்தில் 3, ஊத்தங்கரை வட்டத்தில் 1.

அரூரில் அரிசன நல மாணவர் விடுதிகள்.

வினா 175—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு தொழில் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) அரூரில் அரசினர் மாணவ விடுதி கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஊத்தங்கரையில் அரசினர் மாணவர் விடுதி கட்ட புறம்போக்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதா?

(இ) இந்த இடத்தில், கட்டிடம் கட்டும் திட்டம் உள்ளதா?

விடை—(அ) அரூரில் அரிசன நல மாணவர் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ஊத்தங்கரையில் அரசு மாணவர் விடுதி கட்ட இடம் உள்ளது.

(இ) ஊத்தங்கரையில் அரசு மாணவர் விடுதி கட்டுவது பற்றி தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1980 பிப்ரவரி 2

மீனவர் பயிற்சி திட்டத்தில் உள்ள செலவினங்கள்

வினா 176—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர் பயிற்சி எனும் தலைப்பின்கீழ் வகைப்படுத்தப் படும் செலவினங்கள் யாவை ?

(ஆ) பயிற்சியாளர்களுக்கு பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகின்றதா ?

விடை—(அ) மீனவர் பயிற்சி எனும் தலைப்பின்கீழ், கீழ்க்கண்ட செலவினங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தலைப்பின்கீழ் மீனவர் பயிற்சி நிலையங்களில் உள்ள அலுவலர்களின் சம்பளமும் நிர்வாகச் செலவுகள், பயிற்சியாளர்களுக்கு கொடுக்கப்படும் உதவித் தொகையும் அடங்கியுள்ளன. அவைகள் கீழ்க்கண்டபடி வரிசைப்படுத்தப்பட்டுள்ளன:—

(1) ஊழியர் செலவினம், அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி, மருத்துவச் செலவினம், இதர படிகள், கூலி வகையினம் மற்றும் பயணச் செலவுகள் .

(2) அலுவலகச் செலவினம் :—தொலைபேசிச் செலவுகள், இதர செலவினங்கள், வாடகை, வரி போன்றவை மற்றும் உதவித்தொகை.

(3) இயந்திரங்களும், கருவிகளும்.—இயந்திரங்களும், கருவிகளும் வாங்குதல் மற்றும் அவைகளின் பராமரிப்பு (படகுகளுக்கு எரிபொருள் எண்ணெய், ஓட்டும் செலவு, பழுதுபார்த்தல், உதிரி பொருட்கள் வாங்குதல் போன்ற செலவினங்கள் இதனுள் அடங்கும்).

(4) இதர செலவினங்கள் :—

(ஆ) ஆம். ஒவ்வொரு பயிற்சி மாணவருக்கும் ஒரு மாதத்திற்கு ஐம்பது ரூபாய் வீதம் பத்து மாத பயிற்சிக் காலத்திற்கு உதவித்தொகை அளிக்கப்படுகிறது.

வினா 177—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

'' மீனவர் கூட்டுறவு கோட்பாடுகளில் '' அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல் எனும் தலைப்பின்கீழ் எத்தகைய செலவினங்கள் வகைப்படுத்தப்படுகின்றன ?

விடை—மேற்படி கணக்குத் தலைப்பின்கீழ், ஒரு கூட்டுறவு உபபதிவாளரின் சம்பளம் மற்றும் இதர படிகள் வகைப்படுத்தப் படுகின்றன.

1980 பிப்ரவரி 2]

Supply of Pesticides by Agro Industries Corporation.

Q.—178—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to State—

(*a*) whether pesticides are being supplied to Agriculturists by the Tamil Nadu Agro Industries Corporation Limited ; and

(*b*) the total quantity of pesticides supplied during the calendar years 1976-77 and 1978 district-wise?

* விவர அறிக்கை அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

Buses sold by Cheran Transport Corporation..

Q. 179—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state :—

(*a*) Whether a number of buses belonging to the Cheran Transport Corporation had been sold during the Calendar years 1976,77,1978;and

(*b*) the amount for which they were sold?

ஏலத்தில்/டெண்டரில் விற்ற விபரம்.

வருடம்.		பெருந்துகளின் எண்ணிக்கை.	தொகை.
(1)		(2)	(3)
1976	..	ஒன்றுமில்லை	ஒன்றுமில்லை
1977	..	..	..
1978	..	33	ரூ. 2,88,800.00
	மொத்தம் ..	33	

ஏனைய கழகங்களுக்கு மாற்றல் வகையில் விற்ற விவரம்.

			ரூ.
1976	..	26	1,24,993·56
1977	..	49	4,88,305.64
1978	..	28	11,25,793.95
	மொத்தம் ..	103	

[*317-319ம் பக்கங்களில் இணைப்பு XVII அச்சிடப்பெற்றுள்ளது.]

ஆதாரப்பூர்வமான கல்வி நிலையங்களுக்கு விற்ற விபரம்.

			ரூ.
1976	..	ஒன்றுமில்லை	ஒன்றுமில்லை
1977	..	4	41,200·00
1978	..	3	42,300·00
	மொத்தம் ..	7	

Salt produced by Salt Corporation.

Q. 180—THIRU S. M. VASAN : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) Whether the common Salt produced by the Tamil Nadu Salt Corporation is being sold at the Fair Price Shops operated by the Civil Supplies Corporation :

(*b*) If, so, the details thereof ; and

(*c*) the total quantity sold and the amount for which sold during the financial years 1977–78 and 1978-79.

விடை—(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு உப்பு கழகத்திடமிருந்து 9 மெட்ரிக் டன்ஸ் எடை உப்பு வாங்கி தர்மபுரி பகுதிக்கு அனுப்பிவைத்து தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் கிராமப்புற நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டது.

(இ) 1977—78 ஆம் நிதியாண்டில் உப்பு வாங்கி விற்பனை செய்யவில்லை. 1978—79 ஆம் ஆண்டில் தர்மபுரிப் பகுதியில் 9 மெட்ரிக் டன்ஸ் எடை உப்பை ரூ. 2,250-க்கு விற்பனை செய்யப்பட்டது.

Registered Pawn brokers.

Q. 181—THIRU S. M. VASAN : Will the Hon the Minister for Law be pleased to State :

(*a*) the total number of Pawn Brokers registered under the Pawn Brokers Act in this State, District-wise ; and

(b) the number of them (*1*) men and (2) women

[1980 பிப்ரவரி 2]

விடை—(அ) மற்றும் (ஆ) 1943 ஆம் ஆண்டின் தமிழ்நாடு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தின்கீழ் அடகுக் கடைக்காரர்கள், அடகுக் கடைக்காரர்களாகத் தொழில் செய்ய உரிமம் வழங்கப்படுகிறது. அவ்வாறு உரிமம் வழங்கப்பட்ட அடகுக் கடைக்காரர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

வரிசை எண்.	மாவட்டம்.	உரிமம் வழங்கப்பட்ட அடகுக் கடைக்காரர்களின் எண்ணிக்கை.			மொத்தம்
		ஆண்கள்.	பெண்கள்.	கம்பெனி.	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	சென்னை ..	2,039	147	..	2,186
2	செங்கல்பட்டு	1,632	143	..	1,775
3	தென் ஆற்காடு	1,345	243	..	1,588
4	வட ஆற்காடு	1,491	145	..	1,636
5	திருச்சிராப்பள்ளி	1,079	377	..	1,456
6	புதுக்கோட்டை	270	79	..	349
7	தஞ்சாவூர் ..	1,250	457	..	1,707
8	மதுரை ..	1,552	668	..	2,220
9	ராமநாதபுரம் ..	615	140	..	755
10	திருநெல்வேலி ..	189	67	..	256
11	கோயம்புத்தூர் (பெரியார் மாவட்டம் உட்பட).	484	126	6	616
12	தர்மபுரி ..	90	11	..	101
13	சேலம் ..	700	83	..	783
14	நீலகிரி ..	112	7	..	119
15	கன்னியாகுமரி	58	8	..	66
	மொத்தம் ..	12,906	2,701	6	15,613

Libraries in Government Press buildings.

Q. 182—THIRU S. M. VASAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :—

(*a*) Whether libraries are located at the offices of the Government Presses in this State?

(*b*) the types of books that are purchased at these libraries ; and

(*c*) the details of magazines that are purchased at these libraries.

விடை—(அ) அரசு மைய அச்சகம், சென்னை-600001-ல் ஒரு நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) அச்சக சம்பந்தமான நூல்கள் இந்த நூலகத்தில் இருக்கின்றன.

(இ) மாதாந்திர செய்தி இதழான 'பிரிண்ட் இண்டியா' என்னும் அச்சு சம்பந்தமான இதழ் வாங்கி நூலகத்தில் புத்தகங்களுடன் சேர்க்கப்படுகிறது.

தனியார் பேருந்துகளில் அதிகப் பயணிகள் குறித்து நடவடிக்கை.

வினா 183—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

அரசு பேருந்துகளில் Over Ticket போட்டால் காவல்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பது போல் தனியார் பேருந்துகளிலும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—அரசுடமையாக்கப்பட்ட பேருந்துகளிலும் தனியார் பேருந்துகளிலும் அதிகப் பயணிகள் ஏற்றப்பட்டால் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க போக்குவரத்துத்துறை மற்றும் காவல் துறை அலுவலர்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின்மேல், ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

பரமக்குடி நகரசபைக்குச் சொந்தமான புல் பண்ணை.

வினா 184—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பரமக்குடி நகரசபைக்குச் சொந்தமான 38·68 ஏக்கர் புல் பண்ணையில் பரமக்குடியின் கழிவு நீரைப் பயன்படுத்தி முழு இடத்தையும் புல் உற்பத்தி செய்வதன் மூலம் நகராட்சியின் வருவாயினைப் பெருக்கிக் கொள்ளும் திட்டம் குறித்து அரசு அவுறிரை வழங்கியுள்ளதா ?

[1980 பிப்ரவரி 2]

விடை—திட்டம் நகராட்சியின் ஆய்வில் உள்ளது.

அம்பை நகரில் தீயணைப்பு நிலையம்.

வினா 185—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள அம்பை நகரில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(அ) ஆம் எனில் தீயணைப்பு நிலையம் எப்பொழுது செயல்படத் துவங்கும்?

விடை—(அ) ஆம்.

(ஆ) அம்பாசமுத்திரத்தில் ஒரு சிறிய ஓர் ஊர்தி தீயணைப்பு நிலையம் இந்நிதியாண்டில் நிறுவுதலுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பழையாற்றில் மீன் பதனிடும் பனிக்கட்டி நிலையம் அமைத்தல்.

வினா 186—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பழையாற்றில் மீன் பதனிடும் பனிக்கட்டி நிலையம் இதுவரை அமைக்கப் பெறாமலிருப்பதற்கான காரணம் யாது?

விடை—"பழையாற்றிலுள்ள மீனவர்கள் சமீப காலம் வரை கட்டுமரங்கள் மற்ற சாதனங்களைக் கொண்டு மீன் பிடித்து மீன்களை அப்போதைக்கப்போது விற்று வந்ததாலும், மீன்களைப் பெருமளவில் நீண்ட நேரம் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்படாததாலும், மீன்களை கெடாமல் பாதுகாக்க பனிக் கட்டி நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை."

மீனளப் பயிற்சி நிலையங்கள்.

வினா 187—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டில் உள்ள மீனளப் பயிற்சி நிலையங்கள் அனைத்தும் கடல் மீனளப் பயிற்சி நிலையங்கள் தானா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

விடை—(அ) ஆம்.

(ஆ) உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் பிடிப்பு ஆண்டு முழுவதும் நடைபெறுவதில்லை. கடல் மீன் பிடிப்பில் கிடைப்பதை விட உள்நாட்டு மீன் பிடிப்பில் கிடைக்கும் வருவாய் மிகவும் குறைவு. ஆகவே, உள் நாட்டு மீனளம் பயிற்சிக்கு

தேவை குறைந்து விட்டது. கடல் மீன் பிடிப்பில் இயந்திரப் படகுகள் உபயோகிக்கப்பட்டு வருவதாலும், அதிக இலாபம் கிடைப்பதாலும், நவீன மீன் பிடிப்பு முறை, பல்வகை வலைகளை உபயோகித்தல், படகு ஓட்டுதல் முதலிய கடல் மீனளப் பயிற்சிக்குத்தான் தற்போது அதிக தேவை உள்ளது.

நன்னீர் உயிரியல் ஆராய்ச்சி நிலையம், பவானி சாகர்.

வினா 188—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மீனளத்துறையின் பவானிசாகரிலுள்ள நன்னீர் உயிரியல் ஆராய்ச்சி நிலையம் தற்போது பணியாற்றி வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் பலன்கள் யாவை?

விடை (அ) ஆம்.

(ஆ) பவானி சாகர் நன்னீர் உயிரியல் ஆராய்ச்சிப் பிரிவில், நீரின் தன்மை, நீரின் பாழ்படும் தன்மை (Water Pollution), நன்னீரில் வளரும் மீன்கள், குறிப்பாக, கட்லா, ரோகு முதலிய விரைவில் வளரும் மீன் வகைகளின் வளரும் தன்மை, இனச் சேர்க்கை, தூண்டுதல் முறை மூலம் இவைகளை குஞ்சுப் பொறித்து முட்டையிடச் செய்தல், மற்றும் நன்னீரில் வளரக் கூடிய இறால் போன்ற மீன் வகைகளின் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நீர்த் தேக்கங்களில் அல்லது உள்நாட்டு நீர் நிலைகளில் மீன்கள் தண்ணீர் பாழ்படும் தன்மையினால் அழிந்து போகுதல் ஏற்படின் அவைகளைப் பற்றிய ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொண்டு இவைகளை மேலும் நடைபெறாமல் தடுக்க வழிவகைகள் இந்த ஆராய்ச்சிப்பணிகள் மூலம் அறிவுறுத்தப்படுகின்றன.

உலர்த்தப்பட்ட மீன்கள் பக்குவப்படுத்தும் நுட்ப ஆய்வுத் திட்டங்கள்.

வினா 189—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறைஅமைச்சர் தயவு மெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உலர்த்தப்பட்ட மீன்களைப் பக்குவப்படுத்தும் முறையினை அபிவிருத்தி செய்யும் நுட்ப ஆய்வுத் திட்டங்கள் நிறுத்தப்பட்டு விட்டனவா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

1980 பிப்ரவரி 2]

விடை—(அ) ஆம்.

(ஆ) உலர்த்தப்பட்ட மீன்களை பக்குவப்படுத்துவதில் மேம்பாடு செய்யும் திட்டத்தை கடல்வாழ் பொருட்கள் ஏற்றுமதி அபிவிருத்திக் குழு ஒரு குறைந்த கால திட்டமாக இரண்டு ஆண்டு களுக்கு மட்டும் ஒப்புதல் அளித்தது. இதன் படி 1975 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாளில் ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டம் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாளில் முடிவு பெற்றது. கால வரம்பு நிர்ணயிக்கப்பட்டு, மேற்படி அபிவிருத்திக் குழுவினரால் செலவினம் ஏற்றுக் கொண்டபடியால், வரையறுக்கப்பட்ட பணி முடிந்தவுடன் குறித்த கால இறுதியில் இத்திட்டம் கைவிடப்பட்டது.

பரமக்குடி—எமனேஸ்வரத்தை இணைக்க நடைபாதைப் பாலம்,

வினா 190—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பரமக்குடி-எமனேஸ்வரத்தை இணைக்கும் முறையில் நகரில் மையப்பகுதியில் ஒரு நடைப்பாதைப் பாலம் (Crossway) அமைப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

விடை—(அ) மற்றும் (ஆ) பரமக்குடியையும் எமனேஸ்வரத்தை யும் இணைக்கும் வகையில் தாம்போகி ஒன்று அமைக்க செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

பி. யு, சி. பரீட்சை எழுதியவர்கள்.

வினா 191—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1979 ஆம் ஆண்டில் பி. யு சி. பரிட்சை எழுதியவர் களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) தேறியவர்களின் சதவிகிதம் என்ன?

விடை—(அ) 1979 ஆம் ஆண்டில் பி. யு. சி. பரிட்சை எழுதியவர்களின் எண்ணிக்கை 1,07,506.

(ஆ) தேறியவர்களின் சதவிகிதம் 48.5.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் டிக்கெட்டில்லாப் பயணங்கள்.

வினா 192— திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்துகீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1978–79-ல் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஓசிப் பயணம் செய்து கண்டுபிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாது?

(ஆ) அதற்காக அவர்களிடமிருந்து வசூல் செய்த அபராதத் தொகை என்ன?

விடை—(அ) 18,719 பேர்கள் (பெருநகர் பேருந்துகளில்).

(ஆ) ரூ. 37,438.

Degree Course in 'Naval Architecture' in Central polyteehnic, Madras.

Q. 193— Thiru SALEM M. ARUMUGAM : Will the Honourable the Minister for Education be pleased to state :—

(a) Whether the subject of 'Naval Architecture' has been introduced in the Central Polytechnic in Madras City ; and

(b) if so, the details thereof ?

விடை— (அ) ஆம்.

(ஆ) 1979–80 ஆம் ஆண்டில் அரசு ஆணை (நிலை) எண் 1217 கல்வித்துறை, நாள் 1979 ஆம் ஆண்டு சூலை திங்கள் 16 ஆம் நாளில் ரூபாய் 1,77,000 செலவில் சென்னை அடையாரிலுள்ள மத்திய பல்தொழில் பயிலகத்தில் பொறியியல் பிரிவில் விருப்பப் பாடமாக நேவல் ஆர்க்கிடெக்சர் (Noval Architecture) என்ற பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த படிப்பிற்காக தளவாடங்கள், அறை கலன்கள், நூலகம் மற்றும் சிறப்பு சேவைக்காக ஆகும் தொடரா செலவு ரூ. 1.03 இலட்சம் ஆகும். இதற்காக பணியாளர்கள் மற்றும் எரிபொருள்கள் மீது ஆகும் தொடரும் செலவு ரூ. 74,000.

1980 பிப்ரவரி 2]

கீழக்கரையில் உள்ள வழிகாட்டி விளக்குகள்.

வினா 194—திரு. செ. சிவசாமி ; மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழக்கரையில் கடலுக்குள் உள்ள கற்பாறைகள் கடலுக்குள்ளிருந்து கரைக்கு வரும் பாதை இவற்றைக் காட்டும் இரண்டு அடையாள விளக்குகள் இரவில் எரியாததினால் போட்டுகள் விபத்துக்குள்ளாவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இந்த Signal Lamps எரிவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை—(அ) மற்றும் (ஆ) முன்னர் மின் இணைப்பில் பழுது ஏற்பட்ட காரணத்தினால் கீழக்கரையிலிருந்து வழிகாட்டி (அடையாள) விளக்குகள் எரியாமல் இருந்தன. 1978–79 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் அவை பழுது பார்க்கப்பட்டு கடந்த ஆறு மாத காலமாக எவ்வித கோளாறுமின்றி எரிகின்றன. விளக்குகள் எரியாமலிருந்த காலத்தில் படகுகளுக்கு எவ்வித விபத்தும் நேரவில்லை.

சாலைக் கிராம உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கல்.

வினா 195—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

இளையான்குடி பஞ்சாயத்து யூனியன் சாலைக் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை இந்த ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

விடை—நடப்பு ஆண்டில் இளையான்குடி பஞ்சாயத்து யூனியனில் உள்ள சாலைக் கிராம அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக அரசு ஆணை 1637, கல்வி, நாள் 1979-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31 ஆம் நாளில் உயர்த்தப் பட்டுள்ளது.

கீழக்கரை கடலோரப் பகுதிகளை தனியாருக்கு குத்தகைக்கு விடல்.

வினா 196—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கீழக்கரை கடற்கரை ஓரம் முழுவதும் தனியாருக்குக் குத்தகைக்கு விட்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆமெனில், அதை மாற்றி அமைத்து கடல் தண்ணீர் ஓரத்திலிருந்து 50 அடி வரைக்கும் பொது இடமாகக் கருதி பொதுமக்களுக்குப் பயன்படும் வகை செய்யும் உத்தேசம் உண்டா ?

விடை—(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழுவதற்கு இடமில்லை,

நன்னிலம் ஒன்றியத்தில் விதவை மணம் செய்து கொண்டவர்களுக்குப் பரிசு.

வினா 197—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78, 1978–79-ல் நன்னிலம் ஒன்றியத்தில் விதவை மணம் செய்து கொண்டவர்கள் பரிசு கேட்டு விண்ணப்பித்துள்ளவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களில் பரிசு பெற்றவர்கள் எத்தனை பேர் ?

விடை—(அ) 1977–78	..	..	..	1
1978–79	..	..	..	3

(ஆ) ஒருவரும் இல்லை.

Rock blasting unit.

Q. 198—Thiru N. KITTAPPA : Will the Honourable the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) the total number of Rock-blasting units now functioning in this State ; and

(b) the details of the places where they are in operation ?

விடை—

* விவர அறிக்கை அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

காவேரிப்பட்டினத்தில் சமுதாய நலக்கூடம் அமைக்கும் திட்டம்

வினா 199—டாக்டர் கே. சமரசம் ; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் ஓர் சமுதாய நலக்கூடம் அமைக்கத் திட்டமுள்ளதா ?

[* 320–321-ம் பக்கங்களில் இணைப்பு XVIII ஆக அச்சிடப் பெற்றுள்ளது].

[1980 பிப்ரவரி 2]

(ஆ) அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

Water Research Centre at Coimbatore Agricultural University.

Q. 203—Thiru N. KITTAPPA: Will the Honourable the Minister for Agriculture and Irrigation be pleased to state ;

(a) Whether any Water Research Centre with Swedish Assistance is to be set up in the Coimbatore Agricultural University, and

(b) if so, the details thereof ?

Ans,—(a) & (b) A ** Statment is placed on the Table of the House,

விடை—(அ) மற்றும் (ஆ) * விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் [*] உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. ஒழுங்குப் பிரச்னைகள்

(அ) அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் பதவி விலகல் குறித்து.

(திருவாளர்கள் துரைமுத்துசாமி, நா. சுந்தரராஜ், சி. ஆறுமுகம் ஆகியோர் எழுந்து நின்று பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி எல்லோரும் ஒரேயடியாக கேட்கக் கூடாது. தொடர்ந்து எல்லோரும் ஒவ்வொருவராகக் கேட்கலாம். நான் பேரவைக்கு ஒரு வேண்டுகோளாக விடுக்கிறேன். இங்கே நடைபெறும் முக்கியமான ஒரு பொது விவாதத்தில் பல உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்தை மிக விரிவாக எடுத்துச் சொல்ல அதிக நேரம் வேண்டுமென்று பேசவிருக்கிற ஒவ்வொரு உறுப்பினரும் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணத்தை

(* 322 ஆம் பக்கத்தில் இணைப்பு XIX ஆக அச்சிடப் பெற்றுள்ளது.)

பூர்த்தி செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். ஒழுங்குப் பிரச்சினை என்று மற்றவர்களுடைய உரிமையைப் பாதிக்கும் விதத்தில் நிறைய நேரத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது, அதனால் நான் பேசுகின்ற உறுப்பினர்களின் நேரத்தைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்படும். அதனால் ஒவ்வொருவராகப் பேசுங்கள். முதலில் திரு. துரை முத்துசாமி பேசட்டும்.

*திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு ஆண்டுக்கு முன்பு அ.தி.மு.க. அரசில் ஒரு விரிசல் ஏற்பட்டிருப்பதாக அறிந்தேன். இப்போது அமைச்சர் திரு. சௌந்தரப் பாண்டியன் ராஜிநாமாச் செய்து விட்டதிலிருந்து அதில் உண்மை இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் இந்த ஓராண்டுக் காலமாக எவ்வளவு கொடுமை படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து திரு. துரை முத்துசாமி அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப வேண்டிய விதத்தில் எழுப்ப வேண்டும். இதெல்லாம் தேவையில்லை....

திரு. துரை முத்துசாமி ; நான் விரிவாக விளக்க வருகிறேன். தலைவருக்குப் புரிய வைக்க வேண்டும் என்றுதான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்குத் தெரியும். தாங்கள் எல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டு எனக்குப் புரிய வைக்க வேண்டும் என்று விளக்கக்கூடியவராக இருப்பதற்கு நன்றி. ஆனால் ஒழுங்குப் பிரச்னையை எழுப்பும் விதம் இதுவல்ல..

திரு. துரை முத்துசாமி : அந்த அமைச்சர் ராஜிநாமா செய்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெரிவித்து விட்டதாக பத்திரிகையில் பார்த்தேன். அவர் அப்படி ராஜிநாமாச் செய்ததற்கு எந்த அறிக்கையும் இந்த அவையில் தாக்கல் செய்யவில்லை, அரசு சார்பாகவும் தாக்கல் செய்யப் படவில்லை. அந்த ராஜிநாமா உண்மையா இல்லையா என்று அறிய முடியவில்லை. அது மட்டும் அல்லாமல் திருநாவலூர் தொகுதி உறுப்பினர் திரு. இல. ஆறுமுகம் அவர்கள் தமக்கு தனி இடம் ஒதுக்க வேண்டும் என்று மனு செய்திருப்பதாகத் தெரிகிறது. அதைப் பற்றியும் தகவல் இல்லை. ஆனால் அவர்கள் இரண்டு பேரும் இங்கே இல்லை. அவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் தாங்கள் எழுப்பியிருக்கிற ஒழுங்குப் பிரச்னை எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்கிச் சொல்லிவிடுகிறேன். தனி இடம் ஒதுக்கவேண்டும என்று ஒரு உறுப்பினர் கேட்டிருப்பதாக பத்திரிகையில் வந்திருக்கிறதே அதைப்பற்றி உங்களுக்கு கடிதம் வந்திருக்கிறதா? ஒரு

1980 பிப்ரவரி 2] [பேரவைத் தலைவர்]

அமைச்சர் ராஜினாமா செய்திருப்பதாக தகவல் வந்திருக்கிறது— அதைப்பற்றி கடிதம் வந்திருக்கிறதா என்று கேட்டிருக்க வேண்டும். நான் பதில் சொல்லி ஆக வேண்டும். ஆனாலும் நீங்கள் அப்படிக் கேட்டதாக நினைத்துக் கொண்டு பதில் சொல்லிவிடுகிறேன் பேரவைத் தலைவருக்கு எல்லா உறுப்பினர்களும் ஒன்றுதான்.

பேரவைத் தலைவர் என்ற முறையில் சொல்கிறேன். திருநாவலூர் தொகுதி உறுப்பினர் தனி இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டு எனக்கு எந்தவித கடிதமும் தரவில்லை. இன்னொரு உறுப்பினர் ராஜிநாமா சம்பந்தமாக,—அவர் அமைச்சராக இருந்தாலும் என்னுடைய கருத்தில் உறுப்பினர்தான்— எனக்கு எந்தவித கடிதமும் வரவில்லை. நேரிடையாகவோ, தொலைபேசி மூலமாகவோகூட எந்தச் செய்தியும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்...

திரு. துரை முத்துசாமி : அவர்கள் என்னவானார்கள்? வரவில்லையே சபைககு? கடத்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் . எனக்கு எவ்வித புகாரும் வரவில்லை. வந்தால் நடவடிக்கை எடுப்பேன்.

திரு துரை முத்துசாமி : பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறதே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைகளில் வருவதை எல்லாம் வைத்துக் கொண்டு நான் நடவடிக்கை எடுக்க முடியாது.

திரு. துரை முத்துசாமி : அப்படியென்றால் அவர்கள் என்னவானார்கள்? ஏன் சபைக்கு வரவில்லை. (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைகளில் வரும் செய்தியை வைத்துக் கொண்டு நான் நடவடிக்கை எடுக்க முடியாது. பேரவையின் உறுப்பினர்கள் சொல்கிற புகார் எனக்கு எழுத்து மூலமாக வருமேயானால், அதை விசாரித்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கிறேன்.. அதனால் துரை முத்துசாமி அவர்களே பொறுப்பேற்று கொண்டு அப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்று உறுதிபடுத்திக்கொண்டு அவர்கள் என்னவானார்கள் என்பதைப் பற்றி அறிய புகார் தலைவருக்குத் தந்தால், நிச்சயமாக அந்த உறுப்பினர்களுடைய கௌரவத்தையும், அவர்களுடைய நிலைமைகளையும் காப்பாற்றத் தயார் என்று உறுதி கூறுகிறேன்: (மேசையைத் தட்டும் ஒலி)

[1980 பிப்ரவரி 2

(ஆ) உறுப்பினர்களை ரகசியப் போலீசார் கண்காணிப்பது குறித்து

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். எங்களுக்கெல்லாம் பாதுகாப்புக் கொடுப்பது நீங்கள்தான். உங்களை நம்பித்தான் நாங்கள் சட்ட மன்றத்திற்கு வருகிறோம். உங்கள் பாதுகாப்பில் நாங்கள் இருக்கிறோம். சட்டமன்றம் நடைபெறுகிற காலத்திலும் சரி, சட்ட மன்றம் நடைபெறாத காலத்திலும் சரி உங்கள் பாதுகாப்பில்தான் நாங்கள் இருக்கிறோம். கடந்த சில நாட்களாக எதிர்க்கட்சித் தலைவர், எங்களைப் போன்றவர்களை எல்லாம் ஸி.ஐ.டி.க்கள் பின் தொடர்வதும் எங்கள் வீடுகளைக் கண்காணிப்பதுமான நிலையில் நாங்கள் இருக்கிறோம். நாங்கள் பேசும் குரல் கூட டேப் செய்யப்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். எ.பி.யு. 2196 டப்ளியு, பி.ஜெ.3742 என்று இரண்டு அம்பாஸிடர் கார்கள் எங்களைத் தொடர்ந்து கொண்டு வருகிறது. எங்களது சட்டமன்ற கட்சி அலுவலகத்தில் கூட, எங்கள் ஆபீஸ்க்கு போக முடியாத அளவிற்கு, போலீஸ் போடப்படுகிறது; அங்கு ஸி.ஐ.டி.கள் உலாவுகிறார்கள். இதற்கெல்லாம் நீங்கள்தான் பாதுகாப்பு தரவேண்டும், நாங்கள் எங்கள் வேலைகளை இடைஞ்சல் இல்லாமல் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கத் தரப்பில் இருந்து ஏதாவது பதில் சொல்கிற நிலை இருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் ஒருசில புகார்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவை எந்த அளவிற்கு உண்மை என்று எனக்குத் தெரியாது. ஆனால் விசாரித்து விளக்கமாக அதைப்பற்றி நாளைக்கு அல்லது நாளை மறுநாளோ இந்த அவைக்குத் தகவல் தரத் தயாராயிருக்கிறேன் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் எழுப்பியுள்ள ஒழுங்குப் பிரச்சனைக்கு பேரவைத் தலைவர் என்ற முறையில் என் கடமையைச் சொல்லியாக வேண்டும். அவர்கள், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் ரகசியப் போலீஸ் எல்லாம் நடமாடுகிறது என்று சொன்னார்கள். என்னுடைய நிலைமை என்ன என்பதை எடுத்துச் சொன்னால்தான் பேரவை அதை உணர முடியும். என்னுடைய நிலைமை என்ன என்றால் என்னிடம் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்படைத்திருக்கிற கடமைகளை பாதுகாக்க

வேண்டும். உறுப்பினர்களுக்கு பாதுகாப்பாக அந்த விடுதி இருக்க வேண்டும் என்று நீங்கள் இட்டிருக்கிற கட்டளையை நான் நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தருவதில் தான் இருக்கிறது. உறுப்பினர்களைப் பார்க்க வருகிறேன் என்று ஒவ்வொரு அறைக்கும் நான்கு பேர்கள், ஐந்து பேர்கள், பத்து பேர்கள் வருகிறார்கள் அவர்கள் யார் யார் என்று கண்டுபிடிப்பது எங்களுக்குப் பெரிய தொல்லையாக இருக்கிறது. நான் செயலாளர் அவர்களோடு பேசிய போது உறுப்பினர்களைப் பார்க்கப் போகிறோம் என்று சட்டமன்ற விடுதியில் பெரிய கூட்டம் வருகிறது. அந்தக் கூட்டத்திற்கு இடையே யார் வருகிறார்கள் யார் போகிறார்கள் என்று கண்டுபிடிப்பதில் கஷ்டமிருக்கிறது. வேண்டுமானால் ஒருவர் அல்லது இருவர் என்ற அளவில் அவர்கள் விருந்தினர்களாக தங்க வைக்கலாம் என்ற அளவிற்கு ஒத்துழைப்பு தந்தீர்களானால் சுலபமாக யார் யார் வருகிறார்கள் என்று அறிய முடியும். ஆனால் அந்நிலை இல்லாத காரணத்தினால், உறுப்பினர்களைப் பார்க்க வருகிறோம் என்று சொல்லி பெருங்கூட்டம் வருகிற காரணத்தினால் யார் யார் வருகிறார்கள் என்று சுலபமாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. எழுத்து மூலமாக புகார் கொடுக்கப்படவில்லை. இப்போது எழுப்பியுள்ளதைக் கொண்டு தான் இப்பிரச்னை என் கவனத்திற்கு வந்திருக்கிறதே தவிர, இப்படிப்பட்ட ஒரு நிலைமை சட்டமன்ற விடுதியில் இருக்கிறது என்று எழுத்துமூலம் எனக்கு எந்தவொரு உறுப்பினரும் புகார் தரவில்லை. ஆதாரம் காட்டினால் அதைப் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கத் தயாராய் இருக்கிறேன். என் அனுமதி இன்றி அங்கு யாரும் வரக்கூடாது. வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன், இதில் ஒரு நிலையும் மாறாது என்று உறுதியிட்டு சொல்கிறேன். அதற்கு நீங்கள் ஒத்துழைத்தாக வேண்டும்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தங்களது தர்மசங்கடமான நிலையை உணருகிறோம், ஆனால் அங்கு வருகிற பார்வையாளர்களை ஒழுங்குபடுத்த முடியாது என்ற நிலை இல்லை. ஒழுங்குபடுத்தலாம். வருகிற பார்வையாளர்களை அனுமதிக்க வேண்டும். அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களிடம் தங்கள் குறைகளைச் சொல்ல வருகிறார்கள். ஆகவே இந்த இலாக்கா அதிகாரிகள் ஒழுங்குமுறை நிர்ணயித்து அவர்களை அனுமதிக்க வேண்டுமே தவிர இப்படிச் சொல்லிவிட்டு எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க தவறிவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஐந்து நிமிடங்களானாலும் பரவாயில்லை. முதலில் பத்து பேர்கள் வருகிறார்கள். ஒரு அட்டை கொடுக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அரை மணிநேரம் கழித்து இன்னும் பத்துப் பேர்கள் வருகிறார்கள். எப்படி ஒழுங்குபடுத்துவது என்று யோசனை சொல்லுங்கள்.

[1980 பிப்ரவரி 2

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தாங்கள் திரு. சாதிக் பாட்சா அவர்களை யோசனை கேட்டீர்கள். உறுப்பினர்களைக் காண்பதற்காக அவர்கள் ஊர்க்காரர்கள், தொகுதிக்காரர்கள் வருகிற விஷயத்திற்கும் ஸி.ஐ.டி.க்கள் எங்களைச் சுற்றிச் சுழன்று வருகிற விவகாரத்திற்கும் தொடர்பு இருப்பதாக நான் கருதவில்லை. அவர்களில் ஸி.ஐ,டி.க்கள் நுழைந்து வரக் கூடும். நான் தங்களுக்குத் தரக்கூடிய யோசனை— இதுவரை நாங்களோ மற்றவர்களோ உங்களுக்கு புகார் எழுதித்தரா விட்டாலும் திரு. சாதிக் பாட்சா அவர்கள் இங்கே எழுப்பி யிருக்கிற புகார் காரணமாக, அது நடவடிக்கைக் குறிப்பில் ஏறி விட்டது. அவர்கள் கூறியிருப்பது புகார் எழுதிக் கொடுத்ததை போல் ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதைத் தாங்கள் எடுத்துக்கொண்டு உடனடியாக போலீஸ் இலாகாவிற்கு ஒரு ஆணை பிறப்பிக்கலாம்; சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள் இவர்களை போலீஸ் ஸி.ஐ.டி.க்கள் பின் பற்றக் கூடாது என்ற ஒரு ஆணையை நீங்கள் பிறப்பிக்கலாம் அதுதான் என்னுடைய யோசனை.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது அவர்களைப் பின்பற்றி சி.ஐ.டி.க்கள் வருவதை நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற இந்தப் புகாரை அடிப்படையாக வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். எப்படி சபாநாயகர் அவர்களுக்கு விஷயம் தெரியாமல், தகவலை சேகரிக்க முடியாமல், நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்தான் எனக்கு விளக்க வேண்டும். ஏனென்றால், அவர் சொன்னது இப்போதுதான் புரி கிறது. இந்தத் தகவலைத் தந்ததற்குப் பிறகுதான் அவர்கள் அச்சுறுத்தப்படுகிறார்களா, இல்லையா என்பதை அறிந்து பிறகு நடவடிக்கை எடுக்க முடியும். இதற்கிடையில் இப்போதே நட வடிக்கை எடுக்கவேண்டுமென்று நீங்கள் சபாநாயகரைக் கோருவது அதைத் தடுக்க வேண்டுமென்று கோருவது எந்த அளவுக்கு நியாயம் என்பதைப் பற்றி கொஞ்சம் சிந்திக்கக் கேட்டுக் கொள் கிறேன். அவரை தர்மசங்கடத்திற்கு ஆளாக்காதீர்கள்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஏன் நட வடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டவில்லை. அவை முன்னவர் அவர்கள் அதைப் புரிந்து கொண்டிருப்பார்கள் என் றிருந்தேன். எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை, யோசனை கேட்டதனால்தான் போலீஸ் இலாகாவிற்கு தாங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டும் என்ற யோசனையைத்தான் சொன்னேன்.

1980 பிப்ரவரி 2]

திரு அ. க. அரங்கநாதன் : பேரவைத்தலைவர் அவர்களே, இன்றைக்கு சட்டமன்ற விடுதிக்குள் பல பேர்கள் வருகிறார்கள், போகிறார்கள் அவர்களில் சி.ஐ.டி,க்களும் இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முடிந்துபோன பிரச்னை. புது ஒழுங்குப பிரச்னையாக இருந்தால் சொல்லுங்கள்

திரு அ. க. அரங்கநாதன் : தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்கார வேண்டும். உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், சட்டமன்ற விடுதிக்கு வருகின்ற விருந்தினர் களின் எண்ணிக்கையைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டால் சுலப மாக துப்புத் துலக்குவதற்கு முடியும். தாங்கள் கூறும் இந்தப் பிரச்னை முடிந்துவிட்ட பிரச்னை. அதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் பேசியிருக் கிறார்கள். திரு. மணிமாறன்.

திரு ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2,3 நாட்களாக ஆளும் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்டு வருகிறார்கள். பயமுறுத்தப் பட்டு வருகிறார்கள். பல்வேறு தொலைபேசிகள் இரவு நேரங் களில் வருகின்றன. எங்கள் கட்சிக்கு வாருங்கள் என்று எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் சுற்றிவளைத்துக் கொண்டு வரும் நிகழ்ச்சி சட்டமன்ற விடுதிக்குள் அதிகமாகிக் கொண்டு வருகிறது, எனவே, இதையும் எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்த புகாராகக் கருதி, தக்க பாதுகாப்பை ஆளும் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சபாநாயகர் அவர்கள் வழங்க வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்ட வனாக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே சொன்ன பதில்தான் தங்கள் பிரச்னைக்கும், தகுந்த நடவடிக்கை எடுக்கப் படும்.

டாக்டர் கே. சமரசம் : நான் ஏற்கனவே உங்களிடத்தில் ஒரு மனு கொடுத்திருக்கிறேன். அதைப் போலவே சம்பந்தப் பட்ட அரசு அதிகாரிகளுக்கும் அனுப்பியிருக்கிறேன். நான் உறுப்பினர் விடுதியில் 510-ம் எண் அறையில் இருக்கும் போது முன்பின் தெரியாதவர்களும், பழைய நண்பர்களும் வந்து பார்த்து கட்சி மாறி வரவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். என்னுடைய வீட்டிலும் சில வகையான பிரச்சினைகளை எழுப்பி இருக்கிறார்கள். இந்த வகையில் பாதிக்கப்பட்டிருக்கும் எனக்கும் என்னுடைய குடும்பத்திற்கும் பாதுகாப்பு அளிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கொடுத்த கடிதம் வந்திருக்கிறது. அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

(4) தகவல் கோரல்

(அ) பேரவையில் காந்தி-காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சி குறித்து.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மணிமாறன் அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் வற்புறுத்துகிறாகள் என்று குறிப்பிட்டார்கள். காந்தி-காமராஜ் கட்சியை சார்ந்தந் உறுப்பினர்களை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள்தான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுடைய ஒழுங்குப் பிரச்னை என்னவாயிற்று?

திரு மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆறுமுகம் அவர்கள் கேட்கும் கேள்வி முக்கியமானது. ஏனென்றால், அலுவல் ஆய்வுக் குழுவில் அந்தக் கட்சி இடம் பெற்றிருக்கிறது. இப்போது அந்தக் கட்சி இருக்கிறதா அல்லது பெயருக்காவது இருக்கிறதா, கரைந்து விட்டதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்? இப்போது எத்தனை கட்சிகளுக்கு, நீங்கள் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு, அழைப்பு அனுப்புவதாக இருந்தால் அனுப்புவீர்கள்? இந்த விவரம் எங்களுக்குத் தெரிய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அந்தக் கட்சியிலிருந்து எனக்கு எந்தக் கடிதமும் வரவில்லை. ஆனால், அந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள் ஆளும் கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து விட்டேன் என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவ்வளவுதான். இன்னும் அந்தக் கட்சி இருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றி பின்னால் விசாரித்துச் சொல்லுகிறேன். அவர் சேர்ந்து விட்டதாக மட்டும் தான் கடிதம் வந்திருக்கிறது.

திரு மு. கருணாநிதி : இந்தப் பிரச்சினையிலே ஒரு சந்தேகம் கேட்க விரும்புகிறேன். அந்தக் கட்சி இருக்கிறதா? இல்லையா? இப்போது யார் எழுதி அனுப்புவது என்று புரியவில்லை. எப்படி எழுதி அனுப்புவார்கள்? கட்சித் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் அவர் தம்முடைய கட்சி சட்டசபையில் இல்லையென்று எழுதுவாரா? எப்படி எழுதுவார்கள் என்று புரிவ வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கட்சியிலிருந்து உறுப்பினர் ஆளும் கட்சிக்குப் போயிருப்பதாகக் கடிதம் எழுதி யிருக்கிறார். பிறகு அந்தக் கட்சியிலிருந்து கடிதம் எதுவும் வரவில்லை என்றாலே அந்தக் கட்சி இல்லையென்றுதான் பொருள்.

(ஆ) முதலமைச்சர் சினிமாவில் நடிக்க பதவி விலக இருப்பது குறித்து

திரு நா. சுந்தரராஜ் ; முதலமைச்சர் மட்டும் ராஜிநாமாச் செய்யப் போகிறாரா? இல்லையென்றால் சர்க்காரைக் கலைத்து விட்டுப் போகப் போகிறாரா? அவர் ராஜிநாமாச் செய்தால் எல்லோரும் போன மாதிரிதான்;....

நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தப் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு சினிமாவில் நடிக்கப் போவதாகவும், அவர் நடிக்க இருக்கிற படம் தீபாவளியன்று திரையிடப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இது ஒழுங்குப் பிரச்சினைக்கு உகந்தது அல்ல.

திரு. சி. ஆறுமுகம் : அவரே பேசியிருக்கிறார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் அவையில் இருக்கும்போது இந்தப் பிரச்சினையை எழுப்பினால் நலமாக இருக்கும்,

திரு. துரை முத்துசாமி : பத்திரிகையில் பல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையில் பல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன என்று கூறி அதைப் பிரச்சினையாகக் கொண்டு இங்கு ஒழுங்குப் பிரச்சினைகள் எழுப்புவது முறையானது அல்ல. இந்த அவையின் மரபுக்கும் அது உகந்தது அல்ல.

5. அறிவிப்புகள்

அ. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 9 (1) வது விதியின்கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :—

1. திரு. பி. எச். பாண்டியன்
2. திரு. பொ. சிகாமணி
3. திரு. என். கிட்டப்பா
4. திரு. ர. ஜெபமணி

ஆ. நாகப்பட்டினம் தொகுதி உறுப்பினர் பதவி விலகல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாரூர் (செட்யூல்டு வகுப்பு) சட்டமன்றப் பேரவை தொகுதி உறுப்பினர் திரு. தாழை மு. கருணாநிதி அவர்கள் நாடாளுமன்றத்திற்கு (ஏழாவது

லோக்சபை) தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளதால் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் பதவியினின்றும் 18–1–1980 முதல் விலகிக் கொண்டுள்ளார் என்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் 190-வது பிரிவு 3 (பி) உட்பிரிவின்படி அப் பதவி விலகல் அத் தேதியிலிருந்து என்னால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவு

(அ) இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10–30]

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்

திரு பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும் :—

'1980—ஆம் ஆண்டு, சனவரி திங்கள் 30 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்''. என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு வ. மு. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்

255-262-ம் பக்கங்களில் ஆளுநர் உரை இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது. அதன் தமிழாக்கம் 263-272-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1980 பிப்ரவரி 2]

திரு பி. எச். பாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தை மொழிகின்ற வாய்ப்பை எனக்குக் கொடுத்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் தம்முடைய உரையிலே குறிப்பிடுகிற நேரத்திலே இப்போது நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் தமிழகத்திலே அமைதியாக நடந்தது என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். எவ்வளவு அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் இருந்தாலும் அரசியல் வேற்றுமைகள் நம்மிடம் இருந்தாலும் இந்த நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்த வரையில் நாமெல்லாம் ஒரே இனமாக. தமிழர்கள் இனமாக, தேர்தலை அமைதியாக நடத்தி இருக்கிறோம். அதைக் கோடிட்டு காட்டுகின்ற முறையிலே தான் தமிழகத்திலே தேர்தல் அமைதியாக நடந்தது என்பதை ஆளுநர் அவர்கள் எடுத்துக் காட்டி இருக்கிறார்கள்.

அதே நேரத்திலே ஆளுநர் அவர்களுடைய உரையிலே, அங்கே எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நாங்கள் ஒத்துழைப்பைத் தருவோம் என்ற முறையிலே இரண்டாவது பத்தியிலே மிகத் தெளிவாக ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அரசின் சார்பாக. ''எனது அரசாங்கத்தின் சார்பில், ஜனநாயக, சமதர்ம அடிப்படையில் மலர்ந்து வளங்கொழிக்கும் இந்தியாவைக் காந்திய வழியில் உருவாக்க மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, நாம் அண்ணாவின் கொள்கை வழிநின்று, ஆக்கப் பூர்வமான ஒத்துழைப்பை நல்குவோமென உறுதி கூறுகிறேன்'' என்று சொல்லியிருக்கிறார்கள், மேலும் சொல்கிறார்கள் அதே நேரத்தில் தமிழ்நாட்டின் அரசியல், கலாச்சார. பொருளாதார, மொழிப் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் திடமாக வாதாட அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துவோம். அதன் மூலம் தமிழ்நாட்டு மக்களின் நியாயமான உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க மத்திய அரசு செவி சாய்த்துச் செயல்பட ஆவன செய்வோம்..மாநிலங்களையும் வலுப்படுத்தினால் தான் மத்திய அரசு வலுவுள்ளதாய் இருக்குமென்பது இப்போது மேலும் மேலும் உணரப்படுகிறது.'' என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அவர்கள் மேலும் அந்த உரையிலே சொல்லியிருப்பது'' இவ்வகையில் இந்தியக் கூட்டாட்சி அமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தங்கள் செய்வதன் மூலமாக விரைவில் சீராக்கப்படுமென நம்புகிறோம்'' என்பதாகும். மேலும் அவர்கள் தம்முடைய உரையிலே நம்முடைய அரசின் கொள்கை விளக்கங்களைக் கோடிட்டுக் காட்டி

யிருக்கிறார்கள். தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்டு சிறைச்சாலைக்குச் சென்றவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்பட வேண்டுமென்றும் ஆளுநர் அவர்கள் தம் உரையிலே சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, இன்றைக்குத் தொழில் முதலீடு வடநாட்டைவிட தமிழ்நாட்டிற்குக் குறைவாக இருக்கின்றது என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். 8 சதவீதமாக இருந்த மத்திய அரசின் முதலீடு 4 சதவீதமாகக் குறைந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். 1957 ஆம் ஆண்டு இந்த மாமன்றத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள், உரையாற்றியபோது, எப்படி வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே ஆளுகின்ற அரசாங்கம், அங்கே தொழில் முதலீட்டை அதிகமாக ஏற்படுத்திய காரணத்தினால் தமிழ்நாடு தேய்ந்து கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நேரத்திலே இங்கே எதிர்க் கட்சித் தலைவராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ்நாட்டுக்கு அதிக முதலீடு தேவை என்பதை தம்முடைய உரையின் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதே நிலையைத்தான் இன்றைக்கு மத்தியிலே ஆட்சி பீடம் ஏறியிருக்கின்ற காங்கிரஸ்காரர்கள், இங்கே அமர்ந்திருக்கின்ற காங்கிரஸ்காரர்கள் நமக்காக மத்தியிலே வாதாடி, 1957 ஆம் ஆண்டில் அண்ணா அவர்கள் தெளிவு படுத்திய அந்தக் கொள்கையை இன்றைக்குக் கடைபிடித்து நமக்காக, தமிழனுக்காக, தமிழ் நாட்டிற்காக வாதாடிப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று அண்ணாவின் உரையை ஒரு சான்றாக வைத்துக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ள உரையில் பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள், மாநகராட்சி ஆகியவைகளின் தேர்தலை நடத்துவதைபபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளுக்குத் தேர்தல் நடந்து பத்து ஆண்டுகள் ஆகின்றன. இதற்கு முன்னால் இருந்தவர்கள் ஏழாண்டுக் காலமாக நடத்தாத அந்தத் தேர்தலை இன்றைக்குத் தமிழக அரசு நடத்த முன் வந்திருக்கிறது. ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். நாடாளுமன்றத் தேர்தலின் வாக்குகளை அதிகமாகப் பெற்றாலும் இன்றைக்கு இடங்களைக் குறைவாகப் பெற்றிருக்கின்ற அதே நேரத்தில், பஞ்சாயத்துத் தேர்தலையும், நகராட்சி மன்றத் தேர்தலையும், மாநகராட்சித் தேர்தலையும் நடத்துவதற்கு இந்த அரசு முன் வந்திருக்கிறது. என்றால் இந்த அரசு எப்படி ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, வருவாய்த் துறை வாரியத்தை நீண்ட நாட்களாக, நீண்ட ஆண்டுகளாக நீக்கி விட வேண்டுமென்ற கோரிக்கையை இன்றைக்கு நம்முடைய அரசு நிறைவேற்றி யிருக்கிறது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.]

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே உள்ள விவசாயிகள் எப்படி நெல்லின் விலையை உயர்த்த வேண்டுமென்று போராடிக் கொண் டிருக்கிறார்களோ அந்த நிலையை உணர்ந்துதான் மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட உயர்ந்த விலையில் கொடுத்து, நெல்லை விவசாயிகளிடமிருந்து வாங்குவதற்கான நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. இதை எண்ணிப் பார்க்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோதுமையின் விலை அரிசியின் விலையைவிட அதிகமாக இருக்கிறது. இருந்தாலும் கோதுமைக்கு மானியமாக மத்திய அரசு அதிகமான தொகையை வழங்கியிருக்கிறது. குறைந்த மானியத்தைப் பெறுகின்ற நம்முடைய தமிழ்நாடு அரசு நெல்லின் விலையை இன்றைக்கு உயர்த்தியிருக்கிறது என்றால் சாகுபடி யாளர்களுக்கு இலாபகரமாக இருக்க வேண்டுமென்பதைக் கண்ணோட்டத்தில் கொண்டுதான் இன்றைக்கு இந்த நெல்லின் விலையை உயர்த்தியிருக்கிறது. நெல்லின் விலையை உயர்த்த வேண்டுமென்று நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவ ரவர்கள் தென் மாநில முதல்வர்களின் மாநாட்டைக் கூட்டிக் கூறியிருக்கிறார்கள்.

வட நாட்டிலே சொல்வார்கள், 'வீட் லாபி' என்று சொல் வார்கள். கோதுமை சாகுபடியாளர்கள் சாகுபடிச் செலவையும் அதிகமாகப் பெற்று வருகின்ற அதே நேரத்தில் அதிக விலையையும் பெறுகிறார்கள். அதேபோன்று 'அரிசி லாபி'யாக நாம் இருக்க வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு டெல்லியிலிருந்து அதிக தொலைவில் இருக்கிறது என்ற நிலை இல்லாமல், எப்படி வடநாட்டில் கோதுமைக்கு அதிக விலையை நிர்ணயித்து உள்ளார்களோ அப்படிப்பட்ட நிலையை இங்குள்ள காங்கிரஸ் நண்பர்கள் மத்தியில் ஆளுகின்ற கட்சியிடம் கூறி அதிக விலையை நெல்லுக்கும் வாங்கித் தரு வார்கள் என்று நம்புகிறேன், அதற்காக அவர்கள் பாடு படுவார்கள் என்ற நிலையை உணர்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டிலே சென்ற சுமார் ஒன்றிரண்டு மாதங்களாக எங்கு பார்த்தாலும் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்றெல்லாம் அரசியல் கட்சிகள் பல மேடைகளிலே கூடச் சொல்லி, தேர்தல் நேரத்திலேயும் அதை அவர்கள் பிரச் சாரமாக வைத்திருந்தார்கள். சட்டம் ஒழுங்கு என்று குறிப்பிடு

கின்ற அதே நிலையில் நான் ஒன்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன். நம்முடைய தமிழகத்திலுள்ள என்.ஜி.ஓ.க்கள், என்.ஜி.ஓ. சங்கத் தலைவர்கள், இன்றைக்கு நம்முடைய ஜனநாயக அமைப்பு முறையில் உள்ள ஆளுங்கட்சிக்கு அறைகூவல் விட்டுக் கொண்டிருந்தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை இறக்கியே தீருவோம், முதலமைச்சரை அடக்கியே தீருவோம், முதலமைச்சரைப் பணிய வைத்தே தீருவோம் என்று அரசாங்க வேலை செய்யும் சிப்பந்திகள் ஒரு மாநில முதலமைச்சரையும், அமைச்சரவையும் அச்சுறுத்துகின்ற நிலையில் இருப்பதை நாம் பார்க்கிறோம். நான், இந்த நேரத்தில் முதலமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வது, இப்படிப் பட்ட அரசாங்க ஊழியர்கள்மீது சட்டத்தை மீறுகின்ற அரசாங்க ஊழியர்கள் மீது எந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறீர்கள், எடுக்கப் போகின்றீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள நான் இந்த நேரத்தில் உங்களைக் கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய அரசாங்கத்தில் இருக்கின்ற ஊழியர்கள் எப்படி ஒழுங்கு நிலையை மீறி, எப்படி டிசிப்ளின் என்று சொல்லப்படும் நிலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதை எதிர்க் கட்சிக்காரர்கள் கண்ணால் கண்டுதான் ''லா அண்ட் ஆர்டர்'' இல்லை என்று குறிப்பிட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10-40)

நம்முடைய ஆளுகின்ற அரசினிடமிருந்து எதிர்க்கட்சியினருக்கே பல கோப்புகள் சென்று கொண்டிருந்தன. இங்கே பேசுகின்ற பல நண்பர்கள்கூட கோப்புகளைக் காட்டினார்கள். இப்படி ஆளுகின்ற அரசாங்கத்திடமிருந்து ஃபைல்களை எல்லாம் எடுத்து, எதிர்க்கட்சி நண்பர்களுக்குக் கொடுத்ததற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றார்கள். அப்பேர்ப்பட்ட நிலையை அவர்கள் எடுத்திருந்தால், சட்டம்—ஒழுங்கு உண்மையிலேயே குலைந்திருந்தால், சிப்பந்திகள் ரீதியில் இருந்திருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு இருந்த காரணத்தினாலும், எந்தப் பிரச்னையானாலும், பணிந்து என்று சொல்வதோடு, மனிதாபிமானத்தோடு அணுகிய காரணத்தாலும் இன்றைக்கு சுணிசமான நிலையில், அரசாங்க சிப்பந்திகள் பிரச்சினைகளைக் கொடுத்து, அணுகி விடக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அப்பேர்பட்ட நிலையில், நமது முதலமைச்சர் அவர்கள் திறமையாக இருக்கிற காரணத்தால், மனிதாபிமான நிலையில் நடந்து கொண்ட காரணத்தினால்தான் இன்றைக்குச் சட்டம்—ஒழுங்கு கெட்டுவிட்டது என்பதை நான் ஏற்கவேண்டிய நிலையில் இருக்கிறேன்.

1980 பிப்ரவரி 2] [திரு. பி. எச். பாண்டியன்]

அதைச் சொல்லுகின்ற அதே நேரத்தில், பல்வேறு கொலைகள் நடந்திருக்கின்றன என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஏதோ இந்திரா நகர் கொலை வழக்கு, பட்டினப்பாக்கம் கொலை வழக்கு என்பதையெல்லாம் நாம் செய்தித் தாள்களில் பார்த்துக் கொண்டிருந்தோம். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கொலைகள், பல்வேறு ஆட்சியாளர்கள் காலத்தில், பல்வேறு நோக்கங்களோடு நடைபெற்றிருக்கின்றன. 1972-ல் நானே, சென்னை நீதிமன்றத்திலே நடத்திய இரண்டு வழக்குகளை இங்கே சான்றாக வைக்க விரும்புகிறேன். 1972—73-ல், பிராட்வேயில், 'டி—பிராட்வே' என்ற ஓட்டலில், அங்கேயிருந்த பெரிய பணக்கார முஸ்லிம்களை எல்லாம் கடத்திக் கொண்டு, ஊருக்கு வெளியே கொண்டு போய், விஷ ஊசி எல்லாம் போட்டு பணத்தை அபகரித்த நிலை நமக்கு நன்றாகத் தெரியும். அந்த நேரத்திலே, இதைக் காரணமாகச் சொல்லி, அன்றைக்கு ஆண்டு கொண்டிருந்த ஆட்சியை அகற்ற வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. அது மட்டுமல்ல,

கீழ்ப்பாக்கத்தில் ஒரு பெரிய மார்வாடியை, அவருடைய வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த 3 பேர்கள் கழுத்தை நெறித்துக் கொன்று, பணத்தையும், நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றார்கள். இதையெல்லாம், எதற்காக உதாரணமாகச் சொல்கிறேன் என்றால், கொலை நடந்துவிட்டது, அதற்குக் காரணம் இந்த ஆட்சிதான், சட்டம், ஒழுங்கு கெட்டு விட்டது, அதற்குக் காரணம் இந்த ஆட்சிதான் என்று சொல்பவர்கள், அதற்குக் காரணமாக இருக்க வேண்டியவர்கள் அதிகாரிகள் என்பதை உணர்ந்தாக வேண்டும். ரூ. 1,000/—, ரூ. 2,000/—. என்று சம்பளம் வாங்கிக்கொண்டு, அதற்காக அமர்த்தப்பட்டிருக்கிற அதிகாரிகள் தங்களுடைய கடமைகளை உணர்ந்து செயல்படுவார்களானால், இதுபோன்ற கொலை, கொள்ளைகளை நாம் கண்டு பிடித்திருக்க முடியும்.

ஆனால், இந்த நேரத்திலே ஒன்றைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். கொலை நடந்த நேரத்திலேயே அதிகாரிகள், பத்திரிகை நிருபர்களை அழைத்து, கொலையாளி அங்கே போய் விட்டான், அந்த ரயிலிலே சென்றுவிட்டான், அந்தத் தடயத்தை விட்டுச் சென்றுள்ளான், இந்த மாதிரி செய்துவிட்டு சென்றுள்ளான் என்று பேட்டி அளித்தார்கள். சென்னை நகர கமிஷனர் அவர்கள் பேட்டி அளித்தார்கள். ஸ்காட்லாந்த் யார்டைப் பற்றிப் பார்ப்போமானால், அங்கே உள்ளவர்கள் புலனாய்வு முடிகின்ற வரையில், குற்றம்பற்றி, தாங்கள் புலனாய்ந்து, கண்டு பிடித்திருந்தும், குற்றவாளி, கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட வேண்டிய நிலையில் கூட, அவர்கள் வெளியே சொல்லமாட்டார்கள். ஆனால், இங்கே பெயர்போன போலிசார் இது போன்ற நிலையைத் தவிர்க்க வேண்டுமென்று நான் இந்த உரையில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, விவசாயிகளுக்கு இந்த அரசு எதையெல்லாம் செய்திருக்கிறது என்பதை நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன், சுமார் ரூ. 40 கோடிக்கு சலுகைகளைத் தமிழக அரசு வழங்கியிருக்கிறது. மின் கட்டணத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 12 பைசாவிலிருந்து, 14 பைசாவாக உயர்த்தினார்கள். அதை, 14 பைசாவிலிருந்து, 16 பைசாவாக, நெருக்கடி கால ஆட்சியாளர்கள் உயர்த்தினார்கள், அப்பேர்ப்பட்ட நிலையிலிருந்து இன்றைக்கு, 12 பைசாவாகக் குறைத்திருக்கிறது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, விவசாயிகளுக்கு எப்படியெல்லாம் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்திருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இதில், மத்திய அரசு அதிகமாகப் பங்குபெற வேண்டும்.

அதுமட்டுமல்ல, புரட்சித் தலைவர் ஆட்சியில் கூட்டுறவுத் துறை அமைதியான புரட்சியை நடத்தியிருக்கிறது. அவருடைய அணுகு முறை, முடியுமா, முடியாதா என்பதல்ல. தேவையா, இல்லையா, என்பதுதான் அவரது அணுகு முறை. இன்றைக்கு இந்த அணுகு முறையை வைத்து, கிராமீய கூட்டுறவுச் சங்கங்கள் விதித்துள்ள சாதாரண வட்டி, அபராத வட்டி, ஆகியவைகளைத் தள்ளுபடி செய்துள்ளது. இதனால் 30 மாத கால ஆட்சியில் 7 இலட்சம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளார்கள் என்பதை நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள்—வெள்ளத்தாலும் வறட்சியாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சுமார் 52 கோடி ரூபாய் சலுகையாகக் கடன் கால நீட்டிப்பு பெற்றிருக்கிறார்கள். இதன் மூலம் 3 லட்சம் விவசாயிகள் பயன் பெற்றிருக்கிறார்கள். ஏதோ இந்த அரசு விவசாயிகளைக் கவனிக்கவே இல்லை, விவசாயிகளைப் புறக்கணித்து விட்டது என்ற நிலையை மாற்றுவதற்காக உணர்த்துவதற்காக நான் இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழக அரசு ஆட்சி பீடத்திலே ஏறிய உடனே 1962 முதல் 1972 வரை நம்முடைய சட்டமன்றத்தில், சட்டத்தில் நிலத்தை எடுத்திருக்கிறார்களே தவிர, நிலமற்ற ஏழைகளிடம் இருந்து அதிகமான பணத்தைப் பெற்றுத்தான் நட்ட ஈடு கொடுத்திருக்கிறார்கள். லாபம் அடைந்தவர்கள், நிலம் உள்ள விவசாயிகள், பணக்காரர்கள் தான் என்பதை கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு சொல்லுகிறார்கள் அரிசனங்கள் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள் என்று. ஒன்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உரஞ்சினை என்ற கிராமம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. அங்கே 5 அரிசனங்கள் வெட்டப்

1980 பிப்ரவரி 2] [திரு. பி. எச். பாண்டியன்]

பட்டிருக்கிறார்கள். இந்தக் குற்றத்திற்காக யார் குற்றவாளி களாக நிற்கின்றார்கள் என்பதை நான் சொல்லத் தேவையில்லை என்பதை நண்பர்கள் அறிவார்கள்.

அது மட்டுமல்ல, விழுப்புரத்திலே நடந்த சம்பவம் ஜாதிக் கலவரம் இல்லை என்று ஜஸ்டிஸ் சதாசிவம் கூறி இருக்கிறார்கள். பேரணாம்பட்டிலே நடந்த சம்பவம் அரசியல் காரணங்களுக்காக நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து எண்ணிப் பார்த்து எப்படி அரிசனங்கள், யாரால் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்ப்பது ஒவ்வொரு உறுப்பினருடைய கடமை. ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் எதைப் பேசினாலும், எதைச் செய்தாலும் அவர்கள் எதை நினைத்தாலும் அவைகள் எல்லாம் மக்களுக்குப் பாதகம் என்று சொல்லுகிற எதிர்கட்சியினர், அதனை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும். மக்களுக்கு நல்லது செய்தால் வரவேற்கவேண்டி கேட்டுக் கொள்கிறேன். தவறு செய்தால் சுட்டிக்காட்டுங்கள். அண்ணா அவர்கள் சொல்வார்கள், ஆளுங்கட்சிக்காரர்களும், எதிர்க் கட்சிக்காரர்களும் மாப்பிள்ளையைப் போலவும், மாப்பிள்ளைத் தோழன் போலவும் இணைந்து ஆட்சி நடத்தவேண்டும் என்று சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவர்களும், முதலமைச்சர் அவர்களும் சேர்ந்து ஆட்சி நடத்த வேண்டும் என்பதுதான் அண்ணா அவர்கள் சொன்னதாகும்.

இந்தச் சட்டமன்றத்தில் நாம் எப்படிச் செயல்பட்டிருக்கிறோம், சொந்தப் . பிரச்சினையைப் பற்றி பேசப்பட்டிருக்கிறது. கட்சிப் பிரச்சினையை விட்டு, சொந்த விவகாரங்களை விட்டு, அங்க அடையாளங்களை விமர்சிப்பது விட்டுவிட்டு, மக்களுடைய பிரச்சினையை அணுகினால் நிச்சயம் இந்தச் சட்டமன்றம் எப்படி பாரம்பரியத்தை காலாகாலமாகப் பாதுகாத்து மற்ற சட்ட மன்றங்களுக்கு வழிகாட்டியாக விளங்கியதோ அதைவிட அதிகமான பாரம்பரியத்தை இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஏற்படுத்தும் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக் கிறேன்.

இந்த $2\frac{1}{2}$ ஆண்டு காலத்தில் பல உறுப்பினர்கள் பேசிய போதெல்லாம் நான் கூர்ந்து கவனித்திருக்கிறேன். சில பேர்கள் சொந்தப் பிரச்சினைகளை அலசி இருக்கிறார்கள். ஒருவருக் கொருவர் வாக்குவாதம் செய்து தங்களுக்குள்ளே உள்ள வெறுப்பு உணர்ச்சியை, காழ்ப்புணர்ச்சியை பரிமாறிக்கொள்வதை பார்த் திருக்கிறேன். அப்பேர்பட்ட நிலை இருக்குமானால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்காக சேவை செய்வதற்காக, அவர்களுடைய இதயத் துடிப்பை உணர்ச்சிகளை, எண்ணங்களை பிரதிபலித்து வாதாடி சலுகைகளைப் பெற்றிருந்தால், இந்த

மன்றத்தின் பாரம்பரியம், இந்தியத் துணை கண்டத்திலேயே முதலிடம் பெற்று, அகில இந்திய ரீதியில் பொருளாதார ரீதியில் இல்லாவிட்டாலும், அரசியல் ரீதியில் அதிகமாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே ஜாதிக் கொடுமைகளைப் பற்றிப் பேசியிருக்கிறோம். 1971-ம் ஆண்டு நாம் பாராளுமன்றத் தேர்தலையும், சட்டமன்றத் தேர்தலையும் வைத்துக் கொண்டிருந்தோம். அன்றைக்குப் பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்த பிறகு சட்டமன்றம் கூடுகிறது.

[முற்பகல் 10-50]

அன்றைக்கு காமராஜர் அவர்கள் மீதிருந்த காழ்ப்புணர்ச்சியினாலும், அரசியல் வேறுபாடுகளினாலும், எதையும் நாடாத அவர்கள் மீது, ஒரு ஜாதியைக் குறிப்பிட்டு தாக்கி இருக்கிறார்கள். ஒரு தலைவரைப் பிடிக்காத காரணத்தால், அந்தத் தலைவரின் கொள்கை பிடிக்காத காரணத்தால் அந்த ஜாதியைக் குறிப்பிட்டு இந்தச் சட்டமன்றத்திலேயே தாக்கிப் பேசியிருக்கிறார்கள். அப்படிச் செய்வது தவறு என்றும், நல்லது அல்ல என்றும், அன்றைக்கு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்து சொல்லியிருக்கிறார்கள். இதைச் சொல்கிற நேரத்தில், நான் சொல்ல விரும்புவது, நாம் ஜாதி மத உணர்ச்சிக்கு அப்பாற்பட்டு நம் கடமைகளை ஆற்ற வேண்டும். இங்கே அரிசனங்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்று சொல்கிற நேரத்தில், அரிசன மக்கள் மீது மட்டும்தானா அந்தக் கொடுமைகள் இருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிறுபான்மையினர் பாதுகாக்கப்பட வேண்டும் என்று எடுத்துச்சொல்வது முறையாக இருக்கும் என்று எடுத்துச் சொல்லி, ஆளுநர் உரை மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பளித்த தலைவருக்கு மீண்டும் ஒரு முறை நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

* திரு. துரை முருகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் ஆற்றிய உரையின் மீது நான் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இந்த அவையில் சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

கவர்னர் உரை என்று சொல்வது ஒரு நூலுக்கு பாயிரம் அமைவது போல் ஆகும். ஒரு அரசு இந்த ஆண்டில் இந்தந்த புதிய திட்டங்களை வகுத்து இருக்கிறோம் என்பதை விளக்கிக் காட்டுவதாக அமைவது தான் கவர்னர் உரை. அந்தத் திட்டங்களுக்கு, அந்தக் கொள்கைகளுக்கு ஏற்ப பணத்தை ஒதுக்குவது தான் பட்ஜெட் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், இந்த ஆளுநர் உரையில் என்னென்ன புதிய திட்டங்கள் இருக்கின்றன என்பதை விட,

1980 பிப்ரவரி 2] [திரு. துரை முருகன்]

இந்த ஆளுநர் உரை இங்கே படிக்கப்படுவதற்கு எந்தவிதமான 'மாரல் அதாரிட்டியும்' இந்த அரசுக்கு இல்லை என்பது தான் என்னுடைய முதல் கருத்து ஆகும். காரணம், மக்களின் ஆதரவு பெற்று, பெரும்பான்மையாக அமர்ந்து இருக்கின்ற ஒரு கட்சி தான் கவர்னர் உரையை எழுதிப் படிக்கத் தகுதி பெற்ற தாகும். அதற்குத் தான் கவர்னர் உரை என்று பெயர் இருக்கும். ஆனால் தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக சற்றொப்ப 220 தொகுதிகளில் மக்களின் வாக்குகளைப் பெறத் தவறிய வக்கற்ற சர்க்காராக மாறிப்போய் இருக்கிறது இந்த அரசு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த அரசுக்கு சட்டப்படி கவர்னர் உரை அளிக்க உரிமை இல்லை, நியாயம் இல்லை, 'மாரல் அத்தாரிட்டி' இல்லை என்பதை நான் முதற்கண் தெரிவிக்கக் கடமைபட்டு இருக்கிறேன்.

இரண்டாவதாக, இந்த கவர்னர் உரையில் பல்வேறு புதிய திட்டங்கள் இருப்பதாக நம்முடைய அருமை நண்பர் திரு. பாண்டியன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். என்னைப் பொறுத்தவரையில், செத்தவன் தலை கிழக்கே இருக்கிறதா, மேற்கே இருக்கிறதா என்பதைப் பற்றிக் கவலை இல்லை, செத்துப்போன பிண்டமாக வெளிவந்து இருக்கிற இதில் என்ன எழுதப்பட்டு இருக்கிறது என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. காரணம், அதிலே நீங்கள் எந்தத் திட்டங்களைப்பற்றி சொல்லியிருந்தாலும், அது செத்துப் போனவன் கையில் வெத்திலைப் பாக்கு கொடுத்து அனுப்புவது போல்தான் இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய வேண்டுகோள், நான் எடுத்த எடுப்பிலேயே ஒன்றைச் சொன்னேன். நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல் தமிழ்நாட்டில் அமைதியான சூழ்நிலையில் நடைபெற்றது என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்டுவதாக அமைந்து இருக்கிறது இந்த அறிக்கை என எனக்கு முன்னாலே பேசிய அங்கத்தினர் எடுத்துச் சொன்னார். நான் கூட படித்துப் பார்த்தேன். அதிலே 4-வது பாராவிலே "அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்கள் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பொதுவாக அமைதிச் சூழ்நிலையிலே நடைபெற்றதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மனதிலே கைவைத்து கூறும்படியாக ஆளும்கட்சிக்காரர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். முழுப் பூசணிக்காயை சோற்றில்மறைப்பது என்று கிராமப்புறத்தில் சொல்வார்களே அதைப்போல் இந்த அறிக்கையில் செய்து இருக்கிறீர்கள். அமைதியான சூழ்நிலையில் நடைபெற்றதா இந்தத் தேர்தல் என்பதை உங்களுடைய மனச்சாட்சியைத் தொட்டு பதில் சொல்லுங்கள் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

[திரு. துரை முருகன்] [1980 பிப்ரவரி 2

மதுரையில் ஒரு சம்பவம் நடைபெற்றது. அன்றைக்கு ஆளும் கட்சிக்கும், எங்களுக்கும் ஊர்வலம் நடத்துவதற்காக நேரம் ஒதுக்கப்பட்டது. ஆளும் கட்சிக்காரர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு முன்பாகவே அவர்கள் அந்த இடத்திற்கு வந்து, எங்களுடைய ஊர்வலம் நடத்துவதற்கு வழிகொடுக்காத காரணத்தால், கலவரம் ஏற்பட்டது. போலீஸ்காரர்கள் அதைத்தடுத்துப் பார்த்தார்கள். அந்தப் போலிஸ்காரர்களையே நையப் புடைத்தார்கள் ஆளும் கட்சியினர்.

பிறகு அவர்கள் லத்தி சார்ஜ் செய்தார்கள்; பிரம்படி பிரயோகம் நடத்தினார்கள்; கண்ணீர் புகை விட்டார்கள்; கடைசியில் எல்லாம் தாண்டி, சாம பேத தான தண்டம் என்று சொல்வார்களே, அதைப்போலத் துப்பாக்கிச் சூடு நடைபெற்று இருவர் பிணம் ஆனார்கள், இதை நான் சொல்லவில்லை. உங்களுடைய ஆட்சியிலே அமர்ந்திருக்கிற மதுரை டி.ஐ.ஜி. இராஜசேகர நாயர் ஒரு அறிக்கையிலே குறிப்பிட்டு காட்டியிருக்கிறார். இரண்டு பேர் செத்தார்கள். எங்கும் கலவரம் நடைபெற்றது; மதுரையே ஸ்தம்பித்து போய்விட்டது; அந்த ஊரிலே தேர்தல் நடைபெறுமா என்ற நிலை உருவாயிற்று; இதையெல்லாம் மறந்துவிட்டு, மூடி மறைத்துவிட்டு, தேர்தல் அமைதியான சூழ்நிலையில் நடைபெற்றது என்று எழுத உங்கள் கரம் கூசவில்லை, நடுங்கவில்லை, எவ்வளவு பெரிய பூசணிக் காயை சோற்றிலே மறைத்திருக்கிறீர்கள் ?

மதுரை சம்பவம் மட்டுமல்ல. தியாகராயநகரிலே மதிப்பிற்குரிய இன்றைக்கு மத்திய அமைச்சராக பொறுப் பேற்றிருக்கிற ஆர். வெங்கட்ராமன் அவர்களுடைய தேர்தல் காரியாலயம் கொளுத்தப்படவில்லையா ? எங்களுடைய கட்சியைச் சேர்ந்த ஜெயராமன் அவர்களுடைய பழக்கடை அடித்து நொறுக்கப்படவில்லைவா ? அங்கே போலீஸ்காரர்கள் முன்னாலே கலாம் நடைபெற்று, சோடா பாட்டில் வீசப்பட வில்லையா ? ஆளும்கட்சியில் ஒரு முக்கியப் பிரமுகராக இருக்கிற மதிப்பிற்குரிய * * * என்கிற ஒரு ஆள் நுழைந்து அங்கே கலாம் விளைவிக்கவில்லையா ? அதனாலே ஒருவர் மாண்டுபோனாரே. அந்தச் சாவை மறைப்பதற்கு அமைதி சூழ்நிலை தேவைப்படுகிறதா உங்களுக்கு ? அதற்காக நீங்கள் கழிவிரக்கம் கொள்ள வேண்டாமா ? இதை எழுதுகிறபோது வெட்கப் பட்டிருக்க வேண்டாமா ? இது மக்களுக்குத் தெரியாது, மக்கள் மறந்துவிடுவார்கள் என்று நீங்கள் நினைத்து விட்டீர்களா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இதைப்போலதான் தமிழ்நாடு முழுவதும். மாயவரத்திலே ஒரு நிகழ்ச்சி. அந்தப்பகுத்தறிவு மன்றத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் அங்கே உட்கார்ந்திருக்கிறார். அவரைப்போட்டு பூட்டிப்போட்டு, பிறகு கல்லால் அடித்து, அமளி துமளி செய்திருக்கிறார்கள்.

அதைப்போல அருமை நண்பர் திரு. சுப்பு அவர்களுடைய தொகுதியான அம்பத்தூரில். இங்கே அமர்ந்திருக்கிற அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் அங்கே போய் பார்த்து, முதலமைச்சர் தாக்கப்பட்டார் என்ற தவறான செய்தி பரப்பப் படுகிறது; கலாம் விளைவிக்கப்படுகிறது. பிறகு அங்கே ஒரு பெரிய சவுண்ட் சர்வீஸ் கடையில் — அது எங்கள் கட்சிக் காரருடைய கடை — நுழைந்து, கடை நொறுக்கப்படுகிறது; 10,000 ரூபாய்க்கான சொத்துக்குச்சேதம் ஏற்படுகிறது. மறுநாள் முதலமைச்சர் போய்ப் பேசுகிறார். என்னைப்பற்றித்தவறான தகவல் இந்தப் பகுதியிலே பரப்பப்பட்டுவிட்டது; நான் அடிக்கப் படவில்லை என்று அவரே வாக்குமூலம் கொடுக்கிறார். அமைதியான சூழ்நிலையில் தேர்தல் நடைபெற்றது என்று கருதுகிறீர்களா ? இது நியாயம்தானா ?

இதைப்போல பல்வேறு பகுதிகளில், நாடு பூராவும் நடைபெற்றிருக்கிறது. இதற்கெல்லாம் ஆதாரம் தேவையில்லை. உங்கள் கட்சியிலே நியமன பொதுச் செயலாளர் ஒருவர் இருக்கிறார். அவரே மதுரைச் சம்பவம் குறித்து கடிதம் எழுதுகிறார். மத்திய போலீஸ் வரவேண்டும்; இதிலே தலையிட வேண்டும் என்று தந்திகள் கொடுத்துவிட்டு, இங்கே இருக்கின்ற முதலமைச்சருக்கும் தந்தி அனுப்புகிறார். மத்திய அரசு தலையிட வேண்டும்; உடனடியாக நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தகவல் கொடுக்கிறார். ஆளும்கட்சிக்காரரே இப்படி எழுதியிருக்கிறார். இதையெல்லாம் நீங்கள் தூக்கி எறிந்துவிட்டு, எல்லாவற்றையும் மறந்துவிட்டு, அமைதியான சூழ்நிலையில் தேர்தல் நடைபெற்றது என்று எழுதியிருக்கிறீர்களே, இது நியாயம்தானா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இன்னொரு சம்பவம். மத்திய சென்னையில் டாக்டர் கலாநிதி அவர்களின் ஜெனரல் ஏஜெண்ட் வழக்கறிஞர் இராதாகிருஷ்ணன். அவர் எங்கள் கட்சியின் தலைமை நிலையச் செயலாளர்களிலே ஒருவர். அவர் *** முன்னால் போலீசாரால் தாக்கப்பட்டார்; அவருடைய கார் தாக்கப்பட்டது. இப்படி ஒவ்வொரு ஊராகப் பார்த்தால், அமளி துமளி சென்னையில் மட்டுமல்ல; எல்லா இடங்களிலும், எல்லா ஊர்களிலும் நடைபெற்றிருக்கின்றன. இவ்வளவும் நடைபெற்ற பின்னால், இவ்வளவையும் தூக்கி எறிந்துவிட்டு அமைதி சூழ்நிலையில்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

தேர்தல் நடைபெற்றது என்று சும்மா கூட சொல்லவில்லையாம். பெருமையுடன் சொல்கிறேன் என்று குறிப்பிடுவதற்கு வெட்கப்பட வேண்டாமா? நாணி தலை குனிய வேண்டாமா என்று நான் உங்களைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று. விநோதமானது, ஆனால் வேடிக்கையானது. அது எது தெரியுமா? ''ஜனநாயக மரபுகளைப் பேணிக் காக்கும் பண்பும் வாக்காளப் பெருமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற விழைவும் வளருவதை எண்ணி என் அரசின் சார்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறப்பட்டிருக்கிறது. வாக்காளர் உரிமை பாதுகாக்கப் பட்டிருக்கிறதா உங்கள் ஆட்சியிலே? சென்னை மாநகரில் மட்டும் 6 இலட்சம் வாக்காளர்கள் காணாமல் போய் விட்டார்களே. இதுதான் வாக்காளர் உரிமைக்குப்பாதுகாப்பா?

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலே 22,29,431 வாக்காளர்கள் இருந்தார்கள். 1979-ல் தற்போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 16,66,850 தான் இருக்கிறது. 6 இலட்சத்தைக் கொடுக்கவில்லையே. நீங்கள்தான் ஆளும் கட்சிக்காரர்கள்; உங்கள் அதிகாரிகள்தானே கணக்கு எடுத்தார்கள். அதற்கு ஒரு அதிகாரியை நியமித்தீர்கள், உங்களுக்கு மிக வேண்டிய அதிகாரி அவர். கணக்கில் 6 இலட்சம் பேரைக்காணவில்லை. இந்த 6 இலட்சம் எங்கே போயிற்று? இரண்டரை ஆண்டுக் காலத்தில் அவர்கள் எல்லாம் செத்துப் போனார்களா? டாக்டர் கலைஞர் அவர்கள் அழகாகக் குறிப்பிட்டதைப் போல, இரண்டரை ஆண்டுக் காலத்திலே சென்னை நகரில் மட்டும் 6 இலட்சம் பேர் செத்திருந்தால், இந்த நாடு பூராவும் எவ்வளவு பேர் செத்திருப்பார்கள்? மக்களை வாழ வைக்க ஆட்சிக்கு வந்தீர்களா? சாக வைக்க ஆட்சிக்கு வந்தீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

[முற்பகல் 11–00]

டாக்டர் கலைஞர் அவர்கள் உடனே தேர்தல் கமிஷனர் அவர்களுக்குத் தந்தி அனுப்பினார்கள். அப்போது அங்கிருந்து ஒரு பிரதிநிதி வந்தார். வந்து 32 ஆயிரம் வாக்குகள் தான குறைகின்றன என்று ஒரு அறிக்கையினைத் தந்தார்கள். அப்போது ஆளும் கட்சி சார்பிலே ஒருவர் வந்து நானும் ஒரு அறிக்கை தருகிறேன், அதாவது சில வாக்காளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் தயாரித்த அந்த சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய வாக்காளர் பட்டியலை எங்கே வைத்திருந்தார்? பரணிலே கட்டிப்போட்டு வைத்திருந்தாரா? இந்த மாதிரி வாக்காளர்கள் எண்ணிக்கை குறைகின்றது என்று நாங்கள் சொன்ன நேரத்திலே ஆளும் கட்சியின் சார்பிலே என்ன சொன்னார் கள்? திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தாங்கள் தோல்வி அடைந்துவிடுவோம் என்று எண்ணி அதற்கான

1980 பிப்ரவரி 2] [திரு. துரை முருகன்]

காரணத்தைத் தேட ஆரம்பித்துவிட்டார்கள், ஆகவே ஆறு இலட்சம் வாக்குகளைக் காணோம் என்று பிதற்ற ஆரம்பித்து விட்டார்கள் என்று சொன்னார்கள். ஆகவே தலைவர் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தோல்விக்குக் காரணங்கள் தேடி அலையவில்லை, உங்களை டெபாசிட் இழக்கச் செய்யும் வாக்குகளைத்தான் தேடி அலைந்திருக்கிறோம் என்பதை மெத்த பெருமையுடன் நெஞ்சை உயர்த்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று. அதாவது உண்மைக்கு மாறான தகவல்களைச் சேர்த்து இந்த உரையிலே ஆளுநர் அவர்களைப் பேச வைத்திருக்கிறீர்கள் என்று குற்றம் சாட்ட விழைகிறேன். அதாவது ''நகரின் போக்குவரத்து நெரிசலைச் சமாளிப்பதற்கான ஒரே வழி, விரைந்து ஓடும் இரயில்கள் (Mass Rapid Transit System) அமைப்பதன் மூலமே யென்பதை இங்கு நான் மீண்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன். விரைவு இரயில் போக்குவரத்து அமைப்பதற்கான பணிகளை வரும் ஆண்டிலாவது மத்திய அரசு தொடங்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.'' என்று அந்த உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது உண்மைக்கு மாறான தகவல். ஏனென்றால் இந்தத் திட்டத்திற்காக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கிற காலத்தில் போராடி, எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் நடாளுமன்றத்திலே பேசி இந்த மாநிலத்திற்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். அதற்காக தனி அலுவலகங்கள் நிறுவப்பட்டு இது வரையிலும் 1.3 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்தத் திட்டத்தை உங்களுடைய ஆட்சியில் நீங்கள் இழந்து விட்டீர்கள். ஆனால் இந்த உரையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது ? ''வரும் ஆண்டிலாவது மத்திய அரசு தொடங்க வேண்டும்'' என்று சொல்லி இருக்கிறார்கள். இப்போது தொடங்கக்கூடிய நிலையிலா மத்திய அரசிடம் அந்தத் திட்டம் இருக்கிறது என்று கேட்டால் இல்லை என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். ஜனவரி இரண்டாம் தேதியிட்ட இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 'By our staff Reporter' என்ற பகுதியில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

''In his letter dated December 14, addressed to MGR, Mr. Charan Singh has stated that the state Goverment should concentrate on ',de congesting'' the city. Only after this is done, can we think of costly schemes like the RTS he has said in his letter.'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்த ஆண்டிலாவது மத்திய அரசு இதைத் துவங்கவேண்டும் என்று சொல்கிறீர்களே, அது இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இடையிலே இவ்வாறு

ஏற்படுவதற்கு என்ன காரணம் என்ன கேட்டால் இடையிலே இந்தச் சர்க்கார் மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவில்லை.

"Informed sources express the view that MGR was a bit late in taking up the issue with the Prime Minister"

என்று அவர்கள் சொல்லிவிட்டிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தினை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு போகத் தவறி விட்டார்கள். அந்தத் திட்டம் கையை விட்டுப் போகிற நிலைமை உருவாக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் அதை மூடி மறைத்துவிட்டு அடுத்த ஆண்டிலாவது துவங்க வேண்டும் என்ற உண்மைக்கு மாறான தகவலை ஆளுநர் அவர்களது உரையிலே சேர்த்திருக்கிறீர்கள்.

இன்னொன்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் கூடச் சுட்டிக்காட்டினார்கள். மத்திய அரசின் முதலீடு இந்தப் பகுதிக்கு இருக்க வேண்டும், மத்திய அரசின் முதலீடுகள் இருந்தால்தான் நல்லது என்றெல்லாம் குறிப்பிட்டுவிட்டு, இது நம்முடைய மாநிலத்தின் உரிமையைக் காப்பதாகும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஏட்டிலே எழுதிக் காட்டி இருக்கிறீர்கள். ஆனால் நாட்டிலே வந்த திட்டங்களை நீங்கள் ஏற்றுக்கொண்டதுண்டா ?

அடுத்து, இரண்டாவது இரயில்பெட்டி செய்யும் தொழிற் சாலையை இந்த மாநிலத்திலே துவக்க இருந்தது மத்திய அரசு. நீகாவை மாவட்டத்திலே அதற்காக இடங்களை எல்லாம் பார்த்து இரயில்வே போர்டு சிபாரிசு செய்து வந்த பிறகு பத்தாயிரம் பேர்கள் வேலை செய்யலாம் என்ற நிலையில் உருவாகி வந்த அந்தத் திட்டம், உருவாகி வருகின்ற நேரத்திலே தங்கள் அதைச் சரியாகப்பயன்படுத்தாத காரணத்தால் அண்டை மாநிலத்திலுள்ள திரு. சென்னாரெட்டி அவர்கள், நான் இலவசமாக இடம் தருகிறேன், இலவசமாகக் குடிதண்ணீர் தருகிறேன், எங்கள் மாநிலத்திலே துவக்குங்கள் என்று சொல்லி அந்தத் திட்டம் அங்கே போகிற நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆகவே அந்தத் திட்டத்தை பக்கத்து மாநிலத்திற்குப் பறிபோக விட்டது கொடுமை என்று கூறி, இந்தக் குற்றத்தை இழைத் தவர்கள் இந்தச் சர்க்கார் என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விழைகிறேன்.

ஏன், மத்திய சர்க்காரே ஒரு திட்டத்தை மனம் உவந்து கொடுக்க வருகிறது. ஆனால் அந்தத் திட்டத்தை பயன்படுத்த உங்களுக்குத் தெரியவில்லை. அதை அணைத்துப் போக உங்களுக்கு வக்கில்லை, வகையில்லை, தெளிவில்லை, திராணி யில்லை. ஆகவே விட்டு விட்டீர்கள். அது பக்கத்து மாநிலத்திற்குப்

1980 பிப்ரவரி 2] [திரு. துரை முருகன்]

போய் விட்டது. ஏன், நீங்கள் தூங்கி விட்டீர்கள். ''தூங்காதே தம்பி தூங்காதே'' என்று நமது முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். அதைச் சொன்னாலும் சொல்வார், அதை நான் நாடோடி மன்னனில் பாடியிருக்கிறேன் என்று. ஆனால் நான் அதை அப்படிப் பாட முடியாது. அண்ணே நீங்கள் தூங்கி விட்டீர்கள் தூங்கிய காரணத்தினாலே கோட்டை விட்டு விட்டீர்கள். ஆகையினால் இந்த நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகையினால் இப்பொழுது சொல்கிறீர்கள் மத்திய சர்க்கார் இங்கே முதலீடு செய்ய வேண்டும் என்று. இன்னொன்றையும் சொன்னீர்கள் காகித ஆலை பற்றி. கவர்னர் உரையிலே இந்த ஆண்டு துவங்கப்படும் என்று சென்ற ஆண்டு சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இந்த ஆண்டு அதை ரிஜிஸ்தர் செய்திருக்கிறீர்கள். அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை, உங்களுடைய நிலைமையிலே.

அதேப்போல தூத்துக்குடியிலே ஒரு ஆல்கஹாலிக் தொழிற்சாலை. அதிலேயும் இதே நிலைமைதான் நீடித்துக் கொண்டிருக்கிறது. வேறு எந்தவிதமான முன்னேற்றத்தையும் காண முடியவில்லை. ஆனால் இரண்டு அமைச்சர்களை மத்தியிலே வைத்துக் கொண்டிருந்தீர்கள். அது போதாது என்பது போல் மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் இணைப்புப் பாலம் போல ஒரு லையசன் ஆபிசர் என்ற வகையில் ஒரு நபரை நியமித்தீர்கள். அவருக்கு அங்கே கார், படி, இங்கே கார், வீடு என்று இத்தியாதி செலவுகள் அத்தனையும் செய்தீர்கள். ''குருடி தண்ணிக்குப் போனாளாம் கூட எட்டு பேருக்கு வேலை கேட்டதாக'' என்பது போலவும் ''அறுக்கமாட்டாதவன் கையில் 58 அரிவாளாம்'' என்பதைப் போலவும் இருக்கிறது. உங்களுக்கு இத்தனை அமைச்சர்கள் டெல்லியிலே இரண்டு அமைச்சர்கள், அவர்களுக்கு துணை செய்ய ஆலோசனையாளர்கள், இத்தனை பேர்கள் இருந்தும் கூட ரயில்பெட்டி செய்கிற தொழிற்சாலையை கோட்டை விட்டீர்கள். இதுவரை காகித தொழிற்சாலை கேட்கவில்லை. டூரா டாக் என்பதை ஆரம்பிக்கப் போவதாக போன வருஷம் சொல்லியிருக்கிறீர்கள் அதை ஆரம்பிக்கவில்லை. காரணம் உங்கள் அமைச்சர்கள் அதையெல்லாம் கேட்டுப் பெறவில்லை. அங்கே என்ன செய்தார்கள். எதை வாங்கினார்கள் ? அவர்கள் இந்த மாநிலத்திற்குத் தேவையான திட்டங்களை வாங்கவில்லை, அவர்கள் வாங்கியது எல்லாம் வேறு. அந்த வேறு எதை என்று நான் சொல்ல விரும்பவில்லை. ஆகவே மத்திய சர்க்காரிடத்திலே போய் எங்களுக்கு அது தேவை, இது தேவை என்று எதையாவது கேட்டிருக்கிறீர்களா. எங்களுக்கு இன்னும் இரண்டு அமைச்சர்கள் தேவை. அவருக்கு போர்ட்— போலீயோ வேண்டும் என்று கேட்கிறீர்கள். இரசாயனத்தைப் பிரிக்காதே என்கிறீர்கள். இதிலேயே உங்கள் காலத்தை ஓட்டிவிட்டீர்கள்.

[திரு. துரை முருகன்] [1980 பிப்ரவரி 2

ஆனால் நாங்கள் இருந்தபோது அப்படியெல்லாம் இல்லை. நாங்கள் ஆட்சியிலே இருந்தபோது பாம்பன் பாலம் கேட்டோம். நாங்கள் ஆட்சியிலே இருந்தபோது நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வேண்டும் என்று கேட்டுப் பெற்றோம். நாங்கள் ஆட்சியிலே இருந்த போது சேலம் இரும்பாலை துவக்கப்பட்டது. நாங்கள் ஆட்சியிலே இருந்த போது தூத்துக்குடி அனல் மின்சாரம் வேண்டும் என்று கேட்டோம். எழுச்சி நாள் கூடக் கொண்டாடினோம். மாநிலத்தின் உரிமைக்காக குரல் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால் உங்களால் குரல் கொடுக்க முடியவில்லை. குரல் கம்மிப்போய் இருக்கிறது. வேறு ஏதாவது கிடைக்குமா, சலுகை கிடைக்குமா, காசு பணம் கிடைக்குமா என்று பார்ப்பதில் குறியாக இருந்து விட்டீர்கள். அதன் விளைவாகத் தமிழகத்திற்கு இன்று வர வேண்டிய தொழிற் சாலைகள் எல்லாம் வரவில்லை.

மத்திய சர்க்கார் போட வேண்டிய கொள்முதலைக்கொண்டு வந்து போடத் தயங்குகிறது. காரணம் இங்கே இருக்கிறவர்கள் கையால் ஆகாதவர்கள் என்பதை அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இன்னொன்றையும் நான் பார்க்கிறேன். சென்ற ஆண்டு ஆளுநர் உரைக்கும் இந்த ஆண்டு ஆளுநர் உரைக்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. ஏதாவது தொக்கியிருக்கிறதா என்று பார்க்கிறேன். கிடைக்கவில்லை. அப்படியே கொஞ்சம் மாற்றி ஆக்டிவ் வாய்ஸ், பாசிவ் வாய்ஸ் மாற்றுவது என்று சொல்வார்களே அப்படி மாற்றி எழுதியிருக்கிறார்கள். ஆனால் ஒன்றே ஒன்று போன வருஷம் போல் இந்த வருஷம் எழுத, காப்பியடிக்க தைரியம் இல்லை. அது என்ன தெரியுமா? ''நிர்வாகத்திலே பிற துறைகளிலும் ஊழல்கள் களையப்பட வேண்டும் என்பதில் அரசு திடமான நம்பிக்கையைக் கொண்டுள்ளதை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் மன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பின் காரணமாக நல்ல பலன் ஏற்படும்'' என்று சென்ற ஆண்டு குறிப்பிட்டுள்ளார்கள். இந்த ஆண்டு ஆளுநர் உரையில் அந்தப் பேச்சே இல்லை. காரணம் என்ன? பயம். குறிப்பிட்டால் என்ன நடக்குமோ என்ற பயம். கப்பல் வரும், படகு வரும், மோட்டார் வரும், பஸ் வரும், அப்புறம் வட்டிக்கடைக்காரர் வருவார். ஈட்டிக்கடைக்காரர் வருவார். எத்தனை கோடி? எத்தனை லட்சம்? அப்படி எத்தனையோ வந்து விடும் கண்முன்பாக. ஆகவே உங்களுக்கே மனசாட்சி உறுத்துகிறது. ஊழலை எழுதுவதற்கு தயங்குகிறது. காரணம் சுற்றி சுற்றி வருகிறது. படுத்தால் ஞாபகம் வருகிறது கப்பல் கப்பலாக. எழுந்தால் மோட்டார், விழுந்தால் 24 லட்சம் வருகிறது. நின்றால் சினிமா கொட்டகைக்காரன். குனிந்தால் ஒரு முனை வரிக்காரர்கள். தேங்காய் கடைக்காரர்கள். தேங்காய் கடைக்காரர்களிலிருந்து மார்வாடியிலிருந்து அத்தனை பேரும கண் முன்னால் நடமாடுகிறார்கள்.

1980 பிப்ரவரி 2] [திரு. துரை முருகன்]

நாட்டிலே இருக்கிறவன், அங்காடியிலே இருக்கிறவன், ஆலையிலே வேலை செய்கிறவன், கூலி வேலை செய்கிறவன், வயல் வரப்பிலே வேலை செய்கிறவன், மற்றும் இருக்கிற பாட்டாளி அத்தனை பேரும் உங்களைப் பார்த்தால் அண்ணா தி.மு.க. வைச் சார்ந்தவன் போகிறான் என்றா பேசுகிறார்கள். அதோ போகுது பார் கப்பல், வருகுது பார் பஸ் என்றல்லவா பேசுகிறார்கள். எனவேதான் மரியாதையாக அந்தப் பாராவை எடுத்து விட்டீர்கள். இந்த புத்திசாலித்தனத்தையாவது கொஞ்ச நேரம் உங்கள் மனசு மகிழ்ச்சிக்காக நான் பாராட்டலாம் என்று கருதுகிறேன்.

அடுத்து இன்னொன்று எழுதியிருக்கிறார்கள். ஓட்டுரிமை 18 வயது என்று. அது புதிய திட்டம். இந்த ஆண்டுத் தேர்தல் திட்டமிட்டபடி நடக்குமா? மதிப்பிற்குரிய திரு. காளிமுத்து அவர்கள் சொல்கிறார் ஏப்ரலில் நடக்கும் என்று. தேர்தலில் ஓட்டு போடத்தான் இந்த 18 வயது வரம்பு. பெண்களுக்கும் அரிசனங் களுக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன, அவற்றைக் கொண்டு வருவதற்கு நாங்கள் சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது நடப்பது பிப்ரவரி. இடையில் இருப்பது மார்ச் மாதம் தான். ஏப்ரலில் தேர்தல். இடைப்பட்ட காலத்திலே 18 வயது உடையவர்களுக்கெல்லாம் வாக்குரிமை என்று போட்டால், சென்ஸஸ் எடுக்கப்பட்டதா? எப்பொழுது சட்டம் கொண்டு வருவது, எப்படி நிறைவேற்றுவது, எப்பொழுது 18 வயது என்று நிர்ணயித்து அமுல் படுத்துவது, எப்பொழுது. தனித் தொகுதிகள் ஒதுக்கப் போகிறார்கள்?

[முற்பகல் 11.10]

ஆகவே இதுவும் காற்றோடு காய்ந்து விட்ட நிலையாகத்தான் உருவாகிவிடும் என்பதால் சொல்கிறேன். அப்படி இருக்குமானால் இப்போது சொல்கிறேன். சென்ற முறை குறிப்பிட்டுக் காட்டிய தைப் போல் பெண்களுக்கு 50 சதவீதம் ஒதுக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுக்கு மத்திய அரசோடுதான் வாதாடத் தெரியவில்லை. உங்களுக்கு நாடாளவாவது தெரிகிறதா என்றால் அதிலும் ஸீரோ மார்க் தான் வாங்குகிறீர்கள். எனக்கு என்னவோ ஒரு ஐந்து க்ரேஸ் மார்க் போடலாம் என்பது எண்ணம். ஆனால் அதற்குக் கூட நீங்கள் லாயக்கற்றவர்களாகிவிட்டீர்களே என்றுதான் நான் வருத்தப்படுகிறேன். என்ன இருந்தாலும் விட்ட குறை தொட்ட குறை அல்லவா? முன்னால் நீங்கள் இருந்த கட்சி ஆயிற்றே, இப்படி இருக்கிறீர்களே என்பதுதான். எல்லாத் தரப்பின் எதிர்ப்புகளையும் நீங்கள் சம்பாதித்து இருக்கிறீர்கள்; வாழ்க்கையில் யாரை விட்டிருக்கிறீர்கள்?

விவசாயிகளை எடுத்துக்கொண்டால் அவர்கள் பாவம் போராடிப் போராடி ஜெயிலுக்குப் போவதும் வருவதுமாக இருந்திருக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்கு என்ன செய்தீர்கள்? ஒரு நாள் திடீரென்று மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. திருவேங்கடம் பேச்சுக்கு முதல் அமைச்சர் அவர்கள் எழுந்து சொன்னார்கள். விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கிடையாதாம், அதுவும் நான் ஆட்சி செய்யும்போது, பரவாயில்லை. வரப் போகிறது. 90 நாட்களுக்குள்ளே எல்லா விவசாயிகளுக்கும் மின் இணைப்புத் தரப்படும், நீங்கள் எல்லாம் பம்ப் செட்ஸ் வாங்கித் தயாராய் வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். என்ன நடந்தது? 90 நாட்களுக்குள் உங்களுக்கு மின்சார இணைப்புத் தருவோம் என்று சொன்னார்கள். பம்ப் செட்ஸ் உற்பத்தி செய்யும் முதலாளிகள் அமைச்சர்களையும் மற்றவர்களையும் பார்த்தார்கள். பேசவேண்டியது பேசியாயிற்று. மாற வேண்டியது மாறியது. நடக்கவேண்டியது நடந்தாயிற்று. விவசாயிகள் தங்கள் தட்டுமுட்டுச் சாமான்களை எல்லாம் கடைகளில் அடகு வைத்து பம்ப் செட்ஸ் வாங்கி வைத்தார்கள். பிறகு விவசாயி ஏ. இ. ஆபீஸுக்குப் போகிறான். எங்களுக்கு 90 நாட்களுக்குள் மின் இணைப்பு தருகிறேன் என்று சொன்னீர்களே என்று கேட்கிறான். ஒரு ஏ. இ. க்கு 400 அப்ளிகேஷன்ஸ் வந்தால் நாற்பது பேர்களுக்குக்கூட மின் இணைப்புத் தரப்பட வில்லை. அதன் விளைவு என்னவென்று கேட்டால் ஒரு லட்சம் பம்ப் செட்ஸ் மின் இணைப்புக் கிடைக்காமல் தேங்கிக் கிடக்கின்றன. ஒரு பம்ப் செட்டுக்கு ரூ. 5000 முடக்கம் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் விவசாயிகளின் பணம் ரூ. 50 கோடி இன்று முடக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகச் செய்தவர்கள் இந்த அரசு என்று தெரிவித்துக்கொள்கிறேன். உண்மைக்கு மாறான தகவல்கள். எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற உறுதிமொழிகள். விவசாயிகள் தங்கள் வீடுகளில் உள்ள தட்டுமுட்டு சாமான்களை மார்வாடி கடைகளில் அடகு வைத்து 50 கோடி ரூபாய் அளவிற்கு கடன்பட வைத்திருக்கிறீர்களே அது நியாயமா என்று கேட்கிறேன். யாருடைய வயிற்றெரிச்சலை விட்டீர்கள்?

என். ஜி. ஓ.-க்களை விட்டிருக்கிறீர்களா? மாணவர்களை விட்டிருக்கிறீர்களா? ஆசிரியர்களை விட்டிருக்கிறீர்களா? டாக்டர்கள் என்ன, என்ஜினியர்கள் என்ன, தொழிலாளிகள் என்ன? எல்லாத் தரப்பினரின் வயிற்றெரிச்சலையும் கொட்டிக் கொண்டிருக்கிறீர்கள். நன்றாகச் சொன்னார் திரு. பா. ரா. ஏன் நீங்கள் தோற்றுவிட்டீர்கள் என்று நிருபர்கள் திரு பா. ரா. வைக் கேட்டார்கள். ''நான் தோற்காமல் என்ன செய்வேன். அ. தி. மு. க. எல்லாத் தரப் பினருடைய வயிற்றெரிச்சலையும் கொட்டிக்கொண்டது, ஆகவே எங்களுக்கு வோட்டு போட வில்லை'' என்று பா. ரா. அழகாகச் சொன்னார்கள்.

1980 பிப்ரவரி 2] [திரு. துரை முருகன்]

முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், திரு பா. ரா. தோற்றுப்போனால் அது என் மானப் பிரச்சினை, மானமே போய் விடும் என்றார். இருந்தால் போவது வேறு. அது வேறு விவகாரம். ஆனால் அவர் சொன்னார், திரு. பா. ரா. தோற்றுப் போனால் என் மானம் போய்விடும் என்று. இன்னொரு உறுப்பினர் சொன்னார், திருமதி சுலோசனா சம்பத் தோற்றுப் போனால் தூக்குப் போட்டுக்கொள்வேன் என்று. ஏ, அப்பா. திருமதி சுலோசனா சம்பத் தோற்றுப்போனால் தான் சுருக்கு மாட்டிக் கொள்வேன் என்று சொன்னார். தமிழ்நாடு கேட்கிறது. ''கயிறு இங்கே இருக்கிறது, எங்கே திரு கபாலி'' என்று தமிழகம் கேட்டது. என்னவாயிற்று, உங்கள் வீரம். நான் சொல்ல வில்லை, திரு. பா. ரா. சொன்னார், உங்களால் ஆதரிக்கப் பட்ட திரு. பா. ரா. சொன்னார், அத்தனை பேர்களுடைய வயிற்றெரிச்சலையும் கொட்டி கொண்ட இந்தச் சர்க்காரால் தான் நான தோற்றுப்போனேன் என்று சொன்னார்கள்.

திரு. ஜெ. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர். திரு. துரைமுருகன் அவர்கள் உண்மைக்குப் புறம்பான பல செய்திகளை இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திரு. பா. ரா. அவர்கள் சொன்னார்கள் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். தஞ்சை இடைத் தேர்தலில் தோற்றுப் போய் விட்டால் பிணமாகத்தான் வருவேன் என்று சொன்ன முன்னாள் முதல் அமைச்சர்கள் எல்லாம் இங்கே இருக் கிறார்கள் என்பதை அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. துரை முருகன் : தேர்தல்களில் வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு தெரியாத்தனமாகப் பேசுகின்ற அகில இந்திய அண்ணா தி. மு. க. வினருக்கும் * * * * மேலே காலியானவர்கள் எங்கள் கட்சியில் கிடையாது., அப்படி யாரும் சொன்னது கிடையாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. ஆர். மணிமாறன் : அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள், முன்னாள் அறநிலையத் துறை அமைச்சராக இருந்தவர். திரு. கண்ணப்பன் என்று அவர் பெயர். அவரை மறந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. துரை முருகன் : நான் திரு. கண்ணப்பனை பற்றிச் சொல்லவில்லை. திரு. ஜேம்ஸ் அவர்களுக்குச் சொல்கிறேன். திரு. பா. ரா. அவர்கள் சொன்னது உண்மை, அதற்கு பொறுப் பேற்றுக்கொள்கிறேன். பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அதைப் படித்துக் காட்ட நேரமில்லை.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

* திரு. ர. ஜெபமணி : திரு. பா. ரா. அவர்கள் அப்படியா சொன்னார்கள்? உண்மைக்குப் புறம்பாக எடுத்துச் சொல்லுகிறீர்களே? 'வயிற்றெரிச்சல்' என்றா திரு. பா. ரா. சொன்னார்கள்? இப்படி உண்மைக்குப் புறம்பாக இங்கே எப்படி எடுத்துச் சொல்லலாம்? எங்களுக்கும் தெரியும், உங்கள் கூட்டு எவ்வளவு நாளைக்கு இருக்கும் என்று.

திரு. மு. கருணாநிதி : உங்களுடைய கூட்டை முதலிலே காப்பாற்றிக் கொள்ளுங்கள். பிறகு, மற்றவர்கள் கூட்டைப் பற்றிப் பேசலாம்.

திரு. ர. ஜெபமணி : எங்களுக்குக்கூட உங்களைப் பற்றி நன்றாகத் தெரியும். தஞ்சாவூரிலே நீங்கள் எவ்வளவு தடுமாறினீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். அதற்குப் பிறகு ஞானம் பிறந்து, அந்த ஞானம் திடீரென்று அஞ்ஞானமாக மாறிவிட்டதும் எங்களுக்குத் தெரியும்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, இன்னும் இந்தச் சமுதாயத்திலே எவ்வளவு பேர்கள் அதிருப்தியோடு இருக்கிறார்கள். இன்னும் எத்தனைப் போராட்டங்கள், அடக்குமுறைகள், அச்சுறுத்தல்கள். கடைசியிலே, போலீஸ் இலாகாவாவது அதிருப்தி இல்லாமல் இருக்கின்றதா? அவர்களும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். 'மங்கை சூதகமானால் கங்கையிலே குளிக்கலாம், ஆனால் கங்கையே சூதகமானால் எங்கே குளிப்பது' என்பது போல், எங்கே போராட்டம் நடந்தாலும் போலீசை அழைத்துக்கொண்டு போகலாம், ஆனால் போலீசே போராட்டம் நடத்தினால், என்ன செய்யப் போகிறீர்கள்? அதன் விளைவாகத் தான் இன்றைக்கு நாட்டிலே லா அண்டு ஆர்டர், அதாவது சட்டம், ஒழுங்கு இல்லை. நாட்டிலே எங்கே பார்த்தாலும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, திருடு போன்றவைகள் நடக்கின்றன. இந்திரா நகரில் பிரேமா, சேத்துப்பட்டில் இராஜலட்சுமி பட்டினப்பாக்கத்தில் வசந்தி, ஆவடியிலே ரோடில் டாக்சி டிரைவர் புட்டலூரில் தண்டபாணி போன்றவர்களின் கொலைகள் நடந்திருக்கின்றன. இன்னும் பலர் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இதுவரை நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? திரு. பாண்டியன் அவர்கள் பேசும்போது, விஷ ஊசி நடந்த சம்பவத்தைப் பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். என்ன நடந்தது? அதிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டு, சிறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆனால், ஒன்றை நான்......

திரு. பி. எச். பாண்டியன்: இந்த வழக்கில் 13 கொலைகள் நடந்திருக்கின்றன. 8 கொலைகள் மீதான வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. 5 கொலைகள் சாட்சியில்லை என்ற நிலையில் கைவிடப்பட்டிருக்கின்றன.

1980 பிப்ரவரி 2]

திரு. துரை முருகன் : அது நீதி மன்றத்தின் தீர்ப்பு. நானும் அவரும் அதைப்பற்றி விவாதிக்கக் கூடாது. ஆனால், இதிலே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால், நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? காரணம், பல பேர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். பட்டினப்பாக்கத்தில் வசந்தி கொலை நடந்திருக்கிறது. பட்டினப்பாக்கத்தில் போலீஸ் பந்தோபஸ்து போட வேண்டாமா? ஆனால், முன்னாள் அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் வீட்டில் போலீஸ் காவல் இருக்கிறது. கொலை நடந்தது வேறு இடம் ஆனால் திரு. முத்துசாமி வீட்டில் காவல், இது என்ன நியாயம்? ஆகவே, இப்படிப்பட்ட நிலைதான் நாட்டிலே இருக்கின்றது. இப்படிப் பட்ட நிலைமைகளுக்கு எல்லாம் போலீஸ் பயன்படுத்தப்படுவ தில்லை. துப்பு துலக்க வேண்டிய சி. ஐ. டி.க்கள் கலைஞர், பேராசிரியர், திரு. வீராசாமி, திரு. துரை முருகன் மற்றும் திரு. மாறன் போன்றவர்களின் வீட்டுக் கதவைத் தட்டுவதும், இவர்கள் வெளியே போனால், அவர்களுக்குப் பின்னால் காரை ஓட்டிக்கொண்டு போவதும் தான் இந்த போலீசாரின் வேலையாக இருக்கிறதே தவிர, குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காக அவர்கள் எங்கும் போடப்படுவதில்லை. அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்றால், எதிர்க் கட்சிக்காரர்களை அடக்குவது, ஒடுக்குவது, அவர்கள்மீது வழக்குகள் தொடுப்பது போன்ற வேலைகளைத்தான் செய்கிறார்கள். அதனால், இந்த நாட்டிலே உள்ளவர்களின் உயிருக்கும், உடமைக்கும் எந்தவித மான பாதுகாப்பும் இல்லை. அதனால் லா அண்டு ஆர்டர், சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது.

இப்போது அவர்கள் ஒரே ஒரு காரியம்தான் செய்ய வேண்டும். என்ன காரியம்? ராஜினாமாச் செய்வது. ஆனால், அதைச் செய்யமாட்டார்களே? அவர்களாக செய்யமாட்டார்களே? ஆடிக் கறக்க வேண்டிய மாட்டை, ஆடிக் கறக்க வேண்டும்; பாடிக் கறக்க வேண்டிய மாட்டை பாடிக் கறக்க வேண்டும், ஆனால், அவர்கள் எந்தவகையைச் சேர்ந்தவர்கள் என்பது தெளிவாகவில்லை.

நான் இன்னொன்றையும் கேட்கிறேன். எதிலேயும் உங்களுக்குத் தெளிவில்லை. ஒருநாள் ஒன்றைச் சொல்வது, இரண்டாம் நாள் அதை மாற்றிச் சொல்வது. நண்பர் இரகுமான்கான் அவர்கள் சொல்லியதுபோல், 'தள்ளாடும் சாராய சட்டம்' மதுவிலக்கு கொள்கையில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது; ஆனால், ஒன்றைச் சொன்னோம். தண்டனை கொடுப்பதிலும்கூட. கிரிமினல் ஜூரிஸ் புருடன்ஸ் என்ற அடிப் படையில் இருக்கவேண்டும் என்பதை நீங்கள் புரிந்திருப்பீர்கள் என்று எதிர்ப்பார்த்தோம், ஆனால், அதைப்பற்றி இந்த

[திரு. துரை முருகன்] [1980 பிப்ரவரி 2

மன்றத்திலே பேசுகின்றபோது, எல்லா அமைச்சர்களும் சொன்னார்கள். என்ன சொன்னார்கள், மதுவிலக்குக் கொள்கையில் நாங்கள் தீவிரவாதிகள், அதைத் தளர்த்த மாட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் நிலைமை என்ன ஆயிற்று? இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைக் கூறிக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

[முற்பகல் 11-20]

ஒரத்தநாட்டில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, எந்தக் காரணத்தைக் கொண்டும், பதவியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், மதுவிலக்குக் கொள்கையை தளர்த்த விட மாட்டேன் என்று தீவிரமாகப பேசினார்கள். இது தாயின் மீது ஆணை என்கிறார்கள். ஆனால், இப்போது என்ன சொல்லுகிறார்கள் என்றால், 'தளர்த்துகிறேன்' என்று சொல்லியிருக்கிறார்கள். 30 வயதுள்ள ஒருவன், 30 ரூபாய் வைத்திருந்தால் போதும். குடிக்கலாம். அன்றைக்கு ஆர்ப்பரித்தீர்கள். ஆர்ப்பரித்ததின் விளைவு இன்றைக்கு தள்ளாடுகிறசாராய சட்டத்தின் பின்நோக்கி ஓடுகிறீர்கள். அந்த ஒரு சட்டம் மட்டுமா?

இன்னொன்று பிற்பட்டோருக்கு தரப்பட்ட உரிமையில் கை வைக்கப்பார்த்தீர்கள். வருமான உச்ச வரம்பு கொண்டு வந்தீர்கள். 9,000 ரூபாய்க்கு மேல் வருமானம் இருந்தால் முற்போக்கு இல்லாவிட்டால் பிற்போக்கு என்று சொன்னீர்கள். இது தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் போராடிப் பெற்ற திராவிட சமுதாயத்தின் மாக்னாகார்டா. இதிலே யாருக்கும் கை வைக்க உரிமை இல்லை. இந்த மன்றத்திலே நான் சொன்னேன். இதிலே கை வைத்தால் ரத்த ஆறு ஓடும் என்று எச்சரித்தேன். கேட்கவில்லை. ஓடுமா ரத்த ஆறு, தம்பி துரை முருகனுக்கு உடலே நடுங்குகிறது. அவர் ரத்த ஆறு ஓடும் என்கிறார். விடமாட்டேன் என்று பொதுக் கூட்டத்திலே முதல்வர் சொன்னார்.

இன்றைக்கு என்ன நிலைமை? திராவிடக் கழகம் போராட்டம் நடத்தியது. அந்தச் சட்டத்தை எறித்தது. உடனே இங்கே அமைச்சர்கள் என்ன சொன்னார்கள்? அந்தச் சட்டத்தை எரித்த சாம்பலைக் கொண்டு வாருங்கள்; எங்கள் வீட்டில் புழக்கடையிலே இருக்கிற, முன்னாலே இருக்கிற குரோட்டன்ஸ் செடிக்கு எருவாகப் போடுகிறோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு நான் கேட்கிறேன் திராவிட முன்னேற்றக் கழகம் 29 ஆம் தேதி பேரணி, தொடர்ந்து போராட்டம் என்று சொன்னவுடனே நடுநடுங்கிப் போய் இன்றைக்கு வாபஸ் பெற்றிருக்கிறீர்களே; நீங்கள் போட்ட அந்தச் சட்டத்தை

1980 பிப்ரவரி 2] [திரு. துரை முருகன்]

வாபஸ் பெற்றிருக்கிறீர்களே, அதை எங்கே கொண்டு போய்ப் போடுவது? அதைக் கொண்டு போய் என் வீட்டுப் புடலங்காய்ச் செடிக்குப் போட்டால் கூட அந்தச் செடி அதை ஏற்றுக் கொள்ளாது, எரித்த சாம்பலை ஏற்றுக்கொள்ளாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

உங்களுக்கு எதிலும் தெளிவு இல்லை. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் தடைச் சட்டம். அடுத்த நான் அது கிடையாது. மறுபடியும் ஆர்டினன்ஸ், மறுபடியும் கிடையாது. முன்னாலே போடுவது, பின்னாலே 'பாக்' அடித்து விடுவது. இப்படிப்பட்ட நிலைமை இருக்கும் காரணத்தால் தான் இந்தச் சர்க்காருக்குக் கடைசியாக மக்கள் சொன்னார்கள்—மகத்தான தீர்ப்பைச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் 207 தொகுதிகளில் நீங்கள் தோல்வியைத் தழுவியிருக்கிறீர்கள்.

''It is a referendum on Mr. M. G. R.'s mis-rule'' தேர்தல் முடிவு உங்களுடைய தவறான ஆட்சிக்குத் தரப்பட்ட தீர்ப்புதான் என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இன்றைக்குச் சொல்லுகிறார்கள்—இது என்ன, நாடாளுமன்றத்திற்குத் தரப்பட்ட தீர்ப்பு, என்கிறார்கள்.

அவர்களுக்கு வேண்டிய மிகப் பெரிய பத்திரிகையாளர் (ஆனந்தவிகடன்) ''இதயம் பேசுகிறது'' மணியன் அவர்கள் எழுதியிருக்கிறார்கள்—என்ன எழுதியிருக்கிறார்? 'தமிழகத்தைப் பொறுத்தவரை இரு சக்திகளாக நிற்பவர்கள் முதலமைச்சர் எம். ஜி. ஆரும் எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதியுந்தான். தமிழகத்தின் பாரம்பரியம் எப்போதுமே இரு தலைவர்களின் மோதலில் தான் அடங்கி இருக்கிறது. சத்தியமூர்த்தி—ராஜாஜி; காமராஜ்—ராஜாஜி; பெரியார்—ராஜாஜி; இந்த வரிசையில் இப்போது எம். ஜி. ஆர்.—கருணாநிதி, என்று எழுதியிருக்கிறார்கள்.

இன்னொரு மிகப் பெரிய பத்திரிகை எழுதுகிறது—நம்முடைய வேலம்மாள்—சிவராமன். அவர் வேலம்மாளிடம் இருந்து எவ்வளவோ அரசியலைக் கற்றவர். அரிஸ்டாடில், பிளாட்டோவிடமிருந்து அரசியலைக் கற்றதாகக் கூறுவார்கள். நம்முடைய சிவராமனுக்கு யார் தெரியுமா அரசியல் குரு? வேலை செய்கிற வேலம்மாள். அந்த வேலம்மாள் என்ன சொன்னார்? இரண்டு பேருக்குமிடையே நடக்கிற, தி. மு. க.-வுக்கும் அ. தி. மு. க.-வுக்கும் இடையே நடக்கிற போராட்டம் என்று சொன்னார், ஆனால், தோற்றவுடன் சொல்லுகிறீர்கள்—இது அங்கு விழுந்த ஓட்டே தவிர எங்களுக்கு விழுந்த ஓட்டல்ல. இன்றைக்குச் சொல்லுகிறீர்கள்.

ஆனால், ஒன்றை நான் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய கோட்டைகள் தூள் தூளாகின. உங்கள் பாசறைகள் தவிடு பொடியாகி இருக்கின்றன. அங்கே முதலமைச்சர் அவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். 1977 தேர்தலில் அவர் முதலமைச்சர் அல்ல. கித்தாப்பு வாய்ந்தவர், பெரியவர்— அதாவது முதுபெருமர், இந்த நாட்டில் புரட்சித் தலைவர் என்று சொல்லப்பட்டவர். அவர் சொன்னார்—'இந்தத் தமிழ்நாட்டில் இருக்கும் பெண்கள் அவர்கள் கணவன்மார்கள் சொன்னால் கூட கேட்கமாட்டார்கள். நான் சொன்னால்தான் கேட்பார்கள்' என்று. அவர் பயணம் செய்யவில்லை. இரண்டு விரலைக் காட்டினால் போதும் என்று சொன்னார். எங்கள் கோட்டை அருப்புக்கோட்டை என்று சொன்னார்.

தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதியில், முதலமைச்சர் சட்டமன்றத் தொகுதியில் 30,000 வாக்கு வித்தியாசத்தில் முன்பு வெற்றி பெற்றார். இன்று தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று 500 ஓட்டுதான் இன்றைக்கு அதிகமாகப் பெற்றிருக்கிறது. அது கூடப் போகட்டும் அருப்புக் கோட்டைக்குப் பக்கத்தில் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய நிதியமைச்சர் இங்கே அமர்ந்திருக்கிறாரே, நாடாளுமன்றத்தில் நெடிய அனுபவத்தைப் பெற்றவர் மதிப்பிற்குரிய மாண்புமிகு நாஞ்சிலாரைத் தேர்ந்தெடுத்தார்கள். வட சென்னை வேண்டாமென்கிறதா, நான் எந்தக் கோட்டையைப் பிடிப்பது என்றார். பாளையங்கோட்டை காத்திருந்தது. ஆகா! இது பழைய கோட்டை—பாளையங்கோட்டை, இங்கே நிற்கிறேன் என்று சொன்னார். சென்றார், வென்றார் 14,000 ஓட்டு வித்தியாசத்தில். ஆனால், இன்று பாளையங்கோட்டையைக் கோட்டை விட்டார். நம்முடைய சிவப்பிரகாசம் கோட்டையின் கொடிக் கம்பத்தைப் பிடித்துவிட்டார். 11,000 வாக்கு வித்தியாசத்தில், அங்கே.

அடுத்து, எந்தத் தொகுதி? இன்னொருவர், மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவர், அ. தி. மு. க. அமைச்சரவையினுடைய சாணக்கியர் என்ற பெயர் பெற்றவர். கீழ் பார்வை தான். தன்னுடைய தொகுதியிலே எந்தக் கட்சி இருந்தாலும் அந்தக் கட்சியின் கொடியைப் பறக்க விடாதவர். அவர் வெள்ள நிவாரண நிதியை எப்படிச் செலவிட்டார் என்பதைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கு எடுத்துப் பேசினார்கள். ஆமாம். மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பண்ருட்டி ராமச்சந்திரன். யார் ஜெயித்தாலும், யார் தோற்றாலும் கடைசி வரை நான் இருப்பேன் என்றார். 16,000 ஓட்டு வித்தியாசம் முன்பு, தலைவர் அவர்களே, 15,000 ஓட்டு வித்தியாசம் இப்போது எங்களுக்கு.

1980 பிப்ரவரி 2] [திரு. துரை முருகன்]

மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் ஏழாயிரம் வாக்கு வித்தியாசத்திலே வெற்றி பெற்றார். இப்போது கோட்டை விட்டு விட்டீர்களே. நாலாயிரம் வாக்குகளில் நாங்கள் 'கோல்' போட்டு விட்டோம். என்ன செய்வது?

மதிப்பிற்குரிய திரு. அரங்கநாயகம் அவர்கள் ஏழாயிரம் வாக்கு வித்தியாசத்திலே முன்பு..

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கோவையிலே நடைபெற்ற தேர்தலில் என்னுடைய தொகுதியில் வாக்குகள் குறைந்தது பற்றி அவர்கள் சொன்னார்கள். நானே விசாரித்தேன். டில்லியில் பிரதமராக இந்திராகாந்தி அவர்கள் வரவேண்டுமென்பதற்காக கோவை தொகுதி மக்கள் வாக்களித்தார்கள். நாங்கள் தி. மு. க.-வுக்கு வாக்களிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். தி.மு.க. வெற்றி பெற்றிருப்பதாகச் சொல்லுவது ஒரு பினாமி வெற்றி என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். அதைப்பற்றி நண்பர் துரை முருகன் என்ன சொல்கிறார்?

திரு. துரை முருகன்: நான் இப்போது அதைத்தான் சொல்கிறேன். இந்திராவின் அலை என்று சொல்லலாம் நீங்கள். ஆனால், உங்களுடைய அலை ஓய்ந்துவிட்டது. நீங்கள் ஒடிடுங்கிவிட்டீர்கள். நீங்கள் தலை குனிந்துட்டீர்கள்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர், என்னோடு படித்தவர், மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர், திரு பொன்னையன், முதலமைச்சருடைய 'பர்ஸ்' என்று புகழப்படுகிறவர். ஆம், தமிழ்நாட்டிலே அதிகமான வாக்கு 44 ஆயிரம் வாங்கியவர். அவர் 25 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர். அவருடைய தொகுதியும் இன்றைக்கு கோட்டை விடப்பட்டது. அதேபோல் சகோதரி மாண்புமிகு பி. டி. சரஸ்வதி தொகுதியிலேயும் 9 ஆயிரம் வாக்குகள்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தாங்கள் 220 தொகுதிகளையும சொல்லப் போகிறீர்களா? தயவுசெய்து சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்,

திரு. துரை முருகன் : நான் உங்களைச் சொல்லவில்லை. துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய குன்றத்து இட்ட விளக்கு எழுதுகிறவர். அவர் தன் குன்றம் காலி என நிரூபித்து விட்டார். 18 ஆயிரம் வித்தியாசம். இப்போது 5 ஆயிரம் வித்தியாசம். சகோதரி சுப்புலட்சுமி 23 ஆயிரம் வித்தியாசம், இப்போது 4 ஆயிரம்தான். இப்படி அத்தனை அமைச்சர்கள் சம்பந்தமாகவும் நான் படித்துக் கொண்டு போவேன். துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தொகுதியை நான் கணக்கு எடுக்க

வில்லை. ஆனால், இருக்கிறது. ஆனால் பெருந்தலைவர் தொகுதியிலே 25 ஆயிரத்தையும் தாண்டிவிட்டோம். எனவே, நான் சொல்கிறேன், இப்போது நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள்? தேடினீர்கள், பாளையங்கோட்டை, அருப்புக் கோட்டை என்று. எத்தனையோ கோட்டைகளுக்குப் போனீர்கள்! அத்தனை கோட்டைகளையும் கோட்டைவிட்ட பிறகு இன்றைக்கு நாட்டு மக்கள் உங்களை அடித்துத் துரத்திவிட்ட பிறகு, உங்கள் ஆட்சி தேவையில்லை என்று சொன்ன பிறகு, நாட்டு மக்கள் நீங்கள் வேண்டாமென்று சொன்னதற்குப் பிறகு நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள்? எங்கே நிற்கப் போகிறீர்கள்? சென்னைக்குப் பக்கத்திலே இருக்கிற கடலிலா ஆளுக்கு ஒரு இடம் போட்டு அங்கே தேர்தல் களம் அமைக்கப் போகிறீர்களா?

நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் தார்மீக ஆதரவை இழந்து விட்டீர்கள், லஞ்சலாவண்யத்திற்கும் பெயர் பெற்று விட்டீர்கள். கப்பல் பேர ஊழல் என்று பெயர் பெற்றீர்கள். எனவே, நீங்கள் ஆளுவதற்கு லாயக்கில்லை. உங்கள் ஆட்சியிலே சட்டம் இல்லை, ஒழுங்கு இல்லை. அமைதி இல்லை. எதனையும் செய்கிற திராணி இல்லை, தெம்பு இல்லை. [* * *] எனவே, நாட்டு மக்கள் தந்த தீர்ப்பை ஏற்றுக்கொண்டு நான் உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் மரியாதையாகப் பதவி விலகிவிடுங்கள்.

முதலமைச்சர் சொல்கிறார், துணைத் தலைவர் அவர்களே, நான் பச்சையாகச் சொல்கிறேன், நான் சினிமாவிலே நடிக்கப் போகிறேன் என்று சொல்கிறார். துணைத் தலைவர் அவர்களே, ஒரு கப்பல் மூழ்குகிறபோது அந்தக் கப்பல் தலைவனாக இருக்கிறவன் என்ன சொல்வான், நானும் கப்பலோடு சேர்ந்து மூழ்குவேன் என்பான், ஆனால், இந்தத் தலைவர் என்ன சொல்கிறார் தெரியுமா? நான் சினிமாவில் நடிக்கப் போகிறேன், கோடம்பாக்கம் அழைக்கிறது, ஏ, கோட்டையே எனக்கு விடைதா என்று சொல்கிறார். கோடம்பாக்கம் அழைக்கிறது, உங்களுக்கு கோட்டை விடை தருகிறது. அவர் பரவாயில்லை, ஏதாவது நடிக்கலாம், இல்லாவிட்டால் பார்க்கலாம், அதுவும் இப்போது கமலஹாசனுடைய பீல்ட் ஆகிவிட்டது. அங்கேயும் சந்தேகம். ஆனால், இந்தத் திராவிடப் பாரம்பரியத்திலே வந்த வர்களைக் கேட்கிறேன், தமிழ் மொழிக்காக மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப் பற்றுமிக்க தன்மான நண்பர்களைக் கேட்கிறேன். நீங்கள் எங்கே போகப்போகிறீர்கள்? அவருக்காவது கோடம்பாக்கம் அழைக்கிறது, நீங்கள் எங்கே போகப்போகிறீர்கள்? உணர்ச்சியுள்ளவர்களைக் கேட்கிறேன், தன்மான திராவிட பாரம்பரியத்திலே வந்தவர்களைக் கேட்கிறேன், வாருங்கள், இருகரம் கூப்பி அழைக்கிறேன். அண்ணாவின் கொள்கை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அழைக்கிறது என்பதற்காக நான் கேட்கிறேன். இல்லாவிட்டால் நாளை உங்களை சமுதாயம் சந்தியிலே நிறுத்தும் என்பதை மட்டும் நான் எடுத்துக் கூறி மரியாதையாக, மானம் இழப்பதற்கு முன்னால் மகுடம் சீழே விழுவதற்கு முன்னால். மற்றவர்கள் கால் மிதிக்க, ஆள் மிதிக்க கிடக்கும் மலர்களாக நீங்கள் மாறுவதற்கு முன்னால் நீங்கள் ராஜினாமாச் செய்யுங்கள், அது உங்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது, சின்ன அறிவுள்ளவனாக இருந்தாலும் செய்ய வேண்டிய காரியம் அதுதான் என்பதை எடுத்துக் கூறி விடைபெறுகிறேன். நன்றி.

திரு, எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. துரை முருகன் அவர்கள் பேசுகின்ற பொழுது குறுக்கிடக் கூடாது என்பதற்காகத்தான் அவர்கள் பேசி முடித்ததற்குப் பின்னாலே நான் கூறுகிறேன். அவர்கள் பேசுகின்ற நேரத்திலே ** கொளுத்தினார், கும்பல் தாக்கியது என்றெல்லாம் சென்னையில் தேர்தல் பணியாற்றாத ** அவர்களைப் பற்றி, இந்தச் சபையிலே இல்லாத ஒருவரைப் பற்றி பேசியிருப்பது சபைக் குறிப்பிலே இருக்கக் கூடாது. அது சபையினுடைய மரபல்ல. அதைத் தாங்கள் அனுமதிக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : திரு. துரை முருகன் சென்னையிலே இல்லை என்பதால் அவர் சொன்னது சரியல்ல என்று சொல்கிறார்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். நீங்கள் சொல்வதற்கும் அவர்கள் சொல்வதற்கும் சம்பந்தம் இல்லை. அவர் பேசிய போது திரு. துரை முருகன் இல்லை என்று சொல்லவில்லை. திரு. ** இங்கே இருந்து வேலை பார்க்கவில்லை என்றுதான் சொல்கிறார். திரு. துரை முருகன் இல்லை என்று அவர் சொல்லவில்லை. உட்காருங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : அவர் சென்னையிலே இல்லை என்று சொல்கிறார். சென்னையிலே நடந்த கலவரத்திற்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறார்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு பேரவைத் துணைதலைவர் : உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் பேசும்பொழுது ஆளுங்கட்சி பிரமுகர் ஒருவர் என்று சொல்லி, பிறகு பெயரைச் சொன்னார்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பெயர் வேண்டாமென்று கருதுவதால், ஆளுங்கட்சிப் பிரமுகர் என்று சொன்னது இருக்கட்டும்; ஆனால் (**) என்று சொன்னதை சபைக் குறிப்பிலேயிருந்தும், பத்திரிகைக் குறிப்பிலே யிருந்தும் நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. வடிவேல்: துணைத் தலைவரவர்களே, மதிப்பிற் குரிய உறுப்பினர் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் என்று * * * பேசினார்கள்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. துரை முருகன் அவர்கள் பேசி முடித்த பிறகு சபை கலைந்து விடவில்லை; ஆளுங்கட்சியின் சார்பில் ஒருவர் பேசப் போகிறார்; அப்பொழுது பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. க. உரொ- எட்மண்ட்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர். துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர வர்கள் எழுப்பியிருக்கின்ற பிரச்னை *** என்று அரசைப் பார்த்து அவர் கேட்க முடியாது. தலைமை தாங்குகின்ற ஒரு தலைவரைத் தான் கேட்க முடியும். அந்தக் கேள்வி மறைமுகமாக, தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கின்றவரைக் கேட்கின்ற கேள்வி என்பதால் அதை நீக்க வேண்டுமென்ற பொருளிலே உறுப்பினரவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

திரு. அ. க. அரங்கநாதன்: துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் பேசுகின்றபொழுது......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள்.

திரு. கு. வடிவேலு: நான் கேட்டதற்கு ரூலிங் கொடுங்கள். *** என்று சொல்லியிருக்கிறார். அவர் எங்கே நின்று பேசினார் என்றுயோசிக்கவேண்டும். சட்டசபைக்குள்ளேயிருந்து பேசியதாகக் கருதுகிறாரா? அல்லது பிளாட்பாரத்திலேயிருந்தா பேசியிருக் கிறார்?

திரு. அ. க. அரங்கநாதன்: ஓரேவொரு பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். நீங்கள் பேசும்பொழுது வேண்டுமானால் கூறலாம், இப்பொழுது உட்காருங்கள்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

1980 பிப்ரவரி 2]

திரு. போ. கோபாலன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின்மீது நன்றிதெரிவிக்கும் முறையில்எனக்கு வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னாலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நண்பர் திரு. துரை முருகன் அவர்கள் மிக அழகாகப் பேசினார்கள் ; மிக ஆவேசமாக கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

கடந்த காலத்திலே பஸ் மூலமாக அல்லது வாகனங்கள் மூலமாக அல்லது வியாபாரிகளிடமிருந்து அல்லது மற்ற கம்பெனி களிடமிருந்தெல்லாம் எவ்வளவு பணம் பெற்றோம் என்பதை யெல்லாம் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அது அவர்கள் காலத்திலே நடந்தது என்பதால் சிலருக்கு கோபம் வரும் என்ற காரணத்தினால் திருதுரை முருகன் அவர்கள் நல்ல அரசியல் நாகரீகத்தோடு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அப்படியெல்லாம் நடைபெற்றது என்று மறை முகமாக எடுத்துச் சொன்னார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மிக அழகான கண்ணாடி போட்டுக்கொண்டு பேசினார்கள். புதிய கண்ணாடி என்று நினைக்கிறேன். பழைய கண்ணாடியை எங்கோ மறந்து விட்டிருக்கக் கூடும் அல்லது காணாமற் போயிருக்கக் கூடும் என்று கருதுகிறேன். ஆனாலும் ஒரு மாத காலத்திற்கும் மேலாக நண்பர் அவர்கள் சிவாஜி கணேசனோடு பிரச்சாரம் செய்யப் போயிருக்கக்கூடும். ஒரு காலத்தில் சினிமாவில் நடிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டவர் அந்த வாய்ப்பைச் சட்டமன்றத்தில் பயன்படுத்திக் கொண்டிருக் கிறார். அவருடைய சிறந்த நடிப்பையும், வசனத்தையும் பாராட்டிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர்களுக்குத் தெரியும்; திராவிட முன்னேற்றக் கழகம், 1971 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு, இந்த ஒன்பது ஆண்டுகளிலே போட்டியிட்ட இடமெல்லாம் தோல்வி, சென்ற இடமெல்லாம் தோல்விக்கு மேல் தோல்வி என்று கண்டவர்கள். நாடாளு மன்றத் தேர்தலானாலும், சட்டமன்றத் தேர்தலானாலும், மாநகராட்சி மன்றத் தேர்தல் ஆனாலும் அத்தனை இடங்களிலும் அடியோடு புறக்கணிக்கப்பட்டவர்கள், ஏதோவொரு சகவாசத்தால் ஏதோ ஒரு அதிர்ஷ்டத்தால் வாய்ப்பு கிடைத்திருப்பதைப்பார்த்து, நாங்கள்பெரியவர்களாகிவிட்டோம் தமிழகமக்கள் எங்களை நம்பி விட்டார்கள் என்று எண்ணுவது எவ்வளவு * தவறானது என்பது கலைஞர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நம்புகிறேன். ஆனால் திரு. துரை முருகன் போன்றவர்கள், அரசியல் இயக்கத்தில் ஏழாண்டுக் காலம் தோல்வியைத் தாங்கிக் கொண்டவர்கள், இன்றைக்குக் கிடைத்த அற்புத வெற்றியின் காரணமாக, அண்ணா

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க திருத்தப்பெற்றது.

[திரு. போ. கோபாலன்] [1980 பிப்ரவரி

திராவிட முன்னேற்றக் கழகம், கோடிக்கணக்கான மக்களின் ஆதரவையும், அன்பையும் பெற்ற ஒரு கழகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் இலட்சோபலட்சம் இளைஞர்கள் இன்னுயிரை, தங்கள் வாழ்க்கையைக் கூட அர்ப்பணித்து இந்த இயக்கத்தைக் காப்பாற்றியிருக்கிறார்கள். அந்த இயக்கம் அவ்வளவு எளிதாக, அவ்வளவு சுலபமாக ஆட்சியைவிட்டு இறங்கிவிடும் என்று, அவ்வளவு சுலபமாகத் தோற்கடிக்கப்பட்டுவிடும் என்று யாராவது கனவு காண்பார்களேயானால் அது பகல் கனவாகத்தான் முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடைபெற்ற தேர்தலிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களால் புறக்கணிக்கப்பட்டது என்று மக்கள் சொல்ல வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஏதோ ஒரு கூட்டணி மூலமாக, சில வாக்குகளைப் பெற்றுவிட்டார்கள் என்பதற்காக, இந்த ஆட்சியின் மீது, இந்த இயக்கத்தின் மீது இந்தத் தலைமையின் மீது இந்த நாட்டு மக்களுக்கு நம்பிக்கையில்லை என்று சொல்ல அவர்களுக்கு அருகதை கிடையாது என்பதை நான் இங்கே தெளிவாக சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குக் காரணம் நான் சொல்லியாக வேண்டும்.

1977–ல் நடைபெற்ற தேர்தலிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனியாக நின்றது, திராவிட முன்னேற்றக் கழகம் தனியாக நின்றது. மக்கள் யார் பக்கம் நின்றார்கள் என்பதை இந்த மன்றத்திலே இருப்பவர்களும் அறிவீர்கள், இந்த நாட்டு மக்களும் அறிவார்கள். அந்த மக்கள் தான் கடைசியாக வாக்களிக்கவில்லை, தேர்தலைப்பார்க்கவில்லை. இறுதியாக, மீண்டும் தேர்தல்கள் வரலாம், அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். அந்தத் தேர்தலிலே இன்று தமிழகத்தில் மூடியிருக்கிற திரை, இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மக்களின் செல்வாக்கை இழந்து விட்டது என்று கதை கட்டுகிறார்களே, அந்தக் கதையின் பக்கங்கள் முன்னுரையிலேயிருந்து முடிவுரை வரை கிழித்தெறியப்படும் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், ஒன்றை நான் இன்று சொல்லியாக வேண்டும். எங்கள் அரசு இந்த மக்களுக்கு என்னென்ன, கடமைகளைச் செய்திருக்கிறது, இந்த மக்களுக்கு எவ்வளவு நன்மைகளைச் செய்திருக்கிறது என்பதை நாம் கடந்த காலத்தைப் போல படம் கபாட்டு, கடந்த காலத்தைப் போல, பூப்பல்லக்குகளில் ஏறி, டேந்த காலத்தைப் போல, மலர்க்கிரீடங்களைத் தலையிலே தூக்கிக் கொண்டு, மக்களிடம் நாம் பிரச்சாரம் செய்யவில்லை. எத்தனையோ நன்மைகளை நாம் செய்திருந்தாலும், இந்த மக்களிடையே, கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்து,

1980 பிப்ரவரி 2] (திரு. போ. கோபாலன்)

நம்முடைய சாதனைகளை, அந்த மக்களிடம் சொல்லாத காரணத்தால்தான் ஒருசிறுதோல்வியை நாம் சந்தித்திருக்கிறோம். எனவேதான் இந்த மன்றத்தின் மூலமாக, அமைச்சரவையைக் கேட்டுக்கொள்வேன், நாம் செய்யக்கூடியகாரியங்களை மக்களுக்கு நாம் தெளிவான முறையிலே எடுத்துச் சொல்லவேண்டும்.

அதேபோல, இன்று நாம் சில கொள்கைகளை அறிவிக்கிறோம். அந்தக் கொள்கைகளை வாபஸ் பெறுகிறோம் என்று குற்றச் சாட்டு சொன்னார்கள். இந்த நாட்டு மக்களின் நன்மைக்காக, ஒரு கொள்கையை அரசாங்கம் அறிவிக்கிறது. அந்த நாட்டு மக்கள், அந்தக் கொள்கை சரியில்லை, அதை மாற்ற வேண்டுமென்று சொன்னால், அதை மாற்றுவதில் நியாயம் இல்லையா? அதை மாற்றுவதிலே என்ன கேவலம் இந்த அரசுக்கு இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். மதுவிலக்குச் சட்டமானாலும் சரி, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வருமான வரம்பானாலும் சரி, அரசு இந்த மக்களுக்கு நன்மை விளையும் என்று சொல்லித் தான் அறிவித்தது. ஆனால், மக்கள் அதை மாற்ற வேண்டுமென்று சொன்னதற்குப் பின்னாலேதான் இந்த அரசு அந்தக் கொள்கையிலே மாற்றம் ஏற்படுத்தியிருக்கிறதேதவிர, முன்னொரு காலத்திலே இந்த நாட்டை ஆண்டவர்கள், பாறை போல இருப்போம், நாங்கள் இரும்பு மனிதர்கள் போல இருப்போம். எங்களுடைய முன் வைத்த காலை பின் வைக்க மாட்டோம், எந்தக் கொள்கையை நாங்கள் அறிவித்தாலும், வாபஸ் பெற மாட்டோம் என்று சொல்லி, மக்களுடைய நன்மையைத் தூக்கி எறிந்துவிட்டு, சொந்த நன்மையைக் கருதிக் காத்திருந்தார்களே, அவர்களைப்போல புரட்சித் தலைவர் நிற்கவில்லை. மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று சொல்லக்கூடிய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் வந்த புரட்சித் தலைவர் அவர்கள் நாட்டு மக்கள் சொன்னால் எதையும் செய்வார் என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் இந்தச் சட்டங்களை நாங்கள் வாபஸ் வாங்கி இருக்கிறோம்.

இந்த அரசு செய்யக்கூடிய காரியங்கள் பல இருக்கின்றன. அதிலே பல காரியங்கள் மிக நல்ல காரியங்களாக இருக்கின்றன என்று நண்பர் பி. எச். பாண்டியன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், ஒன்றை நான் சொல்லியாக வேண்டும். எத்தனையோ போராட்டங்களை அவர்கள் நடத்தினாலும் போலீஸ்காரரர்கள் கொலைகாரர்களைக் கண்டுபிடிக்கவேண்டியது தானே அவர்களுடைய கடமை, ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டியது தானே அவர்களுடைய கடமை, மாணவர்கள் படிக்க வேண்டியதுதானே அவர்களுடைய கடமை என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நீங்கள் குற்றங்களைக் கண்டுபிடிக்க போலீஸ் காரர்களை எங்கே அனுமதிக்கிறீர்கள் என்று துரை முருகன

அவர்களை குற்றம் சாட்டினார்கள். நான் ஒன்றை இந்தத் தமிழ்நாட்டு மக்கள் முன்பாக வைக்கிறேன். போலீஸ்காரர்களானாலும், மாணவர்களானாலும், ஆசிரியர்களானாலும், அவர்களுடைய கடமைகளை நிறைவேற்ற நீங்கள் விட்டீர்களா என்றுதான் உங்களை நான் கேட்க விரும்புகிறேன். எதற்கெடுத்தாலும், அவர்களைத் தூண்டிவிட்டு $1\frac{1}{2}$ ஆண்டுக்காலம் ஓயாமல் நீங்கள் போராட்டம் நடத்தி வந்தீர்கள், அவர்கள் எப்படி இந்தப் பணியிலே ஈடுபட முடியும் என்பதையும் நான் ஒரு கேள்வியாகக் கேட்க விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றை நான் சொல்லியாக வேண்டும். இந்தத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தோல்வியைக் கண்டிருக்கிறது. எனவே, இராஜிநாமா செய் என்று சொல்கிறார்கள். எதற்காக நாங்கள் இராஜிநாமா செய்ய வேண்டும். திரு. துரை முருகன் சொல்கிறார் என்பதற்காகவா, அல்லது கலைஞர் கருணாநிதி சொல்கிறார் என்பதற்காகவா, அல்லது பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காகவா? அவர்கள் நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்றுவிட்டார்கள் என்று அல்லது, நாட்டு மக்களின் ஏகோபித்த தலைமையை அவர்கள் பெற்றுவிட்டார்கள் என்று, அல்லது எங்கள் அத்தாட்சியை அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்று என்ன சான்றை அவர்கள் சொல்லப் போகிறார்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த காலத்திலே வாங்கிய வாக்குகளை விட, இன்று அதிகமான வாக்குகளை வாங்கியிருக்கிறது. தொகுதிகளிலே எங்களில் பலர் தோல்வியுற்றிருக்கக்கூடும். நம்முடைய தலைவருடைய தொகுதியிலே வாக்குகள் குறைந்திருக்கலாம், அல்லது நம்முடைய நாஞ்சிலார் தொகுதியிலே வாக்குகள் குறைந்திருக்கலாம், நண்பர் திரு. காளிமுத்து தொகுதியிலே வாக்குகள் குறைந்திருக்கலாம். இன்னும், எத்தனையோ, என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளிலே எல்லாம் வாக்குகள்குறைந்திருக்கலாம் அந்த வாக்குகள் யாருக்காக விழுந்தன, எதற்காக விழுந்தன என்பதெல்லாம் எங்களுக்குத் தெளிவாகத் தெரியும். இந்தத் தோல்வியைத் தாங்கிக் கொள்வது மட்டும் அல்ல, இது போன்ற தோல்விகள் ஆயிரம் வந்தாலும் சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அசையாது நிற்கும் என்பதை இந்த மன்றத்திலே நான் சொல்லிக்கொண்டு, இந்த நாட்டு மக்கள் எங்கள் பின்னாலே அணி வகுத்து நிற்கிறார்கள். புரட்சித் தலைவர் ஒரு தளபதியாக அதற்கு வழி நடத்திச் செல்கிறார்கள். அந்தத் தளபதியின் போர் பாசறையில் நாங்கள் அணி வகுத்துச் செல்வோம். சாவதெனில் சாவோம், வாழ்வதெனில் வாழ்வோம் என்று கூறி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி. விடைபெறுகிறேன், வணக்கம்.

(முற்பகல் 11–40)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: உணவு அமைச்சர் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை இங்கே எழுப்பினார். ** என்று துரைமுருகன் பேசினார். சட்டப்பேரவை இப்போது நடந்து கொண்டிருப்பதால் அதைச் சபையில் கூறுவது பொருத்தமாக இருக்காது என்ற காரணத்தால் அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். பத்திரிகையிலும் வரக் கூடாது என்றும் உத்தரவிடுகிறேன்.

திரு. கோ. இளங்கோவன்: துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கோபாலன் அவர்கள் பேசும்போது * என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: (*) என்பதற்கு பதிலாக 'தவறாக' என்று உபயோகப் படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே உரை நிகழ்த்திய மேதகு கவர்னர் பெருமான் அவர்களின் உரை மீது எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாக எங்களுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பாராளுமன்றத்திற்குத் தேர்தல் முடிந்து இந்தச் சட்டசபையில் நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

பாராளுமன்றத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டு, இந்த நாட்டு மக்கள் மத்தியிலே ஆண்ட ஜனதா கட்சியின் கொள்கையிலேயும், இங்கே இருக்கிற மாநிலத்திலே ஆளக்கூடிய கட்சியின் கொள்கையிலேயும் நம்பிக்கையில்லாமல் இன்று ஒரு பெரிய வெற்றியை நம்முடைய காங்கிரஸ் கட்சிக்கு, பிரதமர் இந்திராகாந்திக்குத் தேடிக் கொடுத்திருக்கிறது. இந்த நேரத்திலே நீங்கள் எங்களை தேர்தலிலே எதிர்த்து வந்தீர்கள். தேர்தலிலே எங்களை எதிர்த்துப் போராடியவர்கள், இன்று நாங்கள் ஆட்சிக்கு வந்த உடனே எங்களைப் பார்த்து நீங்கள் செய்யக் கூடிய திட்டங்களை நாங்கள் ஆதரிக்கிறோம், உங்களுக்கு ஆதரவு தருகின்றோம் என்றெல்லாம் சொல்லிவருகிறீர்கள்.

நான் கேட்பதெல்லாம், 1977–க்கு பிறகு எங்களுடைய ஆட்சி மத்தியிலே போன பிறகு நீங்கள் எங்களை ஆதரித்து வந்திருக்கிறீர்கள். அந்த நேரத்திலே இதே சட்டசபையிலே

** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.

(திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டைமான்)

நான் கேட்டேன். எங்கள் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்ற வில்லையே என்று முதல் பட்ஜெட்டிலேயே கேட்டேன். நீங்கள் பதில் அளிக்கவில்லை. எங்களை ஆதரித்துக் கொண்டிருக்கும் போது நாங்கள் கொண்டுவந்த திட்டத்தை நீங்கள் அமல் படுத்த முடியவில்லை. இன்று மத்தியிலே கட்சி மாறி எங்களுடைய ஆட்சி வந்த பின்னர், இன்று 20 அம்சத் திட்டத்தை முழுமன துடன் ஆதரிக்க முன் வந்திருக்கிறீர்கள். உங்களிடத்திலே ஒரு நிரந்தரமான கொள்கையில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். இங்கு 20 அம்சத் திட்டத்தை நீங்கள் அமல்படுத்தும் போது நாங்கள் சில கருத்துக்களை உங்களிடம் கூற விரும்பு கிறோம். ஏற்கனவே இரண்டரை ஆண்டுக் காலமாக விட்டுப் போன இந்தத் திட்டம் பல கஷ்டங்களுக்கு உள்ளாகி இருக்கிறது இந்த தமிழ்நாட்டு மக்களுக்கு. புதிதாக கொண்டு வரப் போகின்றீர்கள், அப்படிக் கொண்டு வரும்போது செவ்வனே நடத்த வேண்டும்.

நீங்கள் இப்போது இருக்கிற இலாக்காக்களை வைத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறோம் என்று சொன்னால், அது தமிழகத்தில் வெற்றிபெறாது. ஆகவே, அதற்கென தனி இலாகாவை ஏற்படுத்தி, ஒவ்வொரு மாவட்டத் திலும், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி கையில் அந்தப் பொறுப்பைக் கொடுத்து, அவர்கள் அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்துழைப்போடு இந்தத் திட்டங்களை நிறைவேற்ற முனைய வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே விவசாயிகள் பிரச்னையைப் பற்றிச்சொன்னார்கள். விவசாயிகள் பிரச்னை குறித்து எங்கள் கட்சியின் திட்டம் என்ன, கொள்கை என்ன, முடிவு என்ன என்பதைப் பற்றி திட்டவட்ட மாகச் சொல்லியிருக்கிறோம். அதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஆனால் உங்களுடைய அறிக்கையில் எந்தவிதமான திட்ட வட்டமான ஒரு முடிவும் அறிவிக்கப்படவில்லை. என்ன செய்யப் போகிறோம், ஏது செய்யப்போகிறோம் என்று சொல்லவில்லை. மத்தியிலிருக்கும் அரசாங்கத்தைக் கேட்டு, பணத்தை வாங்கி செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது போதாது. உங்களுடைய திட்டவட்டமான அறிவிப்பை நீங்கள் இந்த மன்றத்தில் அறிவிக்கவேண்டும், அறிவிப்பீர்கள் என்று நிச்சயமாக நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அடுத்தாற்போல் நான் தெரிவிக்க விரும்புவது, நீங்கள் எலக்‌ஷனுக்கு முன்னாலும் சொன்னீர்கள், அதற்கு அப்புறமும் சொன்னீர்கள், இந்தக் கூட்டுறவுக் கடன்களை நாங்கள் ரத்து செய்யப்போகிறோம் என்று. நாங்களும் அதை வரவேற்றோம். ஆனால், நீங்கள் சொன்னீர்களே தவிர அந்தக் கூட்டுறவுக் கடன்களை ரத்துசெய்ய ஆணை பிறப்பித்ததாகத் தெரியவில்லை.

1980 பிப்ரவரி 2]

[திரு. ராஜகுமார் விஜயரெகுநாத தொண்டமான்]

நான் நடந்து முடிந்த தேர்தலின் போது, பல ஊர்களில் சுற்றி இருக்கிறேன். அப்போது நான் பல ஊர்களில் பார்த்து இருக்கிறேன். உங்களுடைய கூட்டுறவுத் துறை அதிகாரிகள் வண்டிகளில் வந்து ஏழை எளிய மக்களின் வீட்டை ஜப்தி செய்து கொண்டு இருந்தார்கள். அப்போது நான்கூட அவர்களைப் பார்த்துக் கேட்டேன். அரசாங்கம் இந்த மாதிரி ஆணை போட்டு இருப்பதாகச்சொல்லியிருக்கிறார்களே அது உங்களுடைய கைக்குக் கிடைக்கவில்லையா என்று. எங்களுக்குத் தெரியவில்லை என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆகவே, அதை நீங்கள் திட்டவட்டமாக செய்து இருந்தால் அந்த ஜப்தி நடந்து இருக்காது. ஆகவே, சரியான ஆணையை அந்த அதிகாரிகளுக்கு அனுப்பும் வகையில் நீங்கள் நடந்து கொள்ளவேண்டும் என்று நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

''வேலைவாய்ப்புத் திட்டம்'' என்று அறிவித்தீர்கள். அந்த வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் உள்ளூரில் இருப்பவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று இருந்தாலும், அப்படிக் கொடுப்பது இல்லை. புதுக்கோட்டையில் வேலைவாய்ப்பு இருக்கிறது என்றால், திருச்சியில் இருந்தோ அல்லது தஞ்சையில் இருந்தோ ஆட்களைக் கொண்டுவந்து வேலைகொடுக்கிறார்கள். அந்த மாதிரி செய்யக்கூடாது. வேலை வாய்ப்புத் திட்டம் உள்ளூரில் இருப்பவர்களுக்கு பிழைப்புக் கொடுப்பதற்காக அறிவிக்கப்பட்ட காரணத்தால், அவர்களுக்குத்தான் வேலை கொடுக்க வேண்டும். அரசாங்கம் இந்தப் பிரச்னையில் கூர்ந்து கவனித்தால், உள்ளூரில் இருப்பவர்களுக்கு வேலை அளிக்கப்பட வில்லை என்பது தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, ''வேலை வாய்ப்புத் திட்டம்'' பற்றி அங்கத்தினர் குறிப்பிட்டார். அதன் நோக்கத்தைப் புரிந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் உள்ள வேலையில்லாத 18 வயது முடிவு பெற்ற எந்த ஆண், எந்தப் பெண்ணாக இருந்தாலும் எல்லோருக்கும் வேலை தருவோம் என்று சொல்லி, கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு மட்டும் வேலை வாய்ப்பு அளிப்பது என்று சொல்லியிருக்கிறோம். அது நகரங்களில் இருப்பவர்களுக்குப் பொருந்தாது. கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு எந்த இடத்தில் அளிக்கப்படாமல் உள்ளது என்று குறிப்பிட்டுச் சொன்னால் உதவிகரமாக இருக்கும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : அரசாங்கத்திற்கு அதை எழுத்து மூலமாக எழுதிக் கொடுக்கிறேன்.

இந்த கவர்னர் உரையில் ப்ரொகிபிஷன் பாலிசியைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. அரசாங்கம் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தப் போகிறோம் என்று சொன்னார்கள்,

[திரு. ராஜகுமார் விஜயரெகுநாத தொண்டமான்]
[1980 பிப்ரவரி

நாங்கள் அதை வரவேற்கிறோம். காங்கிரஸ் அரசாங்கம் இருந்த காலத்திலும் அதைக் கடுமையாக அமல்படுத்தினோம். ஆனால் திடீரென்று மதுவிலக்கை ரத்து செய்கிற வகையில் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. நாட்டு மக்களும் காரணம் தெரியாமல் இருக்கிறார்கள். உங்களால் அதைச் சரிவர அமல்படுத்த முடிய வில்லை. 'இட் ஈஸ் எ மிசரபிள் பெயில்யூர்'. எந்த வகையில் அதை ரத்து செய்கிறீர்கள், அல்லது தளர்த்துகிறீர்கள் என்கிற ஒரு திட்டவட்டமான அறிவிப்பை இந்த ஆளுநர் அறிக்கையில் கொடுத்து இருந்தால், உங்களுடைய ப்ரோகிபிஷன் பாலிசி எங்களுக்குப் புரிந்து இருக்கும். ஆகவே, அதை நீங்கள் இந்த மன்றத்தில் கொடுப்பீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

(முற்பகல் 11-50)

அடுத்து சொல்லியிருக்கிறீர்கள். மாஜி இராணுவத்தினருக்கு நாங்கள் வேலை வாய்ப்புக் கொடுக்கிறோம் என்று சொல்லி யிருக்கிறீர்கள். அதுவும் சிட்டியில் கொடுப்போம் என்று தான் சொல்லியிருக்கிறீர்கள். மற்ற ஜில்லாக்களுக்கு இப்போது தான் அதை 'எக்ஸ்டன்ட்' செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

மாஜி இராணுவத்தினர் மற்ற ஜில்லாக்களில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத்தெரியும். புதுக்கோட்டையில் மட்டும் 5,000 பேர் இருக்கிறார்கள். மற்ற ஜில்லாக்களில் எவ்வளவு என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் எப்படி சிலோன் அகதிகளுக்கு 'ரீஹாபிலிடேஷன் சென்டர்' வைத்து, ஏற்பாடுகளைச்செய்தீர்களோ அதைப்போல மாஜி இராணுவத்தின ருக்கும் 'ரீ ஹாபிலிட்டேஷன் செனடர்' வைத்து, அவர்கள் பட்டாளத்தில் இருந்து விடுபட்டு வரும்போது இங்கே மறுவாழ்வு கொடுக்கும் அளவுக்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, எலெட்ரிசிட்டி, பற்றிச் சொன்னார்கள், அப்போது 30 சதவிகிதம் 'கட்' என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் ஒவ்வொரு தொழிற்சாலையையும் பார்த்தால் 30 சதவீதத்திற்கு மேல் 'கட்' செய்யப்பட்டு, தொழிற்சாலை ஓடாமல் இருக்கிறது. உதாரணத்திற்கு புதுக்கோட்டையில் இருக்கிற மூன்று தொழிற் சாலைகளைக் குறிப்பிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்களுக்குத் தெரியும்; அவர்கள் தொழிலாளர் தலைவராக இருந்திருக்கிறார்கள் ; அதனால் நன்றாகத் தெரியும். இந்த மூன்று தொழிற்சாலைகளும் 'நித்திய கண்டம், பூரண ஆயுசு' என்பதைப்போல ஓடுகின்றன. இப்படிப்பட்ட நேரத்தில் 30 சதவீதத்திலிருந்து, 50 சதவீதம், 60 சவீதம் என்று 'கட்' செய்தால் தொழிற்சாலைகள் ஓடாமல் அப்படியே நின்றுவிடும்.

[திரு. ராஜகுமார் விஜயரெகுநாத தொண்டமான்]

1980 பிப்ரவரி 2]

அப்படியானால் ஒரு பின்தங்கிய மாவட்டத்திற்கு நீங்கள் என்ன சலுகை செய்யப் போகிறீர்கள்? பின்தங்கிய பகுதிகளுக்கு இதில் நீங்கள் சலுகை செய்தே ஆக வேண்டும். மற்ற பகுதிகளைப் போல இங்கேயும் 'கட்' செய்தால் தொழிற்சாலை ஓடாது; வேறு தொழிலும் கிடையாது. ஆகவே, 30 சதவீதம் 'கட்' டை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான திட்டத்தைப்பற்றி பலமுறை கேட்டிருக்கிறேன். புதுக்கோட்டைக்கு காவேரித் தண்ணீரைத் திருப்பிவிட வேண்டுமென்பது அந்தத் திட்டம். நீங்கள் ஏதோ ஒரு திட்டம் போடப் போவதாகக் கேள்விப்பட்டோம். அந்தத் திட்டத்தை புதுக்கோட்டையில் அமல்படுத்த வேண்டும். எங்களுக்கு ஒரு போகம் விளைச்சல் இருந்தால் போதும். அதற்கு 'வேஸ்டாக' கடலில் கலக்கும் காவேரி தண்ணீரை நீங்கள் புதுக்கோட்டைக்குத் திருப்பிவிட வேண்டும். அதுபற்றி இந்த சட்டமன்றத்திலே உங்கள் அறிவிப்பை நான் எதிர்பார்க்கிறேன். அப்படிப்பட்ட ஒரு திட்டம் இருக்கிறதா, இல்லையா என்பதை அறிவிக்க வேண்டுமென்று பணிவோடு அமைச்சரவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே போலீஸ் பற்றியும், அவர்களுடைய 'ஸ்டிரைக்' பற்றியும் சொன்னார்கள். சட்டம், ஒழுங்கு பற்றி எல்லாம் கூடச் சொன்னார்கள். நானும் பார்க்கிறேன். பல கொலை, திருட்டு, மற்றும் சட்ட விரோதமான காரியங்கள் எல்லாம் நடைபெறுகின்றன, இதை எல்லாம் தடுக்க வேண்டுமானால் நாம் போலீஸ்காரர்களுடைய 'க்ரீவன்ஸ்' — கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். அவர்களும் அரசாங்கத்தில் வேலை பார்க்கும் மனிதர்கள்தான். ஆகவே மற்றவர்களுக்கு செய்வதைப்போல அவர்களுக்கும் செய்யவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அவர்கள் போலீஸ்காரர்கள் தானே என்று தள்ளிவைக்காமல், மற்றவர்களைப்போல அவர்களையும் பாவித்து, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு முக்கியமாக என்னென்ன செய்ய வேண்டுமென்று ஒன்றிரண்டைச் சொல்கிறேன்.

சாதாரண 'கான்ஸ்டபிள்' களை நாம் 'கிளாஸ் 4' அளவுக்கு வைத்திருக்கிறோம். அவர்களுடைய வேலையைப் பார்த்தால் அதைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது; சம்பளமும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய நிலையை 'லோயர் டிவிஷன் கிளார்க்' என்ற அளவுக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்]
[1980 பிப்ரவரி 2

அவர்களுக்குப் 'பாட்டா' கொடுக்கிறார்கள், 30 நாள் வேலை பார்த்தால் 15 நாள் பேட்ட கொடுக்கிறார்கள். அதுவும் 'ஃபிக்சட் பேட்டா' அப்படி இல்லாமல் மற்றவர்களைப்போல அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். 30 நாள் 'டியூட்டி' யில் போனால் 15 நாள் பேட்டா கொடுத்தால் எப்படி கட்டுபடியாகும்? அதைச் சிந்திக்க வேண்டும், அவர்கள் எத்தனை நாள் வேலை பார்க்கிறார்களோ அத்தனை நாட்களுக்கும் பேட்டா கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே அமைச்சரவர்கள் சொன்னார்கள், கொடைக்கானலிலே பூம்பாரை என்ற ஒரு அணை கட்டுவதாகச் சொன்னார்கள். ஐந்து இலட்சம் ரூபாய் செலவழித்துவிட்டோம் என்றும் சொன்னார்கள் ஆனால் அதைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை. அங்கே தண்ணீரே இல்லை. குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் கூடிய சீக்கிரம் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல கந்தர்வகோட்டையிலே லேடி டாக்டர்ஸ் இல்லாத நிலை இருக்கின்றது. அங்கே அவ்வாறு லேடி டாக்டர்ஸ் இல்லாத காரணத்தால் அங்கே இருக்கக்கூடிய மக்கள் தஞ்சாவூருக்கும் புதுக்கோட்டைக்கும் வரவேண்டி இருக்கிறது. ஆகவே அங்கே லேடி டாக்டர்களை நியமிக்க அரசு ஆவன செய்ய வேண்டும். இங்கே அளிக்கப்பட்ட ஆளுநரது அறிக்கையிலே சில முக்கியமான காரியங்கள் குறிப்பிடப்படாதது எங்களுக்கு ஏமாற்றத்தைத் தருகிறது என்று சொல்லி முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே கவர்னர் உரையின் மீது கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தின் மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

ஒரு முக்கியமான தேர்தல் நடைபெற்றதற்குப் பிறகு நாம் இங்கே சந்திக்கிறோம். மத்திய அரசிலே யார் ஆட்சி புரிவது ஜனநாயகமா? சர்வாதிகாரமா ? என்ற பிரச்னையை அடிப்படையாகக்கொண்டு தான் இந்த போராட்டம் நடைபெற்றது. தமிழகத்திலே எதேச்சாதிகாரத்தை எதிர்த்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அணி அமைக்க முன் வந்தபோது, அந்த அணியில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா கட்சி போன்ற கட்சிகள் சேர்ந்து அந்தப் போராட்டத்தில் பங்கெடுத்தது. நாடு முழுவதும் நடைபெற்ற தேர்தலில் தோல்வி

1980 பிப்ரவரி 2] [திரு. சி. கோவிந்தராசன்]

ஏற்பட்டிருந்த போதிலும் இந்த அணி இன்னும் தொடரவேண்டியதும், பலப்படுத்த வேண்டியதும், நீடிக்கவேண்டியதும் அவசியம் தான் என்பது எங்களுடைய கட்சியின் கருத்து. சர்வாதிகார சக்திகளை எதிர்க்கக் கூடிய அளவுக்கு ஒரு ஜனநாயக இடதுசாரி மாற்றுஅணி, அகில இந்திய ரீதியில் ஏற்படாத காரணத்தால் தான் காங்கிரஸ் (ஐ) வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. ஒரு சரியான மாற்று அணி இல்லையே என்கிற காரணத்தால் தான் ஒரு நிலையான அரசு வேண்டும் என்ற அடிப்படையில் தான் மக்களும் காங்கிரசுக்கு வாக்களித்திருக்கிறார்கள். அந்த வாக்குகளைப் பார்த்தால் நமக்குத் தெரியும். 65 கோடி மக்கள் வசிக்கக்கூடிய இந்த நாட்டிலே 36 கோடி பேர்களுக்குத் தான் வாக்குரிமை உண்டு. அந்த 36 கோடி வாக்காளர்களில் 19 கோடி பேர்கள்தான் இந்தத் தேர்தலில் பங்கு கொண்டார்கள். அந்த 19 கோடி வாக்குகளில் இந்திரா காங்கிரஸ் அணிக்குக் கிடைத்தது 8 கோடி தான் என்பதை இந்தச் சமயத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். 19 கோடி வாக்குகளிலே 8 கோடி வாக்குகளைப் பெற்று இந்திரா காங்கிரஸ் அணி 11 கோடி வாக்குகள் எதிர்க்கட்சிக்கு கிடைத்துவிட்ட பிறகும், நாங்கத் தான் அதிகமாக ஜெயித்துவிட்டோம் எனவே மற்ற கட்சிகள் ஆளக்கூடிய மாநிலங்களில் அந்தக் கட்சிகள் ஆள்வதற்குக தகுதியில்லை, அவர்கள் இறங்க வேண்டும் என்று கூறுவது எப்படி நியாயமாகும் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாநில வாரியாக எடுத்துக்கொண்டாலும் கூட இந்திரா காங்கிரசுக்குக் கிடைத்த ஓட்டுக்களை — நம்முடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு துரை முருகன் அவர்கள் கூறியது மாதிரி பட்டியல் போட்டு வாசிப்பதற்கு நேரம் இல்லாத காரணத்தால் நான் தயாராக இல்லை. ஆனால் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்திரா காந்தி அம்மையார் பிறந்த மாநிலமான உத்திரப் பிரதேசத்திலே காங்கிரஸ் (ஐ)க்கு கிடைத்திருக்கக்கூடிய வோட்டு 35 சதவீதம். லோகதளம் தனியாக நின்று அவர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய வோட்டு 28 சதவீதம். ஜனதா கட்சிக்கு அதே மாநிலத்தில் கிடைத்திருக்கக்கூடிய வோட்டு 22 சதவீதம். ஆகவே — நான் கம்யூனிஸ்ட் கட்சிகளைப்பற்றிக் குறிப்பிடவில்லை மற்ற கட்சிகளைப்பற்றிக் குறிப்பிடவில்லை — மேற்கூறிய இந்த இரண்டு கட்சிகளுக்கும் கிடைத்திருப்பது மட்டும் 50 சதவீதம். ஆனால் இந்திரா காங்கிரசுக்குக் கிடைத்திருப்பது 35 சதவீதம்.

[திரு. சி. கோவிந்தராசன்] [1980 பிப்ரவரி 2

[நண்பகல் 12-00]

நான் மேற்கு வங்காளத்தையோ, திரிபுராவையோ, கேரளத்தையோ இந்த நேரத்தில் குறிப்பிட விரும்பவில்லை. எனவே நடந்து முடிந்திருப்பது நாடாளு மன்றத் தேர்தல். எதோ சட்டமன்றத் தேர்தல் நடந்து விட்டது போலவும், இந்த சட்டமன்றத் தேர்தலில் பங்கெடுத்த சில அரசியல் கட்சிகள் தோற்றுவிட்டது போலவும், அதனால் அவர்கள் பதவி விலக வேண்டும் என்ற பிரச்னையை இந்த நேரத்தில் எழுப்புவது எப்படி சரியாகும்? சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெறவில்லை. நாடாளும் மன்றத் தேர்தல் தான் நடைபெற்றிருக்கிறது. ஆனால் இந்தக் கருத்து இன்றைக்கு முன் வந்திருக்கிறது. நான் முன்பே கூறியது மாதிரி, மத்தியில் ஆளக்கூடிய கட்சிதான் மாநிலங்களிலும் ஆளவேண்டும் என்று நினைப்பதோ அதற்கேற்ற முயற்சியில் ஈடுபடுவதோ கூட்டாட்சி தத்துவத்தின் கோட்பாடு களைக் குழி தோண்டிப்புதைப்பதாகும். இவ்வாறு மைனாரிட்டி ஓட்டுகள் மூலம், மெஜாரிட்டி சீட்டுக்களைப் பெற்று ஆட்சிக்கு வந்து விட்ட பிறகு மாநிலங்களில் இருக்கக்கூடிய மற்ற கட்சிகள் தங்களின் ஆட்சியைக் கலைத்துக் கொண்டு ஓடிவிட வேண்டும் என்று பேசுவது, கூட்டாட்சித் தத்துவத்தை குழி தோண்டி புதைப்பதேயாகும் என்று சொல்லிக் கொள்கிறேன். (பலத்த கைத்தட்டல்).

மத்தியில் கூட்டாட்சி, மாநில சுயாட்சி என்றெல்லாம் பேசி வருகின்ற கட்சியும் இவ்வாறு கலைப்பு கோரிக்கையை ஆதரிப்பது சரிதானா என்றும் இந்த நேரத்தில் நான் கேட்க விரும்பு கிறேன்.......

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உறுப்பினர் பேசி முடித்த பிறகு ஏதாவது விளக்கம்கேட்பதாக இருந்தால் கேட்கலாம்.

திரு. நா. சுந்தரராஜ் : பாயிண்ட் ஆப் ஆர்டர்......

திரு. சி. கோவிந்தராசன் ; ஐ ஆம் நாட் ஈல்டிங்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஹி இஸ் நாட் ஈல்டிங். அதனால் அவர் பேசி முடித்து விடட்டும்.

1980 பிப்ரவரி 2]

திரு. சி. கோவிந்தராசன் : அதே மக்கள்தான் கடந்த 2½ ஆண்டுகளுக்கு முன்னதாக பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர் உள்ள ஆட்சிகளை பல மாநிலங்களில் உருவாக்கி யிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களின் வாககுகளைப் பெற்றிருக்கக் கூடிய ஆட்சியைக் கலைக்க முயற்சியைச் செய்வதோ அல்லது டிஃபெக்ஷன் என்ற வகையில் முயற்சிகளை செய்து கைப்பற்றிக் கொள்ளக் கூடிய முறையில் இறங்குவதோ எப்படி நியாயம் என்று கேட்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட முயற்சிகள் அங்கே மட்டும் அல்ல, மாநிலங்களில் கூட நடந்து வருகிறது. இங்கே இந்தச் சட்டமன்றத்திலேயே பேசப்பட்டிருக்கிறது. இப் போது சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலில் அகில இந்திய அண் ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வி அடைந்தது உண்மை தான். என்றாலும் அது நாடாளுமன்றத் தேர்தல். நான் ஏற்கெனவே கூறியபடி அகில இந்திய ரீதியில் மாற்று அணி இல்லாத நேரத்தில், மாற்றுக் கட்சிகள் அப்படிப்பட்ட ஒரு அணியை உருவாக்காத சூழ்நிலையில் மக்கள் நிலையான அரசு மத்தியில் வேண்டும் என்கிற எண்ணத்தில் வோட்டு போட்டிருக் கிறார்கள். அதனால் காங்கிரஸ் (ஐ) வெற்றி பெற்றிருக்கிறதே தவிர நடந்து முடிந்த தேர்தல் நாடாளுமன்றத் தேர்தலே தவிர சட்டமன்றத் தேர்தல் அல்ல. மத்தியிலே நிலையான ஆட்சி வேண்டும் என்று போடப்பட்ட ஓட்டுக்களே தவிர மாநிலங்களிலே இருக்கிற ஆட்சி பதவி விலக வேண்டும் என்பதற் காக அல்ல. டில்லியிலே யார் ஆள வேண்டுமென்று தமிழக மக்கள் வோட்டு போட்டார்களே தவிர சென்னையில் ஆளக் கூடியவர்கள் பதவி விலக வேண்டுமென்பதற்காக அல்ல. தமிழக மக்களே கூட அப்படிப்பட்ட எண்ணத்தில் தேர்ந் தெடுக்கவில்லை. ஒரு சமயத்தில் ஒரு கட்சி வெற்றி பெறும், மற்றொரு சமயத்திலே வேறொரு தேர்தலில் வேறு ஒரு கட்சி வெற்றி பெறும்.

நான் உதாரணத்திற்குக் கூற விரும்புகிறேன். பிரதான எதிர்க் கட்சி நண்பர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. 1977 ஜூன் மாதத்தில் நடைபெற்ற தேர்தலில்— அது சட்டமன்றத் தேர்தல்— தஞ்சை பாராளுமன்றத் தொகுதியிலுள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் 5 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிப் பெற்றது. ஆனால் அதற்குப் பிறகு அண்மையில் நடைபெற்ற அதே தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. எனவே 5 இடங்களை சட்டமன்றத் தேர்தலில் பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் பிறகு நடந்த நாடாளு மன்றத் தேர்தலில் அதே தொகுதி களில் தோல்வியுற்றது என்று சொல்கிறபோது, ஏற்கெனவே

வெற்றி பெற்ற அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் 5 பேரும் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோருவது நியாயமா? அது சரியான கருத்தாக கொள்கையாக ஆகாது அல்லவா? 1977 ஜூனில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் வர வேண்டும் என்று மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

பிறகு இப்போது நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரஸுக்கு வோட்டுக் கிடைத்தது. அதன் அர்த்தம். நாடாளுமன்றத்திற்கு இவர்கள் போகட்டும், சட்டமன்றத்திற்கு அவர்கள் போகட்டும் என்ற அடிப்படையில்தான் அந்த மக்கள் வாக்களித்தார்களே தவிர அதை வைத்துக் கொண்டு இப்படிப்பட்ட கேள்வியை எழுப்பினால் அதாவது நடந்த சட்டமன்றத் தேர்தலில் 5 தொகுதிகளில் அப்போது ஜெயித்த நீங்கள் ராஜினாமாச் செய்யுங்கள் என்று கேட்டால் அது எப்படி கேலிக்கூத்தாக அமையுமோ அப்படித்தான் இன்று அ. இ. அ. தி. மு. க. வைப் பார்த்து கேட்கக்கூடிய கேள்வி இருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் அனைவரது கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். தமிழகத்தில் காங்கிரஸ் அணிக்குக் கிடைத்த வோட்டு ஒரு கோடி. எதிர் அணிக்குக் கிடைத்த வோட்டு 74 லட்சம். வித்தியாசம் இதுதான். இருக்கட்டும். நான் இப்போது சொல்லப் போகும் விஷயம் குறித்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூட ஒரு தீர்மானம் நிறைவேற்றியது என் நினைவுக்கு வருகிறது.

நான் ஒன்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். முன்பு நடந்த தேர்தல்களின் போதிருந்த வாக்காளர்களின் பெயர்கள் இந்தத் தேர்தலில் அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து அடிக்கப்பட்டிருக்கிறது. பலயிடங்களில் பார்க்கும்போது அது தெரிய வருகிறது. அடிக்கப்பட்டிருக்கிறது என்றால் ஒன்றல்ல இரண்டல்ல. அப்படி அடிக்கப்பட்டிருப்பவர்கள் இடம் மாறியவர்கள் அல்லது வேறு ஊர்களுக்குச் சென்றவர்கள் மட்டுமல்ல. ப்ளாக் ப்ளாக்காக, கிராமம் கிராமமாக அடிக்கப்பட்டிருக்கிறது. சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் லால்பேட்டையில், முஸ்லிம்கள் பெருவாரியாக வசிக்கக் கூடிய இடத்தில் தெருத் தெருவாக வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறது. மதுரை நாடாளுமன்றத் தொகுதியில் சென்றத் தேர்தலில் வாக்களித்த 37,000 வாக்காளர்கள் இன்று இல்லை. பழனி நாடாளுமன்றத் தொகுதியில் பட்டியலில் பெருவாரியான வாக்காளர்கள் இல்லை. இருப்பவர்களும் வாக்குகள் போட எப்படி தடுக்கப்பட்டார்கள் என்பது வேறு விஷயம்.

1980 பிப்ரவரி 2] [திரு. சி. கோவிந்தராசன்]

கோவை நாடாளுமன்றத் தொகுதியிலும் பட்டியலில் இருந்து வாக்காளர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏராளமான பேர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இது எப்படி நேர்ந்தது என்பதை விசாரிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தில் உருவாகியிருக்கிற இந்த அணி மாநில அரசுகளை கவிழ்ப்பதற்காக, அது எங்கிருந்து வந்தாலும் சரி——இதைச் சொல்லும்போது நண்பர் சுந்தர ராஜன் அவர்களுக்குக் கோபம் வருகிறது.

திரு. நா. சுந்தரராஜ்: மதிப்பிற்குரிய திரு. கோவிந்தராசன் அவர்கள், ஏதோ மாற்றுக்கட்சிகள் இருப்பதை நாங்கள் விரும்பாதது போல் சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், 1977-ம் ஆண்டு ஜனதா கட்சி ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, ஒன்பது மாநிலங்களில் காங்கிரஸ் (இ) பொறுப்பேற்றிருந்ததை ஒரு எக்ஸிக்யூடிவ் ஆர்டரை வைத்துக் கொண்டு அங்கிருந்த ஆட்சியைக் கலைப்பதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்) என்பதை தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. கோவிந்தராசன்: ஜனதாக் கட்சி ஆட்சிபீடத்தில் ஏறியபோது பல்வேறு மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சிபீடத்தில் இருந்தது உண்மைதான். அதற்கு முன்பு 1971-ல் நடந்த தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று பல மாநிலங் களில் ஆட்சிபீடத்தில் இருந்தது. உத்தர பிரதேசம், ஒரிஸா தவிர மற்ற மாநிலங்களில் அவர்கள் ஆயுட்காலம் பூர்த்தியான பிறகு கூட அது நீடிக்கப்பட்டது. அந்த இரண்டாண்டுக் காலத்தில், அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு அப்போது நடைபெற்ற கொடுமைகளைப் பற்றிப் பேசினால் அவர்களுக்கு இன்னும் ஆத்திரம் வரும். எந்தச் சூழ்நிலையில் எப்படி எப்படி நடந்தது என்பதையெல்லாம் நாட்டு மக்கள் அறிவார்கள். அநேகமாக அந்த மாநில அரசுகளின் காலவரையறை முடிந்து விட்ட காரணத்தினால்தான் அவை அங்கு கலைக்கப்பட்டு தேர்தல்கள் நடத்தப்பட்டதே தவிர வேறு அல்ல. மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், சட்டரீதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் கலைப்பது கூடாது என்பதுதான். இன்று நேற்றல்ல, 1959-ல் கேரள அரசைக் கலைப்பதற்கு மத்திய அரசு முடிவு செய்ததே அதற்கு முன்னர் இருந்தே அதை எதிர்த்து வந்திருக்கிறது. 1976-ம் ஆண்டு ஜனவரி 31-ம் தேதி அன்று திடுதிப்பென்று ஒரு மூன்று வரிகள் எழுதி, கவர்னரை அதில் கையெழுத்திடச் சொல்லி அதை வைத்துக்கொண்டு அன்றிருந

மாநில அரசு தூக்கியெறியப்பட்டதே அதையும் நாங்கள் வன்மையாகக் கண்டித்தோம் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

திரு. நா. சுந்தரராஜ்: ஒரே ஆணையில் அனைத்து மாநிலங்களையும் அன்றைக்குக் கலைத்து விட்டார்களே ? அது சரியா ? அதை இல்லை என்று மறுப்பார்களா ?

திரு. சி. கோவிந்தராசன்: அதற்கு நான் சொல்கிறேன். திண்டுக்கல் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட்டபோது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்தில் இருந்தது, அந்தச் சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும். அன்றைய முதல்வரும் ஆக இருந்த மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் இதை ஒரு பிரச்னையாக்கினார்கள். திண்டுக்கல் நாடாளும் மன்றத் தேர்தலில் தோற்றுவிட்டால், ஆட்சி பீடத்திலிருந்து கீழே இறங்கிவிடுவதாகச் சொன்ன காரணத்தினால்தான், அன்றைக்கு வாதத்திற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரியதே தவிர, இன்றைக்கு அதை மற்றவர்கள் நடைமுறைப்படுத்துவதுபோல் நாங்கள் இயக்கம் நடத்தவில்லை. சொன்னவர்கள், செய்யாததன் காரணத்தால், வாதத்திற்காக பொதுக் கூட்டங்களில் எங்கள் கட்சியால் கூறப்பட்டது. ஆனால் இன்றைக்கு நடப்பது என்ன ? நாங்கள் ஜெயித்து விட்டோம், அதனால் ஒவ்வொரு மாநிலத்திலும் 'டிபெக்ஷனை' ஏற்படுத்தி ஆட்சியைப் பிடிப்பது, அப்படி வரவில்லையானால் வன்முறையைத் தூண்டிவிட்டு, ஏதோ வன்முறை இருப்பதுபோல், கவர்னர் மூலம் நிர்பந்தப்படுத்தி ஆட்சியைப் பிடிப்பது என்கின்ற சூழ்ச்சிகள் செய்யப்படுகின்றன. அப்படிப்பட்ட முயற்சியில், காரியத்தில் நாங்கள் இயக்கத்தை நடத்தவில்லை; அப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபடவில்லை என்பதை நான் இந்த சமயத்தில் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவேதான்........

* திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் தேர்தலைப் பற்றிச் சொன்னார்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், அமைச்சர்கள் வீட்டிற்கு எலுமிச்சம் பழத்தை கையில் எடுத்துக் கொண்டு ஊர்வலமாகச் சென்று, 'மானம் இருந்தால் ராஜிநாமா செய்' என்று சொன்னவர்கள், இன்றைக்கு ஆளும் கட்சியிலே இருக்கின்றார்கள். அவர்களுக்கு இப்போது அந்த மானம் வரவில்லையே என்பதுதான். மானம் இருந்தால் பதவி விலகட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது என் அனுமதியின்றி குறுக்கிடக் கூடாது.

1980 பிப்ரவரி 2]

திரு. சி. கோவிந்தராசன் : விவாதத்திற்காக எழுப்பினேமே தவிர, அதற்காக இயக்கம் நடத்தவில்லை என்பதை மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தமட்டில் தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு முயற்சி இன்றைக்கு நாட்டில் நடைபெறக் கூடாது என்பதற்காக, அதை எதிர்த்து 30—1—80-ல் டெல்லியிலே 9 மாநிலங்களைச் சேர்ந்த முதல்வர்கள் கூடி, இப்படி ஒவ்வொரு மாநில அரசையும் கவிழ்ப்பதை எதிர்த்து, அவர்கள் குரல் கொடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அதை எதிர்த்து இயக்கம் நடத்துவோம் என்றும் கூறியிருக்கிறார்கள். அதே நேரத்தில், ராஷ்டிரபதி அவர்கள் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில், இப்படி மாநிலங்கள் கலைக்கப்பட வேண்டியது முறையானதல்ல என்ற விஷயம் அதிலே இல்லை என்ற காரணத்திற்காக, ராஜ்ய சபாவில் இருக்கக்கூடிய எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் சேர்ந்து, இதற்கான ஒரு திருத்த தீர்மானத்தைக் கொடுத்து அந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த 9 மாநில முதல்வர்கள் கூட்டத்தில், நம் மாநில முதல்வர் அவர்கள் கலந்து கொள்ள இயலவில்லை என்றாலும், இன்றைக்குப் பத்திரிகையிலே நான் படித்தேன். அந்த 9 மாநில முதல்வர்கள் எடுத்த முடிவுதான் எனது கருத்தும் என்று நம்முடைய மாநில முதல்வர் அவர்கள் கூறியிருப்பதை நான் வரவேற்கிறேன். இந்த அடிப்படையில் போனால் தான், எந்த காரணத்தைக் கொண்டும், இப்படி மாநில அரசுகளை, சட்ட பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளைக் கவிழ்க்கின்ற முயற்சியை முறியடிக்க 9 மாநிலங்கள் மட்டுமல்ல, 10 மாநிலங்கள், 12 மாநிலங்கள் என்கின்ற வகையில் ஒவ்வொரு மாநிலமும் உறுதியாக நிற்க வேண்டும். இதற்கு மக்களுடைய ஆதரவு தேடக்கூடிய வகையில் அந்தந்த மாநிலங்கள் முன்வந்தால், இப்படிப்பட்ட 'டாப்ளிங் 'மூவ்' கவிழ்க்கும் முயற்சியை முறியடிக்க முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எதேச்சாதிகாரத்தை எதிர்த்து, ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு மக்களுடைய சக்தி வேண்டும். அவர்கள் ஆதரவு வேண்டும். நம்முடைய அரசுக்கும் அப்படிப்பட்ட ஆதரவு வேண்டும். நாம் பார்த்தோமே— மக்களுடைய ஆதரவு பெற்றிருக்கக்கூடிய மேற்கு வங்காளம், திரிபுரா, கேரளா ஆகிய மாநிலங்களில் இந்திரா அலை. இந்திரா சூறாவளி என்றெல்லாம் பேசப்பட்டதே, மக்களுடைய ஆதரவைப் பெற்றிருந்த இந்த மூன்று மாநிலங்களில் இந்த அலை ஒன்றும் செய்ய முடியவில்லை. சூரியனைக் கண்ட பனி போல் மறைந்து விட்டது என்பதை நான் இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்குக் காரணம் என்ன? அந்த மாநில அரசுகள் மக்களுடைய பிரச்னைகளில் மக்களுடைய நல்வாழ்வுப் பிரச்னைகளில் அதிகமான கவனம் எடுத்துக் கொண்டன. பகுதி பகுதியாக என்ன செய்திருக்கிறது என்பதை நான் இங்கே விளக்குவதற்கு நேரம் கிடையாது. எனவே, அப்படிப்பட்ட முறையில் மக்கள் தீர்ப்பைப் பெறுவதற்கு, இந்த அரசைக் கவிழ்க்காமல் காப்பதற்கு மத்திய அரசை நம்புவதற்குப் பதிலாக, மத்திய அரசை ஆண்டு கொண்டிருக்கும் கட்சியை நம்புவதற்குப் பதிலாக இந்த நாட்டு மக்கள் மீது நம்பிக்கை வைத்து அந்த மக்களின் ஆதரவைத் திரட்டக்கூடிய முறையில் அரசின் கொள்கை இருக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் அரசுக்குப் பணிவாகக் கூற விரும்புகிறேன்.

தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஆதரவாக, உழைக்கும் மத்திய தர மக்களுக்கு ஆதரவாக கொள்கைகள் இருக்க வேண்டும். ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்பட்ட (ஆர்கனைஸ்டு செக்ஷன்ஸ் ஆப் எம்ப்ளாயீஸ்)என்.ஜீ.ஓஸ்., காவலர்கள். என்சினியர்கள், ஆசிரியர்கள் இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு இயக்கம் நடத்துகிறார்கள் என்று சொன்னால் அதை அரசாங்கத்தை எதிர்க்கும் இயக்கம் என்ற முறையில் இந்த அரசு பார்க்காமல் அனுதாபமான முறையில் கவனித்து அந்தப் பிரச்னைகளின்மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட அதிருப்தி, அரசாங்கத்தை நடத்தக்கூடிய இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர் என்று சொல்லக்கூடிய என். ஜி. ஓ.,-க்கள் ஆசிரியர்கள், போலீஸ் துறையினர் ஆகியோரிடத்தில் ஏற்படுகிறபோது எதேச்சதிகார சக்திகள் அந்த அதிருப்தியைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன என்பதை அரசுக்கு எச்சரிக்கையாகக் கூற விரும்புகிறேன். அவர்கள் அதிருப்தி அடைய என்ன காரணம், அவர்களுடைய கவலைக்கு என்ன காரணம், அவர்களுடைய குறைக்கு என்ன காரணம் என்று அறிந்து அதைப் போக்க வேண்டும். அரசு ஊழியர்கள் கோரிக்கைகளை அனுதாபத்தோடு பார்க்கவேண்டும். நம்மை எதிர்த்துப் போராடுகிறார்களே என்ற முறையில் பார்க்கக் கூடாது.

1977 டிசம்பர் மாதத்தில் சர்விஸ் கமிஷன் தேர்தல் நடத்தப்பட்டது. நாலாயிரம் பேர் பரிட்சையில் பாஸ் செய்தார்கள். அவ்வளவு பேர்களும் தாற்காலிக ஊழியர்களாக, 10—ஏ—1 சிப்பந்திகளாக இன்னும் இருக்கிறார்களே தவிர நிரந்தரமாக்கப்படவில்லை. தற்போதுகூட அது பிப்ரவரி மாதம் வரை மேலும் நீட்டப்பட்டு உத்தரவு வந்திருக்கிறது. அவர்கள் அத்தனை பேரையும் நிரந்தரமாக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

1980 பிப்ரவரி 2] [திரு. சி. கோவிந்தராசன்]

அடுத்து காவலர் பிரச்சினை. நடந்து முடிந்து விட்ட போராட்டத்தை நினைவுப்படுத்த விரும்பவில்லை. ஆனால் அவர்களுக்கு உள்ளக் குமுறல் அதிகமாக இருக்கிறது. கோவையில் தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ் 400 பேருக்குமேல் இருப்பவர்களை அதிகாரிகள் அவர்கள் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். அரசின் போக்கைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் குடியிருப்பில் வாட்டர் சப்ளை துண்டிக்கப்பட்டது. மின்சாரம் துண்டிக்கப் பட்டது; திருமணம் ஆகாத ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸ் சாப்பிடுவதற்காக இருக்கக்கூடிய மெஸ் மூடப்பட்டது. அங்கு குடியிருக்கும் பெண்கள் அவமானப்படுத்தப் பட்டார்கள். போலீஸ் உயர்தர அதிகாரிகள் அரசாங்கத்தின் கொள்கையைத் தவறான முறையில் பயன்படுத்தி இப்படிப்பட்ட குமுறல்களை உண்டுபண்ணியிருக்கிறார்கள். வேலை நீக்கம் செய்யப்பட்ட காவலர்களைத் திரும்ப எடுக்க வேண்டும். அதற் கான முயற்சி நடைபெறுவது மகிழ்ச்சியாக இருக்கிறது. குடி யிருப்புக் காலனிகளிலிருந்து போகவேண்டுமென்று போட்ட உத்தரவை வாபஸ் பெறவேண்டும். அவர்களுடைய பிரச்னைகளை அவர்களுடைய ஸ்தாபனத்தின் மூலமாக ஜனநாயக பூர்வமாக அழைத்துப் பேசவேண்டும். அதை அங்கீகரிக்க மாட்டேன். இதை அங்கீகரிக்க மாட்டேன் என்றெல்லாம் சொல்லாமல் ''இன்பீரா ஸ்ட்ரக்சராக'' இருக்கக்கூடிய அந்தப் பகுதியினரின் பிரச்சினைகளை நாசூக்காக டீல் பண்ண வேண்டும் என்ற ஆலோசனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

ஆசிரியர் பிரச்சினை ஒன்று இப்போது வந்திருக்கிறது. திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் ஒரு பிரச்சினை. சேவியர் பிச்சையா என்பவர் வேலை நீக்கம் செய்யப்பட்டார். சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்பதற்காக அவருக்கு ஆதரவாக ஆசிரியர்கள் மட்டுமல்லாது மாணவர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். அந்த நிறுவனம் போலீசை வைத்துக்கொண்டு மாணவர்களையும் ஆசிரியர்களையும் தாக்கும் நிலைமையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையை நீட்டிக் கொண்டே போகவிடாமல் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உடனடியாக காலேஜ் டைரக்டர் மூலமாகவும் வைஸ்-சான்ஸலர் மூலமாகவும் யுனிவர்சிடி டீச்சர்ஸனுடைய அசோசி யேஷன் பிரதிநிதிகள், மாணவர்களுடைய பிரதிநிதிகள், ஆசிரியர் களுடைய பிரதிநிதிகள், கல்லூரி நிர்வாகிகள் இவர்களையெல்லாம் வைத்துப் பேசி இந்தப் பிரச்சினையை உடனடியாகப் பைசல் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுடைய ஆதரவு என்று வரும்பொழுது, இந்த அரசு நிலச் சீர்த்திருத்தச் சட்டத்தை சரியாக அமல்படுத்த வேண்டும். முதலமைச்சர் அவர்கள் 1978, ஜூன் என்று கருது கிறேன். 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் தான் நாங்கள் வைத்திருக்

கிறோம் என்று சொல்லிக் கொண்டு பல ஆயிரக்கணக்கான ஏக்கரை பினாமி பெயரில் பலர் வைத்துக்கொண்டு எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்த ஆட்சிக்குத் தகுந்தாற்போல நடந்து கொண்டிருக்கக்கூடிய ஏராளமான விவசாயிகள் இருக்கிறார்கள் என்று ஒரு கூட்டத்தில் பேசினார். அது வேறு பிரச்னை காரணமாக. பினாமி நிலங்கள் இருப்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அது வருவாய்த்துறை அமைச்சருக்கும் தெரியும். அந்த பினாமி நிலங்களை நாங்கள் கண்டுபிடிப்ப தற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்றுதான் சொல்கிறார்களே தவிர உடனடியாகச் செய்யப்பட்டால்.....

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்குக் காரணம் அவர் பேச்சிலே குறுக்கிடுவதற்காக அல்ல. எனக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று நான் ஒவ்வொருவரிடமும் சொல்லியிருக்கிறேன். ஆனால், எந்தச் சட்ட மன்ற உறுப்பினரும் எந்த இடத்திலே பினாமி நிலம் இருக்கிறது என்று யாரும் எனக்குச் சொல்ல வில்லை. எனக்கு இருக்கிற வருத்தமெல்லாம் நான் ஊர் ஊராகப் போனால் நான் எத்தனை ஊர்களுக்குத் தான் போக முடியும்; நான் நிச்சயமாகச் சொல்கிறேன், சட்டமன்றத்தின் எல்லா உறுப்பினர்களும், ஆளுங் கட்சியா, ஆளாத கட்சியா என்று இல்லாமல் அண்ணா தி. மு. க. வா, தி. மு. க. வா என்று இல்லாமல் எல்லோரையும் கேட்கிறேன். நீங்கள் இந்தச் சட்ட மன்றக் கூட்டம் முடிவதற்கு முன்னாலேகூட எந்த எந்த ஊர்களில் இப்படியெல்லாம் இருக்கின்றன என்று என்னிடம் எழுதிக் கொடுத்துவிட்டு அதற்குப் பிறகு ஒரு மாதம் கழித்து எந்த நடவடிக்கையும் இல்லை என்று குறை சொன்னால் நியாயத்தின் அடிப்படையில் இருக்கும். நீங்களும் உதவி செய்தீர்கள் என்று ஆகும். அப்படி இல்லாமல் இங்கே வருகிறபோது பினாமி நிலம் பினாமி நிலம் என்று பேசிக் கொண்டே எதுவும் செய்யாமல் இருப்பதற்கு உறுதுணையாக இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மன்னிக்கவும். யாரும் சுட்டிக்காட்டவில்லை, பினாமி நிலத்தைக் காட்டவேண்டு மென்று நான் பல முறைகள் 'சொல்லியிருக்கிறேன் என்று அமைச்சர் சொல்கிறார். என்னுடைய தொகுதியிலே நாகப்பட்டிணம் தொகுதிக்குள்ளே ஒரு கோயில் நிலம், ஒருவர் குத்தகைக்கு மொத்தமாக எடுத்து. பின்ாமியாக உள்குத்தகை தாரர்கள் வைத்திருப்பதை அதிகாரிகளிடம் எடுத்துக் கொடுத்த தன் விளைவு உள் குத்தகைதாரர்களாக இருக்கக்கூடிய ஏழை விவசாயிகள் இப்போது வெளியேற்றப்பட்டு தெருவிலே நிற்கிறார்கள் என்பதை நான் கனம் அமைச்சர் அவர்களின் வனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்போதும் அவர்கள் தெருவிலே நின்று கொண்டிருக்கிறார்கள்.

1980 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, பினாமி நிலம் என்பது வேறு, குத்தகை நிலம் என்பது வேறு. குத்தகை நிலத்தில் பினாமி இருக்கலாம். நான் கேட்கிறேன். என்னிடத்திலே கொடுங்கள் என்று. உன்னிடத்திலே எப்படிக் கொடுக்க முடியும் அதிகாரிகளிடத்திலே கொடுக்கிறோம் என்று சொன்னால் என்ன செய்யமுடியும்? என்னிடத்திலே கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் திரு. உமாநாத் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்; என்னிடம் கொடுங்கள், அதற்குப் பிறகு பேசலாம், எங்கேயோ கொடுத்துவிட்டு அவர்களை வெளியேற்றுவதற்கு உறுதுணையாக இருந்திருக்கிறீர்கள், மன்னிக்க வேண்டும் அதை சொல்வதற்கு. நீங்கள் அதை யாரிடத்திலே பேரைக் கொடுத்து அவர்கள் வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்றால் உங்களைவிட அதிகமாக இல்லாவிட்டாலும் அந்த அளவிற்கு நானும் அவர்கள்மீது பரிதாபப்படுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : இந்த விஷயம்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் ஃபைலைப் பார்த்தால் அந்த பெட்டிஷன் உங்களுக்கு வந்திருக்கிறது என்பது தெரியும்.

திரு. சி. கோவிந்தராசன் : 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கும் மேலே வைத்திருக்கிறார்கள் என்ற உண்மை வெளிப்பட்டிருப்பதை நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டம் இருந்தும் 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் வைத்திருக்கிறார்கள் என்பது இன்றைக்கு வெளியாகியிருக்கிறது. அதை வெளிப்படுத்துவதற்கு நம்முடைய உதவியை அமைச்சர் அவர்கள் கோருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல; எத்தனையோ விவசாய ஸ்தாபனங்கள் இருக்கின்றன. விவசாயத் தொழிலாளர் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவர்களுடைய ஒத்துழைப்பைக் கோரினால் நிச்சயமாக ஒவ்வொரு கிராமத்திலும் எவ்வளவு பினாமி நிலங்கள் இருக்கின்றன என்பது தெரியும். சீக்கிரத்தில் தக்க நடவடிக்கை எடுக்கமுடியும். இப்போது 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் இருக்கிறது என்ற உண்மையை ஒப்புக்கொண்டுவிட்டு அதே நேரத்திலே குத்தகை நிலத்தை மட்டும் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை 3 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைக்கிறோம் என்று கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, கூலிச் சட்டம் இன்றைக்குப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் அது சரியாக அமுல்படுத்தப்படவில்லை. அது அமல்படுத்தப்பட்டால் கூலி விவசாய மக்களின்,

ஆதரவு கிடைக்கும். இதிலும் உங்கள் ஒத்துழைப்பைக் கொடுங்கள் என்று எங்களைக் கேட்டுக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. அரசாங்க நிர்வாக இயந்திரம் இருக்கிறது. ரெவின்யூ இலாக்கா மூலமோ தொழிலாளர் நல இலாக்கா மூலமோ அதை அமல்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி, சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, கூலிப் பிரச்னையில் இந்த அரசு எவ்வளவு கண்டிப்பாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அது மட்டுமல்ல, தஞ்சை மாவட்டத்தில் நடவு முதலியன வந்தால் எவ்வளவு கேஸ்கள் வந்திருக்கும் என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் இந்த இரண்டாண்டுகளில் வழக்குகளே இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் ஒன்றோ இரண்டோ தான் வந்திருக்கிறது என்று எனக்குத் தெரியும். அங்கேயுள்ள விவசாயத் தொழிலாளர்கள், இரண்டு பொதுவுடைமைக் கட்சிகளையும் சேர்ந்த தொழிலாளர்களைக் கூட்டிப் பரிசிலித்து வருகிறேன் என்று தெரியும். உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களையும் கூப்பிட்டு, பெயரைச் சொல்லக் கூடாது, மாவட்டச் செயலாளரைக் கூப்பிட்டுப் பேசிக் கொண்டு வருகிறேன் என்பது தெரியும்.

திரு. சி. கோவிந்தராசன்: 75–25 வாரச் சட்டம் கொண்டு வரப் போவதாக அறிவிப்பு மட்டும் கொடுத்து வருகிறீர்கள். 75–25 குத்தகை வாரச் சட்டத்தை உடனடியாகச் சட்டமாகக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைச் செய்வதன் மூலம் குத்தகைதாரர்களின் ஆதரவு, அப்படிப்பட்ட பகுதி விவசாயிகளின் ஆதரவு நிச்சயமாகக் கிடைக்கும்.

அதுமட்டுமல்ல, குத்தகைதாரர்களைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். 6 இலட்சம் பேர்தான் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். அதிலும் கூட 3 லட்சம் பேர் கோயில், மடத்தில் இருப்பவர்கள்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குத்தகை பாக்கிகளை ரத்து செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

அடுத்து, தொழிலாளர்கள் சம்பந்தமாக, அவர்களின் ஆதரவைப் பெறுவதற்காக சில உருப்படியான ஆலோசனைகளை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தொழிலாளி-முதலாளி என்று வரும்பொழுது, தொடர்ந்து நாங்கள்

1980 பிப்ரவரி 2] [திரு. சி. கோவிந்தராசன்]

சொல்வது, இப்பொழுது மட்டுமல்ல, 1967 அல்லது 1952-ஆம் ஆண்டிலிருந்து சொல்லி வருவது, அரசு தொழிலாளி-முதலாளி ஆகிய இரண்டு பேர்களையும் பார்க்கும் பொழுது தொழிலாளர்கள் பக்கமாக அதிகமாகச் சார்ந்திருக்க வேண்டுமே தவிர, நடுநிலைமையாக இருக்கிறோம் என்று இருந்தால் நடைமுறையில் சரியாக இருக்காது. துரதிருஷ்டவசமாக இந்த அரசு அப்படித் தான் சென்று கொண்டு இருக்கிறது. அந்தக் கொள்கையைக் கொஞ்சம் மாற்ற வேண்டும். அது சம்பந்தமாக சில உருப்படியான யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். நான் பிரச்சினைகள் எல்லாவற்றிற்குள்ளும் போகவில்லை. அண்மையில் நடந்த சில விஷயங்களை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சேஷசாயி பேப்பர் போர்டில் வேலை நிறுத்தம் நீண்ட நாட்கள் நடந்து, முதலமைச்சரவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் அந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக்கொண்டு வேலைக்குச் சென்றிருக்கிறார்கள். ஆனால் அவர்களின் பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. போனஸ் பிரச்னையும் எழுப்பப்பட்டு, அதையும் தீர்ப்பதாக முதலமைச்சரவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். போனஸ் பிரச்னை குறித்து முழு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும். ஏனென்றால் நீண்ட போராட்டம் நடத்தியிருக்கிறார்கள், அதனால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள், கடனை வாங்கிக் குடும்பத்தை நடத்தியிருக்கிறார்கள். போனஸ் சட்டத்திலே சொல்லக்கூடிய 20 சதவீதம் அல்லது அதற்குமேலும்கூட போனஸ் கிடைக்கும் அளவிற்குக்கூட இந்த போனஸ் பிரச்னையைத் தீர்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல; 110 கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் உடனடியாக வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட ஏற்பாடு செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது) குறுக்கீட்டில் என்னுடைய நேரம் போய் விட்டது, இன்னும் ஐந்து நிமிடங்கள் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்னுடைய குற்றம் அல்ல. இரண்டு நிமிடங்களிலே முடியுங்கள்.

திரு. சி. கோவிந்தராசன் : உற்பத்திக்கேற்ற போனஸ் என்று சொல்லி, அந்த உற்பத்தி போனஸ் கிடைக்க வேண்டிய நார்ம்ஸ்— வேலை அளவை உயர்த்தியிருக்கிறார்கள். அது தொழிலாளர் நல அமைச்சரவர்களுக்கும் தெரியும். உயர்த்தப்பட்டிருக்கின்ற வேலை அளவிற்கு உற்பத்தி போனஸ் கிடைக்காது என்பதால் அவரும் நானும் சேர்ந்து நடத்திய முந்தைய போராட்டத்திற்குப் பிறகு ஏற்பட்ட அந்த ஒப்பந்தத்தில் அவரே

கையெழுத்திடவில்லை. ஆனால் இன்றைக்குக் கையெழுத்திடப் பட்டிருக்கிறது. எனவே, உற்பத்தி போனஸுக்காக வைக்கப் பட்டுள்ள அந்தவேலை அளவைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்காக எட்டு தொழிலாளர்கள் சஸ்பென்ஷனில் இருக்கிறார்கள். அவர்களையும் உடனடியாகத் திருப்பி எடுக்க வேண்டும்.

'காவேரி ஸ்டக்சுரல்ஸ்'-இல் 160 நாட்களாக கதவடைப்பினால் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. 1,350 தொழிலாளர்கள் பணி புரியும் இத் தொழிற்சாலையில் 650 பேர்களை வேலை நீக்கம் செய்தால்தான் இந்த தொழிற்சாலையை நடத்த முடியும் என்று நிர்வாகம் சொல்கிறது. அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. அரசாங்கம் நிதி உதவி செய்ய வேண்டுமென்றால் நிதி உதவி செய்து எக் காரணத்தை முன்னிட்டும் அந்தத் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கக் கூடாது என்ற முறையில் அந்தப் பிரச்னையை முடித்து வைக்க வேண்டும்.

அடுத்து, டி. வி. எஸ்., பாடி பிரச்னை முடிந்தது. 165 தொழிலாளர்கள் இன்றைக்கு அங்கே அநியாயமாகப் பழி வாங்கப் பட்டிருக்கிறார்கள். குறைந்த பட்சம் தொழில் கோர்ட்டுக் காவது அனுப்புங்கள் என்று கேட்கிறார்கள். இதைச் செய்ய என்ன குறுக்கே இருக்கிறது என்று தெரியவில்லை. அங்கே யாவது நியாயம் கிடைக்கட்டுமே. கோர்ட்டிலே ரெஃபரன்ஸுக்கு விட்டால் என்ன குடியா முழுகிப் போய்விடும்? அந்தத் தொழிற்சாலையைச் சேர்ந்த பல தொழிலாளர்கள மீது உள்ள வழக்குகள் இன்றும் வாபஸ் பெறப்படவில்லை.

[பிற்பகல் 12-30]

தூத்துக்குடி ஸ்பிக் இல் வாபஸ் பெறப்பட்டும் தொழில் தகராறுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

தொழில் தகராறுகளில் ஏற்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப் படும் என்று அறிக்கைகள் விடப்பட்டு கொண்டிருக்கின்றன. அந்த வழக்குகள் பூராவும் இன்னும் வாபஸ் வாங்கப்பட வில்லை. தூத்துக்குடியில் ஸ்பிக்கில் 94 பேர்கள் மீது வழக்குகள் போடப்பட்டுள்ளன. அவை இன்னும் வாபஸ் வாங்கப்படாமல் இருக்கின்றன.

சேலம் மாக்னசைட்—மேத்தா என்பவரிடமிருந்து அரசு எடுத்துக் கொண்டது. 3,000 பேர்களை அப்படியே நட்டாற்றில் விட்டுவிட்டு, அந்த முதலாளி போய் விட்டான். கிராச்சுவிட்டி கிடையாது, ரிட்ரெஞ்ச்மென்ட் காம்பன்சேஷன் கிடையாது, சர்வீஸ் கன்ட்டினுவிட்டி கிடையாது. ஆனால்

நான் என்ன அறிகிறேன் என்றால், பி. எஃப் ஆக்டின் 19(ஏ) பிரிவின்கீழ், பி. எஃப் பிடிக்காமல் இருக்க ஏதாவது, விதி விலக்கு இருக்கிறதா என்று தமிழக அரசு ஆராய்ந்து கொண்டிருப்பதாக அறிகிறேன். இது வருந்தத்தக்கது. அரசாங்கம் 'மாடல் எம்ப்ளாயர்' யாக நடந்து கொள்ள வேண்டும்.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸ் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது. அந்த ஊக்க போனஸ் வேலை நிறுத்தம் செய்யாதவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. வேலை நிறுத்தம் செய்தவர்களுக்குக் கிடையாது. இது 'இன்விடீயஸ் டிஸ்கிரிமினேஷன்' இல்லையா? வேலை நிறுத்தம் செய்யும் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் முயற்சி அல்லவா இது? இந்த மாதிரி கொடுத்தால், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஊக்கமாக இராது. எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். இந்தக் கொள்கைகளையும் மாற்ற வேண்டும்.

கடைசியாக, கவர்னர் உரையில் கூறப்பட்டிருக்கிறது, ஐ. டி. ஆக்டின் 12 (3) செக்ஷன்பற்றி நீண்ட நாட்களாகத் தொழிலாளர் நல அமைச்சர் சொல்லிக் கொண்டு வருகிற விஷயம்தான். பெருவாரியான தொழிலாளர்கள் பிரச்னை எங்கு வருகிறது. ஒரு தொழிலுக்கு ஒரே சங்கம் இருந்தால் பிரச்னை கிடையாது. ஒன்றுக்குமேல் சங்கம் இருந்தால்தான் பிரச்னை வருகிறது. இப்பிரச்னைக்கு ஒரே தீர்வு எல்லாத் தொழிற்சங்கங்களும் ஒன்று சேர்ந்து கையெழுத்திட வேண்டும். அப்படி இல்லையென்று சொன்னால், அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யக்கூடிய அனைத்துத் தொழிலாளர்களை வைத்து வாக்கெடுப்பு நடத்தி, அதில் மெஜாரிட்டி பெற்றவர்கள் கையெழுத்திடலாம் என்று வைக்கட்டும்; அதை வரவேற்கிறோம், ஏற்றுக் கொள்கிறோம், உறுதியும் கூறுகிறோம். ஆனால், அந்தப் பிரச்னையோடு ஸ்டிரைக்கை ஏன் இணைக்கிறீர்கள்? ஸ்டிரைக்குக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? முதலாளி திடீரென்று தாக்கினால், ஆட்குறைப்பு செய்தால், தவறான நடவடிக்கை எடுத்தால், ஸ்டிரைக் வருகிறது. ஆகவே, அந்தப் பிரச்னையில் இதை இணைப்பதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம், எதிர்க்கிறோம், ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிக் கொள்கிறேன். 'லாக்—அவுட்'டுக்கு ஓட்டெடுப்பு உண்டா? எனவேதான், இந்த ஸ்டிரைக் பிரச்னைக்கு ஓட்டெடுப்பு கூடாது.

இறுதியாக ஒன்றே ஒன்று. எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளைக் கலந்து கொண்டு அறிவியுங்கள். அல்லது, லேபர் அட்வைசரி கமிட்டியையாவது, கலந்து கொண்டு வாருங்கள். திடீர், திடீரென்று அறிவிப்பு செய்வது, பிறகு, சட்டமன்றத்திற்கு வருவது, திரு. துரை

முருகன் சொன்ன மாதிரி, வாபஸ் வாங்குவது என்பதெல்லாம் சரியல்ல. தொழிற்சங்கப் பிரதிநிதிகளைக் கலந்து செய்யுங்கள், எதேச்சாதிகாரச் சக்திகளை எதிர்க்கவும், ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், அனைத்துப் பகுதி மக்களைக் காக்கவும், நாங்கள் கூறியுள்ள ஆலோசனைகளைப் பரிசீலனை செய்து, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

திரு. ர. ஜெபமணி : சபாநாயகர் அவர்களே, ஆளுநர் உரையின் மேலே, ஜனதா கட்சியின் சார்பாக நானும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னால், மாண்புமிகு கோவிந்தராசன் அவர்கள் இங்கே பேசினார்கள். அவர்கள் ஆரம்பத்திலே, இந்தச் சட்டசபையைக் கலைக்க வேண்டுமென்று ஏன் சொல்கிறார்கள், இது சரியா, தவறா என்பதைப் பற்றி உங்கள் மத்தியிலே விளக்கிச் சொன்னார்கள். இப்பொழுது திடீரென்று வெற்றி வந்துவிட்டால், அந்த வெற்றியின் அடையாளம் கொஞ்சம் அடக்கமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், இ. காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் கொஞ்சம் அடக்கமாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன், அவர்கள் ஒன்றும் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால், அவர்களோடு புதிதாகச் சேர்ந்திருக்கக் கூடியவர்கள் மிக வேகம் காட்டி, மானம் இருந்தால், ரோஷம் இருந்தால்,— வார்த்தைகள் நல்ல அருமையான வார்த்தைகள்—தன்மானம் இருந்தால், என்று கூடக் கேட்டார்கள். (குறுக்கீடு) அதைக் கேட்கவில்லை. ஆனால், நாம் சட்டசபையிலே கூடியிருக்கிறோம். தேர்தல் நடந்தது, லோக சபைக்குத் தேர்தல் நடந்தது. இராமன் மனைவி குழந்தை பெறவில்லையே தவிர, இலட்சுமணன் மனைவி குழந்தை பெற்றிருக்கிறாள். நடந்தது ஓரிடம்; தேள் கொட்டியது தென்னை மரத்திலே, நெறி கட்டியது பனை மரத்திலே என்பார்கள், இருக்கட்டும். 1977-ல் பாராளு மன்றத் தேர்தல் நடந்தது. அப்பொழுது சட்டசபைத் தேர்தலை நடத்தாமல் விட்டுவிட்டார்கள். அந்தத் தேர்தலோடு, இந்தத் தேர்தலை ஏன் வைக்கவில்லை. ஏன் அவர்கள் வைக்கவில்லை என்று எனக்கு இன்னும் புரியவில்லை. ஜனநாயகத்தில் எனக்கு ஓரளவாவது தெரிந்திருக்கிறது.

பாராளுமன்றத் தேர்தல் நடக்கும்போது, காலியாக இருக்கக் கூடிய சட்டசபைக்கும் தேர்தல் நடந்திருக்க வேண்டும். 1976-லே கலைக்கப்பட்ட சட்டசபை 1977-லே வந்த தேர்தலோடு இணைத்து நடத்த முடியவில்லை. காரணம் அவர்கள் ஜன நாயகம் பழுத்த, கனிந்த, ஆற்றல் காட்டுவதாக ஏற்றுக் கொள்ளலாம். இப்போது ஜனதா கட்சி டெல்லியில் ஆட்சிக்கு வந்தது. உடனடியாக நாங்களே ஜெயித்ததாகக் கருதி இங்கே 300 பேர்களை நாம் நாமினேட் பண்ணி இங்கே ஆளுங்கள். அங்கே இந்தியா நம் கைக்கு வந்துவிட்டது. இதுவும் நம்

1980 பிப்ரவரி 2] [திரு. ர. ஜெபமணி]

கைக்கு என்று சொல்லவில்லை. ஆட்சிக்கு வந்ததும் உடனடியாகத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. யார் ஜெயிப்பார்கள், யார் தோற்பார்கள் என்பதல்ல பொருள். யார் மக்களின் ஆதரவைப் பெறுகிறார்களோ அவர்கள் நாட்டை ஆளவேண்டு மென்பது ஜனநாயகத்தின் முழு உரிமை. மார்ச் 25 ஆம் தேதி பிரதமர் ஆனவுடன், ஜூன் மாதம் 15–ந் தேதி தேர்தலை முடித்துவிட்டார்கள், தமிழ்நாட்டிலே. ஒருவருக்கு மட்டுமல்ல ஜனநாயகம். நம் எல்லோருக்கும் சேர்ந்தது இந்த நாட்டு ஜன நாயகம். அந்த ஜனநாயகத்தில் தேர்தல் என்பது நடந்து அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று இந்த நாட்டை ஆள்வதற்கு அவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருமணம் ஆன உடனே யாராவது அந்தப் பையனைச் சந்தித்து திருமணம் ஆகிவிட்டதா என்று கேட்பார்கள். ஓராண்டு கழித்தால் குழந்தை இருக்கிறதா என்று கேட்பார்கள். ஆனால் திருமணம் ஆன உடனே குழந்தை இருக்கிறதா என்று எந்த மடையனும் கேட்கமாட்டான். காரணம் என்னவென்றால் எதற்கும் காலம் இருக்கிறது. வயலில் நட்ட உடனே விளைச்சல் எவ்வளவு என்று கேட்க மாட்டான். 5 ஆண்டுகளுக்குள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனை என்ன என்று கேட்டால் அது மனிதத் தன்மையே இல்லை. இரண்டரை ஆண்டிலேயே என்ன சாதனை என்று கேட்டால், என்ன அர்த்தம். குழந்தை பிறந்த பின்னால் தானே அது நொண்டியாக இருக்கிறதா, அழகாக இருக்கிறதா என்று பார்க்க முடியும். வயலில் நட்ட உடனே அறுப்பதற்கு 100 நாள் ஆகலாம். எதற்கும் டைம் கொடுக்க வேண்டாமா? $2\frac{1}{2}$ ஆண்டிலே நீ என்ன செய்தாய்? நான் என்ன செய்தேன்? இன்னும் $2\frac{1}{2}$ ஆண்டுகள் இருக்கின்றன. மனைவி உண்டாகி இருக்கிறாள் என்று சொன்னால் அதற்குள் குழந்தை ஏன் பிறக்கவில்லை என்றால் அவள் தப்பு செய்திருக்க வேண்டும், கல்யாணத்துக்கு முன்னாலேயே, எதற்கும் ஒரு காலம் உண்டு. வயலில் விதைத்தால் 100 நாள், கல்யாணம் ஆனால் ஓராண்டு, மாடு பலப்பட்டால் ஒரு வருஷம் என்று கணக்கு இருக்கிறது. அந்தக் கணக்கிலே பார்க்க வேண்டும். சட்ட மன்றத் தேர்தல் நடந்து எம். ஜி. ஆர். அரசு அமைத்த உடனே,....

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, பெரியவர் ஜெபமணி பேசும்போது மனைவி உண்டாகி இருக்கிறார் என்று சொன்னார்கள். இந்த வயதிலேயா என்று கேட்க விரும்புகிறேன்,

திரு. ர. ஜெபமணி: வயதுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. (சிரிப்பு).

[திரு. ர. ஜெபமணி] [1980 பிப்ரவரி 2

1977 லே அகில இந்திய அண்ணா தி. மு. க. இந்த நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிய உடனே எதிர்கட்சியினர் இருந்த முனிசிபாலிடி, அவர்கள் பஞ்சாயத்து எல்லாம் கலைதது விடுங்கள் என்று சொல்லவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்துவிட்டோம் நீங்கள் கலைத்து விடுங்கள் என்று சொல்லவில்லை, உள்ளாட்சித் துறைத் தேர்தல் வேறு, இந்தத் தேர்தல் வேறு, நகரசபைத் தேர் தல் வேறு. 10 ஆண்டுகள் தலைவர்களாக இருந்தார்கள், 3 ஆண்டு 5 ஆண்டுகள் 9 ஆண்டுகள் தலைவர்களாக இருந்த பிறகு பஞ்சாயத்துத் தலைவர்களை இடத்தைக் காலி பண்ணுங்கள் என்றார்கள். உடனே கலைத்து விட்டார்களே, அய்யோ கலைத்து விட்டார்களே... அய்யய்யோ கலைத்து விட்டார்களே என்று அவர்கள் போட்ட கூப்பாடு இருக்கிறதே.. இப்போது நாம் நன்றாக யோசிக்க வேண்டும். வாக்குரிமை இருக்கிறது, பேச்சுத் திறமை இருக்கிறது என்றால் மக்களின் அறிவை வளர்ப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். நாட்டு மக்களின் அறியாமையை மூலதனமாகப் பயன்படுத்தக் கூடாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12.40]

நன்றாக யோசித்துப் பாருங்கள். இதற்குப் பிற்பாடு என்ன நடந்தது. தேர்தல் வருகிறது. தேர்தலில் ஜனங்களை அணுகும் முறை இருக்கிறது. 50 ஆண்டுக் காலத்தற்குப் பிற்பாடு மழை பெய்து இருக்கிறது தமிழ் நாட்டில். ஜனங்கள் சொல்கிறார்கள்; நான் சொல்லவில்லை. இப்படிப்பட்ட மழை என்றுமே பெய்யவில்லை என்று. மழை பெய்தால் இளம் விதைகள் அழிந்து விடும். தக்காளிச் செடி துவண்டு விடும். வெங்காயம் போய் விடும். மிளகாய் அழிந்து போய் விடும். ஆனால் நீங்கள் மேடையில் ஏறி, தாளிக்க வெங்காயம், தாலிக்குத் தங்கம் என்று கேட்டுக்கொண்டே ஊரெல்லாம் பவனி வந்து கூட்டம் போட்டீர்கள். ஐயோ, தாய்மார்களே, உங்களுக்கு இந்த கதியா, தாலிக்கு தங்கம் இல்லையே, தங்கத்திற்கு எங்கே போவீர்கள் தாய்மார்களே என்று கேட்டார்கள். தாய்மார்களும் தாலியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார்கள். ஏதோ உண்மையிலேயே நாங்கள் தான் தங்கத்தை எடுத்துக் கொண்டு விட்டோமோ என்று. உடனே குத்தினார்கள். நீங்கள் ஜெயித்து விட்டீர்கள்.

ஆகவே, பிரசாரத்தின் வலிமையால் தான் டெல்லியிலிருந்து கன்னியாகுமரி வரையில் 'தாலி' 'தாலி' என்று நீங்கள் போட்ட கூப்பாடு காரணத்தால், பெண்கள் எல்லாம் ஐயோ, தங்கம், தங்கம், தங்கம் என்று கேட்டு உங்களை ஆதரித்தார்கள். இனி மேல் தங்கமலை ரெப்போகிறது, எவர்சில்வர் மலை வரப் போகிறது. அதற்குப் பக்கத்திலேயே சித்தர்கள் மலை இருக்கிறது 18 சித்தர்கள் அதிலே இருக்கிறார்கள். தங்கம் செய்யும்

1980 பிப்ரவரி 2] [திரு. ர. ஜெபமணி]

கலையை அரசாங்கத்திற்குக் கற்றுத் தரப்போகிறார்கள். நீங்கள் தங்கம் செய்யும் தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறீர்கள். இனிமேல் வீட்டிற்கு ஒரு கிலோ தங்கம், தங்க ரேக் செய்யப் படும்.

உங்களின் அரிசிப் பிரச்னை தீர்ந்தது, உணவுப் பிரச்னை தீர்ந்தது, படிக்க இடப் பிரச்னை தீர்ந்தது, இருக்க இடப் பிரச்னை தீர்ந்தது, ஹாஸ்பிடல் பிரச்சனை தீர்ந்தது, தாய் மார்களே, உங்கள் தாலிக்குத் தங்கம் வேண்டும், அது தான் இன்றைய பிரச்னை. இதை யார் சொல்வது. தாலி கட்டக் கூடாது என்று பிரசாரம் செய்பவர்கள் சொல்வது, இது எந்த வகையில் சரி என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

20 ஆண்டுகாலமாக இந்த நாட்டில் மது என்றால் என்ன என்று தெரியாமல் இருந்தது. "எரி சாராயம்" தெரியுமே தவிர "குடி சாராயம்" தெரியாது. ஆனால் அந்த மது தமிழ் நாட்டில் ஓடவிடப் பட்டது. கையில் பணம் இல்லை என்றாலும் குடித்தே தீருவேன் என்று குடிக்க ஆரம்பித்தார்கள். தமிழ்ச் சமுதாயம் நல்வாழ்வு வாழ வேண்டும் என்கிற எண்ணம் துளி இருந்தால் இதைச் செய்து இருப்பார்களா? பேரறிஞர் அண்ணா என்று உங்களால் அழைக்கப்படும் அவர்கள் இதே மன்றத்தில் சொன் னார்கள், 'என்னுடைய கஜானா காலியானாலும், கடன் ஆனாலும் சரி, தமிழக மக்களுக்கு விஷம் என்னும் மதுவைக் கொடுக்க மாட்டேன்' என்று சொன்னார்கள். ஆனால், இவர்கள் ஏன் திடீரென்று அதை ரத்து செய்தார்கள். ஒரு நாள் ராஜாஜி அவர்கள் மாலை நேரம், மழை கொட்டுகிறது, அதையும் பொருட்படுத்தாமல் முதலமைச்சர் அவர்களிடத்தில் போய் சொல்கிறார், முதலமைச்சர் அவர்களே, நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யுங்கள், ஏழைகளுடைய வீட்டில் உள்ள விளக்கை அணைத்து விடாதீர்கள், அவர்கள் வீட்டுப் பெண் களிடத்தில் உள்ள தாலித் தங்கத்தை அழித்து விடாதீர்கள், அவர்களுடைய குடும்பத் தலைவன் பெண்டாட்டிப் பிள்ளை களோடு சண்டை சச்சரவின்றி அமைதியாக வாழ்வதற்கு வழி கோலுங்கள், தயவு செய்து மதுக்கடைகளைத் திறந்து விடாதீர்கள் என்று மன்றாடிக்கேட்டுக்கொண்டார். உடனே, நான் பெற்ற இன்பம் எல்லோரும் பெற வேண்டும், போ வெளியே, (சிரிப்பு) அப்போது தானே இளம் தலைமுறையே குடிக்க ஆரம்பித்தது. நாட்டில் உள்ள இளைஞர்கள் எல்லாம், ஆஹா, மது என்ன அற்புதமாக இருக்கிறது. பாட்டில் போட்டால் எல்லாம் ஜோடியாகத் தெரிகிறது. மதுவை அருந்துகிறவர்களில் அந்த செக்ஷன், இந்த செக்ஷன் என்று இல்லை. நாம் பின்தங்கியவர் கள் என்று சொல்கிறோமே அவர்களானாலும் சரி, தாழ்த்தப் பட்டவர்கள் என்று சொல்கிறோமே அவர்களானாலும் சரி, ஏழை யானாலும் சரி, பணக்காரன் ஆனாலும் சரி, எல்லோரும் குடிக்கப் பழகி விட்டார்கள். மனித உள்ளம் படைத்த பெரும் தலைவர்

காமராஜர் அவர்கள் போராட்டம் நடத்தினார்கள். 50,000 பேர் சிறைக்குள்ளே போனோம். ஒரு சோடா புட்டியைக் கூட உடைக்க வில்லை, ஒரு பஸ்ஸைக் கொளுத்தவில்லை, எங்கேயும் பலாத்கார நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. அப்போது முதலமைச்சர் கூட அது குறித்துப் பாராட்டினார். பழகியாகி விட்டது இப்போது இல்லையென்றால் எவன் விடுவான். பொய் சொல்லி பழக்க மானவன் சாகிற வரை பொய் சொல்கிறான். அதை மாற்ற முடியாது. பொய் சொல்லிப் பழக்கப்பட்டவன் இன்றைக்கும் பொய் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறான். பொய் சொல்கிறவனே பொய் சொல்வதை விடமாட்டேன் என்கிற போது சாராயம் குடிக்கிறவன் எப்படி விடுவான்? சாராயம் குடித்துப் பழக்கப்பட்டவன் ஒரு நாளும் குடியை நிறுத்த மாட்டான்.

முதலமைச்சர் ஒரு தாயைப் போன்றிருந்து குடிக்காதே, குடிக்கக் கூடாது என்று பயமுறுத்தினார்கள்; குடித்தால் கொன்று விடுவேன், தண்டனை விதிப்பேன் என்று சொன்னார்கள்; கண்டித்தார்கள். ஒரு தாய் தன்னுடைய பிள்ளையைப் பார்த்துச் சொல்வாள். நீ செய்கிற தொல்லைகளைப் பார்த்தால், நீ கொடுக்கிற சங்கடங்களைப் பார்த்தால் உனக்கு வாந்தி பேதிதான் வரும் என்று சொல்லி கஷ்டப்படுவாள். அப்படிச் சொல்வது தன்னுடைய பிள்ளைக்குப் பேதி வர வேண்டுமென்ற எண்ணத்தில் அல்ல; பிள்ளை திருந்த வேண்டும் என்பதற்காக அப்படிச் சொல்வாள். அந்த முறையிலேதான் முதலமைச்சரும் சொன்னார். ஆனால் இன்றைக்கு சாராயம் குடிப்பவன் ஊருக்குத் தலைவனாக, எல்லாவற்றுக்கும் மேலே வந்து நின்று விடுகிறான். இன்றைக்கு நாட்டிலே, கணவனும் மனைவியும் சேர்ந்து குடிக்கும் அளவுக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. நாட்டிலே நிம்மதி இல்லை; தாலி இல்லை; வேஷ்டி இல்லை; உடைக்குப் பதிலாக கோணியைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். அதற்கு யார் காரணம்? அந்தப் பஞ்சமாபாதகத்திற்கு யார் காரணம்? ''கள்ளைக் குடிக்கக்கூடாது, கோடி கோடி கும்பிடப்பா'' என்று யாரோ ஒரு நடிகன் படத்திலே பாடினான். ஏற்கெனவே அந்தத் தீயை வைத்து இருக்கிறார்கள். அது இப்போது எரிகிறது.

தீ வைத்தவன் சொன்னான். நான் ஒரு குச்சி தானே வைத்தேன்; அதை அணைக்க இத்தனை லாரிகளா என்று. ஒரு குச்சியை வெட்டி, தீ வைப்பது சுலபம்; எரிய ஆரம்பித்த பிறகு அணைப்பது கஷ்டம். ஒரு தீக்குச்சி மாதிரி கள்ளுக்கடைகளைத் திறந்து விட்டீர்கள். அதை அணைக்க எம். ஜி. ஆர். எல்லா ஃபயர் ஸ்டேஷன் வண்டிகளையும் அழைத்தார். ஆனால் அணைக்க முடியவில்லை. தீயை அணைப்பதிலே அவர் உறுதியாக இருந்தார். தீயை வைத்தவர்கள் எரிய விடுவதிலே உறுதியாக இருந்தார்கள். அப்படியானால் எரிந்தே போகட்டும் என்று சொல்லிவிட்டார். அதற்கு யார் என்ன செய்வது?

1980 பிப்ரவரி 2] [திரு. ர. ஜெபமணி]

பிரதமர் இந்திராகாந்திக்கு மதுவிலக்கில் நம்பிக்கை உண்டு, ஆனால் சட்டத்தினால் தடுக்க முடியாது; பிரச்சாரத்தின் மூலம் தான் தடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். பாண்டிச் சேரியிலே மதுக்கடைகளைத் திறப்போம் என்று சொல்லித்தான் ஓட்டு வாங்கினார்கள். இங்கே மதுவிலக்கு, அங்கே மதுக்கடை திறப்பு – இப்படி இருந்தால் போலீஸ்காரர்கள் பிரச்சனைதான் பெரிதாகப் போகும். காரணம் இங்கேயிருந்து குடிப்பதற்காக அங்கே போவார்கள்; அங்கேயிருந்து மதுவை கொண்டுவருவார் கள். இடையிலே பெரிய பிரச்சனைகள் உருவாகும். இந்தச் சந்தர்ப்பத்திலே மற்றவர்கள் உள்ளே புகுந்து விளையாடுவார்கள்.

தேர்தல் காலத்திலே என்ன சொன்னார்கள்? தாலிக்குத் தங்கம் தாளிக்க வெங்காயம் கிடைக்கும். அதை நம்பிவிட்டார்கள். தை மாதம் வருகிறது, திருமணம் ஆகும்; அவர்கள் வந்தால் 300 ரூபாய்க்குத் தங்கம் வரும்; 3 பவுனில் பெரிய பெரிய தாலி யாகப் போடலாம் என்று நினைத்தார்கள். தங்கம் என்னாச்சு? தங்கமான பொய்யை ஊரெல்லாம் சொல்லியாச்சு.

(பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷத்துடன் துண்டறிக்கை வீசப் பெற்றது.)

ரொம்ப நல்லாயிருக்கு. இதெல்லாம் நடக்கும். தங்கம் இருக் கட்டும்.

எம். ஜி. ஆர். ஆட்சி வந்தது. என்ன நடந்தது என்று சொல்ல வேண்டும் இல்லையா? வெளியூர்களுக்குப் போய் வந்தவர் களுக்குத் தெரியும். செங்கற்பட்டு, அரக்கோணத்திலிருந்து வந்தால், இரயிலில் ஏற முடியாது. பெண்கள் எல்லாம் மூட்டை, மூட்டையாக உங்கள் கால்மாட்டிலே பொத், பொத் என்று போடுவார்கள் அரிசியை. இல்லையென்றால் அவர்கள் வண்டி யில் ஏற முடியாது. டிரைவருக்கும் இது தெரியும். அவருக்கு ஏதோ கொஞ்சம் கொடுப்பார்கள். அவர் வண்டி ஸ்டேஷனுக்கு சற்றுத்தள்ளி நிறுத்திவிடுவார்; அல்லது மெதுவாக ஓட்டுவார். பெண்கள் எல்லாம் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு போய் விடுவார்கள். நமக்குத் தெரியும். கலர் இல்லாத அரிசியை அப்போது நாம் சாப்பிட்டிருக்கிறோமா?

என் பையனுக்குத் திருமணம் என்று வைத்துக்கொள்ளுங்கள். திருநெல்வேலிக்கு 10 படி அரிசி கொண்டு போக முடியுமா? இரயிலிலே ஒரு வேளை கொண்டு போய்விடலாம். ஆனால பஸ்ஸிலே கொண்டுபோக முடியாது. கண்டக்டர் மூட்டையைப் பார்த்தவுடனே சொல்வான், 'இறங்கு'. ஏன் அப்படிச் சொல கிறான்? செக்போஸ்டில் நிறுத்திவிடுவான். செக்போஸ்டிலே என்ன செய்வார்கள் என்றால் லாரிகளை விட்டுவிடுவார்கள்: ஆனால் மூட்டையை விடமாட்டார்கள். அது அவர்களுடைய பழக்கம்.

[திரு. ர. ஜெபமணி] [1980 பிப்ரவரி 2

இரவோடு இரவாக கேரளாவுக்கு அரிசி போகும். எப்படி போகும்? கழுதை மேலே அரிசி மூட்டையை ஏற்றி, காட்டு வழியாக விட்டுவிடுவார்கள். அங்கே போய் மூட்டையை எடுத்துக்கொள்வார்கள். இந்த நிலைமைகள் எல்லாம் நீங்கி, அருமையான சிறுமணி அரிசி வீடு தேடி வருகிறது. எப்படி வேண்டுமானாலும் சாப்பிடு, எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடு, எங்கே வேண்டுமானாலும் கொண்டு போ, பெண் இருந்தாலும் சரி, பிள்ளை இருந்தாலும் சரி, மகன் இருந்தாலும் சரி, மருமகன் இருந்தாலும் சரி, வேறு யார் இருந்தாலும் சரி, கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையில் எங்கு வேண்டுமானாலும் அரிசி கொண்டு போகலாம் என்ற ஒரு சூழ்நிலை உருவாக்கப் பட்டிருக்கிறதே. அதற்கு ஒரு நன்றி இல்லையா?

[பிற்பகல் 12.50]

தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகள் வந்தாலோ, அல்லது பெண்ணுக்குக் கல்யாணம் வந்தாலோ கண்டிப்பாக சீனி கிடைக்க வேண்டும், ஆகவே அவர்கள் அலுவலகங்களைப் பார்த்து அரை மூட்டை சீனி கொடுங்கள் என்றால் கிடைக்க வில்லை, கால் மூட்டை கொடுங்கள் என்றால் கூட கிடைக்காத நிலை ஏற்பட்டது. இதற்கு முன்பு 2 ரூபாய் 10 காசுக்குத் தாராளமாகக் கிடைத்தது. அப்போது எல்லோருக்கும் தாராளமாகக் கிடைத்தது. அப்பொழுது சீனி வேண்டும் என்று போய்க் கேட்டால் உங்கள் பெண் கல்யாணத்தைத் தள்ளி வையுங்கள் என்று சொல்லக்கூடிய நிலை ஏற்பட்டது. ஆகவே சீனி கிடைக்கவில்லை என்றதும் இப்படி ஓட்டு போட்டுவிட்டார்களே, இதற்கு முன்பெல்லாம் இப்படிப்பட்ட நிலை இருந்ததில்லையா? 19 ரூபாய்க்கு எண்ணெ விற்க வில்லையா? 8 ரூபாய்க்கு அரிசி கிடைக்கவில்லையா? முருங்கைக்கீரை சாப்பிட்டு கொண்டிருந்த நிலை ஞாபகம் இல்லையா? அதையெல்லாம் மறந்துவிட்டு ராஜினாமாச் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். 9 ரூபாய்க்கு அரிசி கிடைத்ததே, அதையெல்லாம் மறந்துவிட முடியுமா? ஒரு நல்ல நிலையை ஜனதா கட்சி ஏற்படுத்தியதே அதற்கு நன்றியாவது சொல்ல வேண்டாமா? நன்றி சொல்ல வேண்டாம். ஏனென்றால் நமக்கு நன்றி சொல்லும் பழக்கமே கிடையாதே. (மணியடிக்கப்பட்டது) கொஞ்சம் விடுங்கய்யா. என்க்கு ஒரு பத்து நிமிடமாவது பேசுவதற்கு அனுமதி தாருங்கள், எங்களுடைய கட்சியிலே வேண்டுமானால் மற்றவர்கள் பேசுவதைக் குறைத்துக்கொள்வார்கள்.

முன்பு நாம் பேசுவது பத்திரிகையிலே வராத நிலை இருந்தது. ஆனால் ஜனதாக் கட்சி ஆட்சி வந்தது. பாராளுமன்றத்தில் கேள்வி கேட்கலாம், பாராளுமன்றத்திலே பேசுவதெல்லாம் பத்திரிகையிலே வரலாம் என்றார்கள். அது தப்பா? பத்திரிகையிலே வரலாமா, நாங்கள் எழுதலாமா என்றதற்கு, நன்றாக எழுதுங்கள் என்று சுதந்திரம் அளிக்கப்பட்டது. எதிர்க்கட்சித்

தலைவர் என்பவரும் ஒரு மந்திரி அந்தஸ்து கொடுக்கப்பட்டார் ஜனதா ஆட்சியில். அது மட்டுமல்ல, ரேடியோவிலே ஆளும் கட்சி மட்டுமல்ல எதிர்க்கட்சிக்காரர்களும் பேசலாம் என்று சொன்னார்கள், இது தப்பா? நன்றாகத் திட்டுங்கள் என்று அனுமதி கொடுக்கப்பட்டதே, இது தப்பா? அது மட்டுமா? டெலிவிஷனிலேயும் எல்லோரும் பேசலாம், திட்டலாம் என்று அனுமதி கொடுத்தார்களே. நீதிபதிகளாக இருக்கலாமா என்றபோது இருக்கலாம் என்றார்கள். நாங்கள் ஆண் பிள்ளைகளாக இருக்கலாமா என்றபோது இருக்கலாம் என்றார்கள். தொழிலாளர்களுக்கு போனஸ் கிடைக்குமா என்றபோது கிடைக்கும் என்றார்கள். கம்பல்சரி டெப்பாசிட் பணத்தைத் திருப்பித் தருகிறோம் என்று சொன்னார்கள். கம்பல்சரி ரிட்டையர்மென்ட் வேண்டாம் என்று சொன்னார்கள். இதெல்லாம் தப்பா? இதையெல்லாம் தவறு என்று நினைக்கிறார்களா? மத்திய அரசு இரண்டு வருட ஆட்சியிலே என்ன தப்பு பண்ணியது? அந்த சர்க்கார் ஆட்சியிலே என்ன தப்பு நடந்தது? 20 பைசா கொடுத்தால் போதும். மெட்ராஸ் பஸ்ஸிலே ஏற முடிகிறது. இது குறித்து நான் முன்பே மாநில அரசாங்கத்திடம் சொல்லி இருக்கிறேன், கிராமங்களிலும் பஸ் கட்டணத்தை 20 பைசா என்ற அளவிலே குறைக்க வேண்டும் என்று. நகரத்திலே உள்ளவர்கள் மட்டும் 20 பைசாவிலே போகிறார்கள், நாங்கள் மட்டும் 50 பைசா கொடுக்க வேண்டுமா என்று அவர்கள் நினைக்கிறார்கள் இன்றைக்கு கிராமம் பூராவும் பஸ் ஓடுகிறது. கிராமங்களில் கழுதைகள் நிற்கிற சந்துகளுக்கெல்லாம் பஸ் வருகிறது. இப்படி பல வசதிகள் ஏற்படுத்திய பிறகும், தங்கம் என்று வந்தவுடனே அந்தப் பக்கம் ஓடிவிடுகிறார்களே. விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தையிடம் 'லட்டு' என்று சொல்லிவிட்டால் போதும், அது விளையாட்டை விட்டுவிட்டு ஓடிவந்துவிடும். அதே மாதிரி சென்டிமென்ட் காரணமாகத்தான் தங்கம் என்றவுடனே, எல்லாம் மறந்து விட்டது. பாலம் கட்டியதெல்லாம் மறந்துவிட்டது. எல்லா ஊர்களுக்கும் ரோடு போட்டதெல்லாம் மறந்து விட்டது. எல்லாமே வசதியாகக் கிடைத்தது என்பதெல்லாம் மறந்துவிட்டது. இடையிலே கொஞ்ச நாட்கள் எண்ணெ கிடைக்கவில்லை, சீனி கஷ்டமும் வந்தது. இதெல்லாம் எப்படி வந்தது? பிளான் பண்ணி வேலை செய்தார்கள். இந்த மாதிரி எல்லாம் ப்ளான் பண்ணி ஒட்டு வாங்கிவிட்டால் அது நிற்கும் என்றா நினைக்கிறீர்கள்? எனக்கு நல்லாத் தெரியும். இவர்கள் இரண்டு பேரும் சேர்ந்திருக்கிறார்களே, 6 மாதத்திற்கு முன்பு எப்படி இருந்தது. ஆகவே இந்தக் கூட்டெல்லாம் நிரந்தரமில்லாதது.

நீங்களே பேசுவீர்கள். அங்கே பேசியாச்சு. பாராளும் மன்றத்திலே ஒருவர் மாநிலங்களுக்கு இனிமேல் அதிக அதிகாரம் கிடையாது. அங்கே இருந்துதான் அதிகாரம் இனிமேல் இங்கே வரும். அப்படிச் சொன்னவுடன் இங்கே பேசுகிறவர்களுக்கு

ஒன்றும் ஓடவில்லை. ஒரு மூட்டை புளியை கரைத்ததுபோல் இருக்கிறது. இதற்கு எப்படியடா பதில் சொல்வது. மாநில சுய-ஆட்சி, மத்தியில் கூட்டாட்சி இன்னும் என்ன ஆச்சு? சொல்ல முடியவில்லை. சாதாரணம் என்றால் யாரும் பேசலாம். ஏன் என்றால் கோர்ட் மூலமாகப்போகவேண்டும் என்று சொன்னோம்.

திரு. நா. சுந்தரராஜ் : ஒரு உறுப்பினர் பேசுவது என்பது அரசின் கொள்கை அல்ல. அந்த உறுப்பினருடைய தனிப்பட்ட கருத்து தான்.

திரு. ர. ஜெபமணி : அப்படியே இருக்கட்டும். தம்பி சுந்தரராஜ் அவர்கள் ரொம்ப உருக்கமாக சொன்னார்கள். அது அப்படியே இருந்தால் நல்லது. அதற்கு மேலே அது உருவம் எடுக்கும்போது உம்மையும், என்னையும் சேர்த்து விழுங்கி விடாமல் இருந்தால் வணங்குவோம், வாழ்த்துவோம், தொழுவோம், தோத்தரிப்போம். பின்னாலே பார்த்துக் கொள்வோம்.

இந்த நாட்டுக்கு நல்லது நடக்க வேண்டுமானால், நல்லது நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு சிறுவயதிலிருந்தே கஷ்டப் பட்ட எங்களைப் போன்ற தொண்டர்கள் நன்மை எங்கே என்று தேடிப் பார்த்து சேர்ந்துக் கொள்வோம். அதிலே நாங்கள் கொஞ்சமும் பங்கம் இல்லாமல் இருப்போம். காழ்ப்பு உணர்ச்சி எங்களுக்கு எப்பொழுதும் கிடையாது. எங்கள் எதிரியையும் துன்புறுத்த வேண்டும் என்ற எண்ணமே எங்களுக்கு கிடையாது. என்னை அடித்தவர்கள் கூட இந்தச் சிறைச்சாலையில் இருக் கிறார்கள். என் தி. மு. க. நண்பர்களுக்குக் கூட தெரியும். என்னை அடித்த உடனே அவர்கள் எல்லோரும் அழுதார்கள். அந்தத் தம்பிமார்கள் இன்றைக்குக் கூட என்னைப் பார்த்தால் என்னோடு காப்பி சாப்பிட்டுவிட்டுதான் போகிறார்கள். நன்றாக அடித்தவர்கள். செம்மையாக அடித்தவர்கள் என்னை. ''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்'' என்று வள்ளுவர் சொன்னாரே அவர் படத்தை ஏன் இங்கே மாட்டி வைத்திருக்கிறீர்கள்? அதைப் பார்த்து பார்த்து, படித்து படித்து எங்களுக்கு உரம் ஏறிவிட்டது. இன்னா செய் தாரை ஒறுத்தி அவர்களுக்கு நன்மை செய்து விடுகிறோம் என்ப தினால் எங்களை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று

நினைப்பது கூடாது. குட்ட குட்ட குனிவது என்பது தவறு. குனியக் குனியக் குட்டுவது என்பதும் தவறு. நாங்கள் எது வந்தாலும் ஏற்போம்.

இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்

பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்

விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்

சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக் கிலேனே. ஜெய்ஹிந்த்

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: சட்ட மன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எனது கருத்துக்களை சொல்லவிருக்கிறேன். புதிய ஒரு அரசியல் சூழ்நிலையில், நாடாளு மன்றத் தேர்தல் நடந்து முடிந்து மத்தியிலே இந்திரா காங்கிரஸ் பதவி ஏற்ற பிறகு இருக்கிற சூழ்நிலையிலே தமிழ்நாடு சட்டமன்றம் கூடுகிறது. தமிழ்நாடு சட்டமன்றம் கூடி ஆளுநர் உரையின் மீது விவாதிக்கிற போது இந்த அரசு ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று வெளி நடப்பு நடந்த பிறகு பொது விவாதம் நடந்துக் கொண்டிருக் கிறது. ஆகவேதான் அனைவருடைய கவனமும் ஈர்க்கும் வகை யில் இந்த அரசு ராஜிநாமாச் செய்ய வேண்டுமா, வேண்டாமா என்கிற சர்ச்சையிலே அதிக நேரம் எடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஆரம்பத்திலேயே ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

இப்படி ராஜிநாமாச் செய்யவேண்டுமா வேண்டாமா என்கிற கருத்துக்கு அரசியல் முக்கியத்துவம் ஏற்பட்டாலும் கூட தமிழக மக்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என்று நான் கருதுகிறேன். எங்கள் கட்சியும் அப்படித்தான் கருதுகிறது. காரணம் என்ன என்பதை நான் அதிக நேரம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை அவசியமான புள்ளி விவரங்களை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசிய தோழர் திரு. கோவிந்த ராசன் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஏன் அப்படி சொல் கிறோம் என்று சொன்னால், மூதறிஞர் ராஜாஜி ஆளுகிற போது அருப்புக்கோட்டை தேர்தலிலே, தேர்தலையே சவாலாக்கி, ராஜிநாமாச் செய்கிறோம் என்று பேசிய பிறகும், அப்படி ராஜி நாமா எதுவும் நடந்து விடவில்லை. திண்டுக்கல் தேர்தலிலே சவால் விட்டபோதும் ராஜிநாமா நடந்து விடவில்லை. கோவை தேர்தலிலே' ராஜிநாமாச் செய்கிறோம் என்று சொல்லியிருந்த

போதிலும் ராஜிநாமா நடந்து விடவில்லை. அதேபோல் சிக்மகளூர், அதற்குப் பிறகும் ராஜிநாமா நடந்தது கிடையாது. பல்வேறு அனுபவங்கள் உள்ளன. ஆகவே ராஜிநாமா கோரிக்கையை வைக்கிற போது, நிச்சயமாக தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலிலே எதிர்காலத்தை கணிப்பிலே வைத்துக் கொண்டுதான் பேச வேண்டுமே தவிர ராஜிநாமா கோரிக்கையை தங்கள் தங்கள் அரசியல் விருப்பத்திற்காகப் பேசக் கூடாது. அப்படிப் பேசுவது உரிமை என்பதுதான் என்றாலும்கூட, தமிழ்நாட்டுக்கு பொதுவான அரசியல் இல்லை என்று பேசுகிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்தக் காலகட்டத்தில் நாடாளு மன்றத் தேர்தலை அடிப்படையாக வைத்துக் கொண்டு சட்ட மன்றத் தேர்தலிலே வெற்றி பெற்றிருக்கிற ஒரு கட்சியை ஆட்சியை மாற்றும் ஆசையிலே ராஜிநாமாச் செய் என்று சொல்வது சட்ட வரம்பிற்கோ நியாயத்திற்கோ புறம்பானது, அது சரியல்ல என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

[பிற்பகல் 1.00]

நான் அதில் அதிக நேரம் ஈடுபட விரும்பவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். அப்படிக் கலைப்பதன் மூலம் என்ன பலன் ஏற்படும் என்பதை இந்த மன்றத்தின் மூலம் ஒரு நிகழ்ச்சி பற்றிக் கூற விரும்புகிறேன்.

கேரளாவில் கலைத்தது நினைவில் இருக்கலாம். கேரளத்தில் அன்று கலைத்தார்கள் அவர்கள் பதவியில் இருக்கிறபோது, மீண்டும் அந்த அணி பதவிக்கு வந்திருக்கிறது என்பதைச்சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நினைவூட்ட விரும்புகிறேன். நீங்களும் ஏதோ கலைப்பதால் பயப்படவில்லை என்றாலும்கூட, ஏதோ தமிழ்நாடு கட்சி என்ற பெயரால் இதுமாதிரி நிகழ்ச்சி வருமோ என்று அஞ்ச வேண்டியதில்லை.

அதுபோல் தேர்தல் வந்தால் என்ன நடக்கும் என்பது உங்களுக்கும் தெரியும், நாட்டுக்கும் தெரியும். உத்தர் பிரதேசில் காங்கிரஸ் (இ)-க்கு கிடைத்தது 35% வாக்குகள். இரண்டு எதிர்கட்சிகளுக்கு மட்டும் 50% வாக்குகள் என்று சொன்னால் கலைப்பதன் மூலம் நிச்சயமாகத் தேர்தல்கள் வந்தால், ஒரு எதிர்கட்சி அணியிலிருந்து தோற்பார்களேயானால் பாராளுமன்றத்தைக் கலைக்கத் தயார் என்ற அடிப்படையில் தேர்தல்கள் வைக்க வேண்டும். அப்படி ஒரு நிலையை உருவாக்கிக் கொண்டு வருகிற சட்டமன்றத் தேர்தலில் நாங்கள் தோற்றால் பாராளுமன்றத்தைக் கலைப்போம் என்று தேர்தல் அறிக்கை வைத்தால் எல்லாவற்றையும் கலையுங்கள். அந்தச் சவாலை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

1980 பிப்ரவரி 2] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

ஆகவே தயவுசெய்து கலைப்பது என்பதைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் நிச்சயமாக பழைய அனுபவங்களை உடைய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் யோசிப்பார்கள் என்று கருதுகிறோம். அப்படி யோசிக்காவிட்டால் கேரளாதான் அதற்கு முடிவாக இருக்கும் என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆக, இந்த நிகழ்ச்சியில் நான் அதிகமாகச் செல்ல விரும்பவில்லை. இன்றைக்கு ஆளுநர் அவர்கள் உரையில் முதல் அம்சமே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக வைக்கப்பட்டிருக்கக்கூடிய அறிக்கை என்ற முறையில் குழப்பம் இருக்கிறது, அந்தக் குழப்பம் கூடாது. கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்து அரசியல் செய்ய முடியாது. ஏனென்றால் உங்கள் அனுபவம் என்ன காட்டுகிறது? அவசர நிலையை ஆதரித்தது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். அது மாத்திரமல்ல,

இந்திரா காந்தி அம்மையார் தோற்ற பிறகு பாராளுமன்றத்தில் ஜனதாக் கட்சி வெற்றி பெற்று உச்ச ஸ்தானத்தில் இருக்கிறபோது இந்தியாவிலேயே ஒரே ஒரு முதல் அமைச்சர் தான் அவசர நிலையை ஆதரித்துப் பேசினார்கள் என்பது உங்களுக்கும் தெரியும். நமக்கும் தெரியும். அது மாத்திரமல்ல. அதற்குப் பிறகு சிக்மகளூரில் ஆதரித்தார்கள். தஞ்சாவூரில் ஆதரித்தார்கள் இவ்வளவிற்கும் பிறகு தொடர்ச்சியாக, இக்கட்டான நிலையில் தனி கோர்ட் வேண்டாம் என்று பாராளுமன்றத்தில் வோட்டு போட்டார்கள். இவ்வளவிற்குப் பிறகு உங்கள் ஆட்சியைக் கலைப்போம் என்று பேசுகிறவர்மேல் உங்களுக்கு இன்னும் ஊசலாட்டம் இருக்குமானால் அதை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன். ஏனென்றால் அந்த ஊசலாட்டம் ஆளுநர் உரையில் தென்படுகிறது என்று கருதுகிறேன். ஆகவே அதை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று சொல்கிறபோது அது மற்றவர்களுக்கும் பொருத்தமாக இருக்கும். எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்றால் இக்கட்டான சூழ்நிலையில் ஆதரித்தும்கூட அந்தக் கட்சியின் ஆட்சியைக் கலைப்போம் என்று சொன்னால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அது ஒரு படிப்பினையாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்தத் துறையில் நம் தமிழ்நாட்டு மக்கள் தமிழ்நாட்டு அரசியலில் என்ன செய்யமுடியும் என்ன செய்ய வேண்டும் என்பதை இரண்டரை ஆண்டுக் காலத்தில் இந்த ஆட்சியில் ஏற்பட்ட படிப்பினைகளை வைத்துக்கொண்டு, தன் தவறுகளை, தன் போக்கில் உள்ள குறைகளை மாற்றிக்கொண்டு ஒரு புதிய இடதுசாரி மனோபாவத்தோடு, இடதுசாரி நிலையோடு இந்த நாட்டின் நிலையை மனதிற்கொண்டு தன் பாதையில் சில திருப்பங்களைக் கொண்டு வந்தால் நிச்சயமாக இந்த ஆட்சியை மாற்றுவது என்ற கனவு நிச்சயமாகப் போய்விடும். கடந்த காலத்தில் தவறா? தவறுகள் உண்டு. இந்தச் சட்டமன்றத்தில் இரண்டுவிதமான விமர்

சனங்கள் வந்திருக்கின்றன. என்ன இருந்தாலும் இந்த ஆட்சியை மாற்ற வேண்டும் என்பதற்காகச் சொல்கிற குற்றமே கண்டு கொண்டிருக்கிற ஒருவிமர்சனம். யார் செய்தார்கள் என்பதல்ல. மற்றொரு பக்கத்தில் வேறு ஒரு விமர்சனம். இந்த ஆட்சி தமிழ் நாட்டிலுள்ள பெருவாரியான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த ஆட்சி மூலம் பல்வேறு கொள்கைகளை நாட்டு மக்களுக்காகச் செய்யவேண்டும் என்பதற்காகக் கொண்டுவரப்படுகிற விமர்சனம். இந்த இரண்டு விமர்சனங்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக தொடர்ச்சியாக இந்த ஆட்சி தமிழ்நாட்டு மக்களின் நலனில் அக்கறைகொண்டு மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் தான் நாங்கள் விமர்சித்துக் கொண்டு வருகிறோம். ஒன்று கூற விரும்புகிறேன். நகைச்சுவைக்காக அல்ல. எங்கள் மதிப்பிற்குரிய ஜீவா அவர்கள் பொதுக் கூட்டங்களில் அடிக்கடி எடுத்துச் சொல்வதை, அந்த உதாரணத்தை இங்கு ஒன்றிரண்டு தடவை கூறியிருக்கிறேன். ஒரு அரசன் வேட்டைக்குப் போனான். துப்பாக்கியோடு சென்றும் வெறும் கையோடு வரும்போது ஒரு குருவி ஒரு காசை வைத்துக்கொண்டு ஒரு காசு யாருக்கு வேண்டும், ஒரு காசு யாருக்கு வேண்டும் என்று சப்தம் போட்டதாம்,

அரசன் அந்தக் குருவியிடமிருந்து அந்த ஒரு பைசாவை வாங்கி விட்டான். மீண்டும் அந்தக் குருவி சொல்லியது— 'பார்த்தாயா' பார்த்தாயா, என்னுடைய ஒரு காசை அரசன் கொண்டு போய் விட்டான்.என்று அதைக்கேட்ட அரசன் என்னடா இது தொந்தரவு என்றுசொல்லி, மீண்டும் அந்தக்காசை குருவியிடம் கொடுத்தான். கொடுத்தவுடன், மீண்டும் குருவி 'அரசன் பயந்துக் கொண்டு அதைத் திருப்பிக் கொடுத்து விட்டான்' என்று சொன்னதாம்' அதைப்போல், தொடர்ச்சியாக தயவுசெய்து சிந்தியுங்கள். இந்த ஞானத்தோடு எதிர்கட்சிக்காரர்களை அணுகினால், அவர்களும் தங்கள் ஒத்துழைப்பைத் தர ஒத்துக்கொள்வார்கள். முன்கூட்டியே எந்த ஒரு அறிவிப்பையும் கொடுப்பதற்கு முன்பாக, அவர்களுடன் கலந்து விவாதிக்க வேண்டும். ஆனால், நீங்கள் அறிவிப்பைக் கொடுத்துவிட்டு, அதைத் திரும்ப பெறுவது என்பது இந்த ஆட்சிக்கு உகந்தது அல்ல. இப்படிச் செய்வது, அரசுக்கு நிலையான கொள்கை இல்லையென்பதை எடுத்துக் காட்டுகிறது.

உதாரணத்திற்கு வேண்டுமென்றால் சொல்லுகிறேன். அண்மையில், நீங்கள் மதிப்பிற்குரிய, ஆனால் அந்த அமைச்சர் இங்கில்லை, சௌந்திரபாண்டியன் அவர்களுக்கு தொழில் இலாகா பொறுப்பையும் கொடுத்தது மாதிரி. ஏற்கனவே, பின்தங்கிய வகுப்பினர்களுக்குச்சலுகை என்ற பெயரால் சட்டங்களை மாற்றி மாற்றி செய்த நிகழ்ச்சி. மது விலக்கு நிகழ்ச்சி. இப்படி உங்கள் கட்சிக்குள்ளேயே, இன்னும் சொல்லப் போனால்

1980 பிப்ரவரி 2] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகை, அதை மாற்றிக் கொண்ட நிகழ்ச்சி இருந்து கொண்டிருக்கிறது. உங்களுடைய கட்சியின் விவகாரத்திற்குள் நான் செல்வதாகக் கருதக் கூடாது. நான் சொல்வது, நீங்கள் அவசியமாகவும், அவசரமாகவும் எல்லாக் கட்சிக்காரர்களையும் கலந்து பேசி, சட்டங்களை இயற்றி இருந்தால், நிச்சயமாக இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் வந்திருக்காது என்பதை மட்டும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இதுபோல் பல்வேறு உதாரணங்களை என்னால் சொல்ல முடியும். ஒரு இயக்கம்போல் செயல்படுகின்றீர்களே தவிர, ஒரு கட்சிபோல் செயல்படாத காரணத்தினால் தான் இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகின்றது. நான் இவ்வாறு விமர்சிப்பதால், வேறுவிதமாகப் புரிந்துக்கொள்ள வேண்டாம் என்றுக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் கட்சியாக மாறி, யாருடைய நலத்தைக் கருத்தில் கொண்டு, சட்டம் கொண்டுவருகின்றீர்களோ, அதைப் பற்றி முன்கூட்டியே எல்லாக் கட்சிகாரர்களுடனும் விவாதித்து இருந்தால் நிச்சயமாக அவர்கள் ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கும். அப்போது இந்த ராஜிநாமா குரல்கூட வந்திருக்காது. தமிழ்நாட்டிலே வந்திருக்காது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் பல்வேறு நிகழ்ச்சிகள் இருக்கின்றன. உதாரணமாக, உங்களுக்கே தெரியும். ஆளுநர் அவர்கள் உரையில், குத்தகை நில உச்சவரம்பு 5 ஸ்டாண்டார்டு ஏக்கர் அளவாக இருந்தது. இதை 3 ஸ்டாண்டர்டு ஏக்கர் அளவுக்குக் குறைக்க, அவசரச் சட்டமொன்றை அரசு அண்மையில் பிறப்பித்தது என்று சொல்லியிருக்கிறீர்கள். எந்த ஒரு குத்தகைதாரனும், உழுபவனும் தான் இருக்கின்ற நிலத்தைவிட்டுவிட்டு போக விரும்ப மாட்டான். இதனால் பல பேர்களுக்கு நிலம் கிடைக்க வாய்ப்பு இருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றீர்கள். இது எப்படி ஏற்படும் என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட அரசியல் சூழ்நிலையில் இப்படிப்பட்ட அறிவிப்புகளைக் கொடுக்கும்போது எல்லாக் கட்சிக்காரர்களையும் கலந்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்குவதில் ஈடுபடவேண்டும். அப்படி ஈடுபடும்போது அவர்கள் தங்கள் தனித்தன்மையை விட்டுவிட வேண்டுமென்று சொல்லவில்லை. இருந்தாலும், எல்லாக் கட்சிக்காரர்களையும் கலந்து முக்கியமான பிரச்னைகளில் சட்டங்களைக் கொண்டு வருவது கடமை என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அந்தக்கருத்தோட்டங்களும், விவரங்களும் உங்களுக்குத் தெரியும்.

தயவுசெய்து தொடர்ச்சியாக இந்த அரசாங்கம் செய்த அறிவிப்புகளை, குறிப்பாக விவசாயிகள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை, அதுசம்பந்தமான கருத்தோட்டங்களை, அது சம்பந்தமாக எதிர்க் கட்சிகள் தெரிவித்தக் கருத்துக்களை

[திரு. கூத்தகுடி ச. சண்முகம்] [1980 பிப்ரவரி

எல்லாம் நீங்கள் வாங்கிப்படிக்க வேண்டும். அறிவித்த அறிவிப்புகளையும், அதற்காகச் செய்யப்பட்ட மாற்றங்களையும் வாங்கிப் படித்துப் பார்த்தாலே உங்களுக்குத் தெரியும். ஒரு சரியான, நிரந்தரமான, உறுதியான கொள்கையை நீங்கள் கடைப்பிடிக்கவில்லை. அப்படியானால், மக்கள் சொல்கின்ற கருத்துக்களை ஏற்று செயல்படக் கூடிய ஜனநாயக மரபைப் பெற்றிருக்க வேண்டும். இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. உதாரணமாய் இதிலேயும் கூட ஒரு குழப்பம். 'மத்திய அரசாங்கம் அந்தக் கடன்கள் முழுவதையும் ரத்து செய்ய முடியா விட்டாலும் என்று போட்டிருக்கிறீர்கள். ஏன் அப்படிப் போட வேண்டும்? மத்திய அரசாங்கம் தமிழக அரசாங்கத்திற்கு கொடுக்கா விட்டாலும், நாங்கள் தள்ளுபடி செய்கிறோம் என்று ஏன் போடக் கூடாது? இதிலேயும்கூட ஒரு தெளிவு இல்லை, மத்திய அரசாங்கம் ரிசர்வ் பாங்கி மூலமாக 250 கோடி தமிழ் நாட்டிற்குக் கொடுங்கள், ரத்து செய்கிறோம் என்று ஏன் சொல்லக் கூடாது? தைரியமாக இந்த மன்றத்தில் அத்தனைக் கட்சிகளும் சேர்ந்து ஒரு தீர்மானம், அதாவது இந்தக் கடன்கள் முழுவதையும் ரத்துசெய்ய வேண்டுமென்ற ஒரு தீர்மானம் போட வேண்டும். அந்தத் தீர்மானத்தை நாங்கள் கொடுக்கப் போகிறோம்.

[பிற்பகல் 1-10]

அதோடு மாத்திரமல்ல; இன்னொன்றிலும் தயக்கம் காட்ட வேண்டாம். நாராயணசாமி நாயுடு மற்றுமுள்ளவர்கள் பேரில் உள்ள அவ்வளவு வழக்குகளையும் வாபஸ் செய்யவேண்டும். விவசாயிகளுடைய கோரிக்கைகளை உணர்ந்து அந்தக் காரியத்தைப் பூர்த்தி செய்துவிட்டால் இயக்கங்கள் புசுபிசுத்துப் போய்விடும். பெருவாரியான விவசாயிகள் போராடுவதற்கு வரமாட்டார்கள். பிரச்சினைகளுக்கு ஆளாகியிருக்கும் ஒருவர் நிவாரணம் தேட தலைவரைத் தேடுகிறான். முனைப்பாகப் போராடும்போது அவரைப் பெரியவராக மாற்றுகிறான். ஆகவே, அந்தத் துறையில் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு 3 ஸ்டாண்டர்டு உச்ச வரம்பு. நீங்கள் ஒரு அடி பாய்ந்தால் ரெவின்யூ போர்டில் உள்ளவர்கள் 100 அடி பாய்கிறார்கள். ரெவின்யூ போர்டைக் கலைப்பது என்ற முடிவு தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு நல்லது. மூன்று ஸ்டாண்டர்டு ஏக்கரை ஒன்றரை ஏக்கராகப் பிரித்து எல்லோருக்கும் கொடுப்பது என்ற முடிவு எப்படிப் பொருத்தமானது? மூன்று ஏக்கரை உழுது கொண்டிருப்பவன் விடுவானா? விவசாயத் தொழிலாளர்களாக இருக்கக்கூடியவர்கள் உழக் கூடிய நிலத்தை எடுத்தால் எப்படி ஏற்றுக்கொள்வான்? எந்த முறையில் ரெவின்யூ போர்டு அந்த உத்தரவைப் போட்டது என்று செக் அப செய்யவேண்டும்.

பொதுப் பணித் துறையிலிருந்து எனக்குச் சேர வேண்டிய பணத்திற்காக டி.ஏ. பில் அனுப்பி அது ஆறு மாதமாகிறது. 198 ரூபாய்க்கு ஒரு பில். இன்னும் வரவில்லை. பொதுப்பணித் துறைச் செயலாளருடைய சம்பளத்தை ஆறு மாதத்திற்கு ஒரு முறை வாங்கிக் கொள்ளத் தயாரா ? அதைப் பற்றியெல்லாம் நடவடிக்கை எடுக்க இந்த அமைச்சரவை ஏன் தயங்குகிறது. அதிகாரிகள் தங்கள் இஷ்டம் போல் செயல்படும் போக்கைப் போக்க வேண்டும். காட்டு இலாகா, தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள். மரம் திருட்டுத்தனமாக வெட்டப் படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதில் ஆட்சேபணை இல்லை. இலாகாவிலே இருக்கக்கூடியவர்களே மரங்களைத் திருடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? தெரியும். 50,000 ரூபாய் பெறுமானம் உள்ள மரத்தை இரண்டாயிரம் ரூபாய் என்று போட்டுத் திருடுகிறார்கள். அந்த அளவுக்கு அங்கே அமைப்புகள் இருக்கின்றன. என்னுடைய பகுதியில் பிரான் மலையில் ஆண்டாண்டு காலமாக வேலி இருக்கிறது. வயலுக்குப் பாதுகாப்பாக கள்ளி வைத்து வேலி வைக்க வேண்டு மென்று சொன்னால் இராமநாதபுரம் கலெக்டர் அமைச்சர் வந்து வேலி வைத்துச் செல்லட்டும் என்று சொல்கிறார்கள். அதிகாரிகள் சொல்லுவதை அப்படியே உண்மை என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளில் நல்லவர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் அப்படி நல்லவர்களாக இருப்ப தில்லை. அப்படி யார் பேரிலேனும் புகார் வருமானால் அவர்கள் மீது நீங்கள் நடவடிக்கை எடுகக வேண்டும். இல்லாவிட்டால் இந்த நாட்டு மக்கள் உங்கள் மேல் நடவடிக்கை எடுப்பார்கள். அந்த அளவுக்கு நாட்டுமக்கள் உணர்வு போய்க் கொண்டிருக்கிறது.

ஜாமீன் வழக்குகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. குற்றத் தடுப்பு என்ற வகையில் தடுக்கிறார்களாம். ஐயாப்பட்டு என்ற ஊரில் கை வெட்டப்பட்டு வீடுகள் உடைக்கப்பட்டதற்கு ஜாமீன் வழக்கு இல்லை. அது முடிந்த பிறகு ஜாமீன் வழக்கு. மேலே அதிகாரி சொன்னார், பிடித்துத்தான் தீர வேண்டுமென்று சொன்னார்கள் என்கிறார். ஜாமீன் வழக்குப் போடும் முறை இப்படித்தான் இருக்கிறது. கட்குடி திருவாடானை தொகுதியில் இருக்கிறது. அங்குள்ள ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அந்தப் பகுதி அரிசனங்கள் புறம்போக்கை ஆக்கிரமித்துக் கொண்டிருக் கிறார்கள் என்று சொல்லி அரிசனங்கள் மேல் கேஸ் போட்டிருக் கிறார். அவர்கள் எப்படி ஓட்டுப் போடுவார்கள் ?

நான் உதாரணம் கொடுக்கிறேன். தயவுசெய்து சிந்திக்க வேண்டும். ஆகவே இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிற அரசியல் மாற்றத்தால் ஏற்பட்டிருக்கக் கூடிய பொதுவான நிகழ்ச்சிகளில் கோணல் ஏற்பட்டு இருந்தாலும், இந்தமாதிரியான நிகழ்ச்சிகள், பிரச்சினைகள் நமக்கு விரோதமாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர்ப் பிரச்சினை. எதிரே அண்ணன் அவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். கணபதிபட்டியிலே குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்று சொன்னோம், அரசாங்கம் உத்திரவு போடுகிறது. அவர்களுடைய நல்ல எண்ணத்தைப் பாராட்டுகிறேன், குடிநீர்ப் பிரச்சினை தீர வேண்டும், மேல்நிலைத் தொட்டி இருக்க வேண்டும், மோட்டார் ஓடவேண்டும் என்ற நல்ல உணர்வு இருக்கிறது. எல்லா ஊர்களுக்கும் போய் அமைச்சர் பார்க்க முடியுமா? உண்ணாவிரதம் இருந்த பிறகு உத்திரவு போட்டு மோட்டார் ஓடுகிறது என்று சொன்னார்கள், ஆனால் திரும்பப் போய் பார்த்தால் ஓட வில்லை. அரசாங்கம் போட்ட உத்திரவு சரியாக அமலாக்கப் படுகிறதா அது மக்களுக்குப் பயனளிக்கிறதா என்று திரும்பப் போய்ப் பார்ப்பதில்லை. அப்படிப் பார்த்து காரியம் சரியாக நடைபெறவில்லை யென்றால் ஏன் ஓடவில்லை என்ற காரணம் கேட்கவேண்டும், சரியான காரணம் இல்லாவிட்டால் அதற்குப் பொறுப்பானவர்களை விலக்கவேண்டும், லஞ்சம் வாங்குவதற்காக விலக்குவது பற்றியெல்லாம் ஆராய்ச்சி பண்ணவேண்டாம், இந்த மாதிரி நடவடிக்கைகள் எடுத்தால்தான் காரியங்கள் ஒழுங்காக நடைபெறும், இங்கே இருக்கின்ற எல்லாச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும், நான் கட்சி பற்றி பேசவில்லை, அவர்கள் சொல்வார்கள், அவர்கள் சொந்த அனுபவத்தில் பார்த்திருப்பார்கள். அண்ணா தி.மு.க. அரசின் நல்லெண்ணத் தையோ, அமைச்சர் பெருமக்களின் முயற்சியையோ குறை சொல்வதில்லை. அவர்கள் செய்த முயற்சி திரும்பவும் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கிறதா என்று பார்க்கிற பார்வை அதிகமாக இல்லை, நான் மிக ஜாக்கிரதையாகச் சொல்கிறேன், அதிகமாக இல்லை என்று தான் சொல்கிறேன். இந்த மாதிரியாகப் பல நிகழ்ச்சிகளை நான் சொல்லிக்கொண்டே போகமுடியும்.

குறிப்பாக இரண்டு நிகழ்ச்சிகளை மட்டும் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அரசாங்கம் போன வரவுசெலவுத் திட்டத்திலே 800 கோடி ரூபாய் ஒதுக்கியது. அந்த 800 கோடி ரூபாய் பணத்திலே சில கோடி ரூபாய் பணத்தை ரிட்டர்ன் பண்ணியிருக் கிறார்கள். மார்ச் மாதமாம், வேலை முடியவில்லையாம். என்ன காரணம்? தயவுசெய்து யோசிக்க வேண்டும். வேலையை ஒழுங்குபடுத்தி மாதாமாதம் பிரித்துப் பிரித்துச் செய்து வேலையை முடிக்கவேண்டும். பணம் பூராவும் குறிப்பிட்ட காலத்திற்குள் செலவிடப்படக்கூடிய முறையிலே மாதாமாதம் இன்ன இன்ன அளவில் வேலைகள் முடியவேண்டும் என்று திட்டமிட்டுச் செய்யா விட்டால் கடைசி நேரத்திலே பணத்தைச் செலவழிக்க முடியவில்லை என்று சொல்கிற முறை இருக்கத் தான் செய்யும். இப்படிப்பட்ட முறையை வைத்திருப்பதற்குக் காரணம், இரண்டு மாதத்தில் வேலையை முடிக்க வேண்டும் என்று அமைச்சர் சொல்வார். அப்போது எப்படி வேண்டுமானாலும் விதிதாச்

சாரம் பெறலாம், லஞ்சம் பெறலாம், என்று சொல்கிற முறை இருப்பதால்தான். அந்த முறை இப்போது மட்டுமல்ல: நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இப்படிச் செய்வதாலே எடுத்துக் கொள்வதிலே கொஞ்சம் அதிகம் ஆகும். சீக்கிரம் வேலைகளை முடிக்க வேண்டும், அரச மரத்துக் கதவைப் போட்டாலும்சரி, ஒரு ஜன்னலைப் போட்டு முடித்தாலும்சரி, திறப்பு விழாவிற்குப் போய் நிற்க வேண்டும். வேலைகளைச் செய்யும்பொழுது ஒவ்வொரு ஆண்டுக்கும் திட்டமிட்டு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதமும் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட வேண்டும். அப்படியிருந்தால் கடைசி நேரத்திலே பணத்தைச் செலவழிக்க முடியவில்லை என்று எந்த அதிகாரியாவது திருப்பி அனுப்பினால் அந்த அதிகாரியை வேறு இலாகாவிற்கு மாற்ற வேண்டும். குறைந்த காலத்திற்காவது அவரை ''டி-புரொமோட்'' செய்யவேண்டும். அப்படிச் செய்யா விட்டால் வேலைகளை ஒழுங்குபடுத்துவது சாத்தியமல்ல.

அடுத்து, கூட்டுறவுத் துறை. தேர்தல் நடப்பதற்கு முதல் நாள் கூட இரண்டு இடத்திலே ஜப்தி பண்ணுகிறார்கள். ஜப்தி பண்ண வேண்டாம் என்று ஒரு உத்திரவு போட்டும்கூட ஜப்தி பண்ணுகிறார்கள். விவரம் இருக்கிறது, குறித்து வைத்திருக் கிறாகள். வேண்டுமானால் தருகிறேன், நான் அமைச்சர்களைக் குறைசொல்லவில்லை. இந்த அரசாங்கம் ஜப்தி பண்ணக் கூடாது என்று போட்ட உத்திரவிற்கு அந்த ஸ்பிரிட்டிற்கு விரோதமாக யார் செல்லுகிறார்கள் என்பதைக் கண்காணிக்க வேண்டாமா? ஒன்றிரண்டு இடங்களிலே இருக்கலாம், பல்லாயிரக் கணக்கான இடங்களில் இல்லாமல் இருக்கலாம், இருந்தாலும் அதைப்பற்றி கவனம் செலுத்தி அவைகளை ஒழுங்குபடுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

அதேமாதிரி போலீஸ் இலாகா. போலீஸ் பற்றி நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன், நிச்சயமாக சங்கம் வைப்பதா வேண்டாமா என்பதிலே எங்கள் கம்யூனிஸ்டுகளைப் பொறுத் வரையில் ஒரே கொள்கையை வைத்து இருக்கிறோம், நாங்கள் இடத்திற்கு இடம் கொள்கைகளை மாற்றி வைத்துக் கொள்கிற வர்கள் அல்ல. பாண்டிச்சேரியிலே சங்கம் வைக்கலாமா என்று கேட்டால், இல்லை, இல்லை மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு செய்வோம் என்பது இப்போது இருக்கிற அரசாங்கத்தின் கொள்கை. திரு. சேத்தியைக் கேட்டால் அவர் சொல்கிறார் இல்லை, இல்லை சங்கம் வைக்கக் கூடாது என்று சொல்கிறார். ஆனால் இங்கே என்ன சொல்கிறார்கள், அண்ணா தி.மு.க. ஆட்சி கொடுமையாக இருக்கிறது. நான் அந்த விவரத் திற்குள்ளே போகவில்லை, என்னைப் பொறுத்தவரையில் சொல்கிறேன். மற்றபடி தண்டனை என்ன வேண்டுமானாலும்

இருக்கலாம், வேலையிலிருந்து அவர்களை நீக்க வேண்டியதில்லை. இன்றைக்கு ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இதை ஒரு பெரிய பிரச்னையாக்கி, சில பேர்கள் அறிக்கை விட்டுக்கொண்டு இருக்கிறார்கள், அந்த அறிக்கையில், அவர்கள் நாங்கள் தலையிடுவோம் என்கிறார்கள்.

[பிற்பகல் 1·20]

அவருடைய பெயர் வேண்டாம். விவாதிக்கிறோம், நாங்கள் தலையிடுவோம் போலீசாரின் உரிமைக்காக என்றெல்லாம் சொல்கிறவர்கள், போலீசாரின் குரலுக்கு என்று சொல்கின்ற அவர்களே சங்கம் வைக்க வேண்டாமென்று சொல்கிறார்கள். ஆகவே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்த ஆயிரம் பேர்களைத் தவிர, நிச்சயமாக மீதியிருப்பவர்களெல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சாதகமாக இருப்பதைப் போலவும், இந்த ஆயிரம் பேர்கள்தான் விரோதமாக இருப்பதைப் போலவும் கருத வேண்டாம். இவர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டால் மனம் மாறி நல்ல முறையில் நடப்பார்கள் என்ற அந்த முறையில் அரசாங்கத்தின் அறிவிப்பு வருகிறது, அதைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால், போலீஸ் இலாகாவைப் பொறுத்தமட்டிலே எப்படி வழக்குப் போடுகிறார்கள் என்று பார்த்தால் மூன்று விதமாகப் பிரித்து இருக்கிறார்கள். நான் பெயரைச் சொல்ல விரும்ப வில்லை. நபர் வேண்டாம். அதற்குப் பதிலாகக் கொஞ்சம் போலீஸ் இலாக்காவிலே ஜாதீய உணர்வுகள் இருக்கின்றன. ஜாதீய அடிப்படையிலே பொறுப்பான பெரிய அதிகாரிகளை நியமிக்கவில்லை என்றாலும்கூட, தெரிந்தோ தெரியாமலோ பலயிடங்களில் ஜாதி அடிப்படையிலே காரியத்தைப் பல அதிகாரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரம் இருக்கிறது. தயவுசெய்து இந்த நாட்டைப் போலீஸ் இலாக்கா ஜாதியாக்குமானால் கடுமையான விளைவுகள் ஏற்படும். முதுகுளத்தூரில் அதன் காரணமாக தேவரோ, அதே மாதிரியாக அரிஜனோ அங்கே யாரையும் பெரிய அதிகாரிகளாகப் போடுவது கிடையாது. ஒரு காலத்திலே நடைமுறை அப்படி இருந்தது. இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏன் தெரியுமா? இரண்டு பேர்களும் ஒரு சார்பாகப் போய் விடுவார்கள் என்பதற்காகத்தான் மிக ஜாக்கிரதையாக இருந்தார்கள். எனவே அங்கே அப்படி இருந்தது. இங்கே இப்பொழுது பெரிய நிலையில், ஜாதிக்குப் பின்னால் அந்த முறை கடைப்பிடிக்கப்பட்டு வருமானால் அது நல்லது அல்ல. அதையும் தயவு செய்து நீங்கள் செக்—அப் செய்ய வேண்டும், ஒழுங்கு படுத்த வேண்டும். அப்படி ஜாதீய உணர்வுகளிலே காரியங்கள்

ஒன்றிரண்டு இடங்களிலே இருக்குமானால்கூட ஏன் என்று கேள்வியை நாம் கிளப்ப வேண்டும். அப்படியானால்தான் தமிழ்நாட்டில் அமைதியான சூழ்நிலையை உருவாக்க முடியும்.

அரிசன் பிரச்சினையைப் பற்றி யார் யார் செய்தார்கள் என்று இப்பொழுது நான் பேசப் போவது இல்லை. அரிசன நல மானியக் கோரிக்கை வரப்போகிறது, அப்பொழுது பேசுகிறேன். யார் அரிசனங்களுக்கு விரோதமாகச் செய்தார்களோ அவர்களே சட்ட சபையிலே இங்கே வந்து அரிசன் என்று பேசுகிறார்கள். அதுதான் நமக்குப் பிடிக்கவில்லை, புரிய மாட்டேன் என்கிறது. யாரெல்லாம் அரிசன மக்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று நோட்டீஸ் போடுகிறார்களோ, எந்தக் கட்சி ஆள் என்று வேண்டாம், அப்படிச் சொல்வது என்றால், நாட்டுக்குப் பேசுவது என்ற முறையில் வெளியில் கூட்டத்தில் பேசுகிறேன், இங்கே வேண்டாம். உதாரணத்திற்காகச் சொல்கிறேன், எங்கள் பக்கத்திலே அமராபுதூர் என்ற கிராமம் இருக்கிறது. தேர்தலிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கூட்டு. அரிசனங்கள், வலையர்கள் பெருவாரியான பேர், நூற்றுக்கு நூறு எங்கள் அணியிலே. அங்கே வேறொருவர் கூடி, யாராவது ஜாதி இந்துக்கள் இப்படிப் பட்ட பறையர் பள்ளர் கட்சிக்குப் போய் வேலை செய்தால் பார்த்துக் கொள், ஊரிலிருந்தே தள்ளி வைப்பேன் என்று கூட்டம் போட்டார்கள் அங்கே. உதாரணத்திற்கு இதைச் சொல்கிறேன். ஆகவே, ஜாதியை தங்களுக்கு உபயோகப்படுத்துவது, தங்கள் அரசியல் கட்சிகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்வது என்றால், பெரியார் விழாவைக் கொண்டாடி, அவரைத் தலைவராக ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு சுயமரியாதையுள்ள பாரம்பரியம் உள்ள தமிழகத்திலேயே இந்த நிலை இருக்குமானால், வேறு நாட்டைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது; வேறு இடத்தைப்பற்றிச் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது.

ஆகவே, தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். நாமும் அதற்கு ஆளாகிறோம். 31—லிருந்து 50, 50—லிருந்து வேறு ஒன்றுக்கு என்று கேட்கக் கூடும். ஆகவே, இந்தப் பின் தங்கியோர்களுக்கான பிரச்னை நாட்டுப் பிரச்னையாக மாறி விட்டது. இது தமிழ்நாட்டுப் பிரச்னை அல்ல. பின்தங்கிய மக்களுக்காக ஒதுக்கப்பட்ட மக்கள் விகிதாச்சாரப் பிரதிநிதித் துவம், விகிதாச்சார வேலை முறை, விகிதாச்சாரக் கல்வி முறை என்பது நாட்டுப் பிரச்னையாக ஆகிவிட்டது. அது தமிழ்நாட்டோடு நிற்காது. ஆகவேதான் இது தமிழ்நாட்டின் பொறுப்பாக இருக்கக் கூடாது, மத்திய அரசு இந்த நாடு பூராவும் பேசும்பொழுது அரிசன மக்களுக்காக ஒரு பொது நியதியை உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்தப் பிரச்னை தீரும், எல்லாக் கட்சியினரும் அடங்க முடியும். இல்லையென்றால்

ஆங்காங்கு விவகாரங்களை உருவாக்குவார்கள். அதற்குத் தமிழக அரசு இடந்தரக் கூடாது என்று அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். இதற்குப் பொதுவான நியதிகள் வேண்டும். பொதுவான நியதிகளை உருவாக்காமல் தமிழ்நாட்டிலே இங்கே 50, 80 என்று போட்டால் அது எங்கே போய் நிற்கும் என்றால் ஜாதீயத் தகராறுகளும், ஜாதீயக்கலவரங்களும், ஜாதீய ஊர்வலமும் நடத்தப்படும், அதற்குத் தலைமைத் தாங்கும் நிலை, அதில் எந்தக் கட்சி ஜாதி அடிப்படையில் அதிக வாக்குகள் பெற முடியுமோ அதற்குப் பின்னால் நிற்கக் கூடிய இழிநிலையை, பெரியாரின் வாழ்க்கையை ஒலி-ஒளிக் காட்சியாக நடத்துகின்ற இந்தக் காலத்திலே நாம் காண்கின்ற நிலைமை ஏற்படும். எனவே தயவு செய்து புது சிந்தனை வேண்டும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

நான் இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன். ஒன்றரை மணி ஆகப்போகிறது. இரண்டே இரண்டு விஷயங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நான் இரண்டு அம்சங்களைச் சொல்லும்பொழுது, உங்களுக்கெல்லாம் தெரியும். இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற புதிய அரசியல் சூழ்நிலை. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சட்டமன்ற நிகழ்ச்சிகளை நாம் நடத்துகின்ற முறையிலே நிச்சயமாக அதிகமான கவனமும், கவனிப்பும் நீங்கள் கொண்டிருப்பீர்கள் என்று கருதுகிறேன். ஆகவே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலைக்கு முக்கியத்துவம் கொடுத்து, பொது மக்களுடைய பொதுவான பிரச்னையில் அதிகக் கவனம் செலுத்தக் கூடிய முறையிலே இந்த அமைச்சரவையும், அரசாங்கமும் திரும்புமானால்-அப்படித் திரும்ப வேண்டுமானால், சட்டமன்ற நிகழ்ச்சிகளிலேகூட அரசியல் கட்சிகள், எதிர்க்கட்சிகள் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சி உள்பட அத்தனை பேர்களுடைய கருத்துக்களையும் சட்டமன்றத்தில் கேட்கக்கூடிய முறையிலே, ஏற்கனவே கொஞ்சம் குறைபாடு இருந்தாலும்கூட, அனைவரும் உட்கார்ந்து, அந்த இலாக்காவைப் பொறுப்பேற்று இருப்பவர்கள் உட்கார்ந்து, அந்த அமைச்சர் ஏதாவது அவசரமான வேலை இருந்தாலும் அந்த இலாக்கா செயலாளரை உட்கார வைத்து கருத்துக்களை, அந்த நிகழ்ச்சிகளைக் கேட்டு, — தனியாகக் கேட்பது என்றால் நிச்சயமாகக் கேட்கலாம் செயல்படவேண்டும்.

தனியே கேட்டுச் சொல்வதற்கு வாய்ப்பு இருந்தாலும் கூட, பொதுவான மன்றம், பத்திரிகைகளிலே இந்தக் கருத்து வருகிறது, தமிழ்நாடு பூராவும் கருத்து வருகிறது. அப்படி வருகின்ற பொழுது இங்கே உட்கார்ந்து கேட்டு, அப்பொழுதைக்கப்பொழுது தமிழ்நாட்டு நிலையிலே மக்களுக்குச் சாதகமான, பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அதிகமான கவனம் செலுத்த வேண்டும்.

1980 பிப்ரவரி 2] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

தொழிலாளி சட்டம் பற்றி அன்றைக்குக் கூடச் சொல்லப் பட்டது. லேபர் அட்வைசரி கமிட்டி கூட்டத்திலே, அரசாங்கம் தலையிட வேண்டுமென்று கோரிக்கை வைக்கிற சங்கங்களும், கட்சிகளும் கூட, அரசாங்கம் தலையிடாமல் இருந்தால் தேவலை என்று மறைமுகமான ஒரு கருத்து வருகிறது. ஆனால், அரசாங்கம் தலையிட வேண்டும் இறுதியாக. அரசாங்கம் தலையிட வேண்டுமானால், அரசாங்கம் தலையிடுவதற்காக, தொழிலாளர் களுக்குச் சாதகமாகத் தலையிடுவதற்காக ஒரு சட்டம் வேண்டும். சட்டத் திருத்தம் வேண்டும். அதிலே இரண்டு கருத்து இருக்க முடியாது. நீங்கள் கட்டாயமாகச் செய்யவேண்டும். தொழிலாளர் நல அமைச்சருடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டால்கூட, நீங்கள் நழுவாதீர்கள் என்று சொல்கிறேன். 'தயவுசெய்து நீங்கள் சொன்னால் செய்கிறேன், இல்லாவிட்டால் வேண்டாம்' என்று சொல்கிறீர்களே, அது வேண்டாம். செய்தாலும், செய்யாவிட்டாலும், அரசாங்கத்திற்குத் தொழிலாளர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை இருக்கிறது என்ற வகையிலே சட்டம் கொண்டு வர வேண்டும். மொத்தம் இரண்டு அம்சங்கள். ஒரு அம்சத்தை ஏற்கனவே திரு. கோவிந்தராசன் அவர்கள் பாராட்டிவிட்டார்கள். ஒரு அம்சம், 12(3) செட்டில் மென்ட். பெருவாரியான தொழிலாளிகள் விருப்பத்திற்கேற்ப செட்டில்மென்ட் வேண்டும், வாஸ்தவம்தான். ஆனால் அதே நேரத்திலே, வேலை நிறுத்தம் சம்பந்தமாக நீங்கள், இப்படி ஒரு சட்டம் போட முன் வந்தால், பொதுவாக, மறுபடியும், எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்து, தொழிலாளர்கள் வேலை நிறுத்த உரிமையைப் பறிக்கப் பார்க்கிறது இந்த அரசாங்கம் என்று ஒரு கிளர்ச்சியை உருவாக்கி. இந்த அரசாங்கத்திற்கு விரோதமான நிலையை உருவாக்கும். ஆர்கனைஸ்ட் வர்க்கம், தொழிலாளர் வர்க்கம். ஆகவே, அப்படி ஒரு கிளர்ச்சியை உருவாக்காதீர்கள். 'ஆகவேதான் அதை ஆலோசித்து அது சம்பந்தமாக எப்படிச் சட்டம் கொண்டு வந்தால் தேவலை என்பதைப் பார்த்துச் செய்ய வேண்டும். தொழிலாளர் நலனை மையமாக வைத்துத்தான் தொழில் அமைதியே அடங்கிக் கிடக்கிறது. தொழிலாளர் நலனில்தான் தொழில் அமைதியை உருவாக்க முடியும் என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ள வேண்டும்.

தொழில் வளர்ச்சியை எடுத்துக் கொண்டால், நாம் பார்க்கிறோம், ஏதோ கிராமங்களிலே துவக்கப்படுகிறது. கன இயந்திரத் தொழில்களைத் துவக்கவில்லை. 4 சதவிகிதம்' 8 சதவிகிதம் ஆக மாறி விட்டது என்று சொல்வது, நிச்சயமாக, பெரிய தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தாமல் தமிழ்நாட்டில் மிகப்பெரிய வளர்ச்சியை ஏற்படுத்த முடியாது. உப்பு, புளி, மிளகாய் வாங்கிவிட்டால் வாழ முடியுமா, அரிசி வேண்டாமா ? அரிசி இல்லாமல் வாழமுடியுமா ? பெரிய தொழில்களை அரிசிக்கு உதாரணமாகச் சொல்கிறேன், உப்பு, புளி, மிளகாய் வேண்டாம்

என்று சொல்லவில்லை. பெரிய தொழில்களை ஊக்குவிக்கக் கூடிய முறையிலே மத்திய அரசாங்கத்தோடு நிதி பெறுகிற அந்த நிகழ்ச்சிக்கு இது 'கான்ஃப்ரான்டேஷன்' அல்ல, முரண்பாடு என்று சொல்லவில்லை, அதை வற்புறுத்தி இயக்கம் நடத்தவேண்டும். அரசு முரண்பாடாக நடந்து கொள்ளவேண்டுமென்று சொல்ல வில்லை, சண்டையையே தொழிலாக வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை, அந்த முறையிலே இதை அணுகக்கூடாது. ஆகவே, பெரும் தொழில்களிலே ஈடுபடுகிற முயற்சியிலே நீங்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) பசி நேரம் பசி வந்துவிட்டால் பத்தும் பறந்துபோம் என்பார்கள். பதவி வெறி வந்தாலும், வேறு நிலையை உருவாக்கும். இரண்டும் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற நேரத்திலே, இடதுசாரி திசையில், இடதுசாரி மனோபாவம் கொண்டு நாம் முக்கியமான சட்டங்களைக் கொண்டு வரலாம்.

விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்கச் சட்டம் கொண்டு வந்ததன் மூலமாக, கேரளாவிலே கம்யூனிஸ்ட் ஆட்சி கவிழ்ந்தா விட்டது? 75 வாரம் முடிந்து போன பிரச்னை. அதிலே எதுவுமே பிரச்னை இல்லை. பெருவாரியான, உழுது கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்கச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கேரளாவிலே, அங்கு ஆட்சி மாறவில்லை, மாறாது. ஆகவே, அந்த மாதிரியான சட்டங்களைக் கொண்டு வந்து எப்படிச் செய்ய வேண்டுமென்று விவாதிப்போம். அவசரப் பட்டு கொண்டு வரவேண்டுமென்று சொல்லவில்லை. சம்பந்தப் பட்ட கட்சிகளைக் கலந்து, அனுபவங்களைக் கொண்டு, மக்களுக்கு நல்லது செய்யவேண்டிய முறையிலே, இந்த அரசாங்கம் செய்ய வேண்டும். அதற்கேற்ற முறையிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய ஒத்துழைப்பை இந்தத் திசையிலே அரசு செல்லுமானால் தொடர்ந்து கொடுக்கும். அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எந்த நிகழ்ச்சிகளுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி துணை போகாது என்று அறிவித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1·30]

5. அறிவிப்புகள்

(இ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.—

இன்று (2.2.80) பகல் சுமார் 12.50 மணிக்கு பார்வையாளர் மாடத்தில் இருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பிய (1) திரு. காஞ்சி சுகுமாரன், — எஸ். எம். சின்னப்ப

1980 பிப்ரவரி 2] [பேரவைத் தலைவர்]

மகன், (2) திரு. கே. இராசாராம்–சி. கிருஷ்ணசாமி நாயுடு மகன் ஆகிய இருவரும் தற்போது பேரவைக் காவலரின் (சாஜர்ன்ட்) காவலில் இருக்கிறார்கள். விசாரணையும் நடந்து கொண்டு இருக்கிறது. அவர்களது செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

8. அரசினர் தீர்மானம்.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

''இன்று (2.2.80) பகல் சுமார் 12.50 மணி அளவில் சட்ட மன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள...

(1) சென்னை, புளியந்தோப்பு, பார்டிசைன் லைன் 104–ம் எண் வீட்டிலிருக்கும் திரு. எஸ். எம். சின்னப்பாவின் மகன் காஞ்சி சுகுமாரன் என்று சொல்லிக் கொள்ளும் நபரும்

(2) சென்னை, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, காள்ராான்ஸ்மித் நகர், 71-ம் எண் வீட்டிலிருக்கும் திரு. சி. கிருஷ்ணசாமி நாயுடு மகன் கே. இராசாராம் என்று சொல்லிக் கொள்ளும் நபரும் பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் ஏழு நாட்கள் வெறுங்காவல் (சிம்பிள் இம்பிரிசன் மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலே எனக்கு அபிப்பிராய பேதம் கிடையாது. இதற்கு முன்னாலும் இம்மாதிரி இரண்டொரு சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இதெல்லாம் கருத்தில் கொண்டு இந்த 7 நாட்கள் ரொம்ப அதிகம் என்று கருதுவதாலே அதை மூன்று நாட்களாகக் குறைத்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைவருடைய கஷ்டத்தை நான் சொல்ல விரும்புகிறேன். தயவு செய்து அமருங்கள். ஏற்கனவே இப்படி மூன்று நாள் என்று சொல்லப் பட்டதனாலே இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே வரு கிறது. என்னுடைய நிலைமையையும் புரிந்து கொள்ளவேண்டும். இது அவையினுடைய அவமானமே தவிர, குறிப்பிட்ட கட்சி என்று கருதி விடக்கூடாது. தயவு செய்து காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் இதை உணர்ந்து என்னுடன் ஒத்துழைக்க வேண்டும். இதேபோன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து வருவதற்குக் காரணம் நாம் கொடுக்கின்ற தண்டனை குறைவாக இருப்பது தான். இதை பேரவைத் தலைவர் என்ற முறையில் உணர்ந்து சொல்கிறேன். பிறகு இந்த அவையும், பேரவை முன்னவரும் எப்படி முடிவு செய்தாலும் நான் குறுக்கே நிற்கவில்லை.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, தாங்கள் சொன்ன கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்துதான். சட்டசபையைப் பொறுத்தவரையில் நடவடிக்கைகள் நல்ல முறையில் நடைபெற வேண்டும். ஆனால் முன் உதாரணம் இருப்பதைச் சுட்டிக் காட்டினோம். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மனப் பக்குவம் அறிந்துதான் கேட்கிறேன். மனப் பக்குவம் உள்ள அவர் இந்த தடவை முன் உதாரணத்தைப் பின்பற்றிவிட்டு, வேண்டுமானால் அடுத்த முறை கவனிக்கலாம் என்று சொல்லி......

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் மரபைக் கட்டிக் காப்பாற்றுவதிலேயும் கண்ணியத்தைப் பேணிக் கொள்வதிலும் முன்னணியில் நிற்கின்ற வீரராக நான் கருதுகிறவர் இந்திரா காங்கிரஸ் தலைவர் மாரிமுத்து அவர்களும் அதேபோன்று மனப் பக்குவமும், பண்பும், அடக்கமும், அமைதியும் படைத்தவர் அருமை நண்பர் சாதிக்— இந்த இரண்டு பேரும் அந்த மரபை மீறுகின்றவர்களுக்காக வாதாடுகிறார்கள் என்று எண்ணும்போது யாரிடம் சென்று அழுவது என்று எனக்குப் புரியவில்லை. இதற்கு முன்பு 3 நாள் 3 நாள் என்று போட்ட காரணத்தினால்தான் தொடர் கதையாக இது ஆகியிருக்கிறது என்பதை மெத்த வருத்தத்தோடு அவையை நடத்துகின்ற சபாநாயகர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். சுட்டிக் காட்டியதற்குப் பிறகும் எனது மனப் பக்குவத்தை உணர்ந்த சாதிக் அவர்கள் அந்த 7 நாள் தண்டனையை ஏற்றுக்கொள்வார் எனது அருமை நண்பர் மாரிமுத்து அவர்களும் ஏற்றுக் கொள்ளுவார் என்றும் நான் நம்புகிறேன். (குறுக்கீடு)

1980 பிப்ரவரி 2]

திரு. கூத்தகுடி ச. சண்முகம் ; தலைவர் அவர்களே, ராஜினாமாச் செய்யச் சொல்லி கட்சிகள் கேட்கின்றார்கள்; அதற்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை. வாக்குறுதியைப் பெற்றுக்கொண்டு, இனிமேல் யாரும் இப்படிச் செய்தால் தலையிட மாட்டேன் என்ற அடிப்படையில் (குறுக்கீடு) வாக்குறுதி தந்தாலும், தராவிட்டாலும் இந்த மாதிரி சூழ்நிலையிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் திரும்ப நடக்காமல் இருப்பதற்கு 3 நாட்கள் ஆக்கிவிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நமது கூத்தகுடி சண்முகம் அவர்கள் பிரச்சினையை மேலும் குழப்பி இருக்கிறார்கள். சபை தெளிவாக வந்து கொண்டிருந்தபோது அவர் இப்படி திசை திருப்பி விடுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் நமது மதிப்பிற்குரிய மாரிமுத்துவும், சாதிக் அவர்களும், கூத்தகுடி அவர்களும் இதைக் குறைத்து மூன்று நாட்கள் வைத்துக் கொள்ளலாம் என்று சொன்ன காரணத்திற்காக, இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் ஐந்து நாட்களாகத் தீர்மானிக்கலாம் என்ற கருத்தை நான் வெளியிட்டு அதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அனைத்து முகத்தையும் பார்க்கிறேன், சபை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அதை மறுபரிசீலனை செய்யவேண்டும். மூன்று நாட்களுக்கு மேல் போவது என்பது இப்போது இருக்கும் சூழ்நிலைக்கு சரியல்ல என்பதை மீண்டும் வலியுறுத்தி, நான் மிகவும் பணிவோடு மூன்று நாட்களுக்கு என்று அந்த தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; திரும்பவும், திரும்பவும் வலியுறுத்தி மூன்று நாட்கள் என்று திரு. சாதிக் பாட்சா அவர்கள் வாதாடுகிறார்கள். திரு. மாரிமுத்து அவர்களும் வாதாடு கிறார்கள். ஆனால் நான் இங்கே ஒரு உறுதியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திரும்பவும் இப்படிப்பட்ட சம்பவங்கள் பார்வையாளர் மாடத்தில் இருந்து நடைபெறுமானால் ஏழு நாட்கள் அல்ல, அதற்கு மேலும் தண்டனை விதிக்கப்படும் என்ற தீர்மானத்தை முன்மொழிய இங்கே இருக்கும் தலைவர் அவர்கள் எனக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தண்டனைக் காலம் மாத்திரம் குறிக்கோளாக இருக்கக் கூடாது, இப்போது மூன்று நாள், அடுத்தாற்போல் வந்தால் நான்கு நாள், திடீரென்று பதினைந்து நாட்கள் என்று போய்விடக் கூடாது. ஏனென்றால் முன் உதாரணம் இருக்கிறது. மீண்டும் மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன், அந்த தண்டனையை மூன்று நாட்களாகக் குறைக்க வேண்டும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள் என் நிலைக்கு வந்ததற்கு மகிழ்ச்சி. அதற்கு நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேசுகிறபோது நகைச்சுவையைச் சுவைத்துப் பழக்கப் பட்ட திரு. சண்முகம் அவர்கள் அதை அந்தக் கோணத்தில் எடுத்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இந்தப் பிரச்சினை இப்போது முடிவுக்கு வருகிறது. திரு. சாதிக்பாட்சா அவர்களின் வேண்டுகோள்படி பார்த்தால், கொஞ்சம் கொஞ்ச மாக ஒரு நாள் இரண்டு நாள் என்று கூடி, கூடி, அப்படி அடிக்கடி அந்தத் தவறுகள் செய்பவர்களை அச்சப்படுத்துகிற அளவிற்குத் தண்டனை இருக்க வேண்டும் என்று யோசனை வழங்கியிருக்கிறார்கள். எனினும், உங்களுடைய அனுமதி பெற்று, நீங்கள் எல்லாம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, இப்படிப்பட்ட பொறுப்பற்ற செயல் இனி நடைபெறாது என்ற நம்பிக்கையில், அப்படி நடைபெற்றால் திட்டவட்டமாக நாங்கள் கண்டிப்போம் என்ற உணர்வோடு, அந்த தண்டனை ஏழு நாட்கள் என்று இருப்பதை மூன்று நாட்களாகக்குறைக்க வேண்டும் என்கிற திருத்தத்தை மொழிகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். தண்டனை குறித்து அல்ல. சிறை சீர்திருத்தக் கமிஷன் பரிந்துரைக்கு இணங்க இந்த அரசாங்கம் ஒரு ஆணைப்பிறப்பித்து இருக்கிறது. அரசியல் கைதிகளை மற்ற கைதிகளிடமிருந்து பிரித்து வைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த கைதி எந்த லிஸ்டில் சேர்க்கப்படுவான் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் முதலிலேயே தெரிவித்து இருக்கிறேன். சிம்பிள் இம்பிரிசன்மென்ட் என்று அவர்கள் வைக்கவேண்டிய இடத்தில் வைக்கப்படுவார்கள்.

1980 பிப்ரவரி 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: " இன்று (2.2.1980) பகல் சுமார் 12·50 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்கள் எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள....

(1) சென்னை, புளியந்தோப்பு, பார்டிசன் லைன் 104-ம் எண் வீட்டிலிருக்கும் திரு. எஸ். எம். சின்னப்பாவின் மகன் காஞ்சி சுகுமாரன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்'

(2) சென்னை, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, கான்ரான்ஸ்மித் நகர், 71-ம் எண் வீட்டிலிருக்கும் திரு. சி. கிருஷ்ணசாமி நாயுடு மகன் கே. இராசாராம் என்று சொல்லிக்கொள்ளும் நபரும், பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் மூன்று நாட்கள் வெறும் காவல் (simple imprisonment) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று, 1980-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4-ம் நாள் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1·38 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

ஆ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

49. வருவாய்த் துறையில் 7.9.1971-ஆம் தேதியன்று வெளியாகி 8.9.1971-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்-II, பிரிவு-I-ல் (ஆங்கிலத்தில்) 2-ஆம் பக்கத்தில் வெளியான II-'/3987(b)/1971 ஆம் எண் அறிவிப்பில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 14.9.1979 ஆம் தேதியிடப்பெற்ற 2040 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18(4) ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

[1980 பிப்ரவரி 2

50. சி.எப்.எக்ஸ். குறிப்பின் முடிவை மாற்றி சிறப்பு வடிவத்தினை வகுக்கும் வகையில் தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில மாற்றங்கள் செய்வது குறித்து உள்துறையில் 30.10.1979 ஆம் தேதியிடப்பெற்ற 2713 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

51. இந்தியாவிலுள்ள (யு.எஸ்.எஸ்.ஆர்.) ஐக்கிய சோசலிச சோவீயத் ரஷ்யாவின் வணிகப் பிரதிநிதித்துவ அமைப்பின் சென்னைக் கிளைக்குச் சொந்தமான டபிள்யூ.பி,ஜி.9683, டி.எம்.எக்ஸ்.9675 மற்றும் டி.எம்.பி.9884 ஆம் எண் வண்டிகளுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து-I) 22.12.1979–ஆம் தேதியிடப் பெற்ற 3146 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

52. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29.11.1979--ஆம் தேதியிடப் பெற்ற 1767 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53(5)-ஆம்' பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

53. பூம்புகார் கப்பற் போக்குவரத்துக் கழகத்தின் 1979 ஆம் ஆண்டிற்கான 5 ஆம் ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை .

இணைப்பு I

(172-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

Esteemed Members of the Legislature,

I am happy to welcome you all to this session in the New Year.

2. At the outset, I would like to extend my hearty welcome to the new Government at the Centre. I am sure that the new Union Government would take steps to gain the confidence and co-operation of the States and also to help them in discharging their duties to the people. I consider it appropriate to recall here the views of the Government of Tamil Nadu expressed in the Governor's Address after a new Government was formed at the Centre in 1977 :—

> "........my Government will extend its constructive co-operation, based on Anna's philosophy, to the Centre in their efforts for building up a democratic, socialistic and prosperous India on Gandhian lines. At the same time, we shall take every opportunity to strongly advocate the claims of Tamil Nadu, whether they relate to political, cultural, economic or linguistic issues, with a view to ensure that the legitimate rights and interests of our State and of our people obtain due recognition and response from the Centre. It is now being increasingly recognised that the Centre can be strong, only if the States are also strengthened. We trust that the imbalances in our Federal Constitution in this regard will be rectified at an early date through appropriate Constitutional amendments and we shall support all efforts in this direction. We are also confident that with more powers we can make rapid progress in our efforts for improving the development and welfare of Tamil Nadu."

3. The decision of the Central Government to implement the 20-Point Programme as indicated in the President's address deserves praise. Members are well aware that the party in power in Tamil Nadu welcomed this programme even at the time of its announcement earlier and effectively propagated it among the people. In particular, the scheme was instrumental in abolishing the bonded labour in Tamil Nadu. To implement this programme in a proper manner this Government will extend all its support to the Union Government.

4. I would like to mention with pride, the peaceful manner in which the recent Parliamentary elections were conducted in Tamil Nadu. On behalf of the Government. I express my happiness about the emergence of the desire for safeguarding our democratic traditions and for protecting the rights of the electorate.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5. The Government took speedy and timely measures with a sense of dedication in giving relief to the people affected by the recent heavy floods in many districts of our State. many social service organisations and students' organisations also played an active role in these relief a measures. Many lives have been saved on account of the proper precautionary steps and the extension of immediate relief. On our request, the Central Government sent a team to assess the quantum of assistance for relief measures. The Government of Tamil Nadu would like to thank the Government of India for announcing the Central assistance on the basis of this Committee's report. It is really commendable that the State Government acted promptly by ordering relief measures allocating substantial funds, without waiting for the decision of the Central Government on the quantum of assistance.

6. On account of the write-off of the Takkavi loans ordered by the State Government, 8·51 lakh agricultural families have benefited. The Government has already given an assistance of Rs. 16 crores to the Co-operative Banks to enable them to pass on the benefits announced earlier by the Government to the ryots. The Central Co-operative Banks were not able to obtain financial assistance from the Reserve Bank of India in view of the heavy overdue positions. As a result, even those who have repaid their loans were not able to get further loans from the co-operatives. To obviate this difficulty, the Tamil Nadu Government has given an assistance of Rs. 27·5 crores to nine Central Banks. This will enable those who have repaid the loan to get further loans from the co-operatives. I am sure that the Members will welcome this measure.

7. The food situation in Tamil Nadu continues to be comfortable. There is no compulsory procurement either directly from the ryots or through a levy on the traders. A number of direct procurement centres are being run by the Civil Supplies Corporation on behalf of the State Government. In these centres, paddy has been purchased from the ryots at the rate of Rs. 105 per quintal, which is higher than the price notified by Government of India. All the villages have been covered under the 'one-village-one-shop' scheme of this Government and these shops are functioning well. When there was the likelihood of a sugar shortage recently, Government took immediate steps to ensure distribution of sugar for family cards throughout the State, The crisis was successfully averted in view of the timely measures taken by the State Government.

8. It is necessary to keep the prices of agricultural inputs under control so as to keep the cost of cultivation at reasonable levels. At the same time it is necessary to ensure proper and steady prices for agricultural commodities. Appropriate floor prices for essential agricultural produces, should also be fixed so that there is incentive for the ryots to cultivate them confidently. It is inscapable that the Government of India take steps to procure and maintain buffer stocks in many such commodities Such an arrangement is at present available for rice and wheat. I request that the Government of India take steps to extend the arrangement to cover other major agricultural commodities as well. Though it may not be possible to write-off the entire co-operative and other loans, when the ryots are unable to repay them on account of the repeated failures of the monsoon, it is imperative that the Central Government evolves a National policy to give suitable relief for such agriculturists and also take steps to create necessary fund for this purpose. At this juncture I would like to welcome the statement of the President of India in his recent address to the Parliament:

"It will be the Government's endeavour to ensure proper remunerative prices to the farmer for his produce."

It is hoped that the Central Government would take early steps to implement this policy. The State Government has drawn up a massive scheme to enlarge the facilities in the regulated markets at a cost of about Rs. 100 crores so that the ryots are encouraged to increase the sale of their produce though the regulated markets. This scheme has been forwarded to the Government of India for being posed to the World Bank. Further, with the concurrence of the Government of India, an amendement to the Tamil Nadu Agricultural Produce Markets Act will be brought before the House.

9. In this Session, a Bill will be brought forward to prohibit purchase of lands of scheduled tribes by non-tribals. Government recently promulgated an Ordinance reducing the ceiling on land held by tenants to three standard acres from five standard acres. Government is of the opinion that by this measure, concentration of large extent of lands with some tenants will get reduced and the tenancy of lands would get distsibuted among the landless poor. A Bill to replace this Ordinance will be brought before the House.

10. Speedy steps will be taken up to develop the forest wealth of this State. The Government will be vigilant in prevention of illegal felling and smuggling of trees and in punishing the offenders severely.

[1980 பிப்ரவரி 2

11. Tamil Nadu has been in the forfront in utilising water resources. Our State has utilised the surface water fully. The State has exploited its ground water potential to a substantial extent and in fact in certain areas there has been over-exploitation. The Government will continue to hold talks with neighbouring States on the utilisation of their surplus waters. Such utilisation will not only increase agricultural production in the country but also create employment in drought prone areas.

12. It is well known that only by proper industrial development, the Nation can become strong. It is seen from the particulars given below that the Central investment in Tamil Nadu has been dwindling in the past few years as compared to other parts of the country:—

CENTRAL INVESTMENT.

	All India.	*Tamil Nadu.*	*Percentage.*
	(RUPEES IN CRORES).		
Upto 1969-70	3,885	312	8
Up to 1976-77	11,451	476	4

Tamil Nadu's share of Central investment upto 1969-70 was 8 per cent, where as it has come down to 4 per cent by 1976-77. Tamil Nadu is a State having very high percentage of population below the poverty line the number of unemployed is also very high in Tamil Nadu. These two major problems of our State can be tackeld by the Centre, increasing its direct investment and taking other appropriate policy decisions to encourage industrial development. I would like to request the Union Government to take steps to reduce regional imbalances by investing large amounts in Tamil Nadu. The first phase of the Salem Steel Project for which the foundation stone was laid by the Prime Minister should be completed speedily. Further, the other phases of setting up the Salem integrated steel plant shuld be expedited so as to give an impetus for industrial development in this region.

13. Tamil Nadu Government continues to encourage small industries and cottage industries. The Government is implementing a new scheme of capital subsidy to small scale industries to be set up in 24 backward taluks. Recently, the Government has ordered that Government departments and public sector undertakings must purchase their requirements in respect of 241 articles from small industries only. The Government has also initiated a new scheme

for equity assistance to revitalise sick small industries. During this year, as against the target of setting up 2,000 match units, steps have been taken for establishing 2,600 such units. During full production, these units will provide employment opportunities for 52,000 persons. Members may recall the decision of Government to give fillip to sericulture industry by expanding cultivation of mulberry over 8,000 acres. As against this targeted area, about 7,000 acres have been covered by November 1979 and it is estimated that by the end of the financial year 10,000 acres will be covered. As announced in my last address active steps are being taken to establish the Soda Ash Plant by Tuticorin Alkali Chemical Limited, which is expected to go in to production by early 1982. The implement the Government's decision to produce paper from bagasse a Public Sector Corporation has been set up and preliminary steps are being taken.

14. Apart from being the State capital, Madras City functions as commercial hub of and the gateway to the South. The Tamil Nadu Government has been implementing various schemes for the development of Madras Metropolitan area. Steps have been taken for the clearance for the second stage of the World Bank aided Urban Development Project at a cost of Rs. 57 crores even while implementing the first stage of the Project. I would like to reitrate here that the Mass Rapid Transport System is the only solution to solve the traffic proble of the City. It would be my strong plea with the Union Government that the work on this scheme should be commenced atleast in the coming year. I would like to point out that as years go by, apart from the problems getting complicated, the cost would also increase. The Central Government must also take steps to convert the metre gauge railway line from Madras to Tuticorin to broad gauge. Only by this step, it would be possible for the country to draw the full benefits of the Tuticorin Port and also develop the industrially backward areas on this route.

15. This year, the self-sufficiency scheme for providing basic amenities in an integrated manner has been started in 5 blocks in every district, It is proposed to expand the scheme and implement it in 100 more blocks in the coming year.

16. The centrally assisted Food for Work Programme should be expanded further to create more job opportunities. It is my wish that the Tamil Nadu Government which is implementing this scheme successfully, should be further encouraged by the Government of India by larger allocation of rice. Members will be happy to know that the Employment Guarantee Scheme announced by this Government is being implemented vigorously.

17. In this State Mobile Medical Units have been rendering a good service. It is proposed to enlarge this scheme. Government will also set up specialities like Cardiology in hospitals of the small towns.

18. In Higher Secondary Schools, Vocational Education is being taught in a commendable manner. The Government will take steps to raise its standard and to provide laboratory facilties and equipments to these schools. This Government considers that at the school education stage itself. students should obtain necessary work experience and that they should get trained in vocations useful to the society. To achieve this, vocational education will be introduced in high schools in stages.

19. The Members may be aware of the interest taken by the State Government in promoting sports activities and the setting up of a separate Directorate of Sports and Youth Services. Schemes for Physical Education will be expanded significantly in the coming year. The students will be given special training to enable them to act as a protective force for the society, whenever necessary.

20. In my last address, I informed the House that a scheme for construction of one lakh houses in rural area will be implemented over a period of five years. I am happy to state that this scheme is making good progress. As against the targeted number of 20,000 houses, steps have been taken for construction of 30,000 houses. Till now, applications for loans for 38,000 houses have been sanctioned. Government is taking steps to expand the scheme with necessary assistance from HUDCO and other financial institutions.

21. This State is very keen to promote the welfare of Harijans and also to see that full protection is available to them. All necessary steps are being taken in this direction.

22. It is a matter of satisfaction that all the Harijan colonies in the State have been electrified. Government will immediately take up a special scheme to provide other basic amenties like drinking water supply, link roads pathway to burial ground to all the Harijan Colonies. This Harijan colonies Development Programme' will be implemented in 5,000 colonies in the coming year. Steps will also be undertaken to construct permanent buildings for all Government Harijan Welfare School buildings in the next year.

23. It is proposed to enact a Legislation on Debt Relief to safeguard the interests of the poor people in Rural and Urban areas, who suffer be[f]m a heavy debt burden. Necessary Bill for this purpose will be placed before the House in this Session.

24. Government is preparing a Bill for rendering assistance to those who suffered for the cause of Tamil language and for the merger of Tamil-speaking areas with Tamil Nadu. This will be brought before the Legislature soon.

25. My Government proposes to hold talks with the Government of Kerala on the Kannagi temple near Kerala border. Flowing from the fruitful results of the talks, I hope necessary facilities for people to visit the temple will get developed. The State Archaeology Depart ment will conduct excavations and research at this place and many other places. Historic places will be developed into tourist spots with necessary facilities for both Indian and foreign tourists. This wil result in increased foreign exchange earnings and creation of job opportunities.

26. The Government will take all steps to improve the administration of religious and charitable endowments. In particular, steps will be taken up to fulfil the objectives and desires of the persons who have created such endowments.

27. A settlement with Trade Unions under section 12 (3) of Industrial Disputes Act is binding on all workers. As per this provision, it is now possible, even for Trade Unions which do not represent the majority of the workers, to conclude such a settlement. It is proposed to bring a Bill to make it clear that a settlement under section 12 (3) of the Industrial Disputes Act or a strike notice will be binding on everyone only if it is approved by Unions representing a majority of the workers belonging to Trade Unions.

28. The Members are aware that the Government has announced the conduct of elections to Panchayats, Panchayat Unions, Municipalities and Madras Corporation. It is proposed to bring amendments for reducing the age of voting to 18 and amendments, providing for reservation of adequate seats to women and Harijans.

29. Government has recently announced a scheme for utilising the services of ex-servicemen for providing security in the City. This scheme will be enlarged to cover more areas. It is proposed to station ploice force in border areas of the State, to assist maintenance of law and order and also to prevent offences like encroachment and smuggling of forest produce.

30. This Government which has been effecting many administrative reforms, proposes to abolish the Board of Revenue and appoint inde pendent Heads of department. I would like to inform the Members that speedy steps will be taken to implement this decision.

31. From the days of Perarignar Anna, an opinion has been widely held that a University should be established at Karaikudi. The Government will address the University Grants Commission emphasising the need for this University.

32. The Tamil Nadu Legislature has a hoary tradition of offering constructive suggestions to the Government and maintaining its decorum. I am sure that the Members would extend their full co-operation for conducting the current session also in the same tradition.

33. I wish all the members good luck in the service of the people of Tamil Nadu. Let us all work together to see that poverty and unemployment are ended as early as possible.

Vanakkam.

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

(172 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மேன்மைதங்கிய சட்டமன்ற உறுப்பினர்களே,

இவ்வாண்டின் புதிய கூட்டத் தொடருக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

2. புதிதாக மத்தியில் அமைந்துள்ள ஆட்சிக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பில் நல்வரவேற்பு கூற விரும்புகிறேன். அனைத்து மாநிலங்களின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் பெறும் வகையிலும் மாநிலங்கள் தங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றுவதற்கு உறுதுணையாக அமையும் வகையிலும் புதிதாக மலர்ந்துள்ள மைய அரசு செயல்படுமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். 1977—ல் மத்திய அரசு புதிதாக அமைந்த பிறகு, இவ்வரசின் கருத்துக்களை ஆளுநர் உரையின்போது வெளியிட்டதை இங்கு மீண்டும் குறிப்பிடுவது பொருத்தமாகுமென்று கருதுகிறேன்.

''எனது அரசாங்கத்தின் சார்பில், ஜனநாயக, சமதர்ம அடிப்படையில் மலர்ந்து வளங்கொழிக்கும் இந்தியாவைக் காந்திய வழியில் உருவாக்க மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, நாம் அண்ணாவின் கொள்கை வழி நின்று, ஆக்க பூர்வமான ஒத்துழைப்பை நல்குவோமென உறுதி கூறுகிறேன். அதே நேரத்தில் தமிழ்நாட்டின் அரசியல், கலாச்சார, பொருளாதார, மொழிப் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் திடமாக வாதாட அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன் படுத்துவோம். அதன்மூலம் தமிழ்நாட்டு மக்களின் நியாயமான உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க மத்திய அரசு செவிசாய்த்துச் செயல்பட ஆவன செய்வோம். மாநிலங்களையும் வலுப்படுத்தினால்தான் மத்திய அரசு வலுவுள்ளதாய் இருக்குமென்பது இப்போது மேலும் மேலும் உணரப்படுகிறது. இவ்வகையில் இந்தியக் கூட்டாட்சி அமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தங்கள் செய்வதன் மூலமாக விரைவில் சீராக்கப்படுமென நம்புகிறோம். இதற்காக மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் முழு ஒத்துழைப்பு அளிப்போம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெறுவதன் மூலம், தமிழ்நாட்டினை வளங் கொழிக்கச் செய்வதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் விரைவான முன்னேற்றம் காண முடியுமென நம்புகிறோம்.''

3. குடியரசுத் தலைவர் உரையில் குறிப்பிட்டபடி 20 அம்சத் திட்டத்தை மைய அரசு அமுல் நடத்த முன்வந்திருப்பது பாராட்டுதற்குரியது. இத் திட்டம் முன்பு வெளியிட்டபோதே, இப்போது தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள கட்சி அதனை வரவேற்று, மக்கள் மத்தியில் அத் திட்டத்தின் கருத்துக்களை வலியுறுத்தி பிரச்சாரம் செய்ததை

உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். குறிப்பாக, தமிழகத்தில் கொத்தடிமை முறை ஒழிக்கப்பட இத் திட்டம் உதவி செய்தது. இத் திட்டத்தை சீரிய முறையில் நிறைவேற்றுவதில் இம் மாநில அரசு, மைய அரசுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

4. அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்கள் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பொதுவாக அமைதிச் சூழ்நிலையிலே நடைபெற்றதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன். ஜனநாயக மரபுகளைப் பேணிக் காக்கும் பண்பும் வாக்காளப் பெருமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற விழைவும் வளருவதை எண்ணி என் அரசின் சார்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. சென்ற ஆண்டு இறுதியில் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் ஏற்பட்ட பலத்த வெள்ளத்தைச் சமாளிப்பதில் விரைவாகவும் கடமையுணர்ச்சியுடனும் செயல்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துன்பங்கள் ஏற்பட்டதைக் குறைக்கும் முயற்சியில் அரசு சிறப்பாக ஈடுபட்டது. மேலும், பல்வேறு தொண்டுள்ளம் கொண்ட நிறுவனங்களும் மாணவர் அமைப்புகளும் துயர் துடைப்புப் பணிகளில் ஈடுபட்டன. முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட்டதன் விளைவாக, ஏற்பட்டிருக்கக்கூடிய உயிர்ச் சேதங்கள் பெருமளவிற்குத் தவிர்க்கப்பட்டன; தொடர்ந்து நிவாரணப் பணிகளும் செயலாக்கப்பட்டு வருகின்றன. நமது அழைப்பிற் கிணங்கி, உடனடி நிவாரணப் பணிகளுக்கு உதவி செய்வதற்காக, அறிக்கை சமர்ப்பிப்பதற்குக் குழு ஒன்றை மத்திய அரசு அனுப்பி வைத்தது. இந்தக் குழுவின் அறிக்கையின் மீது, மத்திய அரசு அண்மையில் நிதி உதவிபற்றிய தனது முடிவினை அறிவித்ததற்குத் தமிழக அரசின் நன்றியினைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். மத்திய அரசின் நிதியுதவி பற்றிய முடிவு தெரியும் வரை காத்திராமல், உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு ஆணைகள் பிறப்பிப்பதிலும், தக்க நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதிலும் தமிழக அரசு முனைப்பாகச் செயல்பட்டுள்ளது அனைவரும் பாராட்டுதற்குரியது.

6. தக்காவிக் கடன்களை அரசு தள்ளுபடி செய்ததன் விளைவாக 8.51 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. அரசு அறிவித்த கூட்டுறவுக் கடன் பற்றிய சலுகைகளைக் கூட்டுறவு நிறுவனங்கள் விவசாயிகளுக்கு அளிப்பதற்கு வகை செய்திட, அரசு 16 கோடி ரூபாய் வழிவகை முன்பணமாக கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுத்து உதவியுள்ளது. கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் ஏற்பட்ட சுணக்கம் காரணமாக, மத்திய கூட்டுறவு வங்கிகள ரிசர்வ் வங்கியிடமிருந்து பணம் பெற முடியாத நிலையில் இருந்து வந்தன. இதன் விளைவாக, முறையாக கடன்களைத் திருப்பிச் செலுத்தியவர்கள்கூட, தேவையான கடன்களை மீண்டும்

1980 பிப்ரவரி 2]

பெற முடியாத கவலையான சூழ்நிலை இருந்து வந்தது, இதனைத் தவிர்த்து, கடன்களைத் திருப்பி செலுத்தியவர்களுக்கு மீண்டும் கடன் கிடைக்கச் செய்வதற்காக, தமிழக அரசு ஒன்பது மத்திய கூட்டுறவு வங்கிகளுக்காக மொத்தம் 27.5 கோடி ரூபாய் அண்மையில் கொடுத்து உதவியுள்ளது. இதனை உறுப்பினர்கள் வரவேற்பார்களென்று நம்புகிறேன்.

7. தமிழ்நாட்டில் உணவு நிலைமை திருப்திகரமாக இருந்து வருகிறது. விவசாயிகளிடமிருந்து நேரிடையாகவோ, வர்த்தகர்களிடமிருந்து லெவியாகவோ கட்டாயக் கொள்முதல் ஏதும் செய்யப்படவில்லை. மத்திய அரசு நிர்ணயித்ததை விட உயர்ந்த விலையில் குவிண்டாலுக்கு 105 ரூபாய் கொடுத்து, நெல்லை விவசாயிகளிடமிருந்து வாங்குவதற்கென அரசின் சார்பில் நேரடிக் கொள்முதல் நிலையங்களை நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தி வருகின்றது. கிராமந்தோறும் நியாய விலைக் கடைகள் அமைக்கும் இந்த அரசின் திட்டத்தின்கீழ், எல்லாக் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் நல்ல முறையில் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன. மேலும், அண்மையில் சர்க்கரைத் தட்டுப்பாடு ஏற்படவிருந்த சூழ்நிலையில், அரசு உடனடியாகத் தீவிர நடவடிக்கைகள் எடுத்து, மாநிலம் முழுவதிலும் பொதுமக்களுக்குக் குடும்ப அட்டைகள் மூலம் சர்க்கரை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, தட்டுப்பாடு ஏற்படாமல் வெற்றிகரமாக நிலைமையைச் சமாளித்தது.

8. வேளாண்மைக்குத் தேவையான இடு பொருள்களின் (Inputs) விலைகளைக் கட்டுக்குள் வைத்து, அதன் மூலம் சாகுபடிச் செலவை நியாயமான அளவில் இருக்கச் செய்ய வேண்டும். அதே நேரத்தில் பெரும் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படாமல் சீரான விலையில் வேளாண்மைப் பொருள்களை விற்பதற்கான ஏற்பாடுகளும் உருவாக்கப்பட வேண்டும். முக்கியமான பல்வேறு விளை பொருள்களின் அடிப்படை விலைகள் பெரிதும் வீழ்ச்சி அடைந்துவிடாமல் இருப்பதற்கேற்ற வண்ணம், விவசாயிகள் நம்பிக்கையுடன் அவற்றை விளைவிக்க ஊக்கம் அளிக்கும் முகமாக, பல்வேறு விளை பொருள்களுக்கு தக்க அடிப்படை விலையை நிர்ணயிக்க வேண்டும். மேலும், அப் பொருள்களில் சேமக் கையிருப்பு (Buffer Stock) வைத்திருப்பதற்கான முறையில் கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்வது தவிர்க்க முடியாததாகும். தற்போது, அரிசி, கோதுமை ஆகியவற்றுக்கு இருந்துவரும் இத்தகைய ஏற்பாட்டை மற்ற பல வேளாண்மைப் பொருள்களுக்கும் விரிவாக்கும் வகையில் மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், விவசாயிகள், கூட்டுறவு இயக்கத்தின் மூலமும் மற்ற வழிகளில் பெறும் கடன்களைப் பருவநிலை தவறும்போது திருப்பிச் செலுத்த முடியாமல் தொடர்ந்து இன்னலுறும் நேரத்தில், அந்தக்

[1980 பிப்ரவரி 2

கடன்கள் முழுவதையும் ரத்துச் செய்ய முடியாவிட்டாலும், அவர்களுக்கு தக்க சலுகைகளை அளிப்பதற்கான, நாடு தழுவிய கொள்கையொன்றை மத்திய அரசு உருவாக்கி, அதற்கேற்றதொரு நிதி அமைப்பினையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் நமது குடியரசின் தலைவர் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையின்போது "உழவர்களுக்கு அவர்கள் விளைவிக்கும் பொருள்களுக்கு உரிய விலைகள் கிடைப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்" எனக் கூறியுள்ளதை எனது அரசின் சார்பில் வரவேற்பதோடு, அதனைச் செயல்படுத்தும் பணியில் மைய அரசு தீவிரம் காட்ட வேண்டுமெனவும் விரும்புகின்றேன். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளை அளிப்பதற்கும், அவற்றின்மூலம் விவசாயிகள் பல்வேறு விளை பொருட்களை விற்பதற்கு ஊக்கமளிப்பதற்கேற்ற வகையில் அவற்றைத் திருத்தியமைப்பதற்கும் சுமார் 100 கோடி ரூபாய் செலவிலான பெரிய திட்டமொன்றை அரசு வகுத்துள்ளது. உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றுவதற்காக இத் திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட வரைவும், மத்திய அரசின் ஒப்புதலுடன், விரைவில் அவைமுன் கொண்டுவரப்படும்.

9. பழங்குடியினர் நிலங்களைப் பிறர் வாங்குவதைத் தடுப்பதற்கான சட்ட வரைவுகள் இக் கூட்டத் தொடரில் அவையின் ஒப்புதலுக்காகக் கொண்டு வரப்படும். குத்தகைதாரர்கள் ஒவ்வொருவரும் வைத்துக் கொள்ளக் கூடிய குத்தகை நில உச்சவரம்பு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் அளவாக இருந்தது. இதை 3 ஸ்டாண்டர்டு ஏக்கர் அளவுக்குக் குறைக்க, அவசரச் சட்டமொன்றை அரசு அண்மையில் பிறப்பித்தது. இதன் மூலம், குத்தகைதாரர்கள் மிகப் பெருமளவில் நிலங்களை வைத்துக் கொள்வதைத் தவிர்த்து, பலருக்கும் நிலங்கள் கிடைப்பதற்கான வாய்ப்பு உருவாகுமென்று அரசு நம்புகிறது. இந்த அவசரச் சட்டத்தை மாற்றி நிரந்தரமான சட்டமாக்குவதற்கான சட்ட வரைவும் அவைமுன் கொண்டு வரப்படும்.

10. இம் மாநிலத்தின் வனவளத்தைப் பெருக்குவதற்கான சில நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும். அத்துமீறி மரங்களை வெட்டுதல், அவற்றைக் கள்ளத்தனமாகக் கடத்துதல் ஆகியவற்றைத் தடுப்பதிலும், இக் குற்றமிழைப்போருக்குக் கடுந் தண்டணை வழங்க ஏற்பாடு செய்வதிலும் அரசு முனைப்பாக இருக்கும்.

11. தமிழ்நாடு தன்னகத்தேயுள்ள நீர் வசதிகளைப் பயன்படுத்துவதில் முன்னணியில் இருந்து வருகிறது. ஆறு, குளம், ஏரிகளில் உள்ள நீரை முழுமையாகப் பயன்படுத்துவதோடு, நிலத்தடி நீரையும் (Ground Water) மிகப் பெரும் அளவுக்கு நமது

1980 பிப்ரவரி 2]

மாநிலம் பயன்படுத்தி வருகிறது. ஒரு சில இடங்களில் அளவுக்கும் அதிகமாகவே நிலத்தடி நீர் பயன்படுத்தப்படுகிறது. அண்டை மாநிலங்கள் தம்மிடமுள்ள உபரி நீரைத் தமிழ்நாட்டுக்கு அளிப்பதற்காக, அம் மாநிலங்களுடன் தமிழ்நாடு அரசு இணக்கமான முறையில் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தும். இதன் மூலம் நாட்டின் உற்பத்தி பெருகுவதுடன், வறண்ட பகுதிகளில் வேலை வாய்ப்பும் பெருகும்.

12. நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதன் மூலம் நமது நாட்டை பலம் பொருந்திய நாடாக ஆக்க முடியுமென்பது தெளிவு. தொழில் வளர்ச்சிக்கான மத்திய அரசின் முதலீடுகள் நாட்டின் பல்வேறு பகுதிகளுடன் ஒப்பு நோக்கும்போது, கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் குறைவாகவே இருந்து வருகின்றதென்பது கீழ்வரும் புள்ளி விவரத்தின் மூலம் தெளிவாகும்:—

	மத்திய அரசின் முதலீடு.		
	இந்தியா முழுவதும்.	தமிழ் நாட்டில்.	சத வீதம்.
	(ரூபாய் கோடிக் கணக்கில்)		
1969-70 வரை ..	3,885	312	8
1976-77 வரை ..	11,451	467	4

1969–70 வரையில் செய்யப்பட்ட முதலீடுகளில் தமிழ்நாட்டின் பங்கு 8 சதவீதமாக இருந்தது, 1976–77 ஆம் ஆண்டில் இந்த சதவீதம் 4 ஆகக் குறைந்துள்ளது இதிலிருந்து தெரிய வரும். மக்கள் தொகையில் வறுமைக் கோட்டின் கீழ் வாடும் மக்களின் சதவீதம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அதிகமான அளவில் இருந்து வருகின்றது. வேலையற்றோர் எண்ணிக்கையும் தமிழ் நாட்டில் அதிகமான நிலையில் இருந்து வருகின்றது. மத்திய அரசு தக்க முறையில் நேரிடையாகத் தொழில் முதலீடுகள் செய்வதன் மூலமாகவும், தொழில் வளர்ச்சிக்கு மற்ற வகைகளில் வழி கோலுவதன் மூலமாகவும் தமிழ்நாட்டின் இப் பெரும் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியும். தொழில் முதலீடுகளில் பல்வேறு பகுதிகளிடையே ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சீர்செய்யும் முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு, தமிழ் நாட்டில் கூடுத முதலீடுகள் செய்ய வேண்டுமென்றும் இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன். இன்றைய பிரதமர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட சேலம் உருக்காலைத் திட்டத்தின் முதற்கட்டத்தை விரைந்து செயல்படுத்துவதோடு, ஒருங்கிணைந்த உருக்காலைத் திட்டத்தின் இதர பகுதிகளையும் உடனடியாக அமைப்பதன் மூலம் இப்பகுதியின் தொழில் வளர்ச்சிக்கு அடிகோலும்படி மத்திய அரசைக் கேட்டுக் கொள்கின்றேன்.

[1980 பிப்ரவரி 2

13. தமிழ்நாடு அரசு, சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் தொடர்ந்து ஊக்குவித்து வருகின்றது. தொழிலில் பின்தங்கிய 24 வட்டங்களில் புதிதாக நிறுவப்படும் சிறு தொழில்களுக்கு முதலீட்டு மானியம் கொடுக்கும் புதிய திட்டமொன்றைத் தமிழக அரசு செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. அரசின் பல்வேறு துறைகளும் அரசைச் சார்ந்துள்ள நிறுவனங்களும் தத்தம் தேவைகளுக்காகப் பொருள்களை வாங்கும் நேரத்தில், 241 பொருள்களை, அவற்றை உற்பத்தி செய்யும் சிறு தொழில்களிடமிருந்தே பெற வேண்டுமென்றும் அண்மையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. நலிந்துள்ள தொழில்களுக்கு மீண்டும் உயிரூட்டும் முயற்சியில் சிறு தொழில்களையும் உள்ளடக்கி, அவற்றிற்குத் தேவையான மூலதன உதவி செய்வதற்கான மற்றுமொரு புதிய திட்டத்தையும் தமிழ்நாடு அரசு அண்மையில் செயல்படுத்தத் துவங்கியுள்ளது. இவ்வாண்டு 2,000 தீப்பெட்டி உற்பத்தி செய்யும் அமைப்புகள் புதிதாக உருவாக்கப்பட வேண்டுமென்று திட்டமிட்டதற்கு மாறாக இதுவரை மொத்தம் 2,600 நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை முழுத் திறனுடன் செயல்படும் பொழுது மொத்தம் சுமார் 52,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும். 8,000 ஏக்கரில் புதிதாக முசுக்கட்டை பயிரிடுவதன் மூலம் பட்டுத் தொழிலில் பெரியதொரு வளர்ச்சியை ஏற்படுத்த அரசு திட்டமிட்டது மன்ற உறுப்பினர்களுக்கு நினைவிருக்கலாம். இதற்கு எதிராக, 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முடிய 7,000 ஏக்கர் பரப்பில் புதிதாக முசுக்கட்டை பயிரிடப்பட்டு, இந்த நிதி ஆண்டு இறுதிக்குள் சுமார் 10,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனது சென்ற உரையின் போது நான் குறிப்பிட்டவாறு தூத்துக்குடி ஆல்க்லி கெமிகல் நிறுவனம் ஆலையை நிறுவுவதற்கான வேலைகளை முனைப்பாகச் செயல்படுத்தி வருகின்றது. இவ்வாலை 1982ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே உற்பத்தியைத் தொடங்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி காகிதம் செய்வதற்கான அரசின் முடிவைச் செயல்படுத்த, அரசு நிறுவனம் ஒன்று பதிவு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

14. சென்னை நகரம், தமிழ்நாட்டின் தலைநகரமாக அமைந்துள்ளது மட்டுமன்றி, தென்னகத்தின் நுழைவாயிலாகவும் வணிக மையமாகவும் விளங்குகின்றது. சென்னைப் பெருநகர வளர்ச்சிகாக, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றது. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் முதல் கட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், 57 கோடி ரூபாய் செலவிலான இரண்டாம் கட்டத்திற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகரின் போக்குவரத்து நெரிசலைச்சமாளிப்பதற்கான ஒரேவழி, விரைந்து ஓடும் இரயில்கள்

980 பிப்ரவரி 2]

(Mass Rapid Transit System) அமைப்பதன் மூலமேயென்பதை இங்கு நான் மீண்டும் எடுத்துக் கூற விரும்புகின்றேன். விரைவு இரயில் போக்குவரத்து அமைப்பதற்கான பணிகளை வரும் ஆண்டிலாவது மத்திய அரசு தொடங்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நாட்கள் செல்லச் செல்ல பிரச்சினை சிக்கலாவதுடன், செலவும் அதிகமாகிவிடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் சென்னையிலிருந்து தூத்துக்குடி வரையிலான குறுகிய இருப்புப் பாதையை (Metre gauge) அகலப் பாதையாக (broad gauge) மாற்றுவதற்கு மத்திய அரசு விரைவாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதன் மூலமாக, தூத்துக்குடி துறைமுகம் நாட்டிற்கு நன்முறையில் பயன்பட வாய்ப்பு ஏற்படும்; தொழிலில் பின்தங்கிய பல்வேறு பகுதிகள் தொழில் வளர்ச்சி பெறவும் வகை ஏற்படும்.

15. கிராமங்களில் தேவையான அடிப்படை வசதிகளை ஒருங்கிணைந்த முறையில் தருவதற்காக, இந்த ஆண்டு மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவு சிறப்புத் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டது. இதனை விரிவாக்கி, அடுத்து மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

16. வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்குவதற்காக, மைய அரசு நடத்திவரும் 'வேலைக்கு உணவு' திட்டத்தை மேலும் தொடர்ந்து விரிவாக்க வேண்டும். இத்திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தி வரும் தமிழக அரசிற்கு மைய அரசு இன்னும் அதிக அளவில் அரிசி ஒதுக்கீடு செய்து ஊக்குவிக்க வேண்டும் என்பது எனது ஆசை. இத் தருணத்தில், தமிழக அரசு அறிவித்த 'உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம்' செவ்வனே செயல் படுத்தப்பட்டு வருகிறது என மகிழ்ச்சியுடன் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

17. நடமாடும் மருத்துவ நிலையங்கள் இம் மாநிலத்தில் அருந்தொண்டாற்றி வருகின்றன. இத் திட்டம் மேலும் விரிவு படுத்தப்படும். சிறு நகரங்களில் உள்ள மருத்துவ மனைகளிலும் கூட இதய நோய் சிகிச்சை போன்ற சில சிறப்புப் பகுதிகள் ஏற்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுக்கும்.

18. இப்போது மேல் நிலைக் கல்விக்கூடங்களில் சிறப்பாகத் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இக் கல்வியின் தரம் உயர்வதற்கும், இப் பள்ளிகளுக்கு வேண்டிய கருவிகளை கொடுத்து சோதனைக்கூடங்கள் அமைப்பதற்கும் அரசு முயற்சிகள் மேற்கொள்ளும். பள்ளிக் கல்வி நிலையிலேயே மாணவர்களுக்கு வேலை அனுபவம் (Work experience) தேவை என்றும் அவர்கள் சமூகத்திற்குப் பயன்படக்கூடிய தொழில்களில் பயிற்சி பெறுதல் அவசியம் என்றும் இந்த அரசு கருதுகிறது. எனவே, உயர்நிலைப்

பள்ளிகளிலும் தொழிற்கல்வி போதிப்பதற்கான ஏற்பாடுகள் படிப்படியாகச் செய்யப்படும். இக் கல்வி முறைகள் பல்வேறு மாவட்டங்களிலும் பரவலாக அமையும்.

19. உடற்பயிற்சி, விளையாட்டுத் துறைகளில் தனி இயக்குநரகம் அமைத்து, அரசு சிறப்பாகச் செயலாற்றி வருவதை உறுப்பினர்கள் அறிவார்கள். மாணவ, மாணவியருக்கு உடற்பயிற்சி அளிக்கும் திட்டங்கள் வரும் ஆண்டில் பெரிய அளவில் விரிவாக்கப்படும். தேவைப்படும் போது மாணவ, மாணவியர் சமுதாயத்திற்கு நல்லதொரு பாதுகாப்பு அரணாகத் திகழும் வண்ணம், அவர்களுக்குப் பல்வேறு சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப்படும்.

20. சென்ற ஆண்டு எனது உரையின் போது நான் குறிப்பிட்டதைப் போல், ஐந்தாண்டுகளில் ஒரு லட்சம் வீடுகள் கிராமப் புறங்களில் கட்ட உதவும் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு இதன்கீழ் 20,000 வீடுகள் கட்ட முதலில் திட்டமிட்டதற்குப் பதிலாக, தற்பொழுது 30,000 வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 38,000 விண்ணப்பங்களுக்குக் கடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வீட்டுவசதி நகர வளர்ச்சி நிறுவனம் (HUDCO), மற்றுமுள்ள நிதி நிறுவனங்களின் உதவியைப் பெற்று இத் திட்டத்தை மேலும் விரிவாக்குவதற்கான முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது.

21. தமிழக அரசு, தாழ்த்தப்பட்டோர் நலன்களை மேம்படுத்துவதிலும், அவர்களது உரிமைகட்கு முழு பாதுகாப்புத் தருவதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது. இவற்றுக்கான தக்க நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகின்றது.

22. தமிழகத்திலுள்ள அனைத்து தாழ்த்தப்பட்டோர் காலனிகளுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டு விட்டது என்னும் செய்தி மகிழ்ச்சியளிக்கக் கூடியதாகும். மேலும் தாழ்த்தப்பட்டோர் வாழும் காலனிகள் அனைத்திற்கும் இணைப்புச் சாலை குடிநீர் வசதி, இடுகாட்டுக்குப் பாதை வசதி போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து அளிப்பதற்கான சிறப்புத் திட்டமொன்றை உடனடியாக அரசு மேற்கொள்ளும். இந்த ''தாழ்த்தப்பட்டோர் காலனிகள் மேம்பாட்டுத் திட்டம்'' வரும் ஆண்டில் 5,000 காலனிகளில் செயல்படுத்தப்படும். மேலும் அரிசன நலத்துறைப் பள்ளிகள் அனைத்திற்கும் தேவைப்படும் நிலையான கட்டிடங்களும் அடுத்த ஆண்டு கட்டுவதற்கான பணியும் மேற்கொள்ளப்படும்.

23. கிராமங்களிலும் நகர் பகுதிகளிலும் கடன் தொல்லையால் அவதியுறும் ஏழை எளிய மக்களுக்கு நல்லமுறையில் பாதுகாப்பு அளிப்பதற்காக ஒரு கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்படும்: இதற்கான சட்ட வரைவு இக் கூட்டத் தொடரில் அவை முன் வைக்கப்படும்.

1980 பிப்ரவரி 2]

24. தமிழ் மொழிப்பற்று, அதன் பாதுகாப்பு இவற்றிற்காகவும் தமிழ் பேசும் பகுதிகள் தமிழகத்துடன் இணைய வேண்டுமென்ற ஆர்வத்துடன் செயல்பட்டதாலும், இன்னலுற்ற தியாகிகளுக்கு உதவித் தொகை வழங்க சட்ட வரைவு ஒன்றை அரசு தயாரித்து வருகின்றது. இது, விரைவில் சட்டமன்றத்தின் ஒப்புதலுக்காக கொண்டுவரப்படும்.

25. நமது மாநிலத்தில் கேரள எல்லைக்கு அருகில் அமைந்திருக்கும் சண்ணகி கோயில் பிரச்சினை பற்றி எனது அரசு கேரள அரசோடு பேச்சு வார்த்தைகள் நடத்தும். இதன் விளைவாக, அக் கோயிலை மக்கள் சென்று பார்ப்பதற்கான வசதிகள் உருவாக்கப்படும். மாநில அரசின் புதைபொருள் ஆராய்ச்சித் துறையினர் இங்கும், மற்ற பல இடங்களிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்வார்கள். சரித்திரப் புகழ்பெற்ற இடங்கள் சுற்றுலா மையங்களாக மாற்றப்பட்டு, வெளி நாட்டினரும் நம் நாட்டினரும் அவற்றைக் கான ஏற்பாடு செய்யப்படும். இதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணி ஈட்டப் படுவதுடன் வேலை வாய்ப்புகளும் பெருகும்.

26. அறநிலையத் துறை நிறுவனங்களின் நிர்வாக அமைப்பு களைச் சீராக்கி மேம்படுத்த இந்த அரசு எல்லா நடவடிக்கை களையும் மேற்கோள்ளும். குறிப்பாக அறக் கட்டளைகளுக்குப் பொருள் எழுதி வைத்தோரின் நோக்கங்களும் விருப்பங்களும் நிறைவேறும் வண்ணம் அவைகள் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

27. இப்போதுள்ள நிலையில், தொழில் தகராறு சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் தொழிற்சங்கங்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள், எல்லாத் தொழிலாளர்களையும் கட்டுப்படுத்து வதாக அமைகின்றன, தொழிற்சாலையில் வேலை செய்யும் பெரும்பான்மையோரின் பிரதிநிதிகளாக இல்லாத பொழுதும், தற்போதுள்ள விதியின்படி, சங்கங்கள் அவ்வாறு ஒப்பந்தங்கள் செய்து கொள்ள வகை இருக்கின்றது. தொழிற்சங்க உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களில், மிகப் பெரும்பான்மையோர் ஏற்றுக்கொண்ட 12 (3) ஒப்பந்தம், வேலை நிறுத்த அறிவிப்பு முதலியவை மட்டுமே எல்லோரையும் கட்டுப்படுத்தும் என்று தெளிவாக்குவதற்கான சட்டத் திருத்தம் ஒன்று அவையின் ஒப்புதலுக்குக் கொண்டு வரப்படும்.

28. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சி ஆகிய உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேர்தல நடத்த அரசு அண்மையில் முடிவு எடுத்துள்ளதை மன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். பதினெட்டு வயது வந்தோர் அனைவரும் தேர்தல்களில் வாக்களிக்க வகை செய்வதற்கான

சட்டத் திருத்தம் செய்யவும் தாய்மார்களுக்கும் தாழ்த்தப் பட்டோருக்கும் தக்க இட ஒதுக்கீடு பற்றிய சட்டத் திருத்தங்கள் செய்யவும் அரசு உத்தேசித்துள்ளது.

29. முன்னாள் இராணுவ வீரர்களை நகரப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தும் திட்டமொன்றை அரசு அண்மையில் அறிவித்துள்ளது. இது, மேலும் பரவலாக்கப்படும். மாநிலத்தின் எல்லையோரப் பகுதிகளில் சட்டம், ஒழுங்கு நல்ல முறையில் பாதுகாக்கப்படவும், ஆக்ரமிப்பு, வனப் பொருள்களைக் கடத்துதல் போன்ற குற்றங்களைத் தடுப்பதற்கும் ஆங்காங்கே நிரந்தரமாகக் காவல் படை இருத்தி வைக்கப்படும்.

30. நிர்வாகச் சீரமைப்புகளைத் தேவைப்படும் போதெல்லாம் தொடர்ந்து செய்து வரும் தமிழக அரசு, வரும் ஆண்டில் வருவாய் வாரியத்தை நீக்கி, அதற்குப் பதிலாக தனித்தனியான துறைத் தலைவர்கள் (Heads of deparments) அமைப்பதென முடிவு எடுத்துள்ளது. இதனை நிறை வேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படுமென்பதை மன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

31. காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவ வேண்டும் என்ற கருத்து பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்தே பொதுவாக நிலவி வருகின்றது. இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவிற்கு அரசு பரிந்துரை செய்யும்.

32. தமிழ்நாடு சட்ட மன்றம் ஆக்கப்பூர்வமான யோசனைகளை அரசுக்கு நல்கி பண்பாடு குன்றாமல் தனது நடவடிக்கைகளை நடத்திச் செல்லும் சீரிய பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. இந்த மரபு குன்றாமல், வரும் சட்ட மன்றக் கூட்டத்தொடர் அமைய வேண்டுமென்றும் அதற்கு உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் மனமார்ந்த முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன்.

33. தமிழக மக்களின் நலன்களுக்காக, மற்ற உறுப்பினர்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளும் வெற்றி பெற விழைகின்றேன். வறுமையும் வேலையின்மையும் விரைவில் நீங்குவதற்காக நாமனைவரும் ஒரு சேர உழைப்போமாக :

வணக்கம்.

இணைப்பு III.

[32-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 5-க்கான விடையைக் காண்க.]

சட்டப்பேரவை முன் வைக்கும் விவர அறிக்கை.

(ஆ) கோவில்கள், மசூதிகளுக்கு, ஆங்கிலேய அரசுக்கு முன்பிருந்த அரசர்கள் பராமரிப்புக்காக கொடுத்து வந்த மான்யத் தொகையை மோகினி அலவன்ஸாக, 1863 முதல் கிராம கிஸ்தி வசூல் தொகையில் கழிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட ஸ்தாபன நிர்வாகிகளுக்கு கிராம முன்சீப்பால் கிராமத்திலேயே பட்டுவாடா செய்யப்பட்டு வந்தது. இந்த முறை பின்னர் மாற்றப்பட்டு சம்பந்தப்பட்ட மத மற்றும் தர்ம ஸ்தாபன நிர்வாகிகள் தாலுக்காவில் மனுச் செய்து பணப்பட்டியல் மூலம் பணத்தைப் பெறுகிறார்கள். இதற்கென ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட தொகை அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்படி தொகை மாவட்ட வருவாய் அதிகாரியால் ஒவ்வொரு தாலுக்காவிற்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது, மேற்படி தொகை "363. நஷ்ட ஈடுகள் மற்றும் அடமானம் வசூல் கழிவுகள்" என்னும் செலவுக் கணக்குத் தலைப்பின்கீழ் செலவழிக்கப்படுகிறது.

(இ) 1974 முதல் ஒவ்வொரு ஆண்டும் மேற்படி அலவன்ஸ் பெற்றவர்கள் விவரம் பின்வருமாறு :

வருடம்.	மோகினி அலவன்ஸ் பெற்ற தர்ம ஸ்தாபனங்களின் எண்ணிக்கை.	மோகினி அலவன்ஸ் தொகை.
(1)	(2)	(3)
		ரூ. பை.
1974	615	1,29,241.34
1975	611	1,24,875.95
1976	592	1,21,380.08
1977	652	1,09,456.33
1978	623	1,17,624.79

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு IV

[65-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 18-க்கான விடையைக் காண்க.]

வடஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் பாலாற்றில் மணல் ஏலம் விடப்பட்டுள்ள இடங்கள் பற்றிய விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

வரிசை எண்.	மாவட்டங்களின் பெயர்.	கிராமங்களின் பெயர்.	பசலி ஆண்டு.	பசலி ஏலத் தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
				ரூ. பை.
1	செங்கற்பட்டு	1 செவிலிமேடு	1387	1,800.00
		2 ஒரிக்கை		7,300.00
		3 பாலூர்		1,400.00
		4 காவித்தண்டலம்		குத்தகைக்கு விடப்படவில்லை.
		5 மாமண்டூர்		6,425.00
		6 மணப்பாக்கம்		600.00
2	வட ஆற்காடு	வாலாசா தாலுகா		
		1 பிஞ்சி	1387	565.00
		2 காரை		1,905.00
		3 நவ்வாக்		35.00
		4 தெங்கால்		105.00
		5 வன்னிமேடு		625.00
		6 திருமலைசேரி		205.00
		ஆற்காடு தாலுகா		
		7 ஆற்காடு		ரூ. 4,360.00

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

	வாணியம்பாடி தாலுகா		
8	ஆம்பூர்		1,530.00
9	அம்பலூர்		50.00
10	வாணியம்பாடி தேவஸ்தானம் முதலியன		4,025.00
11	ஆம்பூர்		145.00
	வேலூர் தாலுகா		
12	சத்துவாச்சாரி	1387	190.00
13	கிழாத்தூர்		120.00
14	சேண்பாக்கம் 1ஏ		460.00
15	சேண்பாக்கம் 1பி		11,300.00
16	பசுமாத்தூர்		830.00
17	திருவலம்		960.00
18	கொடக்கல்		10.00
19	வெட்டிமாங்குளம்		12.00
20	அழிந்திகுப்பம்		12.00
21	காங்கேயநல்லூர்		330.00
22	விருதம்பட்டு		2,310.00
23	மேல்பட்டி		50.00
	அரக்கோணம் தாலுகா		
24	அரக்கோணம்		80.00
25	பனப்பாக்கம்		177.00
26	ரெட்டிவலம்		40·00

வரிசை எண்.	மாவட்டங்களின் பெயர்.	கிராமங்களின் பெயர்	பசலி ஆண்டு.	பசலி ஏலத் தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
				ரூ. பை.
1	செங்கற்பட்டு	1 செவிலிமேடு	1388	2,000.00
		2 ஒரிக்கை		9,400.00
		3 பாலூர்		1,600.00
		4 காவித்தண்டலம்		4,200.00
		5 மாமண்டூர்		முதல் ஏலம் ரூ. 4,375 போனதால் குறைவெனக் கருதி மறு ஏலம் உத்தரவிடப் பட்டுள்ளது.
		6 மணப்பாக்கம்		ரூ. 2,000.00
		வாலாசா தாலுகா		
	வட ஆற்காடு	1 பிஞ்சி	1388	1,150.00
		2 காரை		2,730.00
		3 நவ்வாக்		50.00
		4 தெங்கால்		251.00
		5 வேப்பூர்		20.00
		6 இரசாத்புரம்		25.00
		7 மேல்விஷாரம்		30.00
		8 வன்னிமேடு		627.50
		9 பூண்டி		26.00
		10 திருமலைசேரி		101.00
		11 திருப்பாற்கடல்		51.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆற்காடு தாலுகா

12	ஆற்காடு		1,850.00

வாணியம்பாடி தாலுகா

13	ஆம்பூர்	1388	2,340.00
14	அம்பலூர்		500.00
15	ஆம்பூர்பேட்டை		125.00
16	தேவஸ்தானம் வாணியம்பாடி		108.00
17	வாணியம்பாடி கிராமம் } வாணியம்பாடி நகரம் }		56.00
18	வாணியம்பாடி நகரம்		4,140.00
19	சேண்பாக்கம்		3,050.00
20	கிழாத்தூர்		135.00
21	சத்துவாச்சாரி		50.00

குடியாத்தம் தாலுகா

22	பசுமாத்தூர்		545.00
23	திருவலம்		225.00
24	காங்கேயநல்லூர்		175.00
25	விருதம்பட்டு		855.00
26	மேல்பட்டி		59.00
27	அம்முண்டி		100.00
28	உள்ளி		80.00

அரக்கோணம் தாலுகா

28	அரிசிலவாடி		85.00

இணைப்பு V

[69ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 25-க்கான விடையைக் காண்க.]

திருச்சி நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை வட்டாரத்தில் உள்ள பயணமாளிகையின் விபரம்.

வரிசை எண்.	பயணிகள் விடுதியின் பெயர்.	செலவழிந்த தொகை விபரம். 1975	1976	1977
(1)	(2)	(3)	(4)	(5)
		ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
	திருச்சி கோட்டம்;—			
1	பயணிகள் தங்கும் விடுதி, அரியலூர் ..	5,711.27	4,246.73	4,677.77
2	,, ஜெயங்கொண்டாம்	6,376·67	4,795·00	4,630·29
3	,, கீழபழூர்	4,148·62	3,505·85	4,115·60
4	,, லோயர் அணைக்கட்	5,134·08	3,484·40	3,977·76
5	,, மாந்துரை ..	3,316·58	5,299·49	3,517·37
6	,, பாடாலூர் ..	2,183·00	2,558·07	3,438·20
7	,, துறையூர் ..	4,237·05	7,315·96	4,456·75
8	,, துரமங்களம் ..	3,646·50	9,177·86	4,255·95
9	நெடுஞ்சாலைதுறை அலுவலக கட்டிடம் ..	4,910·19	5,341·77	362·70
10	பயணிகள் விடுதி, மதுரைசாலை ..	..	1,776·36	4,307·98
		39,663·96	47,501·49	37,740·37

புதுக்கோட்டைக் கோட்டம்:—

11	பயணிகள் தங்கும் விடுதி,	புதுக்கோட்டை ..	5,937·83	5,063·56	5,072·43
12	,,	நாகுடி ..	3,365·60	3,228·40	3,813·00
13	,,	பொன்னமராவதி ..	5,342·59	3,064·98	3,813·00
14	,,	குளித்தலை ..	4,004·39	4,997·20	6,187·33
15	,,	மணப்பாறை ..	5,511·95	5,442·50	5,702·45
16	,,	வியம்பட்டி ..	2,805·65	3,147·40	3,295·40
17	,,	கோயில்பட்டி ..	2,741·80	3,114.55	3,412·10
18	,,	நொய்யல் ..	3,640·09	4,236·26	3,666·02
19	,,	அரவாக்குறிச்சி ..	3,005·49	4,036·84	3,199·14
20	,,	கரூர் ..	14,722·31	13,719.30	12,637·47
			51,077·70	50,050·99	50,798·29

மதுரை கோட்டம்:—

21	பயணிகள் மாளிகை,	மதுரை ..	7,214·00	6,439·00	9,233·00
22	,,	திருமங்கலம் ..	4,726·00	9,076·00	11 087·00
23	,,	டி. கல்லுப்பட்டி ..	4,044·00	3,830·00	4,560·00
24	,,	தேனீ ..	4,020·00	7,255·00	12,587·00
25	,,	பெரியகுளம் ..	2,974·00	3,669·00	4,166·00
26	,,	நத்தம் ..	2,733·00	5.704·00	4,699·00
27	,,	கோட்டாம்பட்டி ..	3,106·00	5,086·00	4,151·00
28	பயணிகள் மாளிகை	போடிமேடு ..	2,844·00	4,904·00	2,685·00
29	,,	உசிலம்பட்டி ..	4,166·00	13,430·00	5,664·00
			35,827·00	59,393.00	58,832·00

வரிசை எண்.	பயணிகள் விடுதியின் பெயர்.	செலவழித்த தொகை விபரம். 1975	1976	1977
(1)	(2)	(3)	(4)	(5)
		ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
	திண்டுக்கல் கோட்டம்:—			
30	பயணிகள் விடுதி, பட்லகுண்டு ..	3,732·00	5,665·00	4,858·00
31	,, கோடைக்கானல் ..	5,880·00	12,099·00	16,575·00
32	,, கண்குவார்பட்டி ..	2.512·00	3,481·00	3,244·00
33	,, மூளியார் ..	2,151·00	2,312·00	1,405·00
34	,, கொடைசாலை ..	5,770·00	10,193·00	26,204·00
35	,, பழனி ..	4,763·00	7,336·00	9,941·00
36	,, பழக்காநத்து ..	2,763·00	3,266·00	3,284·00
37	,, வேடசந்தூர் ..	2,550·00	3,008·00	3,258.00
38	,, ஏரியோடு ..	2,317·00	2,729·00	3,046·00
		32,438·00	50,149·00	71.815·00
	தஞ்சாவூர் மாவட்டம்:—			
39	பயணிகள் விடுதி, திருவையாறு ..	3,187·01	9,168·39	3,962·89
40	,, கும்பகோணம் ..	5,253·35	10,953·56	10,270·71
41	,, செங்கிப்பட்டி ..	7,426·85	3,304·20	2,730·65
42	,, திருவிடைமருதூ ..	2,723·09	6,795·99	4,464·85

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

43	,, வலங்கைமான்	..	2,537·85	5,618·89	3,695·35
44	,, மதுக்கூர்	..	3,055·88	3,054·25	3,027·90
45	,, அதிராம்பட்டினம்	..	5,373·91	4,470·75	3,284·45
			29.557·94	43,366·03	31,436·80
46	பயணிகள் விடுதி, பட்டுக்கோட்டை	..	6,120·02	9,442·64	15,059·33
47	,, பேராவூரணி	..	3'115·40	6,021·20	4,384·80
			38,793·36	58,829·87	50,880·93

நாகப்பட்டினம் கோட்டம்:—

48	பயணிகள் மாளிகை, வேதாரண்யம்	..	4,003·00	6,229·00	8,218·00
49	,, நன்னிலம்	..	4,143·00	5,493·00	4,724·05
50	,, மன்னார்குடி	..	10,773,00	10.769·00	9,757·00
51	,, சீர்காழி	..	4,574·00	6,674·00	6,516·00
52	,, திருத்துறைப்பூண்டி	..	2,183·00	2,698·00	1,912·00
53	,, மாயூரம்	..	..	..	1,524·00
		..	25,676·00	31,863·00	32,651·00

திருச்சி வட்டம்:—	..	2,23,476·02	2,97,787·35	3,02,717,59

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் கோவை வட்டத்திலுள்ள பயணியர் விடுதியின் இருப்பிடமும் அவற்றுக்கான செலவிடப்பட்ட பராமரிப்புத் தொகை விவரப்பட்டியல்.

வரிசை எண்.	பயணியர் விடுதியின் இருப்பிடம்.	பராமரிப்புக்காக செலவிடப்பட்ட தொகை.		
		1975	1976	1977
(1)	(2)	(3)	(4)	(5)
		ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
1	பயணியர் விடுதி, அதமன்கோட்டை ..	4,582·33	4,564·65	5,615·78
2	,, பர்கூர்	3,191·80	4,087·10	5,646·20
3	,, தர்மபுரி ..	5,593·01	4,251·25	5,989·43
4	,, ஒகேனக்கல்	4,364·84	3,251·25	5,864·15
5	,, அரூர்	3,312·54	5,566·21	5,772·48
6	,, ஓசூர்	5,185·10	6,008·67	6,123·23
7	,, காவேரிப்பட்டினம் ..	2,685·50	2,177·02	3,770·66
8	,, கிருஷ்ணகிரி ..	3,496·45	4,161·15	6,225·67
9	,, மத்தூர் ..	3,420·95	2,816·25	4,056·55
10	,, பாலக்கோடு	3,359·69	3,166·75	5,882·24
11	,, ராயக்கோட்டை ..	4,102·94	3,269·63	3,233·44
12	,, ஊத்தங்கரை ..	5,328·20	3,828·15	5,841·30
13	பெருந்துரை ..	3,832·40	3,859·10	5,662.00
14	,, பவானி	8,733·31	6.511·67	5,919·90
15	,, அந்தியர்	2,760·27	4,091·15	3,270·80
16	,, கோபி	4,683·95	4,678·61	5,846·85
17	,, சத்தி	4,979·13	5,140·72	5,846·85
18	-, திம்பம்	3,094·45	3,465·80	5,115·69
19	,, காங்கயம்	3,757·85	4,709·69	5,165·08
20	,, வெள்ளக்கோயில் ..	3,607·95	2,996·35	4,462·52

D II A 331—34

21	பயணியர் விடுதி, கொடுமுடி	4,191·40	2,738·00	4,663·80
22	,, நாமக்கல்	5,618·00	7,858·00	10,822·00
23	,, மோகனூர்	2,503·00	2,790·00	3,228·00
24	,, சோளக்காடு	3,748·00	5,997·00	5,633·00
25	,, இராசிபுரம்	3,946·00	5,959·00	6,427·00
26	,, முனுசாவடி	2,369·00	4,224·00	4,095·00
27	,, கொமரபாளையம்	2,880·00	5,963·00	4,912·00
28	,, எடப்பாடி	3,374·00	4,708·00	1,957.00
29	,, சங்ககிரி	3,318·00	4,526·00	3,484·00
30	,, திருச்செங்கோடு	4,751·00	6,290·00	6,058·00
31	,, வேலூர்	2,598·00	3,252·00	(பொ. ப. துறைக்கு மாற்றப் பட்டது.)
32	,, ஆத்தூர்	5,279·00	5,515·00	5,888.00
33	,, தலைவாசல்	3,585·00	3,271·00	5,473·00
34	,, வாழப்பாடி	4,249·00	5,387·00	3,903·00
35	,, காரிப்பட்டி	3,100·00	4,464·00	2,888·00
36	,, ஏற்காடு	5,686·00	7,584·00	7,351·00
37	,, ஓமலூர்	5,636·00	6,145·00	5,781·00
38	,, மேட்டூர்	4,683·00	3,584·00	3,744·00
39	,, அன்னூர்	5,332·00	4,745·00	5,212·00
40	,, அவினாசி	3,337·00	4,098·00	5,109·00
41	,, பல்லடம்	3,193·00	3,578·00	6,032·00
42	,, கருமத்தம்பட்டி	2,383·00	2,657·00	2,994·00
43	ஓய்வு விடுதி, சிறுமுகை	2,471·00	2,356·00	2,455·0

வரிசை எண்	பயணியர் விடுதியின் இருப்பிடம்.	பராமரிப்புக்காக செலவிடப்பட்ட தொகை. 1975	1976	1977
(1)	(2)	(3)	(4)	(5)
		ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
44	பயணியர் விடுதி, பெரியபட்டி	2,073·00	1,110·00	பயணியர் விடுதி குடியிருப்பு இல்லமாக மாற்றப் பட்டது.
45	,, கூடலூர்	3,200·00	3,600·00	5,550·00
46	,, மசனகுடி	2,350·00	3,800·00	8,900·00
47	,, கோத்தகிரி	3,050·00	6,200·00	3,700·00
48	,, குன்னூர்	4,700·00	6,200·00	5,850·00
	..	1,87,666·76	2,11,402·82	2,37,552·39

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சென்னை வட்டத்திலுள்ள ஓய்வு விடுதிகளுக்கான 1975, 1976, 1977 ஆம் ஆண்டுகளுக்கான வருட பராமரிப்புச் செலவுகள்.

வரிசை எண்ணும் கோட்டங்களின் பெயர்களும்.	கோட்டங்களில் உள்ள ஓய்வு விடுதிகளின் பெயர்கள்.	1975, 1976, 1977 ஆண்டுகளுக்கான பராமரிப்புச் செலவுகள்.					
		1975		1976		1977	
(1)	(2)	(3)		(4)		(5)	
		ரூ.	பை.	ரூ.	பை.	ரூ.	பை.
1 சைதை கோட்டம்.	1. கடப்பேரி (ஓய்வு விடுதி).	2,707	00	2,791	00	2,537	00
	2. பெரியபாளையம் (ஓய்வு விடுதி).	3,300	00	3,655	00	3,063	00
	3. கும்முடிப்பூண்டி (பயணியர் விடுதி).	5,494	00	4,510	00	9,604	00
	4. திருத்தணி	10,065	00	8,143	00	7,331	00
2 செங்கல்பட்டு கோட்டம்.	1. ஆவடி (ஓய்வு விடுதி).	3,141	00	2,800	00	3,537	00
	2. கூடுவாஞ்சேரி (பயணியர் விடுதி).	3,463	00	7,756	00	7,653	00
	3. மலப்பாளையம் ,,	6,523	00	7,494	00	5,981	00
	4. அச்சரப்பாக்கம் ,,	4,452	00	5,731	00	4,947	00
3 வேலூர் கோட்டம்.	1. கன்னமங்கலம் ,,	3,477	35	4,699	01	4,367	66
	2. சோளிங்கர் ,,	2,810	30	3,566	27	3,507	35
	3. ஏலகிரி ,,	4,109	40	4,270	55	3,454	45
	4. திருப்பத்தூர் ,,	5,302	24	4,887	60	2,834	80

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	பயணிகள் விடுதியின் பெயர்.		செலவழிந்த தொகை விபரம்.					
			1975 (3)		1976 (4)		1977 (5)	
(1)	(2)		ரூ.	பை.	ரூ.	பை.	ரூ.	பை.
4 கடலூர் கோட்டம்.	1. பன்ருட்டி	(பயணியர் விடுதி)	4,683	14	4,878	98	5,096	16
	2. புவனகிரி	,,	2,448	85	3,424	05	3,338	00
	3. குறிஞ்சிப்பாடி	,,	2,825	89	3,299	60	3,380	55
	4. கள்ளக்குறிச்சி	,,	3,257	68	3,864	62	4,702	03
	5. அனுமந்தல்	,,	1,719	45	2,563	10	2,258	30
	6. வேப்பூர்	,,	1,719	45	2,672	11	3,637	92
5 திருவண்ணாமலைக்கோட்டம்.	1. செங்கம்	,,	4,567	89	5,786	75	5,466	59
	2. போளூர்	,,	3,740	35	4,547	87	3,951	20
	3. செய்யார்	,,	4,160	87	4,810	06	5,976	18
	4. மோரணம்	,,	2,303	30	2,735	60	3,049	30
	5. வந்தவாசி	,,	3,786	50	5,647	17	5,548	99
6 விழுப்புரம் கோட்டம்.	1. கோலியனூர்	,,	5,159	88	4,166	46	3,169	05
	2. செஞ்சி	,,	4,170	71	4,105	30	6,071	09
	3. மெர்க்காணம்	,,	6,834	18	4,720	28	3,813	84
	4. திண்டிவனம்	,,	9,558	38	6,466	30	6,658	21
	5. அரகூர்	,,	3,775	00	2,714	30	3,801	11
	6. உளுந்தூர்பேட்டை	,,	5,991	49	7,912	92	7,818	03
	7. திருக்கோவிலூர்	,,	3,895	43	4,186	36	4,697	50
			1,29,442	73	1,38,803	26	1,41,251	31

திருநெல்வேலி (நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை) வட்டத்திலுள்ள பயணிகள் தங்கும் விடுதிக்கான பராமரிப்பு செலவு விபரம்.

வரிசை எண்.	விடுதியின் பெயர்,	பராமரிப்பு செலவு.					
		1975		1976		1977	
(1)	(2)	(3)		(4)		(5)	
		ரூ.	பை.	ரூ.	பை.	ரூ.	பை.
1	அம்பாசமுத்திரம் தங்கும் விடுதி	4,724	98	6,069	84	4,251	89
2	குற்றாலம் ஆய்வு விடுதி	3,130	95	3,270	95	3,444	30
3	நாங்குநேரி தங்கும் விடுதி	6,604	20	4,866	35	7,219	76
4	ராதாபுரம் தங்கும் விடுதி	2,486	50	3,605	81	4,079	85
5	திசையன் விளை தங்கும் விடுதி	2,781	10	4,992	31	3,865	81
6	வள்ளியூர் தங்கும் விடுதி	5,328	45	4,353	84	4,516	90
7	கோவில்பட்டி தங்கும் விடுதி	13,713	00	19,200	00	29,537	00
8	சங்கரன்கோவில் தங்கும் விடுதி	7,121	00	10,696	00	8,369	00
9	திருச்செந்தூர் தங்கும் விடுதி	7,581	00	12,970	00	19,949	00
10	விளாத்திகுளம் தங்கும் விடுதி	8,749	00	6,043	00	4,350	00
11	குறுக்குச்சாலை ஆய்வு விடுதி	4,612	00	4,326	00	4,034	00
12	புதுக்குடி ஆய்வு விடுதி	3,775	00	7,210	00	4,143	00
13	சாத்தான்குளம் ஆய்வு விடுதி	2,507	00	5,668	00	6,600	00
14	வாசுதேவநல்லூர் ஆய்வு விடுதி	3,520	00	1,326	00	2,898	00
15	பாலையம்பண வாகைக்குளம் ஆய்வு விடுதி	2,379	00	3,377	00	3,303	00
16	பாளையம்பட்டி தங்கும் விடுதி	16,382	00	26,994	00	33,911	00
17	காரியப்பட்டி தங்கும் விடுதி	2,937	00	4,042	00	3,452	00
18	சாத்தூர் தங்கும் விடுதி	12,930	00	15,267	00	11,235	00
19	சிவகங்கை தங்கும் விடுதி	8,784	78	5,597	51	7,785	84
20	மானாமதுரை தங்கும் விடுதி	7,837	35	5,518	78	5,909	61
21	திருப்புவனம் தங்கும் விடுதி	5,423	31	4,103	35	4,382	25
22	திருவாடானை தங்கும் விடுதி	4,201	29	5,513	11	6,572	12

வரிசை எண். (1)	விடுதியின் பெயர். (2)	பராமரிப்புச் செலவு. 1975 (3)		1976 (4)		1977 (5)	
		ரூ.	பை.	ரூ.	பை.	ரூ.	பை.
23	தொண்டி தங்கும் விடுதி	4,353	79	4,211	36	9,505	09
24	திருப்பத்தூர் தங்கும் விடுதி	5,419	32	6,198	27	5,631	30
25	ராமநாதபுரம் தங்கும் விடுதி	19,192	10	11,234	01	11,693	08
26	ராமேஸ்வரம் தங்கும் விடுதி	3,331	67	3,013	60	3,672	81
27	பரமக்குடி தங்கும் விடுதி	6,392	96	5,697	87	6,460	05
28	முதுகுளத்தூர் தங்கும் விடுதி	3,685	45	3,884	81	4,429	14
		1,79,884	20	1,99,140	87	2,25,200	89

இணைப்பு VI.

[70-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 26க்கான விடையைக் காண்க.]

மாவட்டம் அல்லது மண்டலம்.	1976-77.	1977-78.
1. இராமநாதபுரம்	11	6
2. புதுக்கோட்டை	4	..
3. மதுரை	15	17
4. தென் ஆற்காடு	6	7
5. தர்மபுரி	10	9
6. சேலம்	1	11
7. வடாற்காடு	17	25
8. செங்கற்பட்டு	1	2
9. ஈரோடு	23	9
10. திருச்சிராப்பள்ளி	10	6
11. தஞ்சாவூர்	4	19
12, கன்னியாகுமரி	..	..
13. நீலகிரி	..	..
14. கோயம்புத்தூர்	21	34
15. திருநெல்வேலி	4	1
16, சென்னை	..	..
வடக்கு	..	..
தெற்கு	..	..
மையம்	..	..
மொத்தம் ..	127	146

சட்டமன்றப் பேரவை
தமிழ்நாடு
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு VII.

[76ம்- பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 41-க்கான விடையைக் காண்க.]

விடை—

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்காணும் புதிய வழித்தடங்களில் ஜீப் வண்டிகள்/பேருந்துகள் விடப்படுகின்றன :—

1. உளுந்தூர்பேட்டை—விருத்தாசலம் (வழி) சேந்தநாடு, ஆலடி, பாலக்கொல்லை (பேருந்து) ;

2. உளுந்தூர்பேட்டை—பெண்ணாடம் (வழி) வேப்பூர், தொழுதூர், திட்டகுடி (பேருந்து);

3. பெண்ணாடம் பஸ் நிலையம்—நல்லூர் (வழி) இராப்பாவூர், கோத்தனூர் மற்றும் கண்டப்பங்குறிச்சி (ஜீப் பேருந்து);

4. தியாகதுருகம்—புதுக்கேணி (வழி) பூக்குளம், பனையங்கால், சித்தலூர், வெங்கவாடி, குடியநல்லூர் மற்றும் கோட்டையூர் (ஜீப் பேருந்து) ;

5. திருக்கோயிலூர்—கள்ளக்குறிச்சி (வழி) கடிலம், மேம்பாலம், எறையூர், சீதேவி, ரிஷிவந்தியம் மற்றும் தியாகதுருகம் (பேருந்து) ;

6. அரசம்பட்டு—தியாகதுருகம் (வழி) சங்கராபுரம், டி. பாண்டலம், எஸ். குளத்தூர், விரியூர், பாளையனூர், வாளையாம்பட்டு, சித்தேரிப்பட்டு, சூலாங்குறிச்சி, பல்லகச்சேரி மற்றும் கலையநல்லூர் (ஜீப் பேருந்து) ;

7. தியாகதுருகம்—அடரி (வழி) புரசக்குறிச்சி எய்யனூர், அசகுலத்தூர் (ஜீப் பேருந்து) ;

8. தியாகதுருகம்—மூங்கில் துறைப்பட்டு (வழி) பாவந்தூர், மேல்பழங்கூர், பகண்டை, அரியலூர், அத்தியூர் மற்றும் ஜம்படை (பேருந்து) ;

9. மோட்டாம்பட்டி—தியாகதுருகம் (வழி) புதுப்பாலப்பட்டு, அரசம்பட்டு, சங்கராபுரம், அத்தியூர், அரியலூர், பஞ்சாயத்து யூனியன் அலுவலகம், பகண்டை, ஏந்தல், மரூர், மாடாம்பூண்டி, லால்பேட்டை மற்றும் பாவந்தூர் (பேருந்து);

10. தியாகதுருகம்—அத்தியூர் (வழி) ரிஷிவந்தியம், பாவந்தூர், மேலப்பழங்கூர், பகண்டை மற்றும் அரியலூர் (பேருந்து).

1980 பிப்ரவரி 2]

11. உளுந்தூர்பேட்டை—திருக்கோயிலூர் (வழி) கீரனூர், பாண்டூர், பிள்ளையார் குப்பம், கலமருதூர் கூவகம் குறுக்குச் சாலை, பெரிய செவலை, பாவந்தூர் மற்றும் குன்னத்தூர் (பேருந்து);

12. உளுந்தூர்பேட்டை—தச்சூர் (வழி) ஆசனூர் சேப்பாக்கம், வேப்பேரி, கழதூர் மற்றும் எழுந்தூர் (பேருந்து);

இதைத் தவிர கீழ்க்காணும் வழித் தடங்களில் பேருந்துகள்/மினி பஸ்கள் விட பரிசீலனை செய்யப்படுகின்றன :—

1. உளுந்தூர்பேட்டை—நரிபாளையம் (வழி) பிள்ளையார் குப்பம் மற்றும் கிளியூர்.

2. உளுந்தூர்பேட்டை—உளுந்தூர்பேட்டை (வழி) எலவானாசூர், பரிந்தல், ஆசனூர், வேப்பூர், கூத்தக்குடி.

3. உளுந்தூர்பேட்டை—தியாகதுருகம் (வழி) எலவானாசூர் கோட்டை.

4. எலவானாசூர் கோட்டை—உளுந்தூர்பேட்டை (வழி) நரிப்பாளையம், கிளியூர், குன்னத்தூர் மற்றும் பிள்ளையார் குப்பம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

இணைப்பு VIII.

[78ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 44-க்கான விடையைக் காண்க]

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களின் கிராமவாரியான விவரம்.

வரிசை எண்ணும், கிராமத்தின் பெயரும்.	நன்செய்.	புன்செய்/ மானாவாரி	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	ஏ.செ.	ஏ.செ.	ஏ.செ.
1 அய்யம்புள்ளி, பழனி தாலூகா	76.95½	2.95	79.90½
2 புது அச்சு, பழனி தாலூகா.	11.00½	..	11.00½
3 பெரிய அம்மாபட்டி பழனி தாலூகா.	2.24	..	2.24
4 தாமரைக்குளம், பழனி தாலூகா.	6.42	2.70	9.12
5 பாலசமுத்திரம், பழனி தாலூகா.	9.73	..	9.73
6 ஏ. கலையம்புத்தூர், பழனி தாலூகா.	10.76	3.27	14,03
7 ஆயக்குடி, பழனி தாலூகா.	10.56	..	10.56
8 பழனி கிராமம், பழனி தாலூகா,	105.22½	33.17	138.39½
9 பழமானேரி, தஞ்சாவூர் மாவட்டம்.	1.02	..	1.02
10 கோதைமங்கலம், பழனி தாலூகா.	1.08	..	1.08
11 மானூர், பழனி தாலூகா	18.90	16 13	35.03
12 குமரலிங்கம், உடுமலை தாலூகா, கோவை மாவட்டம்.	44.26	..	44.26
13 முல்லைவாசல், மன்னார்குடி.	1.12	..	1.12

1980 பிப்ரவரி 2]

வரிசை எண்ணும், கிராமத்தின் பெயரும்.	நன்செய்	புன்செய்/ மானாவாரி.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	ஏ. செ.	ஏ. செ.	ஏ. செ.
14 புளியம்பட்டி, பழனி தாலூகா,	..	9.55	9.55
15 அரசப்பபிள்ளைபட்டி, பழனி தாலூகா.	..	1.34	1.34
16 சூரியூர், திருச்சி மாவட்டம்.	1.32	..	1.32
17 கள்ளக்குறிச்சி, வட ஆற்காடு மாவட்டம்.	..	0.42	0.42
18 வித்தகிரிகுப்பம், விருத்தாசலம் தாலூகா.	..	0.37	0,37
19 கல்லமேடு, உளுந்தூர்பேட்டை.	..	0.75	0.75
20 சத்ரிப்பட்டி, பழனி தாலூகா.	19.50	18.13	37.63
21 மரவத்தூர், குளித்தலை தாலூகா.	..	15.28	15.28
22 தாளையூத்து, பழனி தாலுகா.	..	90.36	90.36
23 ஆலம்பாடி, வேடசெந்தூர் தாலூகா.	..	2.17	2.17
24 ஆர். கோம்பை, திண்டுக்கல் தாலுகா.	..	5.58	5,58
25 ஆர். வெள்ளோடு, வேடசெந்தூர் தாலுகா,	..	35.66	35.66
26 கீரனூர், பழனி தாலுகா.	2.61	18.96	21.57
27 கோட்டையூர், மேலூர் தாலுகா.	..	2.74	2.74
28 செந்துறை, மேலூர் தாலுகா,	..	3.49	3.49
29 பிள்ளையார் நத்தம், மேலூர் தாலுகா.	..	3.00	3.00
30 சேத்தூர். மேலூர் தாலுகா.	..	3.04	3.04

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1980 பிப்ரவரி 2

(1)	(2)	(3)	(4)
	ஏ. செ.	ஏ. செ.	ஏ. செ.
31 மேட்டூர்பாளையம், கோபி தாலுகா.	0.30	..	0.30
32 கீராசூர், லால்குடி தாலுகா.	..	0.83	0.83
33 மேலரசூர், லால்குடி தாலுகா.	..	1.36	1.36
34 வையம்பட்டி, மணப்பாரை தாலுகா.	0.09	..	0.09
35 சீரங்காட்டுப்பட்டி, மேலூர் தாலுகா.	..	3.33	3.33
36 பண்ணப்பட்டி, மணப்பாரை தாலுகா.	..	2.35	2.35
37 கீழ்மணவூர், தென்னாற்காடு மாவட்டம்.	0.43	..	0.43
38 கள்ளிமந்தயம் பழனி தாலுகா.	..	219.85	219.35
39 முண்டுவேலாம்பட்டி, தாராபுரம் தாலுகா.	..	10.37	10.37
40 கூடலூர் கிராமம், வேடசெந்தூர் தாலுகா.	..	2.64	2.64
மொத்த ஏக்கர் ..	323.52½	509.79	833.31½

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு IX.

[80ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 46-க்கான விடையைக் காண்க]

விவர அறிக்கை.

சென்னையில் உள்ள ஓவியக்கலைத் தொழில் கல்லூரி அபிவிருத்திக்கு அரசு எடுத்த நடவடிக்கை வருமாறு:

1975–76 இரண்டாம் திட்டப்பகுதி (Part II Scheme) ஆக கீழ்க்கண்ட பாடங்கள் துவக்குவதற்கும், புதிய வகுப்புகள் நடத்த கட்டிடங்கள் கட்டவும் மாணவர்களுக்கு விடுதி கட்டவும் சில பதவி உயர்வுகளுக்கும் கூடுதல் பணியாளர்களை அமர்த்தவும் ஆணை வழங்கப்பட்டது.

(1) Photography

(2) Lithography

(3) Blockmaking

(4) Silk Screen Painting

(5) Book Binding & Packaging

(6) Interior Decoration Window Display and Exhibition Designs.

ஓவியம் மற்றும் சிற்பக்கலை நிறுவனங்கள் முன்னேற்றத்திற்கும் நல்லமுறையில் நடத்திச் செல்லுவதற்கும் செயலர் கல்வித்துறை அவர்களை தலைவராகக் கொண்டு ஆலோசகர்கள் குழு (Advisory Committee for the Arts and Crafts Institution in Technical Education Department) ஒன்றை அரசு ஆணை எண். 36, கல்வி, நாள் 6–1–78-ல் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ''ஆலோசகர்கள் குழு'' 21–3–78 கூடி ஓவியக் கல்லூரியின் முன்னேற்றத்திற்கான ''திட்டத்தால்'' (Working Paper) ஒன்றை கீழ்க்கண்ட பொருள்களின் மேல் தயாரிப்பதற்கு முடிவு எடுத்தது:—

(i) To introduce a Degree course in Industrial Design affiliated to the University of Madras.

(ii) To continue to offer the present diploma and post Diploma Programmes till such time the affiliation of the University of Madras is sought for and obtained for the existing programme.

(iii) To introduce new electives under the Diploma courses.

(iv) To equip the College with additional physical facilities such as buildings, equipment and library.

(v) To provide hostel accommodation for about 50 students.

(vi) To restructure the present staff pattern and revise it on par with the other Arts and Crafts Institutions in the country.

(vii) To provide adequate scholarships and stipendary facilities to the students.

இதன்படி தயாரிக்கப்பட்ட ''திட்டத்தாள்'' விரைவில் குழுவிற்கு முன் வைக்கப் போவதாக தொழில் நுட்பக் கல்வித்துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.

1978–79 இரண்டாம் திட்டப்பகுதியாக நெசவு ஓவியக்கலை, மண்பாண்டக்கலை பாடங்களில் பட்டவகுப்பு (Degree level) படிப்பு துவக்க ஆணை எண். 1756, கல்வி நாள் 22–9–78-ல் ஆணை வழங்கப்பட்டது. இதன்படி ஒவ்வொரு பாடங்களிலும் 10 மாணவர்கள் வீதம் 3 பாடங்களுக்குச் சேர்க்கப்படும். இந்த ஆணையின் பிரகாரம் 1978 நவம்பர் மாதத்திலிருந்து இப்பட்டப்படிப்பு இக்கல்லூரியில் துவக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில தொழில் நுட்பக்கல்வி மற்றும் பயிற்சி போர்டு (The State Board of Technical Education and Training Tamil Nadu) 27–1–78-ம் தேதி 23-வது கூட்டத்தில் இந்த ஓவியக்கலைக் கல்லூரியை பட்டப்படிப்பு மட்ட கல்லூரியாக்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளது. மேலும், 21–11–78-ம் நாள் நடந்த கூட்டத்தில் ஓவியம் தீட்டுதல் (Painting) மற்றும் சிற்பக்கலை (Sculpture) இந்த பாடங்களிலும் பட்டப்படிப்பு அளவில் பாடத்தை கொண்டு வரவேண்டும் எனவும் பரிந்துரைத்துள்ளது.

இக்கல்லூரியின் ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக மானியக்குழு சம்பளவிகிதம் தரப்படுகிறது.

இணைப்பு X

[84ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 55க்கான விடையைக் காண்க.]

1977 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா காலங்களில் தள்ளுபடி மானியம் அளிக்கப்பட்ட சமயத்திலும், தள்ளுபடி மானியம் அளிக்கப்படாத சமயத்திலும் விற்பனையான துணிகளின் மதிப்பு கீழ்வருமாறு:—

காலம்.	பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை மதிப்பு.	தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் விற்பனை மதிப்பு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
(அ) பேரறிஞர் அண்ணா மற்றும் பெரியார் பிறந்த நாள் விழா :			
தள்ளுபடி மானியம் வழங்கப்பட்ட காலம்—			
1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3ஆம் நாள் முதல் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் வரையில் ..	325.84	38.58	பேரறிஞர் அண்ணா மற்றும் பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1977 மற்றும்

காலம்.	பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை மதிப்பு.	தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் விற்பனை மதிப்பு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
தள்ளுபடி அளிக்கப்படாத சாதாரண காலம்—			1978 ஆகிய இரு ஆண்டுகளிலும் தள்ளுபடி வழங்கியுள்ளது.
1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3 ஆம் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் வரை.	107·95	..	..
1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் வரை.	..	20·20	..
(ஆ) காமராசர் பிறந்தநாள் விழா:			
தள்ளுபடி மானியம் அளிக்கப்பட்ட காலம்—			
1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7 ஆம் நாள் வரை.	700·00	88·00	..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1980 பிப்ரவரி 2]

காலம்.	பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை மதிப்பு.	தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் விற்பனை மதிப்பு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
தள்ளுபடி மானியம் அளிக்கப்படாத காலம்—			
1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7 ஆம் நாள் வரை.	48.66	14.77	..

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு XI.

[94-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 68-க்கான விடையைக் காண்க]

நன்னடத்தைப் பிரிவினரால் அரசுக்கு கணிசமான இலாபம் உள்ளது.

2. புது டெல்லி, தேசிய காவல்துறை குழுவிற்கு காவல்துறை ஆராய்ச்சி மையம் மற்றும் நன்னடத்தைப் பிரிவு ஆராய்ச்சிப் பகுதியினரால் அனுப்பப்பட்ட புள்ளி விபரக் கணக்கின்படி 1973-லிருந்து 1977 வரையிலுள்ள ஐந்து ஆண்டுகளில் ஆண்டுக்கு சராசரியாக நன்னடத்தை சட்டம் பிரிவு 4 (1)-ன் கீழ் 20, 791 குற்றவாளிகள் நன்னடத்தைக்காக விடுவிக்கப்பட்டுள்ளனர். (இணைப்பைக் காண்க). அவர்கள் அவ்வாறு விடுவிக்கப் படாமலிருந்திருப்பார்களேயானால் ஆறுவாரத்திலிருந்து ஆறு மாதத்திற்குட்பட்ட பலவிதமான சிறைத் தண்டனைக்கு ஆளாகி யிருப்பார்கள். குறைந்த பட்சக் கணக்கெடுப்பதனால் அவர்கள் ஒவ்வொருவரும் சராசரியாக அறுபது நாட்கள் சிறையிடப் பட்டிருப்பார்கள்.

3. ஒரு நாளைக்கு ஒரு சிறைவாசிக்கு அந்தக் காலங்களில் ஆகும் செலவு ரூபாய் 5.30/- ஆக 20,791 சிறைவாசிகளுக்கு அறுபது நாளைக்கு ஆகும் செலவு ரூபாய் 66,11,538/-

4. அந்த ஐந்து ஆண்டுகளில் ஓராண்டிற்கு நன்னடத்தைப் பணிக்கு ஆன செலவு ரூபாய் 11,43,932,

5. ஆகையால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 54,67,606 ரூபாய் இலாபம். இவ்விதமாகப் பார்க்கும்போது செலவைக் காட்டிலும் இலாபம் ஐந்து மடங்கு உள்ளது.

6. உண்மையிலேயே உணவுக்காக ஆகப்படும் செலவு மாத்திரம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மருத்துவ செலவு, பயணச் செலவு மற்றும் பயண இடைவெளிச் செலவுகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டால், அரசுக்கு இலாபம் இதைவிட அதிகமாக இருக்கும்.

7. நன்னடத்தைப் பணியினரால் திருத்தப்பட்ட குறைந்த பட்ச குற்றவாளிகளைப் பார்க்கும்பொழுது இந்தச் சமுதாயத் திற்குப் பணத்தினால் மதிப்பிட முடியாதபடி இலாபம் ஏற்பட்டுள்ளது.

1980 பிப்ரவரி 2]

ஆண்டு	நன்னடத்தைச் சட்டம் பிரிவு 4 (1)ல் விடுவிக்கப்பட்டவர்கள்.	ஒரு சிறைவாசிக்கு சராசரி சிறைச்சாலைச் செலவு,
1973	17,663	3·93
1974	29,959	5·51
1975	21,400	5·54
1976	20,655	5.56
* 1977	14,279	5·86
மொத்தம் ..	1,03,956	26·40
சராசரி	20,791	5·28 (அல்லது) 5·30

20,971 நபர்கள் 60 நாளைக்கு சிறையிலிருந்தால் ஏற்படும் செலவு .. ரூ. 66,11,538

நன்னடத்தைப் பணிக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் சராசரி செலவு .. ரூ. 11,43,932

இலாபம் .. ரூ. 54,67,606

* புள்ளி விபரங்கள் புதுடெல்லி தேசிய காவல்துறை குழுவிற்குக் காவல் துறை ஆராய்ச்சி மையம் மற்றும் நன்னடத்தைப் பிரிவு பகுதியிலிருந்து அனுப்பப்பட்டவையிலிருந்து எடுக்கப்பட்டவை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

இணைப்பு XII.

[105-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 89-க்கான விடையைக் காண்க]

1. திருச்சி தாலுக்கா :—
 1. துவாகுடி
 2. இனாம்குளத்தூர்
 3. புங்கனூர்

2. குளித்தலை தாலுக்கா :—
 1. வைகை நல்லூர்
 2. மகாதானபுரம்
 3. மஞ்சநாயக்கன்பட்டி
 4. புதுராவுத்தன்பட்டி
 5. பாப்பக்காபட்டி
 6. சிவாயம்
 7. வடசேரி
 8. தோகைமலை
 9. நாகனூர்
 10. பொருந்தலூர்
 11. பாப்பயம்பட்டி

3. கரூர் தாலுக்கா :—
 1. ஆத்தூர்
 2. பி. தோட்டக்குறிச்சி
 3. புகளூர்
 4. கடப்பாரை
 5. வேட்டமங்கலம்
 6. உப்பிடமங்கலம்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1980 பிப்ரவரி 2]

3. கரூர் தாலுக்கா—தொடர்ச்சி.

7. வெள்ளியனை (வடக்கு)

8. கருப்பன்பாளையம்

9. தோரணக்கல்பட்டி

10. ஆண்டான்கோவில்

11. நாகம்பள்ளி

12. கொடையூர்

13. லிங்கம்நாயக்கன்பட்டி

14. பவித்ரம்

15. தென்னிலை (மேற்கு)

16. தென்னிலை (தெற்கு)

17. குப்பம்

4. மணப்பாறை :—

1. மொண்டிப்பட்டி

2. தொப்பம்பட்டி

3. செவந்தம்பட்டி

4. யாகபுரம்

5. சச்சிப்பாறை

6. பேனாம்பட்டி

7. பெரியம்பட்டி

8. வெள்ளாளப்பட்டி

9. கரடிக்குளம்

10. மினிக்கியூர்

5. 1. 1. முசிறி தாலுக்கா :—
பூவாஞ்சேரி

6. துறையூர் தாலுக்கா :—

1. நாகலாபுரம்

2. துறையூர்

6. துறையூர் தாலுக்கா—தொடர்ச்சி.

3. கோட்டையூர்
4. காமாட்சிபுரம்
5. ஆதவூர்
6. வி. ஏ. சமுத்திரம்
7. கலிங்கமுடையான்பட்டி
8. சிக்கத்தம்பூர்
9. கரட்டான்பட்டி

7. லால்குடி தாலுக்கா :—

1. திருவெள்ளரை
2. பூனாம்பாளையம்
3. இருங்களூர்

8. அரியலூர் தாலுக்கா :—

கல் உடைக்கும் மைனர் குவாரிகள் இந்தத் தாலுக்காவில் இல்லை.

9. செயங்கொண்டம் தாலுக்கா :—

1. செயங்கொண்டம்
2. தண்டலை
3. ஏந்தல்
4. ராங்கியம்
5. புதுக்குடி

10. பெரம்பலூர் தாலுக்கா :—

1. நாரணமங்கலம்
2. எலந்தம்பட்டி
3. பாடாலூர்
4. நாட்டார்மங்கலம்
5. திருவினக்குரிச்சி
6. பொம்மளபாடி
7. சிறுவயலூர்
8. வேலூர்
9. உரும்பியம்
10. வெங்கலம்
11. மலையாளப்பட்டி
12. கீழக்குரை
13. எலம்பலூர்
14. புதுநடுவலூர்
15. தொரமங்கலம்
16. கல்பாடி
17. செங்கோணம்

இணைப்பு XIII.

[119-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 109 க்கான விடையைக் காண்க.]

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி தேவஸ்தானம் நடத்தும் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் விவரம் :—

	கல்லூரியின் பெயர்.	ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை.	பெண் ஆசிரியர்களின் எண்ணிக்கை.	ஊதியம் யாரால் வழங்கப்படுகிறது.
	(1)	(2)	(3)	(4)
1.	அருள்மிகு பழனியாண்டவர் ஆண்கள் கலைக் கல்லூரி.	95	2	அரசு வழங்குகிறது.
2.	அருள்மிகு பழனியாண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி.	28	28	அரசு வழங்குகிறது.
3.	அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி.	21	இல்லை.	தமிழக அரசு வருடத்திற்கு ரூ. 10,000 மான்யமாக வழங்குகிறது. மற்றப்படி கல்லூரிக்கு ஆகும் செலவுகள் அனைத்தும் தேவஸ்தானமே வழங்குகிறது.
4.	அருள்மிகு பழனியாண்டவர் செந்தமிழ்க் கல்லூரி.	8	8	தேவஸ்தானமே வழங்குகிறது.
		152	38	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு XIV.

[127-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 127-க்கான விடையைக் காண்க]

கும்பகோணம் வட்டம், திருவிடைமருதூர் கால்நடை மருத்துவ மனைக்கு 1978–79 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மருந்துகளின் விவரம் :—

	Name of Medicine.	Quantity.	Date of Supply.
	(1)	(2)	(3)
1.	Acid Boric	1 kg	24–4–1979
2.	Acid Boric	2 kgs	17–5–1979
3.	Aromatic Spt of Ammonia	900 ml	16–3–1979
4.	Kaolin	500 gms	24–4–1978
5.	Liniment of Terpantine	450 ml	16–3–1979
6.	Kaolin	500 gms	24–4–1978
7.	Liniment of Terpantine	450 ml	16–3–1979
8.	Mag Sulph	25 kgs	16–3–1979
9.	Oily dressing	500 ml	16–3–1979
10.	Potasiam Permanganate	450 gms	16–4–1979
11.	Proflavine	25 gms	16–3–1979
12.	Gentian	1 kg	17–5–1979
13.	Chirrata	1 kg	24–4–1978
14.	Sodabicarb	2 kgs	16–3–1979
15.	Savlon	0.400 ml	16–3–1979
16.	Tr. Iodine	1.800 ml	13–3–1979
17.	Tr. Benzoin compound	0.450 ml	16–3–1979
18.	Calamine	0.500 gms	16–3–1979
19.	Ol. Terpantine	0.500 ml	16–3–1979
20.	Pulvis ginger	1 kg	16–3–1979
21.	Dried Ferrous Sulphate	1 kg	16–3–1979
22.	Sulpha Gunadin Tablet	100	16–3–1979

1980 பிப்ரவரி 2]

	Name of Medicine.	Quantity.	Date of Supply.
	(1)	(2)	(3)
23.	Piperacin citrate	0.500 ml	16–3–1979
24.	Amylum	1 kg	16–3–1979
25.	Fairegenal Cream	1 Tube	16–3–1979
26.	Iodine Ointment	450 gms	16–3–1979
27.	Soda Salicylus	1 kg	29–4–1979
28.	Towels	2 Nos	3–10–1978
29.	Tr. Cardomon Compound	900 ml	10–3–1979
30.	Cotton	1 Roll	15–2–1978
31.	Zinc Oxide	2 kgs	17–5–1979
32.	Himax	2 Tubes	16–3–1979
33.	Rubber adopter for A. I. Rods	5 Nos	15–2–1979
34.	Nux vomica	1 kg	16–3–1979
35.	Otex ear drops	1	16–3–1979
36.	Coal Tar Soap	8 cakes	10–3–1978
37.	Bar Soap	6 Bars	10–3–1978
38.	Creta	1 kg	16–3–1979

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

இணைப்பு XV

[33-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 138-க்கான விடையைக்காண்க]

விடை

(அ), (ஆ), (இ). சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் மாவட்ட வாரியாக மத்தியஅரசு ஒதுக்கீடு, செய்த தொகை விவரங்கள், செலவு தொகை 1974–75 முதல் 1978–79 முடிய.

வருடம்.		ஆரம்பக் கையிருப்பு,	மத்திய அரசு ஒதுக்கீடு தொகை.	மான்யம் இருப்பப் பட்டதும் வட்டி பெற்றது வாரி வாக பெற்ற தொகை;	மொத்தம் (காலம் 2, 3, 4),	செலவு தொகை.
(1)		(2)	(3)	(4)	(5)	(6)
செங்கல்பட்டு—				(ரூபாய் இலட்சத்தில்.)		
1974–75	..	..	0.40	..	0·40	0·26
1975–76	..	0.14	10.00	0.10	10.24	10·21
1976–77	..	0.03	30.00	0.50	30.53	20·89
1977–78	..	9.64	20.00	0.39	30.03	23·16
1978–79	..	6.87	27.09	0.36	34.32	34·20
மொத்தம்	..	16.68	87·49	1.35	105.52	88.72

வடஆற்காடு—						
1974–75		0.12	20.88	..	21.00	20·68
1975–76	..	0.32	32.00	0.16	32·48	32·42
1976–77		0.06	15·00	5.11	20·17	18·62
1977–78		1.55	28·00	7.14	36·69	31·91
1978–79	..	4.78	29.49	9.83	44·10	43·78
மொத்தம்	..	6.83	125.37	22.24	154·44	147.41
தென்ஆற்காடு—						
1974–75	..	1.00	25.00	2.29	28·29	18·46
1975–76	..	9.83	25.00	1.61	35·44	34·48
1976–77	..	0.96	26.00	0.91	27·87	26·72
1977–78	..	1.15	34.85	1.23	37·23	33·94
1978–79	..	3.29	30.84	3.33	37·46	34·62
மொத்தம்	..	16.23	141.69	9.37	166·29	148·22
கோயம்புத்தூர்—						
1974–75	..	..	5.00	0.40	5.40	0·22
1975–76	..	5.18	5.00	1.32	11.50	10·65
1976–77	..	0.85	27.44	0.19	28.48	22·70
1977–78	..	4.39	22·00	0.36	26.75	26·62
1978–79	..	0·13	32.15	0·28 8.06	40.56	36·17
மொத்தம்	..	10.55	91.59	10·55	112.69	96.36

வருடம்.		ஆரம்பக் கையிருப்பு.	மத்திய அரசு விடுவித்த தொகை.	மான்யம் இருப்பப் பட்டதும் வட்டி வாயிலாக பெற்றது பெற்ற தொகை.	மொத்தம் (காலம் 2, 3, 4).	செலவு தொகை.
(1)		(2)	(3)	(4)	(5)	(6)
சேலம்—						
1974–75	..	0·03	34.61	0.27	34.91	34.76
1975–76	..	0·21	25.00	0.42	25·63	25.30
1976–77	..	0·33	26.00	0,08	26.41	25.12
1977–78	..	1·29	28.00	0.28	29.57	29.49
1978–79	..	0·08	37.00	0.39	37.47	37.21
மொத்தம்	..	1·94	150.61	1·44	153.99	151.82
திருச்சி—						
1974–75	..	..	0.40	..	0.40	0.38
1975–76	..	0.02	15.00	0.10	15·12	14.50
1976–77	..	0.62	20.00	0.72	21.34	19.96
1977–78	..	1.38	29.85	..	31.23	21.10
1978–79	..	10.13	9.31	1.84	21.28	20.68
மொத்தம்	..	12.15	74.56	2.66	89·37	76.62

வருடம். (1)	ஆரம்பக் கையிருப்பு. (2)	மத்திய அரசு விடுவித்த தொகை. (3)	மானியம் இருப்புப் பட்டதும் வட்டி பெற்றது வாயிலாக பெற்ற தொகை. (4)	மொத்தம் (காலம் 2, 3, 4) (5)	செலவு தொகை. (6)
			(ரூபாய் இலட்சத்தில்)		
தஞ்சாவூர்—					
1974–75 ..	..	0.40	0.02	0.42	0.30
1975–76 ..	0.13	15.00	0.11	15.24	10.34
1976–77 ..	4.90	10.00	0.30	15.20	14.90
1977–78 ..	0.30	20.00	1.15	21.45	19.89
1978–79 ..	1.70	66·79	2.32	70.81	70.10
மொத்தம் ..	7.03	112.19	3.90	123.12	115·53
புதுக்கோட்டை—					
1974–75 ..	..	..	0.40	0.40	0.17
1975–76 ..	0.23	13.00	0.17	13.40	12.85
1976–77 ..	0.15	22.84	0.54	23.53	23.09
1977–78 ..	0.44	22.00	0.47	22.91	21·71
1978–79 ..	1.20	18.80	1·26	21.26	21.13
மொத்தம் ..	2.02	76.64	2.84	81.50	78.95

வருடம். (1)	ஆரம்பக் கையிருப்பு. (2)	மத்திய அரசு விடுத்த தொகை. (3)	மாக்கம் இருப்புப் பட்டதும் வட்டி பெற்றது வரவு வாக பெற்ற தொகை: (4)	மொத்தம் (காலம் 2, 3, 4.) (5)	செலவு தொகை. (6)
மதுரை—					
1974–75 ..	0.47	28.00	2.87	31.34	29.94
1975–76 ..	1.41	34.00	3.43	38,84	34.98
1976–77 ..	3.93	24.93	3·32	32.18	31.78
1977–78 ..	0.44	33,65	1.34	35.43	32·28
1978–79 ..	3.15	21.34	2.49	26.98	26·54
மொத்தம் ..	9·40	141.92	13.45	167.77	155·52
திருநெல்வேலி—					
1974–75 ..	0·02	13.00	0.93	13.95	11.72
1975–76 ..	2·23	15.77	3.20	21.20	20.22
1976–77 ..	0·98	28.97	5.86	35.81	31.55
1977–78 ..	4·26	12.00	9.61	25,87	23.62
1978–79 ..	2·25	13.10	10,31	25.66	25.28
மொத்தம் ..	9.74	82.84	29.91	122.49	112.39

உதகமண்டலம்—						
1974–75	..	..	0.40	..	0.40	0.20
1975–76	..	..	9.80	0,09	9.89	9.27
1976–77	..	0.62	15.00	0,06	15.68	14.38
1977–78	..	1.51	22.00	0.15	23.66	18.78
1978–79	..	5.10	18.60	0.86	24 56	24.14
மொத்தம்	..	7.23	65,80	1.16	74.19	66.77
கன்னியாகுமரி						
1974–75	..	..	..	..	..	..
1975–76	..	..	9.00	..	9.00	4.70
1976–77	..	4.30	14.60	0.24	19.14	18.90
1977–78	..	0.24	20.40	0.42	21.06	20.20
1978–79	..	0.86	23.65	0.31	24.82	24,34
மொத்தம்	..	5.40	67.65	0.97	74.02	68.14

வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசு விடுவித்த தொகை.

செலவு செய்யப்பட்ட தொகை 1974–75 முதல் 1978–79 முடிய

	இராமநாதபுரம் தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களுக்கு மத்திய அரசு தனது பங்காக (50%) விடுவித்த தொகை	1974–75 முதல் செலவிடப்பட்ட தொகை		
		இராமநாதபுரம்.	தருமபுரி.	மொத்தம்.
	(ரூபாய் இலட்சத்தில்)			
1974–75 முதல் 1978–79 முடிய (5 ஆண்டுகளில்) ..	780.152	628.24	658·24	1286.48

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1980 பிப்ரவரி 2

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் (புதியது)
1978–79-ல் தொடங்கியது.

மாவட்டம்.	மத்திய அரசு விடுவித்த தொகை.	செலவு செய்யப்பட்ட தொகை 31.3.79 முடிய (ரூபாய் இலட்சத்தில்)
1. தென்னாற்காடு	33.50	29.83
2. சேலம்	27.50	17.40
3. திருச்சிராப்பள்ளி	20.00	20.00
4. செங்கல்பட்டு	24.40	24.48
5. மதுரை	36.50	36.50
6. கோயம்புத்தூர்	40.50	23.26
7. இராமநாதபுரம்	50.00	50.00
8. புதுக்கோட்டை	15.00	11.01
9. நீலகிரி	5.00	5.00
10. தருமபுரி	25.00	23.16
11. கன்னியாகுமரி	15.00	15.00
12. தஞ்சாவூர்	31.00	31.13
13. திருநெல்வேலி	28.50	22.50
14. வடஆற்காடு	50.00	50.00
மொத்தம்	*401.90	359.36

*மாநில அரசின் பங்குத் தொகையான ரூ. 15 இலட்சமும் அடங்கும்.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் (பழையது)
தருமபுரி மாவட்டம்.

மாவட்டம்	மத்திய அரசு விடுவித்த தொகை	செலவு 31.3.79 முடிய
	ரூபாய்.	ரூபாய்.
தருமபுரி	69,66,500	66,75,365

D II A 331 -38

இணைப்பு XVI

[138-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 151க்கான விடையைக் காண்க]

விடை

		ரூபாய் இலட்சத்தில்
(அ)	1970–71 ஆம் ஆண்டு	3·68
	1971–72	7·42
	1972–73	4·58
	1973–74	10·14
	1974–75	10·19
	1975–76	6·86
	1976–77	10·23
	1977–78 } 1978–79 }	ரசன் நிலுவையைச் செலுத்த 31–3–80 வரை காலக்கெடு அளிக்கப்பட்டுள்ளது. அரசு ஆணை எண். 1666 விவசாயத் துறை நாள் 23–8–79 மற்றும் அரசு ஆணை எண். 1576 விவசாய துறை நாள் 9–8–79)

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் கரும்பு மேல்வரி நிதியிலிருந்து கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 29.84 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட சாலை மேம்பாடு வேலைகள் செய்யப்பட்டுள் ளன.

	சாலையின் பெயர்	நீளம் (கிலோமீட்டர்)
1.	மணலூர்பேட்டை தாங்கல் ஐம்பை ரோடு.	4.39
2.	தியாகதுர்க்கம்—சங்கராபுரம் சாலை (கி. மீ. 0/0—7/5) முதல் பகுதி ..	7.50
3.	தியாகதுர்க்கம்—சங்கராபுரம் சாலை (கி. மீ. 19/0—26/8) மூன்றாம் (கி. மீ. 7/5—19/0) இரண்டாம்பகுதி ..	11.50
4.	தியாகதுர்க்கம் — சங்கரா புரம் சாலை (கி. மீ. 19/0–26/8) மூன்றாம் பகுதி..	7.80
5.	கி. மீ. 14/2 மெய்யூர்—வானாபுரம் ஐம்பை ரோடு (வழி) எடக்கல்—மேலந்தல் ..	11.905
6.	வானாபுரம்—தலையாம்பள்ளம் ரோடு கி. மீ. 0/0–5/5 (மேம்பாடு வேலைநடந்து கொண்டிருக்கிறது)	5.500

இணைப்பு XVII

[153 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 178—க்கான விடையைக் காண்க]

விடை (a) தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தால் தயாரிக்கப்படும் பூச்சிகொல்லி மருந்துகள் அக்கழகத்தால் நேரடியாக விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுவதில்லை. ஆனால் தமிழ்நாடு வேளாண்மைத்துறையின் வேளாண்மைப் பண்டகசாலை, தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையத்தின் வட்டார மட்டத்தில் உள்ள மையங்கள், தொழில் முனைவர்கள் மற்றும் இக்கழகமும் கூட்டுறவு துறை நிறுவனங்களும் நியமித்துள்ள விற்பனையாளர்கள் மூலமாக இப்பூச்சிக் கொல்லி மருந்துகள் விவசாயிகளுக்கு வினியோகிக்கப் படுகின்றன.

(b) 1976, 77 மற்றும் 78 ஆம் ஆண்டுகளில் இக்கழகத்தால் வினியோகிக்கப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகளின் அளவுகள் பற்றிய மாவட்ட வாரியான விவர அறிக்கை கீழே கொடுக்கப் பட்டுள்ளது:

வினியோகிக்கப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகள் பற்றிய விபர அறிக்கை 1976 ஆம் ஆண்டிற்கு.

மாவட்டங்களின் பெயர்.		இரசாயன மருந்துகளின் பெயர்				
		பி.எச்.சி. 10% தூள். மெ.டன்	டி.டி.டி. 5% தூள். மெ.டன்	டாக்ஸாவின் 63% ஈ.சி. லிட்டர்	என்ட்ரின் 20% ஈ.சி. லிட்டர்	மலாத்தியான் 50% ஈ.சி. லிட்டர்
தென் ஆற்காடு	..	23·500	..	..	4,730	..
வட ஆற்காடு	..	340·000	..	..	4,050	..
செங்கற்பட்டு	..	174·000	..	..	4,495	..
சென்னை	..	37·000	..	.	325	..
திருச்சி	..	22·599	..	..	4,387	..
தஞ்சாவூர்	.	106·800	..	..	19,315	..

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாவட்டங்களின் பெயர்.	பி.எச்.சி. 10% தூள். மெ. டன்	டி.டி.டி. 5% தூள். மெ. டன்	டாக்ஸாவின் 63% ஈ.சி. லி.	எண்ட்ரின் 20% ஈ.சி. லி.	மலாத்தியான் 50% ஈ.சி. லி.
கோயம்புத்தூர் ..	9·100	..	..	1,045	..
புதுக்கோட்டை ..	2·000	..	..	225	..
சேலம் ..	0·750	..	..	1,295	..
தருமபுரி ..	3·000	..	..	212·50	..
திருநெல்வேலி ..	..	..	..	625	..
மதுரை ..	347·500	..	..	2,262·50	..
இராமநாதபுரம் ..	..	..	..	220·25	..
மொத்தம் ..	1,066·249	..	..	43,187·25	..
			1977 ஆம் ஆண்டிற்கு		
	மெ. டன்.	மெ. டன்.	லிட்டர்.	லிட்டர்.	லிட்டர்.
வட ஆற்காடு ..	30·0	..	416	4,462·5	..
தென் ஆற்காடு ..	189·0	4·0	360	4,130.5	25·0
தஞ்சாவூர் ..	1,408·0	15·0	280	1,025·5	..
திருச்சி ..	36.0	..	..	402.0	25.0
மதுரை	28.5	0.5	110	692.5	25.0
சென்னை ..	120.6	22.0	300	1,657.5	100.0
கோயம்புத்தூர் ..	104.0	0.4	360	1,645.0	25.0
சேலம் ..	56.0	3.5	80	620.0	..
இராமநாதபுரம் ..	31.0	..	20	180-0	..
செங்கற்பட்டு ..	132.0	..	20	85.0	..
புதுக்கோட்டை ..	20.0	..	..	11·0	..
தருமபுரி ..	12.5	..	40	170.0	12.5
திருநெல்வேலி ..	95.0	..	..	102.5	..
பாண்டிச்சேரி ..	64.0	..	80	295.0	..
பெங்களூர் ..	..	62.0		..	..

மொத்தம் ..	2,326.6	107.4	2,066	15,479.0	212.5

1978 ஆம் ஆண்டிற்கு.

மதுரை ..	238	12	610	1,780	12.5
தஞ்சாவூர் ..	1,912	60	120	60	87.5
வடஆற்காடு ..	224	..	100	20	25.0
இராமநாதபுரம் ..	283	..	..	..	..
திருச்சி ..	203	..	100	..	187.5
சென்னை ..	588	7	4,661	14,100	413.0
புதுக்கோட்டை ..	160	..	..	..	..
தென் ஆற்காடு ..	214	..	80	..	25.0
செங்கற்பட்டு ..	164	1	60	..	..
கோயம்புத்தூர் ..	31	4	280	3,300	12.5
சேலம் ..	40	2	260	7,620	..
திருநெல்வேலி ..	198	..	400	..	..
தருமபுரி ..	..	..	40	..	..
பாண்டிச்சேரிமாநிலம் ..	174	..	80	..	..
ஆந்திரப்பிரதேச மாநிலம் ..	209	..	..	..	..
மொத்தம்	4,638	86	6,791	26,880	763

இணைப்பு XVIII

(162-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 198க்கான விடையைக் காண்க.]

விடை

(a) தமிழ்நாடு வேளாண்மைத் துறையில் மொத்தம் 168—பாறை உடை கருவிகள் உள்ளன. அவைகளில் 12 ஆழ்குழாய் கிணறு சுத்தம் மற்றும் பரிசோதனை செய்யவும், 54 நீண்ட துளைக் கருவியை இயக்கவும் மீதம் 102 பாறை உடைக்கும் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

(b) பாறை உடைப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 102 பாறை உடை கருவிகளும் மாவட்ட வாரியாக ஒதுக்கீடு செய்யப் பட்டு கீழ்க்கண்ட விபரப்படி இயங்குகின்றன.

மாவட்டம்/அலுவலகம்.	பாறை உடை கருவிகள் இருப்பு.
(1)	(2)
1. செங்கை மாவட்டம்—	
உதவி செயற் பொறியாளர் (ஆய்வு), நந்தனம், சென்னை. ..	3
2. வட ஆற்காடு மாவட்டம்—	
உதவி செயற் பொறியாளர், (ஆய்வு) வேலூர்.	9
3. தென்னாற்காடு மாவட்டம்—	
1. உதவி செயற் பொறியாளர் (ஆய்வு) கடலூர்.	2
2. உதவி செயற் பொறியாளர் (குழாய்க்கிணறு திட்டம்) விருத்தாசலம். ..	6
3. உதவி செயற் பொறியாளர் (குழாய்கிணறு திட்டம்), விழுப்புரம். ..	4
4. திருச்சி மாவட்டம் —	
உதவி செயற்பொறியாளர் (ஆய்வு) திருச்சி.	6
5. புதுக்கோட்டை மாவட்டம்—	
உதவி செயற் பொறியாளர் (வி.தி). .. புதுக்கோட்டை.	2

1980 பிப்ரவரி 21

மாவட்டம்/அலுவலகம்.	பாறை உடை கருவிகள் இருப்பு
6. சேலம் மாவட்டம்—	
உதவி செயற் பொறியாளர், (இயந்திரம்) சேலம்.	18
7. தருமபுரி மாவட்டம்—	
உதவி செயற்பொறியாளர் (இயந்திரம்), தருமபுரி.	9
8. கோவை மாவட்டம்—	
உதவி செயற் பொறியாளர் (இயந்திரம்), கோவை. ..	8
உதவி செயற் பொறியாளர் (இயந்திரம்), திருப்பூர். ..	7
9. பெரியார் மாவட்டம்—	
உதவி செயற் பொறியாளர் (இயந்திரம்), ஈரோடு. ..	2
10. மதுரை மாவட்டம்—	
உதவி செயற் பொறியாளர் (ஆய்வு), மதுரை.	13
11. ராமநாதபுரம் மாவட்டம்—	
உதவி செயற் பொறியாளர் (இயந்திரம்), சிவகங்கை. ..	8
12. திருநெல்வேலி மாவட்டம்—	
உதவி செயற் பொறியாளர் (ஆய்வு), திருநெல்வேலி. ..	5
	102

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு XIX

[163-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 200-க்கான விடையைக் காண்க.]

(அ) மற்றும் (ஆ) : நீர் நுட்ப ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைப்பதற்கான கருத்துரு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்திற்கு 1978 டிசம்பரில் சமர்ப்பிக்கப்பட்டது. இதனை அக்கழகத்தின் முந்நாள் தலைமை இயக்குநர் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்களும் பரிந்துரை செய்து, இந்திய அரசு அறிவியல், மற்றும் நுணுக்காய்வு அமைச்சுக்கு அனுப்பினார்கள். இது இந்தியா, மற்றும் ஸ்வீடன் நாட்டு அலுவலர்கள் கொண்ட உபக்குழுவில் 1978 டிசம்பரில் விவாதிக்கப்பட்டு சுவீடன் பன்னாட்டு மேம்பாடு நிறுவனம் (SIDA)-வின் நிதி உதவிக்காக, இந்திய அரசினால் முறைப்படி கோரப்பட்டது. 1980 ஜனவரி முதற்கொண்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இத்திட்டத்திற்கு, நிதி உதவி செய்ய சுவீடன் பன்னாட்டு மேம்பாட்டு நிறுவனம் (SIDA) முன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. எனவே இந்திய அரசின் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஒப்புதல் பெற்று, 1980 ஆம் ஆண்டு சனவரியில் இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என நம்பப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நீர் நுட்ப ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கும் போது, கீழ்க்காணும் பலதரப்பட்ட பிரிவுகள் நிறுவப்படும் :—

(1) மேற்தரை நீர்.

(2) நிலத்தடி நீர்.

(3) நீர்த்தரம்.

(4) வேளாண்மை—நீர் மேலாண்மை.

(5) இதர பகுதிகளுக்கான நீர் மேலாண்மை.

(6) பாசனப் பொருளியல்.

(7) வாநிலை மற்றும் வேளாண்மைப் பௌதிகம்.

(8) கிராமப் பொருளாதாரம் மற்றும் மண் அறிவியல்.

(9) அமைப்புப் பொறியியல்.

(10) விரிவாக்கக் கல்வி.

மேற்காணும் பிரிவுகள், இத்திட்டத்தின் நுணுக்காய்வுக்காகக் கொள்ளப்படும். மேலும், இத்திட்டத்தைச் செயல்படுத்த ஐந்தாண்டு காலத்திற்கு ரூ. 150 இலட்சங்கள் செலவாகும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

—